கங்கை



# புதிய கோணம்

இலக்கியக் கட்டுரைகள்



அ.ச.ஞானசம்பந்தன்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# புதிய கோணம்

பேராசிரியர்.

அ.ச. ஞானசம்பந்தன்

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை — 600 017.

முதல் பதிப்பு: மே, 1997
இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி 2000
உரிமை : ஆசிரியருக்கு

**விலை : ரூ. 50**

| | | |
|---|---|---|
| Title | * | **Puthiya Konam** |
| Author | * | **Prof. A.S. Gnanasambandan** |
| Subject | * | Literature |
| Edition | * | SECOND EDITION : FEBRUARY, 2000. |
| No. of Pages | * | 254 + 6 |
| Publisher | * | **Gangai Puthaka Nilayam**<br>13, Deenadayalu Street,<br>T.Nagar, Chennai - 600 017. |
| Price | * | **Rs. 50/-** |

---

*Typeset at* : **Sivasakthi Laser Printer,** Chennai - 41 ☎ 492 7528

PRINTED AT:- M.S.PRINTING WORKS., CHENNAI-14.

# முன்னுரை

புதிய கோணம் என்னும் இந்த நூல் பல்வேறு காலங்களில் நான் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாகும். ஏறத்தாழ 50 ஆண்டுகளாக தமிழ் நாட்டில் மாத இதழ்கள், வார இதழ்கள் என்பவை போக மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வெளிவரும் மாத, வார இதழ்களில் அவ்வப்பொழுது நான் எழுதிவந்த கட்டுரைகளைத் தொகுத்தே புதிய கோணம் என்ற இந்த நூல் வெளிவருகிறது. எஞ்சியுள்ள கட்டுரைகள் இதனை அடுத்து மற்றொரு தொகுதியாக வெளிவர உள்ளது.

ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பெற்ற கொப்பரைத் தேங்காய், புலியார் நட்பு, பழைய சிறுகதை, கபிலரும் பாரியும், ‘க’னாவும் ‘கா’வன்னாவும், கவிஞன் கண்ட விஞ்ஞானம் என்பவை சங்க இலக்கியங்களை அடித்தளமாகக் கொண்டு எழுதப் பெற்றவை. புதிய கோணம் என்பது சிலப்பதிகாரம் பற்றிய கட்டுரையாகும். இவை அனைத்தும் பல்லாண்டுகளுக்கு முன்னர் எழுதப் பெற்றவை. என்னுடைய நூலைப் படித்து பழக்கப்

பட்டவர்களுக்கு இக்கட்டுரைகள் புதுமையாக இருக்கும். அ.ச.தான் இவற்றை எழுதினானா? என்ற ஐயம் கூட சிலர் மனத்தில் தோன்றலாம். உண்மையில் 40 ஆண்டுகளுக்கு முன்னர் எனது எழுத்து நடை எப்படியிருந்தது என்பதற்கு இவை அடையாளம் ஆகும்.

கவிதைப் பண்பு என்ற கட்டுரை திருக்குறளை ஓர் இலக்கியமாகக் கருதி பார்க்கின்ற பார்வையாகும். வள்ளுவன் கண்ட இன்பம் என்னும் கட்டுரையும் குறள் பற்றியதேயாகும். எனினும் இவற்றுள் முதற்கட்டுரை பல்லாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. இரண்டாம் கட்டுரை அண்மையில் எழுதப்பட்டதாகும்.

சான்றோர் சிந்தனை என்ற கட்டுரை சென்னை வானொலியில் அண்மையில் பேசப்பட்டதாகும்.

மேலே கூறப்பெற்றவை போக எஞ்சியுள்ள கட்டுரைகள் அனைத்தும் சென்ற 10 ஆண்டுகளுக்குள் எழுதப்பெற்றவையாகும். மிக அண்மையில் மூன்று மாதங்களுக்கு முன்னர் எழுதப்பெற்றது பாரதி–சித்தன் என்ற கட்டுரையாகும்.

இக்கட்டுரைகள் அனைத்துமே அவற்றுள் பேசப்படும் பொருளை வாலாயமாகவும், மரபு பற்றியும் காணும் பார்வையை விடுத்து புதிய ஒரு கோணத்தில் பார்த்ததன் விளைவாகும்.

இந்த ஆசிரியனின் அரைநூற்றாண்டு வளர்ச்சியை எடுத்துக்காட்ட இந்நூல் பயன்படும் என்பதால் தமிழ் உலகம் இதனை வரவேற்கும் என நம்புகிறேன்.

வழக்கம்போல் சிறந்த முறையில் இதனை அச்சிட்டு வெளியிட்ட கங்கை புத்தக நிலையத்தார்க்கு என் நன்றி உரியதாகும்

அ. ச. ஞா.

சென்னை – 83.
மே – 1997

# பொருளடக்கம்


1. புதிய கோணம் ........ 1
2. கொப்பரைத் தேங்காய் ........ 19
3. எங்கே செல்கிறோம் ........ 31
4. புலியார் நட்பு ........ 41
5. பழைய சிறு கதை ........ 51
6. கபிலரும் பாரியும் ........ 55
7. வள்ளுவன் கண்ட இன்பம் ........ 85
8. கவிதைப் பண்பு ........ 95
9. பக்தி இயக்கமும், இலக்கியமும் ........ 121
10. 'க'னாவும் 'கா'வன்னாவும் ........ 141
11. சான்றோர் சிந்தனை ........ 149
12. கவிஞன் கண்ட விஞ்ஞானம் ........ 159
13. கவிஞன் கண்ட கனவு ........ 163
14. குமரகுருபரர் தமிழைப் பாடியது ஏன்? ........ 175
15. சமூக செழுமைக்கான உரம் ........ 189
16. பாரதி — சித்தன் ........ 201
17. இராயப்பேட்டை முனிவர் ........ 219
18. கலையும் கலைஞனும் ........ 233
19. அவதானக் கலை ........ 239

# 1. புதிய கோணம்

சேரன் தம்பி இசைத்த சிலம்பின் தலைவியாகிய மாபத்தினியாம் கண்ணகியைப்பற்றி எத்துணையோ கருத்துகள் பேசப்பெற்று உள்ளன. கற்புக்கடம் பூண்ட அத்தெய்வத்தைப் பற்றிப் பல்வேறு கோணங்களில் இருந்து ஆராய்ச்சிகள் நடைபெற்று உள்ளன. எனினும், கண்ணகி பிறக்கும்பொழுதே தெய்வத் தன்மையோடு பிறந்தவரா? அன்றி, ஏனைய மாந்தரைப் போலவே பிறந்து, தம்முடைய உறுதிப்பாடு காரணமாகத் தெய்வத்தன்மையை எய்தியவரா என்பதுபற்றிச் சிந்திப்பதில் தவறு இல்லை என்றே தோன்றுகிறது.

சிலப்பதிகார ஆசிரியர் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர் என்பதுபற்றி முடிவான கருத்துகள் ஒன்றும் இதுவரை வந்ததாகத் தெரியவில்லை. காப்பியத் தலைவனாகிய கோவலன் சமண சமயத்தைச் சார்ந்தவன் என்று உறுதியாகக்

*கூறுவதற்கும் தெளிவான சான்றுகள் கிடைப்பதாகத் தெரியவில்லை. "சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்" (சிலம்பு:16, 18 வரிகள்) என்ற அடியைத் தவிர, அந்தக் கருணை மறவனின் சமயம் யாது என்பதை விளக்கும் சான்றுகள் இருந்திருப்பதாகத் தெரிய வில்லை. என்றாலும், இத்தமிழ் நாட்டில் பண்டு தொட்டுப் பயின்று வருவனவாகிய சைவ, வைணவக் கொள்கைகளின் அடிப்படையில் இக்காப்பியத் தலைவியின் வளர்ச்சியை ஆராய்வதில் தவறு ஒன்றுமில்லை.*

*"யான், எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்குயர்ந்த உலகம் புகும்" என்று தமிழ் மறையும், "அற்றது பற்று எனில் உற்றது வீடு" என்று வைணவ மறையும் அறுதியிட்டுக் கூறுகின்றன. எனவே, பற்றற்ற நிலையில், அகங்காரம் எனப் பெறுவதாகிய 'யானும்', மமகாரம் எனப்பெறுவதாகிய 'எனதும்' அழிந்த நிலையில், வீடு கைமேற் கிடக்கும் என்ற கருத்தை அறிகின்றோம். மிகப் பழமை ஆனதாகிய தமிழ் மறையும், இடைக் காலத்ததாகிய வைணவ மறையும் இந்த ஒரே கருத்தை வலியுறுத்திச் சொல்கின்றமையால் இக்கருத்து, மிகப்பழைய காலந்தொட்டுத் தமிழ் நாட்டில் வழங்கி வந்த ஒன்று என்று நினைப்பதில் தவறில்லை.*

*ஒருவன் எத்துணைச் சிறப்புடையவனாயினும் அவன் பிறப்போடு ஒன்றியுள்ள அகங்காரத்தை*

அறவே அறுத்து அகற்றினாலொழிய, வீடு பேற்றைக் காணுமாறு இல்லை. செம்பில் இயல்பாகவே கூடியுள்ள களிம்பைப்போல ஆன்மாவைப்பற்றி நிற்கின்ற இந்த ஆணவம் அல்லது அகங்காரம் என்னும் களிம்பு எளிதில் போக்கக்கூடியதும் அன்று. புளி முதலியன கொண்டு, வேறு ஒரு கர்த்தா முன்னின்று நீக்கும்பொழுது செம்பில் உள்ள களிம்பு நீங்குவது போல, ஆன்மாவைப் பற்றியுள்ள அகங்காரமாகிய களிம்பும், விஞ்ஞானம் அல்லது அறிவு விளக்கம் என்னும் புளி கொண்டு பிறிதொரு கர்த்தாவால் நீக்கப்பெறும்பொழுதுதான் நீங்குகிறது.

மனிதனிடத்திலுள்ள பிற குற்றங்களைக் களைவதை விட, இந்த ஆணவமாகிய குற்றத்தைக் களைதல் மிகமிகக் கடினமானதாகும். ஒருசில குற்றங்கள் களையப்பெற்றவுடன் அறுதியாக நீங்கி விடுகின்றன. இன்னும் சில குற்றங்களைக் களைய முயன்றால், உள்ளேயே அடங்கி நின்று தலை காட்டாமல் அடங்கிவிடுகின்றன. இன்னும் சில குற்றங்கள் ஓயாது போக்கினாலொழிய இறுதி வரை போவதே இல்லை. இவை அனைத்தைக் காட்டிலும் நான்காவதாக உள்ள ஆணவம் என்னும் குற்றம் மிக முயன்று போக்கப்பெற்ற பொழுது போய்விட்டது போலக் காட்சியளித்து, பிறகு மற்றோர் இடத்தில் மற்றொரு வடிவில் காட்சியளிக்கக் காண்கின்றோம். உடம்பில் தோன்றியுள்ள நச்சுக் கட்டியை அறுவை மருத்துவத்தின் மூலம் போக்கி, அதில் மகிழ்ச்சி

அடைகின்ற அதே நேரத்தில் உடம்பின் மற்றொரு பகுதியில் மற்றொரு வடிவில் அக்கட்டி வெளிப்படுமாறு போல, மனிதனிடத்திலுள்ள அகங்காரமும் ஒரு நிலையில் போக்கப்பெற்றால் மற்றொரு நிலையில், மற்றொரு வடிவில் தலைதூக்கி நிற்கக் காண்கின்றோம்.

இக்கருத்தை வலியுறுத்த வந்த சைவ சமயத்தார்கள் இந்த ஆணவமாகிய மலத்தை (குற்றத்தை) ஒருசேர அழித்துவிட முடியாது என்றும், அதனை அடக்கி வைத்திருப்பதே ஒல்லும் என்றும் கூறியுள்ளனர். அம்மட்டோடு இல்லாமல், உயிர்களைச் 'சகலர்' என்றும், 'பிரளயாகலர்' என்றும், 'விஞ்ஞானகலர்' என்றும் மூன்று பகுப்பாகப் பிரித்து, 'ஆணவம்', 'கன்மம்' 'மாயை' என்ற மூன்று மலங்களையும் உடையவர் 'சகலர்' என்றும், 'ஆணவம்', 'கன்மம்' என்ற இரண்டைமட்டும் பெற்றவர் 'பிரளயாகலர்' என்றும், 'ஆணவத்தை' மட்டும் பெற்றவர் 'விஞ்ஞானகலர்' என்றும் கூறுவர். இப்பிறவியின் சிறப்பு என்னவென்றால், மானிட உயிர் வளர்ச்சியில் மிக உயர்ந்த நிலையை அடைகின்ற பொழுதுகூட, ஆணவத்திலிருந்து மனிதன் நீங்குமாறு இல்லை. எனவே, அழிக்க முடியாத அந்தக் குற்றத்தை உள்ளவாறு உணர்ந்து ஒரு மனிதன் அதனை அடக்கி ஒடுக்கிக்கொள்ளக் கூடுமேயானால் அவன் முழுத்தன்மை பெற்ற மகாத்மாவாக ஆகிவிடுகிறான்.

ஆணவத்தை எத்துணை முறைகள் போக்கினாலும் அது தலைதூக்கி எழும் என்பதையும், மெய்யுணர்வு என்னும் ஆயுதத்தைப் பயன் படுத்தினால் தான் இறுதியாக அதனை வெல்ல முடியும் என்பதனையும் கந்தபுராண வரலாறு காட்டி நிற்கின்றது. சூரபதுமனுடைய தலை (அகங்காரமே சூரபதுமனாக உருவகிக்கப் பெற்றான்) பன்முறை வெட்டப்பட்டும் மீண்டும் மீண்டும் முளைத்து எழுந்தது என்றும், இறுதியாக முருகனுடைய ஞானவேலின் மூலமாக அழிந்தது என்றும் கதை கூறுகிறது. அந்த வேலாயுதந்தானும் ஆணவத்தின் வடிவாகிய சூரபதுமனை ஒருசேர அழிக்காமல், மயிலாகவும் கோழியாகவும் ஆகுமாறு செய்தது என்றும் அதேகதை கூறிச்செல்கிறது. எனவே, அகங்காரத்தை அடக்க வேண்டுமானால் 'மெய்யுணர்வு' என்னும் ஞான வேலினால்தான் முடியும் என்பதும், அந்த ஞானவேலுங்கூட அகங்காரத்தை அழிக்காமல் மயில் என்ற 'விந்துத்' தத்துவமாகவும், கோழி என்ற 'நாதத்' தத்துவமாகவும் மாறச் செய்கின்றது என்பதும் நன்கு விளங்கும்.

இவ்வுலகம் முழுவதுமே நாதம், விந்து என்ற இரண்டு தத்துவங்களின் கூட்டுதான் எனின்—ஆணவம் (சூரன்) மறைந்து நாதம் (கோழி), விந்து (மயில்) தத்துவங்களாக ஆயிற்று என்றால்—அதன் அடிப்படையை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். தான் என்ற அகங்காரம் மறைந்தால் உலகம் என்ற பன்மைதான் அங்குத் தோன்றமுடியும். தன்னலம்

என்பது அழியும்பொழுது பிறநலம் என்பது வெளிப்படுவது போல அகங்காரம் மறையும்பொழுது, அங்கே உலகம் (நாதமும் விந்துவும் அல்லது கோழியும் மயிலும்) தோன்றக் காண்கிறோம். தான் என்ற ஒன்றைத் தனியே நிறுத்திக் காண்பது அகங்காரமாகும். உலகம் முழுவதிலும் இறைவனைக் காண்பவன், அஃதாவது ஆன்ம வெளிப்பாட்டையே காண்பவன், அகங்காரமற்றவனாகிறான்.

இந்த அடிப்படையை மனத்திற்கொண்டு பார்த்தால், சாதாரண மனிதராகப் பிறந்தோரும் மெள்ள வளர்ச்சி அடைந்து, தெய்வீகத்தன்மையைப் பெறமுடியும் என்பதை நன்கு அறிகிறோம். எனினும், இத்துறையில் முன்னேறுகின்ற ஒருவனுக்கு எதிரியாக நிற்கின்ற தடை, மூன்றாவதான மலமாகிய ஆணவமே என்பது நன்கு விளங்கும். சைவ சமயத்திற்குரிய தனிப்பட்ட கருத்து என்று இதனைக் கொள்ளாமல், பொதுவாக இத்தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் வழங்கி வந்த தத்துவக் கொள்கை என்பதை மனத்திற் கொண்டு கண்ணகியின் வரலாற்றைக் காண்போமாக.

தொடக்கத்திலிருந்தே அப்பெருமாட்டி நற்பண்புகள் அனைத்திற்கும் உறைவிடமாகத் திகழ்கின்றார். வடிவாலும் அக அழகாலும் சிறந்து நிற்கின்ற அவரை, "போதிலார் திருவினாள் புகழுடை வடிவு'' உடையாள் என்று மக்கள் போற்றுகின்றார்கள். அவரை, "மாசறு பொன்னே, வலம்புரி முத்தே;

மலையிடைப் பிறவா மணியே; யாழிடைப் பிறவா இசையே'' என்றெல்லாம் கணவன் பாராட்டுகின்றான். காட்டில் வரிக்கூத்தில் ஈடுபட்டுள்ள வேடுவர்கள், கணவனோடு இருந்த மணமலி கூந்தலை உடையவளாகிய அப்பெருமாட்டியைக் கண்டு, "இவளோ, கொங்கச் செல்வி, குடலையாட்டி, தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து, ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி'' என்று போற்றுகின்றனர். முற்றத் துறந்த கவுந்தி அடிகளோ எனில், "கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலம்'' என்று புகழ்கிறார்.

தாம் பிறந்து வளர்ந்த ஊராகிய காவிரிப் பூம்பட்டினத்து மகளிராலும், மணஞ்செய்து கொண்ட கணவனாலும், கற்றறிவில்லாதவர்களாயினும் வஞ்சகம் இல்லாமல், பொருளைக் கண்டு மனத்துட் பட்டதை அஞ்சாது வெளியிடும் இயல்பு வாய்ந்த வேடுவர்களாலும், முற்றத்துறந்த முனிவராகிய கவுந்தி அடிகளாலும் ஒருசேரப் புகழப்பெறும் இயல்புடையார் இத் தேவியார்.

அவருடைய வாய்மொழியைக் கொண்டே அவருடைய உள்ளப்பாங்கை அறிய வேண்டு மானால், அதற்கும் சில வாய்ப்புகள் இருக்கின்றன. முற்பகுதி முழுவதிலும், கணவனையன்றி வேறொரு தெய்வத்தைக் கனவிலும் கருதாதவராய் வாழ்ந்தார்

என்று அறிகிறோம். மன்மதன் கோவிலுக்குச்சென்று வழிபட வேண்டுமென்று கூறிய தோழியை நோக்கி, "பீடு அன்று" என்று கூறுவதால் இதனை அறிகின்றோம். கணவன் தான் செய்த குற்றங்களை எல்லாம் வரிசைப்படுத்தி எண்ணி, இறுதியில் தான் அனைவருக்கும் இடுக்கண் செய்ததை உணர்ந்து வருந்துகிறான். மதுரையில்தான் கணவனும் மனைவியும் இரண்டாம் முறையாகத் தனித்துப் பேசும் வாய்ப்பு ஏற்படுகிறது. இந்நிலையில் கோவலன் அவளுடைய மென்மையைப் பாராட்டிவிட்டுத் தன் தவறுகளையும் வரிசைப்படுத்திப் பார்த்து இறுதியில் தான் அழைத்தவுடன் மறுப்பு ஒன்றும் கூறாமல் கண்ணகி மதுரைக்குப் புறப்பட்ட அருமையை நினைந்து,

'எழுக என எழுந்தாய், என் செய்தனை?''

(சிலம்பு : 16, 70)

என்று பேசுகிறான்.

கோவலன் மனம் மாசு நீங்கி ஒளிவிடும் இந்நிலையில் கண்ணகியின் மனம் ஓரளவு அகங்காரத்தில் அமிழத் தொடங்குகிறது. 'என் செய்தனை?' என்ற வினாவிற்கு அப்பெருமாட்டி தந்த விடையை,

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை ''
(சிலம்பு : 16, 71)

என்ற அடிகளால் அறிகின்றோம்.

இவ்விரண்டு பகுதிகளிலிருந்தும், இதனை அடுத்துக் கோவலனை நோக்கி, "மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின், ஏற்று எழுந்தனன் யான்'' என்று கூறுகிற பகுதியிலிருந்தும் முன்பு சொல்லப் பெற்ற மாயை, கன்மம் என்ற இரு குற்றங்களையும் ஒருவாறு போக்கி வாழ்பவராகவே காட்சியளிக் கின்றார். ஆண்டான்—அடிமைத்திறத்தில், தலைவ னாகிய கோவலனிடத்து முற்றும் தம்மைச் சரணாகதியில் அமிழ்த்துவிட்ட இப்பெருமாட்டி, இவ்விரு குற்றங்களிலும் அகப்படக் காரணம் இல்லை என்றாலும், விடை சிறப்புடைய தாயினும், விடை கூறியவர் மனநிலையைக் காட்டாமற் போகவில்லை. இதுவரை அவள் அடக்கி வைத்திருந்த சினம் மெல்லத் தலைதூக்குகிறது. உள்ளடங்கிய சினமாகலின் சுடுசொற்களால் வெளிப்படாமல் மனத்திலுள்ள கசப்பை மட்டும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துவிடக் காண்கிறோம். உயிர்க் காதலன் பிரிவால் அவள் கவலையுறவில்லை; ஆனால், கடமைகளை நிறைவேற்ற முடியாமைக்காக வருந்தியது போல அவ்விடை அறிவிக்கிறது. அகங்காரம் மெல்லத் தலை தூக்கித் தன் இருப்பை அறிவிக்கிறது.

*இதனையடுத்துக் கோவலன் வெட்டுண்ட பின்னர்ப் பாண்டியன் அவைக்களத்தை நோக்கிச் செல்லும் பொழுது,*

"முறையில் அரசன்தன் ஊர் இருந்து வாழும்
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்" (சிலம்பு : 19.3)

*என்று விளித்துப் பேசுவதும்,*

"கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டு கொல்" (சிலம்பு : 19. 52)

*என்றும்,*

"சான்றோரும் உண்டு கொல்" (சிலம்பு : 19. 54)

*என்றும் விளித்துப் பேசுவதும் கொஞ்சம் வியப்பை அளிக்கின்றன! பண்பாடே வடிவமாகக் காட்சி அளித்த கண்ணகியா இங்ஙனம் பேசுகின்றார் என்றே நினைக்கத் தோன்றுகிறது. அவரே கூறுகின்ற படி, "பட்டேன் படாததொரு துயரம்" என்றே வைத்துக் கொண்டாலும், தனிப்பட்ட தனக்கு நேர்ந்த அவலம் காரணமாக, ஒரு நாட்டையே, மக்களையே இழித்துப் பேசுவது முறையோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது. தனிப்பட்ட தன் துயரத்தை மிகப் பெரிதாகக் கொண்டு அதனால் உலகம் முழுவதையும் தவறுடையதாகக் கருதும் ஓர் அவல மன நிலையையே இங்குக் காண்கிறோம்.*

இந்நிலையில் அந்த அகங்காரம் ஓரளவு வலுப்பெறுகின்றது.

இது காரணமாகத்தான்போலும், காவிரிப்பூம் பட்டினத்தில் தாமரையில் வாழும் இலக்குமியாகவும், வேடர்கள் வாழும் காட்டில் தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்தாகவும், உலகிற்கு ஒரு திருமாமணியாகவும் காட்சியளித்த அதே பெருமாட்டி, பாண்டியன் வாயிலில்,

"அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீட மேறிய மடக்கொடி"
(சிலம்பு: 20. 34)

ஆகவும்,

"வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை" (சிலம்பு: 20. 36)

ஆகவும்,

"அறுவர்க் கிளைய நங்கை யிறைவனை
ஆடல்கண் டருளிய வணங்கு" (சிலம்பு: 20. 37)

ஆகவும்,

"சூருடைக் கானக முகந்த காளி" (சிலம்பு: 20. 39)

ஆகவும்,

"தாருகன் பேருரங் கிழித்த பெண்" (சிலம்பு: 20. 40)

ஆகவும் வாயிற் காப்போனுக்குக் காட்சி அளிக்கும் நிலையில் இருக்கின்றார்.

தகைசால் பூங்கொடியாய், மலரிடைத் தோன்றும் இலக்குமியாய்க் காட்சியளித்த ஒரு பெருமாட்டி, இத்தகைய கொடுமை நிறைந்த காட்சியை எங்ஙனம் நல்க முடியும்? நோக்கினால் அவருடைய மனத்தில் நேர்ந்த மாறுபாடு காரணமாகவே இத்தகைய மாற்றம் நிகழ்ந்ததோ என்று ஐயுறவேண்டியுள்ளது. கதிரவனை விளித்ததும், மானிடப் பெண்ணாகிய அவளுக்குச் செங்கதிர்ச் செல்வன் விடை இறுத்ததும் இந்த ஆணவம் வலுப்பெற்று வெளிப்படக் காரணமாயிற்று போலும். எல்லையற்ற துயரத்தின் காரணமாக இதுவரை அமிழ்ந்திருந்த ஆணவமலம் வெளிப் பட்டதனால் இக்கொடுங்காட்சியை நல்கினார் போலும். இனி,

> "மட்டார் குழலார் பிறந்த பதிப் பிறந்தேன்,
> பட்டாங்கி யானும் ஓர் பத்தினியே யாமாகில்,
> ஒட்டேன்; அரசோடு ஒழிப்பேன் மதுரையும்; என்
> பட்டிமையும் காண்குறுவாய் நீ''
>
> (சிலம்பு: 21, 35)

என்று பேசும் பேச்சும் இக் குற்றம் மீதூர்ந்து நின்ற நிலையை அறிவுறுத்துகிறதோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

மதுரை எரியத் தொடங்குகையில் மாபத்தினியின் சினம் ஒருவாறு தணிந்துவிடக் காண்கிறோம். அன்றியும், தீக் கடவுள் அவர் முன்தோன்றி,

"மாபத்தினி நின்னை மாணப் பிழைத்தநாள்,
பாய் எரி இந்தப் பதியூட்டப் பண்டேயோர்
ஏவல் உடையேனால்''

(சிலம்பு: 21, 50)

என்று கூறினவுடன், மதுரை நகரைத் தண்டிக்க வேண்டிய பொறுப்புத் தம்முடையதென்று கூறிக் கொண்டிருந்த பெருமாட்டிக்கு ஒரு புதிய அதிர்ச்சி ஏற்பட்டதுபோலும்! மதுரையை நானே அழிப்பேன் என்று தொடங்கிய அத்தேவியின் முன்னர், அவ்வாறு அழியவேண்டிய நியதி பண்டே ஏற்பட்டுள்ளதென்று அக்கினித் தெய்வம் கூறியது, தம் சக்தியை ஓரளவு விரித்துக்கண்ட கண்ணகி யாருக்கு எதிர் மறையாக அமையக்காண்கிறோம். அக்கினிக் கடவுளின் கூற்றால் ஒருண்மை புலப்பட்டே தீரும். அதாவது, மதுரை எரியுண்டது என்றால் அது மாபத்தினியால் அன்று; அவர் ஒரு துணைக் காரணமாக அமைந்தாரே அன்றி முதற் காரணமல்ல என்பதே அது. எனவே, துணைக் காரணமாகி நிற்கின்ற அவர், தம்மை முதற்காரணம் என்று நினைத்து "மதுரையை அரசோடு ஒழிப்பேன்'' என்று கூறியது, ஓரளவு பொருத்தமிலாக் கூற்று என்பதை நாமே அறிய முடிகிறதாதலின், இதனை, அப்பெருமாட்டி எளிதில் அறிந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

இதனையடுத்து, மதுராபதித் தெய்வம், ஒரு முலை குறைத்த திருமா பத்தினியின் பின்னர் வந்து

"கேட்டிசின் வாழி நங்கை என்குறை'' (சிலம்பு: 23, 17)

என்று பேசும்பொழுது வழக்குரைத்த சூழ்நிலையிலோ, அன்றி அழற்படுத்த சூழ்நிலையிலோ உள்ள கண்ணகியை நாம் காணவில்லை. அதன் எதிராக, அடக்கமே உருவான பழைய கண்ணகியை, ஓரளவு அவலம் நிறைந்த, துயரம் நிறைந்த கண்ணகியைக் காண்கின்றோம். ஆதலால்தான் "என் பின்னர் வருகின்ற நீ யார்? என் துயரத்தை அறிவையோ?'' என்ற பொருளில்,

"வாட்டிய திருமுகம் வலவயின் கோட்டி,
யாரைநீ என்பின் வருவோ என்னுடை
ஆர்அஞர் எவ்வம் அறிதியோ வென (சிலம்பு: 23, 18)

என்று கேட்கின்றார். அடுக்கி வருகின்ற துன்பங்கள் மக்களை இருவகையாகப் பாதித்தலைக் காண்கின்றோம். சாதாரண மக்கட்குத் துன்பம் நேர்கையில் அவர்களைக் காழ்ப்புடையவர்களாகவும் கொடுமை நிறைந்தவர்களாகவும் மாற்றக் காண்கிறோம். பண்பாடுடையாருக்கு வரும் துன்பங்கள் பொன்னைக் காய்ச்சப் பயன்படும் நெருப்புப் போன்றவை. நெருப்பு, பொன்னை மாசு நீக்கி ஒளியடையச் செய்வதுபோல இத்துன்பங்கள்

யாரைப் பாதிக்கின்றனவோ அவர்களுடைய மாசைத் துடைத்து ஒளி விடச் செய்யப்பயன்படுகின்றன.

இதனை அடுத்து, மதுரை எரியக் காரணம்

"..................... வெள்ளி வாரத்து ஒள்ளெரியுண்ண,
உரைசான் மதுரையோடு அரைசு கேடுறும் எனும்,
உரையும் உண்டே நிரைதொடி" (சிலம்பு: 23, 135)

என்று மதுராபதித் தெய்வம் கூறியதனால், மதுரையின் அழிவுக்கும் பாண்டியன் இறப்புக்குங் கூடத் தான் நேரான காரணமல்லள், துணைக் காரணமே என்பதைக் கண்ணகித் தெய்வம் நன்கு அறிகின்றார்.

எனவே, மதுரையை 'அரசோடு ஒழிப்பேன்' என்று வஞ்சினம் கூறிய பெருமாட்டி, அவை இரண்டையும் தாம் செய்வதற்குத் தேவையே இல்லையென்பதையும், இந்த அண்டத்தின் சட்டத்தில், அறிவுக்கு அப்பாற்பட்ட இயக்கத்தில், ஏனைய உயிர்களைப் போலத் தாமும் ஒரு சிற்றுயிரே என்பதையும், நிகழ்ச்சிகள் நிகழப் பிறஉயிர்கள் துணைக்காரணமாக அமைவதுபோலத் தாமும், பாண்டியன் மரணம், மதுரையின் அழிவு ஆகிய மாபெரும் நிகழ்ச்சிகட்குத் துணைக்காரணமாகவே அமைய நேர்ந்தது என்பதையும் அறிந்தார்போலும். பிற குற்றங்களிலிருந்து இயல்பாகவே நீங்கி, இறுதியாக

நிற்கின்ற ஆணவமலத்தால் மட்டும் ஓரளவு கட்டுண்டு நின்ற இப்பெருமாட்டி, அங்கியங் கடவுளும் மதுராபதித் தெய்வமும் மிக நுண்மையான முறையில் அறிவு கொளுத்தியவுடன், அந்த ஆணவமலமும் நீங்கப் பெற்றுச் சுடர்விடும் பொன்னாக ஆகிவிடுகிறார்.

முன்னர்க் கூறியபடி, அகங்காரம் முற்றிலும் மறையும் பொழுது, உலகம் முழுவதையும் ஒன்றாகக் காணும் நற்காட்சி விரிகின்றது. அதன் பயனாகப் போலும், 'அரசை ஒழிப்பேன்' என்று கூறிய அதே கண்ணகியார், கடவுட் கோலம் கொண்டு

> "தென்னவன் தீது இலன், தேவர்கோன் தன்கோயில்
> நல்விருந்து ஆயினான் நான் அவன்தன் மகள்"
> (சிலம்பு: 29, 10)

என்று பேசக் கேட்கின்றோம்.

ஆணவ மலத்தால் கட்டுண்டிருந்த காலை, மன்னவனும் கோநகரும் தவறு இழைத்ததாகவும், தாம் தவறு இழைக்கப்பெற்றதாகவும் கருதி, தவறு இழைத்த அவர்கள் இருவருக்கும், தவறு இழைக்கப் பெற்ற தாம் தண்டனை தருவது முறையே என்றும் கூறிய அதே கண்ணகியார், அந்தக் குற்றம் நீங்கியவுடன் தென்னவன்மாட்டும் மதுரை மாட்டும் தீதில்லை என்பதைக் காண்கின்றார்.

"கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்
மேல்திசை வாயில் வறியேன் பெயர்க"
(சிலம்பு: 23, 182)

என்று அத்தேவியார் கூறிக்கொண்டு கொற்றவை வாயிலில் தம் வளையல்களை உடைத்த அந்த நேரத்தில் முற்றிலும் ஆணவ மலத்தில் இருந்து விடுபட்டு விடுகிறார். 'வறியேன் பெயர்க' என்று கூறும் பொழுதே அந்த ஆன்மா முழு விடுதலை பெற்றுவிட்டதைக் குறிப்பால் பெறவைக்கின்றார் ஆசிரியர். மாசு நீங்கிய பொன்னாக அப்பெருமாட்டி ஆயினார் என்பதை அவருடைய சொற்களிலிருந்தே கூட அறிய முடிகிறது. குன்றத்துக் குறவர்கள் "வள்ளி போல் வீர் ! யாவிரோ?" என்று கேட்ட வினாவிற்கு அத்தேவியார் ஒரு சிறிதும் முனியாமல்

"மண மதுரையோடு அரசு கேடுற வல்வினை வந்து
உறுத்த காலைக் கணவனை அங்கு இழந்துபோந்த
கடுவினையேன் யான்" (சிலம்பு: 24, 5)

என்று கூறுகிறார். கணவன் இறப்பு, அரசன் மரணம், மதுரை அழிவு ஆகிய அனைத்துக்கும் வல்வினையே காரணம் என்று உணர்ந்து கொண்டார். இந்நிலையில் மதுரை, அரசு இரண்டும் கேடு உற என்றமையின் அக்கேட்டுக்குத் தாம் எவ்வாற்றானும் காரணம் அல்லர் என்பதையும், கணவனை இழந்ததற்கும் வல்வினை காரணம் என்றமையின் பாண்டியன்

அல்லன் என்பதையும் உணர்ந்து பேசினாராகலின் அகங்கார, மமகாரங்களிலிருந்து முழு விடுதலை பெறுகிறார். அந்த நினைவு வந்தவுடன் "வானவரும் நெடுமாரி மலர் பொழிந்து... கொண்டு போயினார்" எனக் காப்பியம் பேசுகிறது.

❀❀❀❀❀

# 2. கொப்பரைத் தேங்காய்

'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்று 'மணிமேகலையில்' போற்றப்பெறும் புத்ததேவன் கபிலவாஸ்துவில் அரசன் மகனாய்த் தோன்றியவன். அற்றை நாளில் அரசுச் செல்வத்தில் பிறப்பதைக் காட்டிலும் சிறந்த பேறு வேறு இல்லை. மேலும் மனத்துக்கிசைந்த மங்கை நல்லாள் ஒருத்தியை மணந்து அருமை மைந்தன் ஒருவனையும் பெற்று வாழத் தொடங்குகையில் பெற வேண்டிய இன்பம் அனைத்தையும் பெற்றுவிட்டதாகவே கருதலாம்.

மகனுடைய பிற்கால வாழ்வு ஏனையோர்போல அமையாது என்பதை அறிந்த அரசன் சுத்தோதனன், துன்பம் அல்லது துயரம் என்று கூறத்தக்கவை எவையும் அவன் கண்ணெதிர் வரவொட்டாமற் செய்துவிட்டான். அவ்வாறு இன்பத்தில் பிறந்து, இன்பத்தில் வளர்ந்து, இன்பத்தையே கண்டு பழகிய ஒரு பெருமகன் வாழ்வில் முயன்று கண்ட உண்மைகள் யாவை?

துக்கம்; துக்க உற்பத்தி; துக்க நிவாரணம்; துக்க நிவாரண மார்க்கம் என்பவை அல்லவோ இன்பத்தில் மிதந்த பெருமகன் கண்ட உண்மைகள்?

இது எவ்வாறு இயன்றது? துன்பத்தை அறியாமலும் காணாமலும் இருந்து விட்டால் துன்பத்தால் மகன் மனம் வேறுபட இயலாது என்று கருதிய மன்னன் மனக்கோட்டைகள் மங்கிவிட, வாழ்நாள் முழு வதையும் துன்ப ஆராய்ச்சியில் கழித்த மகன் வாழ்வு, எவ்வாறு எங்கே பரிணமித்தது? சாதாரண மனிதர்க்கும் பெரியோர்க்கும் வேறுபாடு இங்கேதான் தோன்றுகிறது. இவ்வுடம்புடன் வாழும் வாழ்வே அனைத்தும் என்று வாழ்பவர், சாதாரண மனிதர். உடம்புடன் இவ்வுலகில் வாழுங்காலத்திலேயே மனத்தால் பிறிதோர் வாழ்வு வாழ்பவர் பெரியோர் எனப்படுவர். உடல் கொண்டு வாழும் வாழ்வில் இன்பந்தவிர வேறு இல்லை என்பது உண்மை தான். ஆனால், இன்பம் என்று இங்குக் குறிக்கப்படுவது யாது? உடல் அனுபவிக்கும் நிகழ்ச்சிகளில் மனம் பங்கு பற்றும்பொழுதுதானே இன்பம் என்பது தோன்றக்கூடும்? மலர் மாலை அணிதல் இன்பம் என்று கூறுகிறோம். ஆனால், உறங்குபவன் மேலும், இறந்தவன் மேலும் மலர் மாலையைப் போட்டாலும், போடத் தகாத ஒரு பொருளைப் போட்டாலும் இரண்டும் ஒன்றுதானே? ஏன்? அவன் மனம் அதில் ஈடுபடவில்லையாயின் அதனால் தோன்றும் இன்ப துன்ப உணர்ச்சிகளும் தோன்றுவதில்லை.

உடல் வாழ்வு வேறாகவும், மனவாழ்வு வேறாகவும் வாழ்ந்துவரும் பெரியோர்களை நாம் அன்றாடம் அனுபவிக்கும் இன்ப துன்பங்கள்

ஒன்றும் செய்வதில்லை. "ஏசுநாதரைச் சிலுவையில் அறைந்த பொழுது அவர் துயரமடையவில்லை. ஆனால், சிறு முள் என் காலிற் குத்தினால் ஏன் துன்ப முண்டாகிறது?" என இராமகிருஷ்ண பரமஹம்ஸரை ஒருவன் வினாவிய பொழுது, அவர் அழகாக விடை கூறினார். 'ஏசுநாதர் கொப்பரைத் தேங்காய்; நீ இளந் தேங்காய்! அது தான் வேறுபாடு' என்றார் அப்பெரியவர்!

இளந் தேங்காயில் பருப்புடன் ஓடும் ஓட்டிக் கொண்டிருக்கிறது. ஓட்டில் ஆணி அடித்தால் பருப்பிலும் சென்று தைக்கிறது. ஆனால், கொப்பரைக் காயில் ஓட்டினுள் பருப்பு இருப்பினும் இரண்டிற்கும் சம்பந்தமில்லை. ஓட்டில் ஆணி அடித்தாலும் பருப்பில் படுவதில்லை. அதே போன்று பெரியவர்களும் இவ்வுடலுடன் வாழ்ந்தாலும் உடலைப்பற்றிய சுகதுக்கங்கள் அவர்கள் மனத்தையோ ஆன்மாவையோ பற்றுவதில்லை. உடலுடன் வாழ்ந்தாலும் ஒட்டாமல் வாழும் வாழ்வே இவர்களுடைய வாழ்வு. நம்போன்ற மனிதர்கள் உடலுடன் சேர்ந்தே (ஒட்டியே) வாழ்கிறோமாகலின் உடலைப் பற்றியன அனைத்தும் நம் உள்ளத்தையும் உயிரையும் பற்றுகின்றன. பெரியோர்கள் கொப்பரைத் தேங்காய் போன்றவர்கள்!

புத்ததேவன் நன்கு முற்றிவிளைந்த கொப்பரைத் தேங்காயாக இளமையிலேயே ஆகிவிட்டான். எனவே, சுத்தோதனன் அவனை மகிழ்ச்சியிலும் இன்பத்திலும் வாழச்செய்த முயற்சிகள் அனைத்திலும் தோல்வியே அடைந்தான். இன்பத்தின் இடையே வாழ்ந்த புத்த தேவன் துன்பத்தையே கண்டான். பகவத்கீதை கூறுவதும் இதைத்தானே. 'கூட்டத்தினிடையே தனிமையையும், தனிமையில் கூட்டத்தையும் காண்பவனே ஸ்திதப் பிரக்ஞன்' என்று கீதை கூறுகிறது.

பல நாட்கள் ஊண், உறக்கம் அற்றுப் போதி மரத்தடியில் இருந்தமையால் மட்டும் புத்த தேவனுக்கு உள்ளொளி பிறந்துவிடவில்லை. ஊண், உறக்கம் இன்றி அரசமரத்தடியில் நாள் கணக்கில் இல்லாமல் ஆண்டுக் கணக்கில் கிடக்கிறவர்களும் உண்டு. எனினும் அனைவரும் புத்ததேவர்களாக ஆகிவிடவில்லை. ஆதலால், அவன் இதனை அம்மரத்தடியில் பெற்றான் என்பது பொருந்தாக் கூற்றே. இளமைதொட்டே இன்பத்திலும் துன்பத்தைக் கண்ட அவனுடைய மனநிலை பெரிய உண்மையைக் காண்பதற்குத் தயாராகிவிட்டது.

இதன் முதற்படி யாது? வாழ்வின் பயனாக அப் பெருமகன் கண்டவை முன்னர்க்கூறிய நான்கு உண்மைகளாக இருப்பினும், அதன் அடிப்படையான மனநிலையும், வாழ்வுமுறையும் யாவை? என்று

*காணலாம். அக்காட்சி பயனுடையதே அன்றோ? இந்த அடிப்படை மனநிலையை, புத்தனை வாழ்த்தும் பகுதியில் மணிமேகலை நன்கு விளக்குகிறது. பாத்திரம் பெற்ற மணிமேகலை, 'மாத்திரை இன்றி மன மகிழ்வு எய்தி' இதோ கூறத்தொடங்குகிறாள்:*

"மாரனை வெல்லும் வீர நின்னடி
நெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்குஅறம் முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக்கு ஒழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க்கு அளிக்கும் கண்ணோய் நின்னடி
தீமொழிக்கு அடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி
வணங்குதல் அல்லது வாழ்த்தல்என் நாவிற்கு
அடங்காது. .................................. "

(மணி. 11 : 61 –71)

*புத்ததேவனுடைய வாழ்விலும் முற்பட்ட பல பிறப்புகளிலும் அப்பெருமகன் செய்த அறச் செயல்கள் பற்றிய குறிப்புகளாகும் இவை. எனினும், இவற்றிடையே அமைந்துள்ள பொதுத்தன்மையை யாரும் அறியாமல் இருக்க முடியாது. இச்செயல்கள்*

கண்டு அவ்வெற்றிக்கு விலையாகத் தம் உயிரையே பணயம் வைத்துப் பலியாகின்றவர்களும் உண்டு. அத்தகையவர்களுள் ஒருவனாகப் புத்ததேவன் ஆகிவிடாமல் மாரனை வெற்றிகண்ட பிறகும் வாழ்ந்த வீரனாவான் ஆகலின் 'வீர' என்று விளிக்கப் படுகிறான். புறப்பகை அனைத்தையும் வெல்வதை வீரம் என்று கூறுவதைக் காட்டினும் அகப்பகையை வெல்பவர்களையே வீரர் என்று இத்தமிழ்நாட்டவர் போற்றினர்.

மாரனை வென்ற பிறகும் 'தீநெறிக் கடும்பகை கடிந்தோய்' என்று மணிமேகலை கூறுவதில் ஓர் ஆழ்ந்த கருத்துள்ளது. 'துறவு' என்ற அதிகாரத்தின் பின்னர் அன்றோ 'அவா அறுத்தல்' என்ற அதிகாரத்தை வள்ளுவர் வைத்துள்ளார். ஏன்? அவாவை அறுத்துத்தானே துறவை மேற்கொள்ள முடியும்? அவ்வாறு இருக்கவும் அவா அறுத்தலை ஏன் பின் அதிகாரமாக வைக்கின்றார்? இதற்கு அமைதி கூறவந்த பரிமேலழகர் 'பழைய பயிற்சி வயத்தால் ஒரோவழிப் புலங்கள்மேல் பற்றுச் செல்லுமன்றே! அதனை ஓயாது நோக்கிப் பரிகரிக்கவே அவா அறுத்தலைத் துறவின் பின்னர் வைத்தார்' என்று எழுதியது இங்கு நோக்கத் தக்கது. ஒருமுறை மாரனை வென்று துறவு பூண்ட புத்ததேவன் தீநெறியாம் கடும்பகையை ஓயாது கவனித்துப் பரிகரித்தான் என்பதையே இரண்டாம் அடியால் குறிக்கிறாள் மணிமேகலை.

அனைத்திலும் பிறர் பொருட்டாக அவன் மேற்கொண்ட செயல்களே அதிகம் பேசப்படுகின்றன. எப்பொழுது ஒருவன் இவ்வாறு பிறர் துயர் ஒழிக்கவும் கண் என்று கூறப்படும் ஞானத்தை வழங்கவும் முற்படுவான்?

மனிதன் என்று 'நான்' என்னும் அகங்காரத்தையும் 'எனது' என்னும் மமகாரத்தையும் அறவே விட்டு ஒழிக்கின்றானோ அன்றுதான் இச் செயல்களைச் செய்ய முடியும். இவை இரண்டையும் வேரொடும் கல்லி எறிந்தவர்களே வீடு பேற்றுக்கு உரியவர்கள் என்று குறள் முதல் அனைத்து நூல்களும் கூறுகின்றன.

'யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்
வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்' (குறள்: 346)

என்ற குறளும்;

'அற்றது பற்று எனில் உற்றது வீடு' (நாலா: 2097)

என்ற ஆழ்வார் பாடலும் இதனை நிறுவ உதவுகின்றன.

அகங்கார மமகாரத்தை வென்றவன் அவன் என்பதை 'மாரனை வெல்லும் வீரன்' என்ற அடி குறிப்பிடுகிறது. அகங்கார மமகாரத்தை இருந்த இடந் தெரியாமல் சுட்டுப் பொசுக்கினவர்களே மாரனை வெல்ல முடியும். மாரனோடு போரிட்டு வெற்றி

தீநெறியாகிய கடும்பகையை எவ்வாறு போக்கினான் புத்ததேவன்? ஒன்றுஞ் செய்யாமல் நாம் மாரனை வென்றுவிட்டோமே; இனி நமக்கென்ன என்று கருதி வாளா இருந்துவிட்டானா? இல்லை. அக்கடும் பகையைப் போக்க ஒரு வழியை மேற்கொண்டான். அவ்வழி யாது? அதுவே மூன்றாம் அடியில் குறிக்கப்படும் பிறர்க்கு அறம் முயலுதலாம்.

சுத்தோதனன் மகனாகப் பிறந்த சித்தார்த்தன் 'மாரனை வென்றபொழுது' புத்தனாக ஆகவில்லை. மாரனை வெல்லுதல் பெரிய காரியமே ஆயினும் அதனால் அவன் மகாத்மாவாக ஆகிவிடவில்லை. பின்னர் எப்பொழுது புத்தனாக, மகாத்மாவாக ஆயினான்? எப்பொழுது பிறர்க்காக அறத்தை முயன்று செய்தானோ அப்பொழுதுதான் அவன் மகாத்மா ஆயினான். இதனை மனத்துட் கொண்டே ஆசிரியர் 'பிறர்க்கு அறம் முயலும் பெரியோய்' என்று குறிப்பிடுகிறார்.

பிறர்க்கு அறம் முயலுதலாவது யாது? பிறர்க்கு அறத்தினை அறிவுறுத்துவதும் அவர் பொருட்டாக அறத்தினை முயன்று செய்தலுமாம். கிறிஸ்துவர்கள் 'மானிடர் பொருட்டாக ஏசு சிலுவையில் மாண்டு அவர்கள் பாவங்களைப் போக்கினார்' என்று கூறுவதன் கருத்து யாது?

'பிறர் பழியும் தம் பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி என்னும் உலகு' (குறள்: 1015)

என்று வள்ளுவர் கூறுவது எதனை? இவை அனைத்தும் ஒன்றே. பிறர்க்கு அறத்தை முயன்று செய்தலும், பிறர் பாவத்தைப் போக்கத் 'தன்னரிய திருமேனி சதைப்புண்ண' (இரட்சண்ய யாத்திரிகம்) செய்தலும், பிறர் பழியைத் தம் பழிபோல் நாணுதலும் ஒன்றே. பெயரால் இவை வேறுபடினும் கருத்தால் ஒன்றே.

சித்தார்த்தன் என்ற மனிதன் கௌதம புத்தன் என்ற தேவனாக மாறிய 'ரசவாதத்தை' செய்தது யாது? பிறர்க்கு அறம் முயன்ற பெற்றியே அந்த 'ரசவாதம்'. அதன் விரிவைத்தான் அடுத்துவரும் அடிகள் விளக்கிக் கூறுகின்றன. 'துறக்கம் வேண்டாத தொன்மை' மீட்டும் அவன் அகங்கார மமகாரங் களை வென்ற அளவையே குறிக்கின்றன. மாரனை வென்று தீநெறிக் கடும்பகை கடிந்தவனுக்கு உரிமையால் கிடைப்பது துறக்கம் என்னும் நிலை. இவை இரண்டையும் இந்த உலகில் செய்தவர்கள் பெறும் பேறாகிய துறக்கம் அல்லது மோக்ஷத்தைப் பெற்றுக்கொண்டு அமைந்துவிடும் மனிதர் பலரைப் போல் அல்லாமல் சித்தார்த்தன் புத்தனாக மாறிப் பிறர்க்கு அறம் முயன்ற வரலாற்றை, 'கண்பிறர்க்கு அளிக்கும் கண்ணோன்; நரகர் துயர்கெட நடப்போன்; உரகர் துயரம் ஒழிப்போன்' என்பன போன்ற அடிகள் விளக்குகின்றன.

மாரனை வென்ற வீரனாகமட்டும் இருக்கும் ஒருவனை, தீநெறிக் கடும்பகை கடிந்தவனைக்கூட வாழ்த்தலாம்; பெருமைப்படப் பாராட்டிப் பேசலாம். ஆனால், இவற்றினும் மேம்பட்டுப் பிறர்க்கு அறம் முயலும் பெரியவனை வணங்குவது தவிர வேறு வழி இல்லை. மனிதன் கொப்பரைத் தேங்காய் நிலையை அடைய வேண்டுமாயின் அதற்குரிய வழி யாது? அகங்கார மமகாரங்களை அறவே நீக்குதலாம். ஆனால், அதனின்றும் மேம்பட்ட நிலையை அடைய வேண்டுமானால் பிறர்க்கு அறம் முயல வேண்டும்.

புத்ததேவன் கூறிய துக்கத்தை அதற்கு முன்னரும் பின்னரும் கூறியவர்கள், கண்டவர்கள், அறிந்தவர்கள், தங்கள் அளவில் போக்கிக் கொண்டவர்கள் பலருண்டு. அடுத்து துக்க உற்பத்தி பற்றியும் பலரும் அறிந்திருந்தனர். துக்கத்தின் உற்பத்தி ஆசையே என்பதை,

'ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள்,
ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்,
ஆசைப்படப்பட ஆய்வருந் துன்பங்கள்" (திருமந்: 2574)

என்பது போன்ற திருமூலர் திருமந்திர வாக்கும்;

'அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பு ஈனும் வித்து' (குறள்: 361)

என்றும்,

'அவா இல்லார்க்கு இல்லாகுந் துன்பம்' (குறள்: 368)

என்றும் தோன்றிய குறள்களும் இக் கருத்தை வலியுறுத்துகின்றன. துக்க நிவாரணம் என்ற தலைப்பில் ஆசையை அறவே ஒழித்தலே துக்கம் தொலைய வழி என்று கூறிய புத்ததேவன் கருத்தே

'இன்பம் இடையறாது ஈண்டும் அவா (ஆசை)
என்னும் துன்பத்துள் துன்பங் கெடின்' (குறள்: 369)

என்ற குறளிலும் பேசப்படுவது கண்கூடு.

அவ்வாறு புத்தன் கூறியவற்றையே பிறருங் கூறி இருப்பவும் அவர்கட்கு இல்லாத சிறப்பு புத்தருக்கு மட்டும் யாண்டு வந்தது? இதற்கு விடையே முன்னர்க் கண்டோம். அப்பிறர் எல்லாம் இக்கருத்தைக் கண்டனர்; பிறர்க்கு எடுத்துக் கூறினர். ஆனால், தாம் தமக்கென ஒன்றையும் வேண்டாது நின்று கூறவில்லை. பிறர் துயரம் ஒழியும்வரை எனக்கும் வீடு வேண்டா என்று கூறி அதன்படி வாழ முற்படவில்லை. அரச குடும்பத்தில் அரசன் மூதன் மகனாகப் பிறந்த ஒருவன் அற்ப ஆட்டுக்குட்டி ஒன்றைப் பெரிதென மதித்து அதனை வெட்டக் கூடாதென்றும், வெட்டுவதாயின் அதற்குப் பதிலாகத் தன்னுடைய தலையை வெட்டலாம் என்றும் கூறியவன் உண்டா? பிறர்க்கு அறம் முயலுதல் என்றால் வாயால் உபதேசஞ்செய்வது மட்டும் போதாது. ஆட்டுக்குட்டிக்கு பதிலாகத் தன் உயிரை வழங்க முன்வருவதும், நரகர் உலகினும் உரகர் (நாகலோகம்) உலகினும் சென்று அவர்கள் வாழ்வைப் பகிர்ந்து கொண்டு அவர்கள் துயரம் போக்க முனைவதுமே பிறர்க்கு அறம் முயலுவதாகும்.

கொப்பரைத் தேங்காயாக மனிதன் ஆவதுதான் யான், எனது என்னும் செருக்கை அறுத்த நிலை. ஆனால், கொப்பரைத் தேங்காய் செக்கில் அகப்பட்டுத் தான் வெந்து, சுருங்கி, நைந்து, எண்ணெயாக மாறிப் பிறர்க்குப் பயன்படுவதுதான் புத்தனாகும் நிலை. ஆதலால்தான் புத்தன் கூறிய உண்மைகளைப் பிறருங்கூறி இருப்பவும், அப் பிறர்பற்றி இவ்வுலகம் கவலை கொள்ளாமல் புத்தனைப் பின்பற்ற முனைகிறது.

அரண்மனைப் போகவாழ்வில் உடம்பால் ஈடுபட்டிருப்பினும் புத்ததேவன் மனம் மாரனையும் தீநெறிக் கடும்பகையையும் வெல்ல வழிதேடி அலைந்தது. என்று அருமைமனைவி 'யசோதரை', அருமந்தபிள்ளை 'இராகுலன்' இருவரையும் விட்டுப் பிரிந்ததோ, அன்றே அவன் மனம் இவை இரண்டிடத்தும் வெற்றி பெற்றுவிட்டது. ஆனால், போதி மரத்தடியில் 'சுஜாதை' என்ற ஆயர்குல மடந்தை தந்த பாற்சோற்றை உண்டு கண்ட உண்மை யாது? 'பிறர்க்கு அறம் முயலும்' பெற்றியேயாகும். பிறர்க்கு அறம் முயலும் பெற்றி உலகில் பரவி, உலகம் வாழ வழி வகுப்பதாக.

❀❀❀❀❀

# 3. எங்கே செல்கிறோம்?

'அகில யுகம்' என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளப்பெறும் இந்த யுகம், இதற்கு முன்னர் முடிந்த யுகங்களையெல்லாம் காட்டிலும் மிகச் சிறப்புடையது என்றும், மிகவும் பெருமையுடையது என்றும், ஈடு இணையற்றது என்றும் சொல்லிக் கொள்கிறோம். உலக வரலாற்றிலேயே இவ்வளவு சிறந்த முறையில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், மருத்துவக் கண்டுபிடிப்புகளும் கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளது போல் சென்ற பல நூற்றாண்டுகளில் கூட இல்லை என்று பெருமை பேசிக்கொள்கிறோம். இவையனைத்தும் உண்மைதான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால், அந்தப் பழைய நூற்றாண்டுகளில் வாழ்ந்த அதே மனிதகுலம் தான் இன்றும் வாழ்ந்துவருகிறது. அப்பழைய மனிதனைவிட இப்புதிய யுக மனிதர்கள் அறிவிலும், கல்வித் தரத்திலும் மேம்பட்டு உள்ளார்கள் என்பதிலும் ஐயமில்லை.

என்றாலும் என்ன? அந்தப் பழைய மனிதர்கள் பெற்றிருந்த ஓர் அரும்பொருளை, பொன் எனப் போற்றிய ஒரு பொருளை இன்றைய சமுதாயம் இழந்து நிற்கக் காண்கிறோம். செல்வச் செருக்கில்

மிகுந்த அமெரிக்காவிலிருந்து வறுமையில் வாடி உழல்கின்ற ஆப்பிரிக்கர்கள் வரை இப்பொருளை இழந்து நிற்கக் காண்கிறோம். எத்தகைய பொருளை இப்புதிய சமுதாயம் இழந்துவிட்டது என்பதை கொஞ்சம் காண்டல் வேண்டும். அன்றைய மனிதன் பெற்றிருந்ததும் இன்றைய மக்கள் இழந்து நிற்பதும் ஆகிய அந்த அரும்பொருள்தான் 'அமைதி' என்பது. இன்றைய சமுதாயத்திலுள்ள இளையவர்--முதியவர், ஆண்--பெண், கற்றார்--கல்லாதார், நாகரிகம் மிகுந்தார்--நாகரிகமற்றார், பொருள் வளம் உடையார்--வறுமையில் வாடுவார் ஆகிய அனை வருக்கும் ஒரு சிறந்த பொதுத்தன்மை இருக்கக் காண்கிறோம். இவர்கள் அனைவரும் மனிதர்கள் என்ற பொதுத் தன்மையையோ, உலக சமுதாய உறுப்பினர்கள் என்ற பொதுத் தன்மையையோ இங்குக் குறிப்பிடவில்லை. மனத்துக்கண் அமைதி என்பது ஒரு சிறிதும் இல்லாமல் 'எங்கே செல்கிறோம்' என்று தெரியாமல் துயரச் சூழலில் சிக்கி உழல்கின்ற ஒன்றைத்தான் பொதுத் தன்மை என்று பேசுகிறோம்.

விஞ்ஞான முன்னேற்றம் என்பது இல்லாத அந்தப் பழைய நாளில் 'மனிதர்கள் வாழ்க்கை வசதிகளில் குறைந்து இருந்திருக்கலாம். மணிக்கு நான்கு மைல் வேகத்திற்குமேல் போக முடியாதவர் களாக இருந்திருக்கலாம். விண்ணை முட்டும் மாடமாளிகைகள் கட்டிக்கொள்ளத் தெரியாமல்

நாணல் குடிசைகளில் வாழ்ந்திருக்கலாம். என்றாலும் என்ன? குடிசையில் வாழ்ந்து பசி எடுத்தபொழுது வேட்டையாடி வயிறு வளர்த்த அவர்கள் மன அமைதியோடு வாழ்ந்தார்கள் என்பதை மறுக்க இயலாது. வாழ்க்கை வசதிகளும் நாகரிகமும் மிகுதி யாகப் பெற்றுள்ளதன் பயனாக இன்று நாம் அமைதியை இழந்து நிற்கின்றோம். "வானையும் மண்ணையும் பரிசாகப் பெற்றுதான் என்ன பயன்? அந்தப் பேரத்தில் நம்முடைய ஆன்மாவை நாம் இழப்பதனால்'' என்று ஷேக்ஸ்பியர் கூறுவது இங்கே நினைவுக் கூறத்தக்கது.

இம் முன்னேற்றங்களால் பெற்ற பயன் யாது? இந்த முன்னேற்றங்களும் வசதிகளும் கிடைத்து விட்டமையால் மனிதனுடைய உடல் உழைப்பு ஓரளவு குறைந்தது என்னமோ உண்மை. உடல் உழைப்பையும் அதன் பயனாக ஏற்படுகின்ற களைப்பையும் அதிகம் பெற்றிருந்த பழங்கால மனிதன், அவ்வுழைப்பின் பின்னரும் அமைதியோடு உறங்க முடிந்தது. அந்தப் பழைய மனிதனுக்கும் பகை, போட்டி, பொறாமை என்பவை இருந்தன. ஆனால், அவையனைத்தும் அவனுடைய வாழ்க்கை முழுவதையும் ஆட்கொள்ளாமல் அவனுள் ஓரளவு அடங்கி நின்றதாக அறிகின்றோம். இன்றைய மனிதனைப் பொறுத்தமட்டில் பிற வசதிகளும் வாய்ப்புகளும் வளர்ச்சி அடைந்ததைப் போலவே இந்தப் பொறாமை, போட்டி, சகிப்புத் தன்மை

இன்மை, வெறுப்புணர்ச்சி, காழ்ப்பு ஆகியவையும் வளர்ந்துள்ளன. வளர்ந்துள்ளன என்று கூறும் பொழுது, காலத்திற்கேற்ப ஓரளவு வளர்ந்து இருக்குமாயின் அதனைப் பெரிதாகப் பாராட்ட மாட்டோம். ஆனால் இன்றைய மனிதனை மூழ்கடிக்கும் அளவிற்கு அல்லவா அவை வளர்ந்து விட்டன.

அன்றாடம் செய்தித்தாள்களைப் படிக்கின்றவர் களும், உலகைச் சுற்றி வருகின்றவர்களும் ஒன்றைக் கண்டு வியப்பு அடையாமல் இருக்கமுடியாது. ஒரு புறம் மனிதனின் வாழ்க்கையை வளம்படுத்தும் வசதிகள் மலைபோல் வளர்ந்துள்ளன. அதன் எதிர்ப்புறம் அவனையே துயரச் சூழலில் அழுத்திவிடும் பிரச்சனைகளும் மலைபோல் வளர்ந்துள்ளன. இவை இரண்டின் இடையே அகப்பட்டு இன்றைய மனிதன், செல்லும் திசை அறியாது தத்தளிக்கின்றான். எவற்றை வசதிகள் என்று நம்பி வளர்த்தானோ, எவற்றால் தனக்கு ஓய்வும், அமைதியும் கிட்டும் என்று கருதினானோ அவையே அவனை மூழ்கடிக்கும் கருவியாக அமைந்துவிட்டதைக் கண்டு இன்றைய மனிதன் திகிலடைகிறான்.

மனிதனுக்கு மிகஇன்றியமையாது வேண்டப் படுவது முழு வளர்ச்சிகளாகும். குத்துச்சண்டை போடுகின்றவனுக்கு அதிகம் பயன்படுவது கைகளே என்றாலும், கையை மட்டும் வலுவுடையதாய்ச்

செய்துகொள்கின்ற ஒரு குத்துச் சண்டை வீரன் என்ன நிலையை அடைவான்? எதிரியைக் குத்தும் பொழுது மிகச்சிறந்த முறையில் அவனால் குத்த முடியுமே தவிர, எதிரி கொடுக்கின்ற குத்தைத் தாங்குவதற்கு நெஞ்சில் உரமும், கீழே விழுந்து விடாமல் இருக்க காலில் வலுவும் தேவையல்லவா? அவை இல்லாமல் கைகளை மட்டும் வலு உடையவையாக வளர்த்துக் கொண்ட குத்துச் சண்டை வீரனை முழு வளர்ச்சி பெற்றவன் என்று நாம் சொல்ல முடியுமா? அதேபோல் இன்றைய மனிதனும் முழு வளர்ச்சி பெறாமல் ஒரு பக்க வளர்ச்சி உடையவனாகவே அமைந்துவிட்டான். அறிவு, உணர்வு என்ற இரண்டின் துணை கொண்டே மனிதன் வாழ்கின்றான். மூளையைப் பற்றி நிற்கின்ற அறிவும், நெஞ்சத்தைப்பற்றி இருக்கின்ற உணர்வும் நன்கு வளர்ந்தால்தான் அவனை முழு மனிதன் என்று சொல்ல முடியும். விஞ்ஞானப் புதுமைகளைக் கண்டு அதனிடையே வாழ்கின்ற 'அணுயுக' மனிதன் அறிவை மிகமிக அதிகமாக வளர்த்துக் கொண்டான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சந்திர மண்டலத்திற்குப் போகின்ற அளவிற்கு அறிவை வளர்த்துக்கொண்ட இன்றைய சமுதாயம், மனிதனுடைய மனத்தில் அமைதியை வளர்க்க என்ன செய்துள்ளது என்ற வினாவை எழுப்பினால், விடை கிடைக்காமல் அவதியுற நேரும். இதே கருத்தைத்தான் தாயுமான அடிகள்

'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம்
அரிது' (தாயு: தேசோ,8)

என்றும்

'பாழான என் மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணுவது
உனக்கு அருமையோ ?' (தாயு: பரி, 9)

என்றும் பேசுகிறார்.

மனிதன் என்பவனுக்குக் குறிக்கோள் என்ற ஒன்று இருந்தே தீரல்வேண்டும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை, விலங்கு வாழ்க்கை என்றே சொல்லப் பெறும். அறிவு உலகத்திற்குக் குறிக்கோள் அமைந்து விட்டது. மேலும்மேலும் புதியன காண்டல், இயற்கையின் ரகசியங்களை ஆராய முற்படுகின்ற விஞ்ஞான அறிவு, ஆகிய துறைகளில் குறிக்கோள் ஒன்று இருக்கின்ற காரணத்தால் அந்தந்தத் துறை களில் முன்னேற்றம் அடைந்து கொண்டே வருகின்றோம். ஆனால், உணர்வுத் துறையில் குறிக்கோள் இல்லாமல் வாழத் தொடங்கி விட்டோம். 19—ஆம் நூற்றாண்டின் இடையில் தோன்றிய விஞ்ஞான வளர்ச்சி, அதன் பயனாக எதனையும் அறிவின் துணை கொண்டே சாதித்து விட முடியும் என்ற தவறான கொள்கை, அந்த நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய உலகாயதக் கருத்துகள் என்ற இரண்டும் கூடி அந்நாளைய மனிதனின் வாழ்க்கை மதிப்புகளை (Values in Life)

அழித்துவிட்டன. அது வரையில் வாழ்க்கையின் சிறந்த மதிப்புகள் என்று எவ்வெவற்றை மனிதன் நம்பி இருந்தானோ அவை எல்லாம் காற்றில் பறக்க விடப்பட்டன. குழந்தைகள் சாப்பாட்டை மறந்து புதிய விளையாட்டுப் பொருள்களில் ஈடுபடுவது போல 20—ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மனிதன் வாழ்க்கையின் மிக இன்றியமையாத இந்த மதிப்புகளை (Values in Life) மறந்து விஞ்ஞானப் புதுமையிலும் அதன் பயனாக அமைந்த உலகாயதக் கொள்கைகளிலும் தன்னை மறந்துவிட்டான். அதன் பயன் இன்று விஸ்வரூபம் எடுத்து சமுதாயத்தையே ஆட்டிப்படைக்கின்ற துயரச் சூழலாகக் காட்சி அளிக்கக் காண்கிறோம்.

மனிதனுடைய மனம் மிக விந்தையான ஒன்று ஆகும். சில அடிப்படையான மதிப்புகளைப் பற்றிக் கொண்டுதான் மனிதன் மனம், பண்பாடு, உணர்வு என்பவற்றில் வளர்ச்சி அடைந்து வந்துள்ளான். இவை மூன்றுக்கும் அடிப்படையான அந்த மதிப்புகளைத் தகர்த்துவிட்டால், புதிய சில மதிப்புகள் பழைய மதிப்புகள் இருந்த இடத்தில் அமர்த்தப் பெறவேண்டும். அங்ஙனம் அமர்த்தப் பெறவில்லை ஆனால், மனிதன் உயிரில்லாத உடம்பு போலவும் தெய்வம் இல்லாத கோயில் போலவும் பாழடைந்து விடுவான். வாழ்க்கை மதிப்புகளை அழித்த 20—ஆம் நூற்றாண்டு மனிதன் இந்த மதிப்புகளை இழந்த பிறகு மனிதன் அடையும்

வளர்ச்சி முழுத்தன்மை பெற்றுச் செம்மை அடைய முடியாது என்ற பேருண்மையை மறந்துவிட்டான். ஒருவேளை பழைய மதிப்புகளை ஒழித்த நேரத்தில் புதிய சில மதிப்புகளை உற்பத்தி செய்து பழைய இடத்தில் வைத்திருந்தாலும் மனிதன் ஓரளவுக்கு அமைதியுடன் வளர்ந்திருக்க முடியும். ஆனால், அழிவு வேலையில் ஈடுபட்ட 20—ஆம் நூற்றாண்டு மனிதன் இந்த ஆக்கப்பணியைச் செய்ய மறந்ததன் பயனாக இன்றைய அல்லல்கள் காட்சியளிக்கின்றன.

மிக அடிப்படையான சமுதாய ஒழுக்கம், ஆண் பெண் உறவு, பெரியவர்களிடமும் மற்றவர்களிடமும் நடந்துகொள்ள வேண்டிய முறை, கல்வியின் பயன், வாழ்க்கையின் குறிக்கோள் ஆகிய அனைத்தும் இன்று தடுமாறி நிற்கின்றன. அமெரிக்கா போன்ற நாடுகளில் சமயப் பிரசாரம் செய்கின்றவர்கள் கூட நல்லொழுக்கம் பற்றிய அடிப்படைக் கருத்துக் களையும், ஆண் பெண் உறவு பற்றிய கொள்கை களையும் இப்புதிய சகாப்தத்திற்கேற்ப மாற்றியமைக்க வேண்டிய சூழ்நிலையில் தாம் இருப்பதாகக் கருதுகிறார்கள். ஒரு காலத்தில் கூடா ஒழுக்கம் என்று பேசப்பெற்றது இன்றைய நாளில் 'தவறு என்ன' என்று கேட்கப்படுகின்ற சூழ்நிலைக்கு வந்து விட்டது. குடும்பம் என்ற ஒன்று தேவைதானா. பெரியவர் சிறியவர், ஒருவர் வார்த்தைக்கு ஒருவர் கட்டுப்படுதல் ஆகிய இந்த வழக்கங்களும், மதிப்புகளும், கொள்கை களும் இன்று செலாவணியாகக் கூடியவையா என்ற கேள்விகளுங் கூடத் தோன்றியுள்ளன.

இவற்றையெல்லாம் நோக்கும்பொழுது 20—ஆம் நூற்றாண்டு மனித குலம் எல்லாவற்றையும் பெற்றும், எல்லா வசதிகளையும் அடைந்தும், முழு வளர்ச்சி பெறாமல், 'எங்கே செல்கிறோம்?' என்ற வினாவிற்கு மட்டும் விடை தெரியாமல், நடுக்கடலில் சுக்கான் முறிந்த கப்பல் தலைவன்போல தத்தளிக்கின்றதைக் காண்கிறோம். இத்தனை வளர்ச்சிகளையும் விட்டு விட்டுக் கூடப் பழைய அமைதியை நாடிச் செல்ல, முன்னேற்றம் அடைந்த அந்த மேலை நாட்டு சமுதாயத்தில் சிலர் முயற்சிப்பதைக் காண்கிறோம். அமெரிக்க 'ஹிப்பி'களுடைய வாழ்க்கையைப் பார்த்தால், புதிய மதிப்புகளையும், முன்னேற்றம் எனப்படுகின்ற வாழ்வையும் ஒதுக்கி, அமைதியைத் தேடி அந்தச் சமுதாயம் அலைகின்றதை அறிய முடிகின்றது. நியூயார்க் நகரத்தில் செல்வந்தர்களின் பிள்ளைகள் பலர் 'ஹிப்பி'களாக மாறி விடியற் காலை நேரத்தில் பஜனை பாடிக்கொண்டு செல்கின்றார்கள் என்றால் அதைக்கண்டு நம்முடைய சமுதாயம் எள்ளி நகையாடலாம். ஆனால், 'எங்கே செல்கிறோம்?' என்ற வினாவிற்கு ஒரு வகையான விடையை அந்த 'ஹிப்பி'கள் காண முயல்கிறார்களோ என்ற ஐயம் தோன்றுகிறது. வளர்ச்சியின் மிக உயர்ந்த நிலையை அடைந்துவிட்ட காரணத்தால் அவர்கள் இந்த வினாவிற்கு புதிய முறையில் விடை காண முற்படுகின்றார்கள். இந் நாட்டில் வாழ்கின்ற நாம் இன்னும் வளர்ச்சியை நன்கு பெறாத காரணத்தால், 'எங்கு செல்கின்றோம்?'

என்ற வினாவையே இன்னும் கேட்காமல் பேராபத்தின் இடையே நின்று, ஆபத்தின் அளவு அறியாமல் கைகொட்டி மகிழ்கின்ற குழந்தைகளைப் போல் நவீனப் புதுமைகளில் நம்மை மறந்து வாயைப் பிளந்துகொண்டு நிற்கின்றோம்.

மனித வளர்ச்சி முழுத் தன்மை பெற வேண்டு மானால் அறிவு, உணர்வு என்ற இரண்டும் வளர்ச்சி பெறவேண்டும். மனித உடலில் அமிலச் சத்தும், காரச் சத்தும் தேவை என்றாலும் அமிலச் சத்தை விடக் காரச்சத்து ஓரளவு கூடி இருத்தல் வேண்டும். அதேபோல அறிவு வளர்ச்சியைவிட, உணர்வு வளர்ச்சி ஓரளவு அதிகம் இருத்தல் வேண்டும். உணர்வை நன்கு வளர்த்துள்ளவர்களே நாம் யார்? நம் கடமை யாது? சமுதாயத்தில் நாம் எங்ஙனம் வாழ வேண்டும்? என்பவற்றை எல்லாம் நன்கு அறிய முடியும். அவர்களே 'எங்கே செல்கிறோம்?' என்ற வினாவிற்கு விடை காண முடியும். ஒரே ஓர் உதாரணத்துடன் இதனை முடிக்கலாம். அறிவுக் கடலில் எல்லையைக் கண்டிருப்பினும் நரேந்திரர் என்ற 'இளைஞர்' எங்கே போகிறோம் என்ற வினாவிற்கு விடை கிடைக்காமல் அவதியுற்றார். இறுதியில் உணர்வுக் கடலாகிய 'இராமகிருஷ்ண பரமஹம்சரிடம்' வந்த பின்னரே இந்த வினாவிற்கு விடை கண்டார்; கண்டதால் விவேகாநந்தராகவும் ஆயினார்.

❀❀❀❀❀

# 4. புலியார் நட்பு

ஒரு நாட்டை ஆள்பவர்கட்கு இன்றியமையாது வேண்டப்படுவது யாது? இவ்வினாவிற்குப் பலரும் பலவாறு விடை கூறுவர். ஆனால், அவர்களுடைய விடைகள் அனைத்தையும் கூட்டி ஒரு சொல்லில் கூறவேண்டுமாயினும் கூறலாம். ஆட்சியாளருக்கு இன்றியமையாது வேண்டப்படுவது ஒரு 'குறிக்கோள்'. குறிக்கோள் இல்லாதவனுடைய வாழ்க்கை சிறப்படையாது. விலங்குகளும், பிறந்து, உண்டு, வாழ்ந்து, முடிவில் இறக்கின்றன. மனிதனும் இவ்வாறே இருந்துவிடுவானாகில் இருவருக்கும் வேறுபாடு இல்லையாய் விடும். விலங்கினத்திலிருந்து மனிதன் பிரிக்கப்படுவதற்கு ஒரு சிறந்த காரணம் அவன் வாழ்க்கையில் மேற்கொள்ளும் குறிக்கோள் தான். குறிக்கோள் இல்லாதவனுடைய வாழ்க்கை உப்புச் சப்பு இல்லாமல் ஏதோ நடைபெறுகிறது என்று கூறும் முறையில்தான் இருக்கும். தனிப்பட்ட மனிதன் வாழ்வுக்கே குறிக்கோள் தேவை என்றால் பலருடைய வாழ்க்கையை வழிகாட்டி நடத்தும் நாடாள்வாருக்கு இது தேவை என்று கூறினால் அதில் வியப்படைய ஒன்றும் இல்லை. இன்று நாட்டை ஆள்பவர்கள் எத்துணைப் பெரு

முயற்சியுடன் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற அரும்பாடுபடுகின்றனர்? இத்திட்டம் முடிந்து பயன் தரும் பொழுது, இன்று ஆட்சி செலுத்துபவர்களே அப்பொழுதும் இருப்பார்கள் என்று கூறுவதற்கில்லை. எனினும், இன்று ஆள்பவர்கள் அதுபற்றிக் கவலை கொள்வதில்லை. தாங்கள் மட்டும் ஆட்சியில் அமரமுடியுமா என்பது பற்றிக் கவலை கொள்ளாமல் திட்டங்களை நிறைவேற்ற முற்படுகிறார்கள். ஏன்? இதுதான் குறிக்கோள் என்று கூறப்படும். நாட்டுக்கும் பெரும்பாலான மக்கட்கும் நலந்தருவது எது என்று ஓயாமல் நினைந்து அவ்வாறு நலந்தருவனவற்றை நாடுதலே ஆட்சியாளருடைய 'குறிக்கோள்' எனப்படும்.

சிறந்த குறிக்கோள் இல்லாதவர்களும் இல்லாத கட்சியும், எத்துணை வன்மையும் கூட்டச் சிறப்பும் உடையதாயினும் சரி, பயன் தாரா. இன்றைய சூழ் நிலையில் உலக முழுவதிலும் கட்சிகள்தாம் நாட்டை ஆள்கின்றன. மக்களாட்சி நடைபெறுவதாகப் பறை சாற்றப்படும் நாடுகளிலும், தனிப்பட்டவர் ஆட்சி என்று கூறப்பெறும் நாடுகளிலும் உண்மையில் நடைபெறுவது கட்சி ஆட்சியே! கட்சியாட்சியின் குறைவு நிறைவுகளை ஆய்வது நம்முடைய கருத்தன்று. என்றாலும், ஒரு கட்சி சிறப்படைவதும் சிறப்பை இழப்பதும் அதனுடைய குறிக்கோளை வைத்தேயாகும். குறிக்கோள் இல்லாதவர்கள்

கட்சித் தலைவராகவோ நாட்டை ஆள்பவராகவோ இருந்துவிடின் நாட்டுக்குத் தீமை இதனைவிட வேறு தேவையில்லை. எனவே, பலர் அடங்கிய நாட்டையோ கட்சியையோ தலைமை வகித்து நடத்துபவனுக்கு வேண்டிய உயர்ந்த குறிக்கோளைப் பற்றிப் பழந்தமிழ்ப் புலவன் ஒருவன் பாடிய பாடலை இங்குக் காணலாம்.

'உள்ளுவது எல்லாம் உயர்(வு) உள்ளல்; மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து'' (குறள், 596)

என்ற குறளில் வள்ளுவர் குறிக்கோளைப் பற்றித் தான் குறிப்பிடுகிறார். ஒருவனுடைய வாழ்க்கையில் கொள்ள வேண்டிய குறிக்கோள் எத்தகையதாக இருத்தல் வேண்டும்? அதுமிக உயர்ந்ததாக இருத்தல் வேண்டுமாம். அவ்வாறாயின் அது கைகூடாததாக வும் இருக்கலாமோ எனில் இருந்தாலும் கவலை இல்லை என்கிறார் வள்ளுவர். இத்தகைய உயர்ந்த குறிக்கோளுடைய ஒருவன் தன்னால் ஆளப்படும் நாட்டிற்குப் பெரு நன்மை செய்ய வேண்டுமென்று விழைகிறான். நாட்டுக்கு நலன் விளைக்கவேண்டும் என்று நினைக்கும் அவனே ஆள்பவனாகவும் இருந்துவிட்டால், அவனை யார் தடை செய்ய முடியும்? அவன் வேண்டுமானவரை நலம் புரியலாமே என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

ஆனாலும் ஆட்சி முறையில் பழகியவர்கட்குத்தாம் அதிலுள்ள இடையூறு நன்கு தெரியும். ஆளும் தலைவன் எத்துணைச் சிறந்தவனாயினும் அவனுடைய குறிக்கோள் எத்துணைச் சிறந்த தாயினும் பயன் இல்லை; அதனைக் கொண்டு செலுத்துவோர் தக்கவராக இல்லாவிடத்து! இன்று நம்முடைய அரசியலார் செய்யும் பல நன்மைகளைப் பொது மக்கள் அனுபவிக்க முடியாமற் போய் விடுகிறது. காரணம் இடை நிற்போர்! எனவே, ஆள்வோருடைய குறிக்கோள் சிறந்ததாகவும் இருந்து, அது பயன்படவும் வேண்டுமாயின் ஒரே ஒரு வழிதான் உண்டு. அஃதாவது ஆள்வோர்கள் தக்கவர்களைத் தம்முடன் இருத்திக் கொள்ள வேண்டும். உடன் இருக்கும் அத் தக்கவர்களால்தாம் ஆட்சியாளர் குறிக்கோள் நற்பயன் விளைத்தல் கூடும்.

சோழன் நல்லுருத்திரன் என்பவன் நாடாளும் சோழர் குடியில் பிறந்த மன்னன். அரசாட்சியின் இந்த நுணுக்கத்தை அனுபவத்தில் கண்டான் போலும்; இதோ பேசுகிறான் அவன் குறிக்கோளைக் கொண்டு செலுத்த உதவும் நண்பர்கள் பற்றி.

“விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்
வல்சி கொண்(டு)அளை மல்க வைக்கும்
எலிமுயன்(று)அனைய ராகி உள்ளதம்
வளன்வலி உறுக்கும் உளம்இி லாளரொ(டு)

இயைந்த கேண்மை இல்லா கியரோ!
கடும்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்(று)அவண் உண்ணு(து)ஆகி வழிநாள்
பெருமலை விடர்அகம் புலம்ப வேட்(டு)எழுந்(து)
இரும்களிற்(று) ஒருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித்(து) அன்ன மெலிவில் உள்ளத்(து)
உரன்உடை யாளர் கேண்மையொ(டு)
இயைந்த வைகல் உளவா கியரோ!"

(புறம்: 190)

*(விளைபதம்—முற்றிய பருவம்; வல்சி—உணவு; அளை—வளை; வளன்—செல்வம்; வலி உறுக்கும்—இறுகப் பிடிக்கும்; கேண்மை—நட்பு; கேழல்—பன்றி; வழிநாள்—மறுநாள்; விடர்அகம்—குகை; புலம்ப—தனித்துவிட; இருங்களிறு—பெரிய ஆண்யானை; உரன் உடையாளர்—நெஞ்சு வலிமை உடையார்; வைகல்—நாட்கள்)*

*உலகில் வாழும் மனிதர்கள் பலதிறப்படுவர் எனினும், இப்பாடல் பாடிய கவிஞன் அவர்களை இரண்டே பிரிவில் அடக்கிவிடுகிறான். முதற் பிரிவினர் எலியைப் போன்றவர். மனிதனுக்கு வேண்டப்படும் குறிக்கோள் என்பது சிறிதும் அற்று, எவ்வாறாயினும் தாங்கள் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்ற இந்த எலிக் கூட்டத்தார் இன்றும் உலகிடை மிகுதியாகக் காணப்படுகின்றனர். இத்தகையவர்கள் வாழ்வில் தமக்காகவோ பிறருக் காகவோ முயற்சி சிறிதும் செய்யமாட்டார்கள். ஆனால், தமக்குரிய நலங்களையும் விட்டுக் கொடுக்க*

மாட்டார்கள். எவ்வாறு முயற்சிகள் சிறிதும் இல்லாமல் இந்த நலங்களைப் பெறுகிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறதா? பிறர் முயற்சியில் ஏற்படும் பயனை இவர்கள் திருடுகிறவர்கள். யாரோ முயன்று பயிரிட்ட வயலில் கதிர் முற்றிய நிலையில் அதனைத் திருடித் தன் வளையில் வைத்துக் கொள்ளும் எலியைப் போன்ற மக்களும் உண்டு அல்லவா? அத்தகையவர் ஆட்சியாளரை அண்டி இருந்தால் நாடு கெட்டுப்போவதற்கு வேறு காரணமும் வேண்டுமா? இவர்களுடைய பொருள் தவறான வழியில் சேர்க்கப்பட்டிருப்பினும் அதனைக்கூட இவர்கள் பிறருக்குத் தரமாட்டார்கள். சில காலத்திற்கு முன்பு கள்ளச் சந்தையில் நிறையப் பொருளைச் சேகரித்துத் தாமும் உண்ணுமல் அரசியலாருக்குத் தரவேண்டிய வரிப்பணத்தையும் தாராமல் ஏமாற்றியவர் எத்தனைபேர்? அவர்கள் அனைவரும் இந்த எலிக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களேயாவர்.

இவரினும் வேறுபட்ட ஒரு கூட்டத்தாரும் உண்டு. இவர்கள் புலிபோன்ற கோட்பாட்டினை உடையவர். புலி பசி தாளாமல் பன்றியை அடித்தாலும் அப்பன்றி இடப்பக்கம் வீழ்ந்து விட்டமையின் அதனை உண்ணாமற் சென்று விட்டதாம். பசித்த காலத்து எது கிடைத்தாலும் சரி என்று நினையாமல் தன் கொள்கைக்கு முரணானை விடத்துப் பசியையும் பொறுத்துக் கொள்கிற புலி,

மனிதனுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அன்று உண்ணாத புலி மறுநாள் புறப்பட்டு யானையை வலப்புறம் விழுமாறு அடித்து அன்றுதான் உண்டதாம். எனவே, கொள்கையே பெரிதென்று வாழும் மனிதர்கள் புலியின் இனத்தைச் சேர்ந்தவர்கள். பிற விலங்குகள் அடித்துக் கொன்ற உணவைப் புலி உண்பதில்லை. அதுபோல் இவர்களும் பிறருடைய முயற்சியில் வந்த பொருளைத் தாம் அனுபவிப்பதில்லை. தன்னால் அடிக்கப்பட்ட விலங்கு இடப்புறம் வீழ்ந்துவிடின் புலி அதனை உண்ணாதாம். அதேபோல இவர்கள் அடையும் ஊதியம் தவறான வழியில் வந்திருப்பின் இவர்கள் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. புலி பசியைப் பொறுத்துக் கொள்வதுபோல் இவர்களும் வாழ்க்கையில் உண்டாகும் எத்தகைய துன்பத்தையும் தம் கொள்கைக்காகப் பொறுத்துக் கொள்வர். புலி முயற்சியால் கொன்ற விலங்கைத் தான் உண்டுவிட்டு எஞ்சியதை நாளைக்கு வேண்டுமே என்று வைத்துக் கொள்வதில்லை. அந்த எஞ்சிய உணவைப் பிற விலங்குகள் பல உண்டு உயிர் வாழும். அதேபோல இந்தப் பெரியவர்கள் தாம் செய்த முயற்சியால் பெற்ற ஊதியத்தைத் தமக்கே வேண்டும் என்று வைத்துக் கொள்வதுமில்லை. தங்கள் தேவை தீர்ந்தவுடன் எஞ்சியதைப் பிறருக்கு வரையாமல் வழங்குவர். இத்தகைய புலிக் கூட்டத்தாருடன் நட்பு வேண்டும் என்று கூறுகிறான் வாழ்க்கையில் பெரிய குறிக்கோள் வேண்டும் என்று கருதும் அப்பழந்தமிழ்

ஆட்சியாளன். ஐந்தாண்டுத் திட்டங்கள் வெகுவாக நடைபெறும் இக்காலத்தில் நமது அரசியலாருக்கு எலிக் கூட்டத்தார் நட்பினராக ஆகாமல், புலிக் கூட்டத்தார் நட்பினராக ஆனால் எவ்வளவு பெரிய நன்மை உண்டாகும்!

ஆட்சியாளர் இன்றும் அன்றும் நாட்டுக்கு எவ்வாறு நன்மை புரிகின்றனர்? பொதுமக்கள் தருகின்ற இறைப்பணத்தை (வரி) வைத்துத்தானே ஆட்சி நடைபெறுகிறது? இன்றும் வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தின் தலையாய கடமைகளுள் ஒன்று அன்றோ? எவ்வாறு புதிய வரிகளைப் போட்டுப் பணம் சேகரிக்கலாம் என ஆட்சியாளரும், எவ்வாறு வரிச்சுமையைக் குறைக்கலாம் எனப் பொதுமக்களும் சிந்தித்தல் இயற்கை. புதிய வரிகளைப் போடுதலில் எந்த அளவைக் கொள்வது என்பதுபற்றி எந்த அரசிலும் முடிந்த முடிவாக இதுவரை ஒன்றும் கூறப்படவில்லை. கொடுப் போருடைய வன்மைதான் வரி விதிப்போருக்கு அளவாக அமைதல் வேண்டுமே தவிர, அரசியலாருக்கு ஏற்படும் செலவு அளவாக அமைதல் கூடாது. இக்கருத்து இன்றும் சிறந்த அரசியல்வாதிகள் அனைவரும் ஒத்துக்கொள்கிற கொள்கையாகும். இக்கருத்தைப் பிசிராந்தையார் என்ற புலவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் அழகிய ஓர் உதாரணத்துடன் விளக்குகிறார்.

*யானை பெருந்தீனி தின்னும் பிராணி. ஆனாலும் சிறிய மா அளவுள்ள நிலத்தில் விளையும் நெல்லை அறுத்து அரிசியாக்கித் தந்தால் பெரிய யானைக்குக் கூட அது பல நாட்கட்கு ஆகும். அவ்வாறு செய்யாமல் யானை தானே சென்று உண்ணட்டும் என்று அவிழ்த்து விட்டால் நூறு ஏக்கர் நிலமாயினும் வாயில் புகுவதைக் காட்டினும் காலில்பட்டு அழிவது மிகுதி. எனவே, அறிவுடைய வேந்தர் முறை தெரிந்து இறைப்பணத்தை வசூலித்தால் பலகாலம் அரசனும் மக்களும் இன்பமாக வாழ முடியும். அரசன் அறிவற்றவனாகித் தீயவர்களை நட்புக்கொண்டு செலவை முன்னிட்டு வரியைப் பெற்றால் யானை புகுந்த வயலைப்போல நாட்டையுங் கெடுத்துத் தானும் கெடுவான் என்ற கருத்தில் பாடுகிறார்.*

“காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறை(வு) இல்லதும் பல்நாட்(கு) ஆகும்;
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்(கு) உணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்என் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே“

(புறம்: 184)

*(காய்நெல்—விளைந்த நெல்; கவளம்—யானைக்குத் தரும் சோற்று உருண்டை; மா—ஒரு சென்ட் போன்ற நில அளவு; செறு—ஏக்கர்போன்ற அளவு; நந்தும்—பெருகும்; வைகல்—தினந்தோறும்; கல்என்சுற்றம்—அறிவற்ற கூட்டம்; பரிவுதப—அன்பு கெடும்படி; பிண்டம்—பொருள் தொகுதி; நச்சின்—விரும்பினால்)*

❀❀❀❀❀

# 5. பழைய சிறுகதை

ஊரை அடுத்துள்ள அடர்த்தியான சோலை ஒன்று. சோலையை ஒட்டினாற்போல சலசல என்று நீர் ஓடிக் கொண்டிருக்கின்ற சிறிய ஆறு ஒன்று. அந்தத்தலைவி நாள்தோறும் இந்தச்சோலைக்குத் தான் வருவது வழக்கம். சொல்லி வைத்தாற் போல அவள் வருகின்ற நேரத்தை அறிந்து கொண்டு அந்தத் தலைவனும் அங்கே வருவான். தலைவி தனியே வருவதில்லை என்பது உண்மைதான். அவளோடு சேர்ந்து அவள் உயிர்த்தோழி ஒருத்தியும், சாதாரணத் தோழிகள் பலரும் சோலைக்கு வருவார்கள். ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிச் சாதாரணத் தோழிகளையெல்லாம் சோலையின் பல்வேறு இடங்களுக்கு அனுப்பிவிடுவாள் தலைவி. உயிர்த் தோழி மட்டும் தலைவியின் கூடவே இருப்பாள்.

நாட்கள் செல்லச் செல்ல இவ்வளவு நெருங்கிப் பழகுகின்ற தோழியைக்கூட அப்பால் செல்லும்படி ஏதோ தந்திரம் செய்துவிட்டாள் தலைவி. தலைவியின் சூழ்ச்சியை அறியாத தோழி தவறு ஒன்றையும் எதிர்பார்க்காமல் அவளைத் தனியே விட்டுவிட்டுச் செல்கின்றாள். சில நேரம் கழித்துத் தலைவியைத் தேடத் தொடங்குகின்றாள் உயிர்த்தோழி. ஒருவாறு கண்டுபிடித்தும் விடுகின்றாள். ஆனால், அந்தச் சோலைக்குள் தலைவியைத் தேட இவ்வளவு அலைய வேண்டுமா என்பதில்

தோழிக்குப் பெருத்த சந்தேகந்தான். தலைவியினிடம் கேட்டுப் பார்க்கின்றாள். ஏதோ வேலையாக, எங்கோ போயிருந்ததாகத் தலைவி நொண்டிச் சமாதானம் சொல்லுகின்றாள். என்றாலும், தலைவியினிடத்து ஐயங்கொள்ளும் நிலை தோழிக்கு ஒன்றும் ஏற்படவில்லை.

நாட்கள் செல்லுகின்றன. தலைவியினுடைய நடை, உடை பாவனைகளில் ஓரளவு மாறுதலைக் காண்கின்றாள் தோழி. பாரதியார் சொன்னபடி "உணவு செல்லவில்லை; உறக்கங் கொள்ளவில்லை; படுக்கை நோகின்றது''. வெளிப்படையான நோய் ஒன்றும் இல்லாமலேயே தலைவி இங்ஙனம் வாடுவதைக் கண்ட தோழி வியப்படைகின்றாள். மெல்ல மெல்லத் தலைவியை நெருங்கி அவள் நோய்க்குக் காரணம் என்னவென்று கேட்கின்றாள். எக்காரணமும் இல்லையென்று தலைவி மறுத்துக் கொண்டே வருகின்றாள்.

நிலைமை மோசமாகின்றது. பலருடனும் கலகல வென்று பழகிய தலைவி தனிமையையே விரும்பு கின்றாள். உயிர்த்தோழியுடன் கூட நெருங்கிப் பழகுவதை விரும்புவதாகத் தெரியவில்லை; என்றாலும் அவளுடைய உடல் இளைப்பு அதிகப் பட்டுக் கொண்டே போகிறது. உயிர்த்தோழிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பிற தோழி மார்களோடு கலந்தாலோசித்துப் பார்த்தாள், ஒன்றும் விளங்கவில்லை. இறுதியாக ஒருநாள் ..........................

எவ்வாறாவது தலைவியின் மனோநிலையை அறிந்து கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வந்தவளாக, தோழி அன்று தலைவியை நெருக்கிப்

பிடித்து, அவள் துயரத்திற்குக் காரணத்தை ஒருவாறு தான் ஊகித்து அறிந்து கொண்டதை எடுத்துக் கூறுகின்றாள். இக்கட்டான நிலைமையில் அகப்பட்டுக் கொண்ட தலைவி இனி உண்மையை மறைக்க முடியாதென்ற நிலையில் ஒருவாறு நடந்தவற்றைக் கூறுகின்றாள். என்ன ஆச்சர்யம்! அவள் எந்தத் தலைவனிடத்தில் ஈடுபட்டாளோ, அந்தத் தலைவனைப் பற்றி அதிகமாக ஒன்றும் தெரியாது அவளுக்கு. எதிர்பாராமல் கிடைத்த சந்திப்பில் முளைத்த அந்தக் காதல் வெகு தூரம் சென்றுவிட்டது. உலகத்தையும் சூழ்நிலையையும் மறந்திருந்த தலைவிக்கு திடீரென்று ஒரு பெரும் தாக்குதல் ஏற்பட்டது. ஒரு நாள் தலைவன் வரவில்லை. 'காலை வாரார் ஆயினும் மாலை வருகுவர்' என்று நினைத்துக் கொண்டிருந்தாள். வியப்பினும் வியப்பு. பல நாட்களாகத் தலைவன் வருவது நின்று போய்விட்டது. என்ன என்பதை யாரும் அறிய முடியவில்லை. பிறரிடம் சொல்லித் துயரத்தை ஆற்றிக் கொள்ளக்கூடிய சூழ்நிலையும் இல்லை. தன் துயரத்தையெல்லாம் கொட்டுகிறாள் தலைவி.

அந்த நிலைமையில் தலைவனைப் பற்றியும், அவர்களுக்குள் உள்ள தொடர்புகள் பற்றியும் பிறர் யாருக்காவது ஏதாவது தெரியுமா என்று கேட்கின்றாள் தோழி. மிகுந்த துயரத்தோடு தலைவி சொல்லுகிறாள். "தோழி, நாங்கள் சந்தித்ததை யாரும் அறிய மாட்டார்கள். அவரும் நானுமே அறிவோம். அவரே இப்போது பொய் பேசத் தொடங்கினால் நான் என்ன செய்ய முடியும்? நாங்கள் சந்தித்த இடத்தில் ஒரு பறவை மட்டும் இருந்தது. அதைத்

தவிர வேறு சாட்சியே இல்லை`` என்று சொல்லி வருந்துகிறாள்.

அந்த அழகிய சிறு கதையைத்தான் பின்வரும் பாடல் தெரிவிக்கின்றது.

"யாரும் இல்லை; தானே கள்வன்
தான்அது பொய்ப்பின் யான்எவன் செய்கோ
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு தான்மணந்த ஞான்றே!"

இப்பாடலின் சிறப்பு என்னவென்றால் தலைவன் தலைவி சந்திப்பை ஒரு பறவையாவது பார்த்துக் கொண்டிருந்ததே அந்தப்பறவையையாவது சாட்சிக்கு அழைக்கலாமா என்றால் அதுவும் முடியாதென்ற கருத்தைத் தலைவி மிகவும் அழகாக வெளிப் படுத்து கிறாள். 'குருகும் உண்டு' என்று சொல்லும் போது அந்தப் பறவையும் 'ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்' என்று கூறியதால் அந்தப் பாழும் பறவை கூட எங்களைக் கவனிக்காமல் மீன் பிடிப்பதிலேயே நோக்கமாக இருந்துவிட்டது என்று கூறுகிறாள். ஆகவே, தலைவியின் எல்லையற்ற துயரத்தை வெளிப்படுத்துகின்ற இந்தப் பாடலில் "மீன் பிடித்துக் கொண்டு நிற்கின்ற குருகு`` என்று சொல்லியதுதான் எல்லையற்ற சோகத்தைக் காட்டுகின்றது. நான்கு வரிகளிலேயே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கூறப்பட்ட ஒரு சிறு கதையைக் காண்கின்றோம்.

# 6. கபிலரும் பாரியும்

இன்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் காரைக்குடியை அடுத்துள்ள திருப்பத்தூர் பகுதியில் பிரான்மலை என்று இப்போதும் வழங்கப்படுகின்ற ஒரு சிறு நகரைத் தலைநகராகக் கொண்டு பாரி என்ற சிற்றரசன் ஆண்டிருந்திருக்கின்றான். பெரிய அரசன் என்று அவனைச் சொல்வதற்கில்லை. 300 ஊர்கள் தான் அவனுடைய சாம்ராஜ்யம். பிரான்மலை என்ற மலைதான் அவனுடைய தலைநகரம். இவ்வளவு சிறிய இடத்தை ஆட்சி செய்த இந்த மன்னனுடைய பெயரை இன்றைக்கும் நாம் நினைக்கக்கூடிய அளவுக்கு ஒரு பெருமையை அவன் பெற்றிருக்கிறான் என்றால், அது அவனுடைய ஆட்சிச் சிறப்பினாலோ அல்லது சாம்ராஜ்யத்தின் பெருக்கத்தினாலோ நிச்சயமாக இருக்க முடியாதல்லவா! பெரிய அலெக்சாந்தர், செங்கிஸ்கான், தாமரிலேன், நாதிர்ஷா போன்றவர்களெல்லாம் இன்றைக்கு நினைக்கப்படுகிறார்கள். வரலாற்றுத் துறையிலே பழகுகின்றவர்கள் அவர்களைச் சிந்திக்கிறார்களென்றால், காரணம்

அவர்களுடைய மாபெரும் சாம்ராஜ்யம்; பெற்ற வெற்றிகள்; செல்வங்கள் சேகரித்த அளவு; ஆட்சிப் பரப்பின் அளவு. இவைகளைத் தவிர அவர்களைப் பற்றி நினைப்பதற்கு வேறு ஒன்றுமில்லை. ஆனால் 300 கிராமங்களை மட்டும் வைத்திருந்த ஒரு மன்னனைப்பற்றி இன்று நாம் நினைக்க வேண்டியிருக்கிறதென்றால் ஏதோ செயற்கரிய செயலை அவன் செய்திருக்க வேண்டும். தமிழ் நாட்டின் வரலாற்றில், கை அகலம் இடமாகிய இந்தத் தமிழ் நாட்டை சேர, சோழ, பாண்டியர்கள் என்ற முடியுடை மூவேந்தர்கள் மூவர் ஆண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இடையே ஓயாத போர்; ஒழியாத போர்.

"இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப . . . . . . . . . "
(புறம்: 8)

என்று சங்கப்பாடல் பாடும். இப்படி ஒருவருக் கொருவர் போட்டி மனப்பான்மையோடு, ஏதோ பிறப்பிலேயே அவர்கள் பகைவர்கள் என்று நினைக்கின்ற நினைவோடு, ஓயாது போராடி மடிந்து கொண்டிருந்த நேரத்தில், சிற்றரசர்களும் நூற்றுக் கணக்கில் இருந்திருக்கிறார்கள். இந்தச் சிற்றரசர்களும், முடியுடை மூவேந்தர்களைப் பின்பற்றி, அவரவர்கள் அவரவர்களுக்கு வேண்டியவர்கள் என்ற முறையிலே, பேரரசர்கள் போரிடத் தொடங்கும் போது சிற்றரசர்களும் தங்களுக்குள் எவ்விதமான பகைமை இல்லாவிட்டாலும், பேரரசர்கள் அடியொட்டி

போருக்குச் சென்றிருக்கிறார்கள். ஆக, சங்ககாலம் என்று சொல்லப்படுகின்ற கால அளவில், தமிழ் நாட்டு வரலாற்றைப் பார்த்தால் ஓயாத, ஒழியாத போராட்டத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை. ஏதோ இடைக்காலத்தில் அமைதியான வாழ்வு இருந்திருக்கிறதே தவிர, மற்றபடி வாழ்க்கையின் குறிக்கோளே போர்தான் என்று நினைக்கக் கூடிய முறையிலே அமைந்திருக்கக் காண்கிறோம். புலவர்களும் போரைப் போற்றிப் பாடியிருக்கிறார் களென்று குற்றம் சாட்டுவதற்கில்லை. ஆனால் ஒருசில புலவர்கள் இதை மிகப் பெரிதுபடுத்திப் பாடியுள்ளதை நினைக்கும்போது, அன்றைய வரலாறு, அந்த மக்களுடைய பண்பாடு எப்படித் தான் இருந்திருக்குமென்று சிந்திக்க வேண்டி இருக்கிறது. ஒரு புற நானூற்றுப் புலவன் பாடுகிறான். தினந்தோறும் போர் நடைபெறும்போது, ஒரு மூதாட்டி முதல் நாள் தன்னுடைய கணவனைப் போருக்கு அனுப்பினாளாம்; மறுநாள் தன்னுடைய தமையனைப் போருக்கு அனுப்பினாளாம்.

''இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
ஒருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே'' (புறம்: 279)

என்று பாடுகிறான். இன்றைக்கும் போர்ப்பறை கேட்டதாம்; உடனே இளங் குழந்தையாகிய

தன்னுடைய மகனை அழைத்து, ஒரு வெள்ளை வேட்டியைச் சுற்றிக் கட்டிவிட்டு, பறந்து கிடக்கிற அவனுடைய தலையை எண்ணெய் வாரி நீவிவிட்டு, "ஒருமகனல்ல தில்லோள் — இந்த ஒரு மகனை அல்லாது வேறு பிள்ளை இல்லாதவளாகிய பெருமாட்டி வேலைக் கையிலே கொடுத்து, போருக்குப் போ என்று சொன்னாளாம். இது தமிழ் மூதாட்டியின் வீரத்தை எடுத்துக்காட்டுவதாக நம்மில் பலரும் இன்று நினைக்கிறோம். உண்மை தான், மறுப்பதற்கில்லை. அவர்களுடைய வீர மனோநிலையைக் காட்டுகிறது. ஆனால் சமுதாய அடிப்படையில், சமுதாயப் பண்பாட்டில் இதைப் பெரிதுபடுத்தினார்களே என்று நினைக்கும்போது, இந்த நாட்டின் பழைய வரலாறு எந்த அளவுக்கு நமக்கு இன்று பாடமாகுமென்று சிந்திக்கத்தான் வேண்டியிருக்கிறது. பாரியைப் பொறுத்த அளவில், அந்தப் பிரச்சினை மிகப் பெரிதாக அமைந்து விடுகிறது அவனுடைய வாழ்க்கையிலே. அவனுடைய வாழ்வைப்பற்றி நாம் ஒன்றும் அறிந்து கொள்ள முடியாவிட்டாலும், 300 ஊர்களையுடைய அவனை எதிர்த்து சேர, சோழ, பாண்டியர்கள் மூவரும் போரிட்டார்களென்று கேள்விப் படும்போது சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை. மாபெரும் சாம்ராஜ்யத்தை ஆளுகின்ற மன்னர்கள், 300 ஊர்களைக் கொண்ட ஒரு சிற்றரசனைப் போரிட்டு, முற்றுகையிட்டு, பலகாலம் காத்திருந் தார்கள் அவனைத் தோற்கடிப்பதற்கு என்றால், எந்த

அடிப்படையில் அந்தப் போர் நடைபெற்றிருக்கும் என்று நினைப்பதே கொஞ்சம் வியப்பாகத்தான் இருக்கும். இந்த நிலைமை வருவதற்கு முன்னர், பாரியினுடைய புகழ் நிலைத்து நிற்பதற்குரிய காரணம் இதுவா என்ற ஆராய்ச்சியில் புகுவோமானால், நிச்சயமாக இது இல்லை. இந்தப் போரையொட்டி அல்லது அவன் செய்த மாபெரும் போர்களையொட்டி அவனுக்குப் புகழ் வந்ததென்று நினைப்பதற்கில்லை. அப்படியானால் வேறு செயற்கரிய செயல் என்ன செய்திருப்பானென்று சிந்தித்தோமானால் ஒன்று விளங்குகிறது.

"செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்" (குறள்–26)

என்று வள்ளுவப் பெருந்தகை சொன்னார். செயற்கரிய காரியம் ஒன்றைச் செய்திருக்கிறான் பாரி. சாதாரணமாக, மேம்போக்காகப் பார்ப்பவர்களுக்கு, இது என்ன பிரமாதம் என்று நினைக்கக்கூடிய காரியம்தான். ஆனால் சற்று நின்று, நிதானித்து சிந்திப்போமானால் உண்மையிலேயே அது செயற்கரிய செயல்தான் என்பதை அறிய முடியும். இல்லாவிட்டால், மானுடம் பாடாத சுந்தரமூர்த்தி அடிகள் "கொடுக்கிலாதானை பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" என்று பாடி இருப்பாரா? அதற்குத் தகுந்த காரணம் ஒன்று இருந்திருக்க வேண்டும். அந்தப் பாடலைப் படிக்கும் போதெல்லாம், சிந்தனையில் ஓர் எண்ண ஓட்டம்

தான் தோன்றுகிறது. சுந்தரமூர்த்தி அடிகள் கர்ணனைப் பற்றி அறியாதவரா? "கொடைக்குக் கர்ணன்" என்று உலகமெல்லாம் புகழப்படுகிற கர்ணனை ஏன் பாடவில்லை சுந்தரர்? ஒருவேளை இந்த வரலாற்றில் அதிகப் பழக்கமில்லாதவராக இருந்திருக்கலாமென்று நினைக்கவும் முடியவில்லை ஏனென்றால், அதே பாட்டில், முதல் அடியில்

"மிடுக்கிலாதானை வீமனே, விறல் விசயனே
வில்லுக்கு இவன்" (திருமுறை: 7, 34, 2)

என்று சொல்கிறார். எனவே நன்றாக பாரதக் கதையை அறிந்திருக்கிறார் சுந்தரமூர்த்திகள். அப்படி அறிந்திருக்கிற அவர் கொடையைப் பற்றிப் பேசும் போது, கர்ணனுடைய பெயரை விட்டு விட்டு,

"கொடுக்கி லாதானை பாரியே என்று கூறினும்
கொடுப்பாரிலை" (திருமுறை: 7, 34, 2)

என்று சொல்வாரானால், பாரியினுடைய வரலாற்றிலே நாம் சாதாரணமாக நினைக்கிற கொடை மட்டுமல்லாமல், அதைத் தாண்டிய ஒன்றும் இருக்கிறதென்று நினைக்க வேண்டி இருக்கிறது. கர்ணனுடைய கொடைக்கும், பாரியினுடைய கொடைக்கும் ஏதாவது வேறுபாடு காணமுடியுமா என்றால், ஒருவேளை சுந்தரர் கண்டுபிடித்திருப்பாரோ என்று நினைக்கவேண்டி இருக்கிறது. 'தான்' என்ற அகங்கார முனைப்பு

கர்ணனுக்கு இருந்ததாகத்தான் நினைக்க வேண்டி இருக்கிறது. எந்தச் சந்தர்ப்பத்திலும் கர்ணன் கொடுக்கும்போது, இதைக் கொடுக்கும்படியான பேற்றினைப் பெற்றேன் நான் என்று அந்த 'நானை' விடாமல் வைத்துக் கொண்டிருந்தான் என்பதை வில்லி பாடிக் காட்டிக் கொண்டே செல்வார். ஆக அந்த வரலாற்றை நினைக்கும் போதெல்லாம் சுந்தரர் எத்துணை கொடைச் சிறப்பில் சிறந்தவனாயினும், அகங்கார மமகாரத்திலிருந்து அவன் விடுபடவில்லை என்ற காரணத்தினால் அவனுடைய பெயரை விட்டு விட்டாரென்று நினைக்க வேண்டியிருக்கிறது. பாரியைப் பொறுத்தமட்டில் அத்தகைய பெயருக்கு இடமில்லாமல், 'நான்' என்ற ஒரு பொருளே அவனிடத்தில் இல்லையோ என்று நினைக்கக்கூடிய அளவுக்கு அவனுடைய வாழ்வு நடைபெற்றதால் தான், "கொடுக்கிலாதானை பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" என்று சுந்தரர் பாடியிருக்கிறார் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

காலமறிந்து, இடமறிந்து, யாருக்குக் கொடுக்கிறோம் என்று அறிந்து கொடுக்கப்படுவதை பழந்தமிழர் கொடை என்று சொல்லுவதேயில்லை. காலம், இடம் இரண்டையும் மறப்பதோடுகூட, யாருக்குத் தருகிறோமென்ற நினைவே இல்லாமல் தருவதுதான் கொடை என்று சொன்னார்கள். கொடுத்தல் மிக உயர்ந்தது என்பதைத் தமிழர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

> "ஈதல் இசைபட வாழ்தல் அது அல்ல(து)
> ஊதியம் இல்லை உயிர்க்கு" (குறள்–231)

என்று வள்ளுவப் பேராசான் கூறினான். ஆனால், ஈதல் என்று வரும்போது, அது இசைக்குக் காரணமாக இருக்கிறதாகச் சிலர் நினைப்பார்கள். கொடுப்பதினாலே இம்மையிலே இசை கிடைக்கிறது; பிறகு புகழ் கிடைக்கிறது; பிறகு அதனால் அறம் வளர்கிறதென்ற நினைவோடு பலரும் செய்திருப்பதாகத் தெரிகிறது. இந்த நினைவு தமிழ் மக்களிடையே ஊறிக்கிடந்த காரணத்தால்தான், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் ஆய் அண்டிரன் பற்றிப் பாடும்போது,

> "இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
> அறிவிலை வணிகன் ஆய்அலன்—" (புறம்: 134)

என்று பாடினார். இந்தப் பிறப்பிலே அறம் செய்தால் அது மறு பிறப்பிலே ஓரிடம் வாங்குவதற்கு உதவியாக இருக்குமென்று நினைத்து அறத்தை விலை பேசுபவன் அல்லன் ஆய் என்று கூறியதால், இத்தகைய எண்ணம் தமிழ் நாட்டிலே இருந்திருக்கிறதென்று நினைக்க வேண்டியிருக்கிறது. அப்படியானால் உண்மையான வள்ளன்மை உடையவர்கள்—ஆய் போன்ற வள்ளல்கள், பாரியைப் போன்ற வள்ளல்கள் — நிச்சயமாக அற அடிப்படை என்று நினைத்துக்கூடச் செய்யவில்லை. பின் ஏன்

இவர்களுடைய கொடை நடைபெற்றது? புலவரே பதில் சொல்கிறார்.

"ஆங்குப்பட்டன்று அவன் கை வண்மையே"

கொடுப்பது என்பது அவனுக்கு ஒரு பழக்கம். நடப்பது, உண்பது என்பது எப்படி நம்மையும் அறியாமல், இயல்பாக நடைபெறுகின்றன என்று சொல்லுகிறோமே அப்படி ஒரு பழக்கமாகப் படிந்து விட்டதோ அதுபோல கொடுப்பது என்பது ஒரு பழக்கமாக அமைந்துவிட்டதென்று சொல்வது தான் உண்மையான விடையாகும். அப்படியானால் புகழுக்காகக்கூட இவர்கள் செய்யவில்லையா, அதைப் பெரிதாகப் பாராட்டினார்களே தமிழர்கள்—

''மன்னாஉலகத்து மன்னுதல் குறித்தோர் தம்
புகழ்.........'' (புறம்: 165)

என்று புறப்பாடல் பேசுகிறது. நிலைபேறு இல்லாத இந்த உலகத்தில், நிலைபெறுவதற்குரிய காரியங் களைச் செய்து புகழைத் தேட வேண்டும். அந்த அடிப்படையில் ஒருவேளை பாரி இந்த மாபெரும் செயலை மேற்கொண்டிருப்பானா என்றால் நிச்சயமாக இல்லை என்ற முடிவுக்கு வர வேண்டி இருக்கிறது. இத்தனையையும் சேர்த்துச் சிந்திக்கும் போது, செயற்கரிய செயலை அவன் புகழ்பெறக் கருதிச் செய்யவில்லை; மறு பிறப்பில் வீடுபேறு

கிடைக்குமென்று செய்யவில்லை. பின் ஏன் செய்தான்?

"ஆங்குப்பட்டன்று அவன் கை வண்மை" (புறம்: 134)

அது அவனுக்குப் பழக்கமாகிவிட்டது என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. இவ்வளவு சிறப்புக் களையுடைய பாரியின் வரலாற்றை நாம் அறிவதற்கு வாய்ப்பே இல்லை. பழங்கால மன்னர்களுடைய வரலாற்றை அறிய தமிழகத்திலே முறையான வரலாறுகள் எழுதப்படவில்லை. பேரரசர்களுடைய வரலாற்றைக்கூட அறிய வேண்டுமானால், புறப் பாடல்கள் முதலியவைகளிலே புலவர்கள் பாடிய ஓரிரு சந்தர்ப்பங்களைத் தவிர பெரு மன்னர்களைப் பற்றிக்கூட நாம் ஒன்றும் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பில்லை. பெருமன்னர்களைப் பற்றிக்கூட ஒன்றும் அறிய முடியவில்லையென்றால் பாரி போன்ற சிற்றரசர்களைப் பற்றி அறிய நிச்சயமாக வாய்ப்பே கிடையாது. ஆனால் ஒருசில புலவர்கள் வள்ளல்களையும், அரசர்களையும் சென்று, பாடும் போது, அவர்களுடைய வாழ்க்கையிலே நடந்த பல்வேறு சம்பவங்களைச் சுட்டிப் பாடுவதாலே, சரித்திரத் துணுக்குகள் என்று சொல்கிறோமே, அது போல வரலாற்றுத் துணுக்குகளாக ஒரு சில நிகழ்ச்சிகளை நாம் காணமுடியும். பாரியைப் பொறுத்த மட்டில், அவன் செய்த மாபெரும் நற்பேறு காரணமாக சங்க இலக்கியப் புலவர்கள் வரிசையிலே, ஒப்புவமை இல்லாதவராகிய மாபெரும் புலவர்

பெருமானாகிய கபிலரை உயிர் நண்பனாகப் பெற்றிருந்திருக்கிறான். கபிலர் போன்ற ஒரு புலவர்; பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்தைப் பாடி எல்லையற்ற பொருளைப் பரிசாகப் பெற்ற புலவர்; சேர மன்னனைப் பற்றிக்கூட கவலைப்படாமல் சிற்றரசனாகிய பாரியிடம் வந்து தங்கிவிட்டார் என்றால் இது வேறு எதனையும் கருதியிருக்க முடியாது. காரணம், மிக எளிய சிற்றரசன் அவன். பின்னர் எந்த அடிப்படையில் இந்த நட்பு இருந்ததென்றால், உயிர் நட்பாக இருந்தது.. சங்க காலத்திலே இப்படிப்பட்ட நட்பை ஓரிடத்தில் காண்கிறோம். பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழன் என்ற இருவரின் நட்புபோல கபிலர்—பாரியின் நட்பு அமைந்திருக்கக் காண்கிறோம்.

கபிலராகிய புலவர் பெருமானைப் பற்றிச் சொல்லும்போது, சங்கப் புலவர்களே பாடுகிற சில அருமைப் பாட்டைக் காண்கிறோம். அந்தணரவையைச் சேர்ந்தவர் இவர் என்று அறிய முடிகிறது. நக்கீரர் என்ற மற்றொரு சங்கப்புலவர் இவரைப்பற்றிச் சொல்லும் போது,

"உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன்" (அகம்: 78)

என்று பாடுவார். உலகம் முழுவதும் பரந்து கிடக்கின்ற புகழை உடைய வாய்மொழிக் கபிலன்

என்று பேசுவார். வாய்மொழி என்றால் சத்தியம் பேசுகின்றவர் என்பது ஒரு பொருள். இது இல்லாமல் ஆழ்ந்த பொருளும் ஒன்று இருக்கிறது. வேதத்திற்கே 'வாய்மொழி' என்று பெயர் வழங்கப்படுவதை பரிபாடலில் காண்கிறோம். "வாய்மொழி ஓடையில் மலர்ந்து" என்ற பரிபாடலில் 'வாய்மொழி' என்பது வேதமென்று பேசப்படுகிறது. எனவே வாய்மொழிக் கபிலன் என்றால், "புலனழுக்கற்ற அந்தணாளன்" என்று சொல்லப்படுகிற காரணத்தாலே, வேதமறிந்த அந்தணர் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இனி, பெருங்குன்றூர்கிழார் என்ற புலவர், பதிற்றுப்பத்து 85—ஆம் பாடலில் மறுபடியும் கபிலரைப் பற்றிப் பேசுகிறார்.

"..................அரசவை பணிய வறம்புரிந்து வயங்கிய
மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின்
உவலை கூராக் கவலையி னெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன்......................................." (பதிபத்து: 85)

கபிலரைக் கண்டவுடன் எந்த அரசவையும் பணிந்து ஏற்றுக் கொள்ளுமாம். காரணம், "அறம்புரிந்து வயங்கிய மறம்புரிக் கொள்கை உடையவன்." அறத்தின் அடிப்படையில், வீரத்தோடு வாழ்க்கை நடத்தினார் என்றால், இச்சகம் பேசாதவர்; யாரையும் தேவையில்லாமல் பொய் கூறிப் புகழ்ந்து பேசாதவர் என்ற உண்மை வெளிப்படுகிறது.

இதைவிட மிக இன்றியமையாத ஒரு அற்புதமான அடைமொழியைத் தருகின்றார். 'கவலையில் நெஞ்சில்' — கவலையில்லாத நெஞ்சினை உடையவர் என்று பெருங்குன்றூர்கிழார் பாடவேண்டுமானால் கபிலருடைய கவிதை மட்டுமல்ல, அவருடைய வாழ்வு முழுவதும் ஒப்பற்றதாக அமைந்திருக்கிறதென்பதை அறிய முடிகிறது. இசையுடன் வாழ்ந்து, பின்னர் புகழும் பெற்றவர். பொருந்திலிளங்கீரனார் என்ற புலவர் பெருமகன்,

"செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" (புறம்: 53)

என்று செறிவான பாடல்களை, அற்புதமாகத் தன்னுடைய கேள்வி ஞானத்தாலும், கல்வியாலும் பாடக்கூடிய புலவன் என்று பேசுகிறான். அதற்கு அடுத்த அடியில், ஒரு வரலாற்று முக்கியத்துவம் தெரிகிறது.

"........................ விளங்குப்புகழ்க் கபிலன்
இன்றுள னாயி னன்றுமன் என்ற............" (புறம்: 53)

என்று சொல்வதனால், இந்தப் புலவருடைய காலத்தில் கபிலர் இல்லை என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இனி, 'செந்நாக் கபிலன்' என்றும் பேசுகிறான்.

மாறோக்கத்து நப்பசலையார் என்ற பெண்பாற் புலவர், மலையமான திருமுடிக்காரியைப் பாடப் போகிறார். பாடத் தொடங்குவதற்கு முன்னால், அவரையும் அறியாமல் அவருடைய மனம் கூசுகிறது. எதுபற்றிப் பாடுவது திருமுடிக் காரியை? ஒரு வள்ளலைப் பற்றிப் பாடுவதற்கா பொருள் இல்லாமல் போய்விட்டதென்ற சந்தேகம் நமக்குத் தோன்றும். அவர் "ஐயா, எதைச் சொன்னாலும், எங்களுக்கு முன்னே இருந்த கபிலன் அதைப் பாடி விட்டானே; என்ன செய்வது" என்று சொல்கிறார்.

"புலன் அழுக்கு அற்ற அந்தணாளன்,
இரந்து செல் மாக்கட்கு இனி இடன் இன்றி,
பரந்து இசை நிற்கப் பாடினன்" (புறம்: 126)

என்றவர் அதனை அடுத்து,

"சினமிகு தானை வானவன் குடகடற் பொலந்தரு
நாவா யோட்டிய வவ்வழிப் பிறகலஞ் செல்கலா
தனையே மத்தை இன்மை துரப்ப விசைதர
வந்துநின்..........." (புறம்: 126)

எனப் பாடுகின்றார். அரபிக்கடலிலே சேரன் தன்னுடைய கடற்படையைச் செலுத்தும்போது, குறுக்கே ஒரு சிறிய மரக்கலம் போக முடியாது. அதுபோல, சேரனுடைய கப்பற்படையை எதிர்த்து யாரும் செல்ல முடியாததுபோல, திருமுடிக்காரியின் புகழ் முழுவதையும் தன்னுடைய கவிதை வளத்தாலே

கபிலன்பாடிவிட்டான்; "இரந்துசென் மாக்கட் கினியிட மில்லை". அவனிடத்தில் பரிசில் வாங்க வேண்டும்; அவனுடைய புகழ் பாட வேண்டுமென்று செல்கிறவர்களுக்கு இனி இடமில்லை. ஏன்? "புலனழுக் கற்ற அந்தணாளன்" பாடிவிட்டான் என்று அற்புதமாகப் பாடிச் செல்கிறார்.

இனி, சோழிய ஏனாதி திருக்கண்ணனைப் பாடும் போது,

"மல்ல னன்னாட் டல்ல நீரப் பொய்யா நாவிற்
கபிலன் பாடிய"

என்று பாடுகிறார். இந்த அடிகளை வைத்துக் கொண்டு பார்த்தோமானால், கபிலருக்கு ஏனைய புலவர்கள் தருகின்ற அடைமொழிகளில் மிக முக்கியமானது, "பொய்யா நா" ; "செந் நா" என்ற இரண்டாகும். செந் நா, பொய்யா நா என்றால் ஒரே ஒரு பொருள் தான் உண்டு. தேவையில்லாமல், உண்மைக்கு மாறாக, பரிசிலைக் கருதியோ, வேறு நலன்களைக் கருதியோ, பொய் பேசுகின்றவர் அல்லர் என்ற பேருண்மை விளங்குகிறது. நான்கு புலவர்கள் பாடியதைக் கண்டோம். நான்கு புலவர்களிலே, நக்கீரனும், பொருந்திலிளங்கீரனாரும், கபிலரை 'புகழுடைய புகல்' என்று சொல்கிறார்கள். மாறோக்கத்து நப்பசலையாரும், பெருங்குன்றூர் கிழாரும்,

"நல்லிசைக் கபிலன்", "பரந்திசை நிறகப் பாடினன்"

என்று பாடுகிறார்கள். இந்த இரண்டு அடிகளையும் வைத்துக்கொண்டு பார்த்தோமானால், 'இசை' என்ற சொல் ஒருவன் வாழ்கின்ற காலத்திலே வருவதே தவிர, பின்னர் வருவதல்ல என்பது தெரிகிறது. இரண்டு புலவர்கள் "இசையுடைய கபிலன்'' என்று சொல்வார்களானால் அவர்கள் காலத்தில் கபிலன் வாழ்ந்தான் என்பது பொருளாயிற்று. இனி நக்கீரனும், பொருந்தில் இளங்கீரனாரும் "புகழ்க்கபிலன்'' என்று பாடினார்கள். எனவே அவர்கள் காலத்தில் கபிலன் இல்லையென்று நினைக்கத் தோன்றுகிறது. கபிலராகிய ஒப்பற்ற பெருமகன் சங்க இலக்கியம் இன்று கொடுக்கின்ற எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகிய தொகை நூல்களில் 235 பாடல்கள் பாடியிருக்கிறார். இவரையொத்த புலவர் யாருமில்லை. அடுத்து உள்ளவராகிய அம்மூவனார் என்பவர் 127 பாடல்கள் தான் பாடியிருக்கிறார். உம்மைத்தொகைக்கு இலக்கணக்காரர்கள் உதாரணம் காட்டக்கூடிய அளவுக்கு கபிலபரணர் என்று சொல்லப்படுகின்ற பரணர்கூட 85 பாடல்கள்தான் பாடியிருக்கிறார்.

பத்துப்பாட்டுள் அவருடைய பாட்டு குறிஞ்சிப் பாட்டு என்று சொல்லப்படும். அந்தக் குறிஞ்சிப் பாட்டின் அடியிலே இருக்கிற குறிப்பு மிகமிக ஆழமான வரலாற்று உண்மையை அறிவிப்பதாகும். ஆரிய அரசன் பிரகத்தனுக்கு தமிழ்ச் சுவையை

உணர்த்துவான்வேண்டி குறிஞ்சிப் பாடலைப் பாடினார் என்று எழுதப்பட்டிருக்கிறது. தமிழர் களுடைய நாகரீகத்தின் சாரமாக இருக்கிறது அகத்திணை. அந்த அகத்திணையின் உயிர் நாடியாக இருப்பது குறிஞ்சித் திணை. அந்தக் குறிஞ்சித் திணையை, தமிழ்ப் பண்பாட்டை அறியாதவர்கள் யாரும் அறிந்துகொள்ள முடியாது. அது தனிப்பட்ட சிறப்பு வாய்ந்தது. எனவே, இந்தத் தனிச் சிறப்பு வாய்ந்ததாகிய தமிழர்களின் பண்பாட்டை அற்புதமாகக் குறிஞ்சிப் பாட்டின் மூலம் பாடி, அதனைக் கற்கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தமிழர்களின் பண்பாட்டை அறிந்து கொள்ள வாய்ப்பு அளித்தார் கபிலர் பெருமான். எட்டுத்தொகையில் உள்ள அகநானூற்றில் 18 பாடல்களும்; புறநானூற்றில் 28 பாடல்களும்; நற்றிணையில் 20 பாடல்களும்; குறுந்தொகையில் 29 பாடல்களும்; கலித்தொகையில் 29 பாடல்களும்; பதிற்றுப்பத்தில் 10 பாடல்களும்; ஐங்குறுநூற்றில் 100 பாடல்களும், ஆக 235 பாடல்கள் பாடியிருக்கிறார். பரிபாடல் என்று சொல்லப்பட்ட ஒரு நூல்தான் விடுபட்டது எட்டுத் தொகையில். ஆக எட்டுத் தொகை என்ற தொகுப்பு நூலில் 7 பகுதிகளில் அவருடைய பாடல்கள் அமைந்திருக்கின்றன என்றால், நினைத்து நினைத்து வியக்கக்கூடிய அளவுக்கு அது சிறப்புடையதாகும்.

அடுத்தாற்போல், நாம் சிந்திக்க வேண்டியது, அன்று முதல் இன்று வரையில் வாழ்கின்ற ஒரு பழமொழியேயாகும். "குறிஞ்சி பாடக் கபிலன்'' என்ற ஓர் அற்புதமான பழமொழி வழங்கி வருகிறது. அகத் திணையிலே உள்ள ஐந்து பிரிவுகளுள் குறிஞ்சி என்பது ஒன்று. ''புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சி'' என்று சொல்லுவார்கள். அந்தக்குறிஞ்சி ஒன்றையே பெரிதாகப் பாடியிருக்கிறார் கபிலர் என்று நினைக்கும் போது கொஞ்சம் வியப்பாகத்தான் இருக்கிறது. எத்துணைச் சிறப்புடைய புலவர் களாயினும், ஒரே பகுதியைப் பற்றிப் பலரும் பாடத் தொடங்கினால், அங்கே 'கூறியது கூறல்' என்பது வரத்தான் செய்யும். இது இயல்பு. அதிலும் ஒரே புலவன், ஒரே திணையைப்பற்றி நூற்றுக்கணக்கான பாடல்கள் பாடினான் என்றால், ஒருவேளை 'கூறியது கூறல்' என்ற குற்றம் வந்துவிடுமோ என்ற மனத்துடனேயே நாம் கபிலரைப் படித்துப் பார்த்தால்தான் அவருடைய புலமையின் நயம் நன்கு விளங்குகின்றது. ஒரு பாடலிலே சொல்லப்பட்ட கருத்து மற்றொரு பாடலிலே மறந்தும் காணப்படாத அளவுக்கு, மிகப் பெரியதொரு அற்புதமான உலகத்தைக் கற்பித்துக்காட்டுகிற சிறப்பினை உடைய புலவர் கபிலர். "குறிஞ்சி பாடக் கபிலர்" என்ற பழமொழி இதனை அடியொற்றித்தான் பிற்காலத்தில் யாராலோ செய்யப்பட்டிருக்கிறது. இப்படி அகத்திணையில், குறிஞ்சிப் பாடல் பாடுவதில் வல்லவர் என்றால்,

புறத்திணையில் பாடல்கள் சுமாராக இருக்குமோ என்று யாரும் சந்தேகம் கொள்ள வேண்டிய தேவையில்லை. பதிற்றுப் பத்தில், செல்வக்கடுங்கோ வாழியாதான் என்ற சேர மன்னனை, பாரி இறந்த பிறகு, சென்று கண்டு, அவனைப் பத்து பாடல்கள் பாடி, நூறாயிரங் காணம் பரிசிலும், நன்றா வென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் பரிசிலாகப் பெற்றாராம் கபிலர் என்றால், குறிஞ்சி பாடுவதிலே மட்டுமல்ல; புறத்திணை பாடுவதிலும் ஒப்பற்றவராக இருக்கின்றார் கபிலர் என்பதை நாம் நன்கு அறிய முடிகிறது. சேர மன்னனாகிய செல்வக்கடுங்கோ வாழியாதன் முடியுடை மன்னர்கள் மூவரில் ஒருவனாகிய சேர மன்னன். பாரி இறந்த பிறகு, அவனைச் சென்று கண்டிருக்கிறார். எடுத்த எடுப்பிலேயே பாரியினுடைய சிறப்பைச் சொல்லித் தான் பாடுகிறார் பதிற்றுப் பத்தில் என்றால் பாரியைக் கொன்ற மூவேந்தர்களில் செல்வக்கடுங்கோ வாழியாதன் ஒருவனாக இருக்க முடியாதென்ற நினைவு தோன்றத்தான் செய்கிறது. இவ்வளவு சிறப்புடையவர் ஆகிய கபிலர், பாரியைப் பொறுத்த மட்டில் 17 பாடல்கள் பாடியுள்ளார். அந்தப் பதினேழுபாடல்களுள், வேள் பாரியைப் பற்றி 7 பாடல்களும்; பாரியின் பறம்பு நாட்டைப் பற்றி 4 பாடல்களும்; அவனுடைய பறம்பு மலையைப் பற்றி 4 பாடல்களும் இருக்கின்றன. இவற்றை மட்டும் வைத்துக்கொண்டு, இதனோடு

தொடர்புடையதாகிய ஒரு சில பாடல்களும் பின்னாலே வருகின்றன, அவற்றையும் வைத்துக் கொண்டு பார்த்தோமானால் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சிற்றரசனாகிய பாரியினுடைய நாட்டு வளம் என்ன? மலை வளம் என்ன? மக்கள் வளம் என்ன? என்பதை அந்தப் பாடல்களைக் கொண்டு அறிந்து கொள்ள முடியும். மனிதனாகிய பாரியைப் பற்றிப் பாட வந்த கபிலர் பெருமான், அந்த நாட்டு மக்கள் வாழ்கிற வாழ்க்கை முறையை எடுத்துக்காட்டுகிறார். அந்தநாட்டைப் பற்றிச் சொல்கிறார்.

"நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரும் நாடு" (குறள்–739)

என்று திருக்குறள் பேசுவது போல, அந்த நாடு நாடாத வளம் உள்ளதாக அமைந்துள்ளதென்று மிக அற்புதமாகக் காட்டுகிறார். அந்தப் பாடல், இன்று நாம் மிகமிக அதிகமாகச் சிந்திக்க வேண்டிய சில கருத்துக்களைக் கொண்டிருக்கிறது. மழை இல்லையாம். எந்த நிலையில் மழை இல்லை என்பவதைக் கபிலர் பெருமான் மிக அற்புதமாகக் காட்டுகிறார். சனிக்கோளைச் சுற்றி கோட்டை கட்டிவிடுமாம்; புகை மூட்டம் தோன்றுமாம்; தூமகேது எனப்படும் வால்மீன்கள் பல தோன்றுமாம்; வெள்ளி என்று சொல்லப்படும் சுக்கிரன் தென் திசையில் அதிக தூரம் சென்று

விடுமாம். இந்நிலை ஏற்பட்டால் பெரும் பஞ்சம் தோன்றும் என்று புறப்பாடல் பேசுகிறது. அப்படிப்பட்ட காலத்தில்கூட பறம்பு நாட்டில் "பெயல் பிழைப்பறியாது" — உலகம் முழுவதும் பஞ்சம் இருக்கலாம்; ஆனால் பறம்பு நாட்டில் மழை குறைவதில்லை. கன்று ஈன்று பசுக்கள் புல் மேய்வதற்குப் போதுமான புல் நிறைந்துள்ளதாம். பாரியினுடைய செங்கோல் காரணமாகச் சான்றோர்கள் நிறைந்து உள்ளனராம். பூனைக் குட்டியின் பல் வரிசை போன்று முல்லைப் பூக்கள் பூத்திருக்கின்றனவாம் பறம்பு நாட்டில். இத்தனையும் சொல்கிறார் புலவர், எப்போது? பாரி இறந்த பிறகு. இவற்றை எல்லாம் நினைத்துப் பார்த்து, இத்துணை வளம் உடையதாகிய இந்தப் பறம்பு நாடு இன்றைக்கு என்ன துரதிருஷ்டமான நிலையை அடைந்து விட்டதென்ற கருத்தில் பாடுகிறார்.

"மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்
வயலக நியைப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற வமர்க்கண்
ஆமா நெடுநிரை நன்பு லாரக்
கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புல்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கும்
ஆய்தொடி யரிவையர் தந்தை நாடே" (புறம்: 117)

ஆக மைம்மீன் புதைந்து, தூபம் தோன்றி, தென் திசையில் சுக்கிரன் ஓடினாலும், மனைத்தளையிலே இருக்கின்ற ஆமாவாகிய பசுக்கள் நன் புல்லார — புல்வளம்; புல் வளம் பேசிய புலவர் மக்கள் வளம் பேசுகிறார்; சான்றோர் பல்கியிருக்கிறார்கள் பறம்பு நாட்டில் என்றால் எப்போது சான்றோர் பல்கியிருப்பார்கள்? அதற்கு அவரே விடை சொல்கிறார். "கோல் செம்மையில்"— செங்கோன்மை இருந்ததால் சான்றோர்கள் பல்கியிருந்தார்கள் என்று சொல்லும் போது நம்முடைய காலத்திற்கும் ஏற்ற பல பிரச்சினைகளுக்கு விடை கூறுவார் போல, மக்கள் நன்றாக இருக்க வேண்டுமானால் ஆட்சியும் நன்றாக இருக்க வேண்டும்; ஆட்சி நன்றாக இருந்தால் சான்றோர்கள் பல்குவார்கள் என்ற கருத்தையும் அற்புதமாகக் கபிலர் பெருமான் கூறிச் சென்றார். புலனழுக்கற்ற அந்தணாளராகிய கபிலர் பெருமான் எந்தத் துறையிலும் ஆழ்ந்து சென்று, அறிந்து பாடியிருக்கிறார். அதுதான் சிறப்பு. பறம்பு நாட்டார் வேளாண் எப்படிச் செய்கிறார்களென்று பேசுகிறார். வெப்பம் மிகுந்த வேங்கை மரங்களையுடைய மேட்டுப் பாங்கான நிலத்தை, கார் காலத்தில் நல்ல மழை பெய்தவுடன், புழுதி மங்கும்படி பல சால்கள் ஓட்டி உழுது, வரகுப் பயிர்களை நடுகிறார்களாம். வரகுப் பயிர் நடுவிலே உள்ள தொல்லை, பல்லி என்ற பெயருடைய களை அதில் தோன்றும். இப்போதுகூட அதற்குப் பல்லி

என்றுதான் பெயர். அந்தப் பல்லி என்ற களையை வேரோடு பிடுங்கி, நன்கு கவனிப்பதால், கருகரு என்ற இலையுடன், கரிய தண்டு நீண்டு, அடியிலிருந்து நுனி வரை கதிர் முற்றி வருகிறதாம். அதற்குப் பக்கத்திலே தினை, எள் முதலியவற்றைப் பயிரிட்டு, அவைகளும் பதமானவுடன் அறுவடை செய்து வைத்திருக்கிறார்களாம். அவரைக்காய் இருக்கிறதே—கொழுகொழு அவரை என்று சொல்லுவார்கள்—அந்தக் காயை பறித்து, அதிலேயுள்ள விதையை எடுத்து, நெய்யிலே வறுக்கிறார்களாம். அது 'சடபுட' என்ற சப்தத்தொடு வறுபடுகிறதாம். அதையும், இதையும் உண்ணுகிறார் களாம். உண்ட பிறகு, வீட்டுத் தலைவி பாத்திரத்தைக் கழுவுகின்றாளாம் மிக்க சப்தத்தோடு. அந்தச் சப்தத்தைப் பாடலிலே அப்படியே கொண்டு வருகிறார், கபிலர்.

''வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவற்
கார்ப்பெயற் கலித்த பெரும்பாட் டீரத்துப்
பூழி மயங்கப் பலவுழுது வித்திப்
பல்லி யாடியி பல்கிளைச் செவ்விக்
களைகால் கழலிற் றோடொலிபு நந்தி
மென்மயிற் புனிற்றுப்பெடை கடுப்ப நீடிக்
கருந்தாள் போகி யொருங்குபீள் விரிந்து
கீழு மேலு மெஞ்சாமைப் பலகாய்த்து
வாலிதின் விளைந்த புதுவர கரியத்
தினைக்காய்யக் கவ்வை கறுப்ப வவரைக்

கொழுங்கொடி விளர்க்காய் கோட்பத மாக
நிலம்புதைப் பழுனிய மட்டின் றேறல்
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து
நறுநெய்க் கடலை விசைப்பச் சோறட்டுப்
பெருந்தோ டாலம் பூசன் மேவர
வருந்தா யாணர்த்து நந்துங் கொல்லோ'' (புறம்: 120)

*எவ்விதமான சிரமும் இல்லாமல் இவ்வளவு பெரிய வருவாயைப் பெற்று இருந்ததே பறம்பு நாடு; அது இனி என்னவாகுமோ என்று பாடுகிறார். அதை விடச் சிறப்பு, மாபெரும் அந்தணராகிய கபிலர் பெருமான் சொல்லுகின்ற உணவு முறை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. சிவந்த நிறமுடைய, புற்றிலிருந்து புறப்படும் ஈசலைப் பிடித்து, புளிப்பு ஏறாத மோருடன் சேர்த்து ஒருவகைப் புளிக்கறி செய்கிறார்களாம்.*

''செம்புற் றீயலி னின்னளைப் புளித்து'' (புறம்: 119)

*சுவைத்துத்தான் பாடுகிறார். இதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. இதனை அடுத்த நான்கு பாடல்களிலே தலைநகரைப் பற்றிப் பேசுகிறார். இன்றைக்கும் செல்கின்றவர்கள் பறம்பு மலையில் பார்க்க முடியும். உயரமான, வளப்பம் மிகுந்த மலை. மழை பெய்தாலும், பெய்யாவிட்டாலும் கவலை இல்லையாம்.*

"பெய்யினும் பெய்யா தாயினு மருவி
கொள்ளுழு வியன்புலத் துழைகா லாக" (புறம்: 105)

*கொள் விதைப்பதற்காக உழுதிருக்கிறார்களே, அந்த ஒரு சால் காலாக,*

"மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரும்"
(புறம்: 105)

*பக்க மலைகளிலிருந்து தண்ணீர் ஊற்றிக் கொண்டே வரும். அப்படிப்பட்ட அருவிகளையுடைய பறம்பு மலை என்று பேசுகிறார். இனி பறம்பு மலையை விட்டு நீங்கிச் செல்லும் துர்ப்பாக்கியமான நிலை. பாரி மறைந்த பிறகு, அவனுடைய இரண்டு மகள்களையும் அழைத்துக் கொண்டு செல்கிறார் புலவர். தூரத்திலிருந்து பறம்பு மலையைப் பார்க்கிறார். எப்படிப்பட்ட பறம்பு மலை தெரியுமா, அது? அங்கே பாரி வாழ்ந்த காலத்திலே, மது இருந்த சாடியின் மூடி திறந்தே இருக்கும்; ஆட்டுக்கடா சமையலுக்காக ஓயாது வெட்டப்படும்; எப்போதும் சமைத்து முடிவு பெறாத ஊன் சோறும், கோவையான துவையலும் வேண்டுவோர்க்கெல்லாம் எப்போதும் தரும் பறம்பு மலையாயிற்றே நீ; மலையே! இதுவரை என்னுடைய இனிய நண்பனை இருந்தாய்; பாரி மாய்ந்துவிட்டான்; மனங்கலங்கிச் செய்வதறியாது ஒழுகுகின்ற கண்ணீருடன் உன்னை வணங்கிவிட்டு, இதோ புறப்படுகிறோம்; ஏன் தெரியுமா? பாரியின் பெண்களாகிய இவ்விரு*

*வரையும் மணம் முடிக்கக்கூடிய கணவன்மார்களைத் தேடிச் செல்கிறோம்; பறம்பே, நீ வாழ்வாயாக என்ற கருத்தில் பாடுகிறார்.*

"மட்டுவாய் திறப்புவு மைவிடை வீழ்ப்பவும்
அட்டான் றானாக் கொழுந்துவை யூன்சோறும்
பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னே யினியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும் பெயர்ப் பறம்பே
கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே" (புறம்: 113)

*இறுதி இரண்டு அடிகளிலுள்ள அவலச் சுவையை நினைக்கும்போது துணுக்குறாமல் இருக்க முடியவில்லை. அவர் போகின்றார். கொஞ்ச தூரம் போனதும், நின்று பார்க்கிறார். மனித இயல்பு அல்லவா! பல நாள் வாழ்ந்த ஊரைவிட்டுப் பிரிந்து செல்வதானால், எத்தகையவர்களுக்கும் மனத் துணுக்கம் ஏற்படத்தான் செய்யும். கொஞ்ச தூரம் சென்றவுடன் திரும்பிப் பார்க்கிறார். மறுபடியும் பறம்பு மலை தெரிகிறது. குழந்தை உள்ளம் மகிழ்ச்சியிலே துள்ளுவதுபோல,*

"ஈண்டு நின் றோர்க்குந் தோன்றுஞ் சிறுவரை
சென்றுநின் றோர்க்குந் தோன்றும்" (புறம்: 114)

இங்கே நின்று பார்த்தாலும் எங்கள் மலை தெரியும்; கொஞ்ச தூரம் சென்று பார்த்தாலும் எங்கள் மலை தெரியும் என்று குழந்தை மனப்பான்மையிலே பாடுகிறார் கபிலர் பெருமான்.

ஒரு புறம் அருவியின் ஒழுகல் இரைச்சலாம்; மறுபுறம் பாணர்களின் பிச்சைப் பாத்திரத்தில் மதுவை ஊற்றிக்கொண்டே இருக்கிறார்களாம். என்ன சிறப்பு? ஊற்றுகிறவனும் இது மதுவாயிற்றே, கீழே சிந்தக் கூடாதென்று கவலைப்படவில்லையாம்; மற்றொரு புறம் அதை வாங்குகிறவனும் அது பற்றிக் கவலைப்படவில்லையாம். ஆகவே அவன் பாத்திரத்திலே இருந்து வழிந்து ஓடுகிற மது, சின்னச் சின்னக் கல்லை உருட்டிக்கொண்டு மலை வழியாகக் கீழே இறங்குகிறதாம். இதோ பாடுகிறார், கபிலர் பெருமான்.

"ஒருசா ரருவி யார்ப்ப வொருசார்
பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்
வாக்க வுக்க தேக்கட் டேறல்
கல்லலைத் தொழுகு மன்னே பல்வேல்'' (புறம்: 115)

அந்தப் பாடலைப் படிக்கும்போதே, நம்முடைய காதில், கல்லிழைத்து ஓடுகின்ற மதுவின் ஓசையைக் கேட்பதுபோல் இல்லையா?

இனி, இறுதியாக பறம்பு மலையைப் பற்றி அவர் பாடிய பாடலில் அவலச் சுவையைக் காட்டுகிறார். பாடலை இரண்டாகப் பிரிக்கிறார். என்னுடைய உயிர் நண்பனாம் பாரி இருக்கக்கூடிய காலத்திலே, பறம்பு மலையே, நீ எப்படியெல்லாம் இருந்தாய்; என்னென்ன நிகழ்ந்தது உன்னிடத்திலே; இப்போது என்ன நிகழ்கிறது தெரியுமா? என்று சொல்லுகின்ற காட்சி உண்டி உலுக்கும் காட்சியாகும். சோலைகளில் மயில்கள் நடனமாடிடவும், பழகிய மலைகளில் முசுக்கலை தாவி விளையாடுகின்றன. அந்த முசுக்கலைகூட உண்ணவில்லையாம், பழங்களை. ஏன்? அவ்வளவு ஜாஸ்தியாக இருக்கிற காரணத்தால். காலமில்லாமல் மரங்கள் பழுத்துக்கிடக்கின்றன. அந்தப் பெரிய மலையின் உயரமான முகட்டிலே ஏறி, தம் தந்தையான பாரியின் நாட்டை வெல்ல முடியாதென்று தெரிந்திருந்தும்கூட, போர் மேல் ஆசை கொண்டு வந்த மன்னர்கள் தோற்றுத் திரும்புகிறார்களே, அவர்களுடைய குதிரைப் படையை எண்ணுகிறார்களாம். பாரியின் சிறப்பு தெரிய, அங்கு வந்து தோற்று ஓடுகிற மன்னர்களின் குதிரைகளைப் பாரி நாட்டிலேயுள்ள மகளிர் எண்ணுகிறார்களாம். இது அன்றைய நிலைமை. இந்த நிலைமை மாறி, இன்று குளத்திலே பூத்த குவளை மலர்களை இடையிலே கட்டிய இளம் பெண்கள், முள்ளால் கட்டப்பட்ட வீட்டு வேலி, அந்த வேலிமுன் பஞ்சு நிறைந்த வாயில்; அதன்

*முன்னே வந்து குப்பை மேட்டிலே ஏறிக்கொண்டு கீழே செல்லுகின்ற உப்பு வண்டிகளை எண்ணுகிறார்களாம். இதை நினைக்கிற என் நெஞ்சு வெடிக்கிறதே; என் உயிர் ஏன் போகவில்லை என்று கண்ணீர் விடுகின்றார் புலவர் பெருமான்.*

“பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும்
பயிலிருஞ் சிலம்பிற் கலைபாய்ந் துகளவும்
கலையுங் கொள்ளா வாகப் பலவும்
கால மன்றியு மரம்பயம் பகரும்
யாண ரறாஅ வின்மலை யற்றே
அண்ண னெடுவரை யேறித் தந்தை
பெரிய நறவிற் கூர்வேற் பாரிய
தருமை யறியார் போரெதிர்ந்து வந்த
வரம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா வெண்ணு வோரே” (புறம்: 116)

“வலம்படு தானை வேந்தர் பொலம்படைக் கலிமா”

*வெற்றி பெறலாமென்று மேலே ஏறி வந்த மன்னர்களுடைய, பொன்னாலாகிய ஆபரணங்களையுடைய குதிரைகளை எண்ணுகிறார்கள். இன்று என்ன நடைபெறுகிறது தெரியுமா?*

“தீநீர்ப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக்
கூம்பவிழ் முழுநெறி புரள்வரு மல்குல்
ஏந்தெழின் மழைக்க ணின்னகை மகளிர்
புன்மூசு கவலைய முண்மிடை வேலிப்

பஞ்சி முன்றிற் சிற்றி லாங்கட்
 பீரை நாறிய சுரையிவர் மருங்கின்
ஈத்திலைக் குப்பை யேறி யுமணர்
 உப்பொ யொழுகை யெண்ணுப மாதோ" (புறம்: 116)

*குப்பை மேட்டிலே ஏறி, உப்பு வண்டிகளை எண்ணுகிறார்கள்.*

"நோகோ யானே தேய்கமா காலை"

*என் மனம் நோகின்றதே, என் வாழ்நாள் ஒழிவதாக என்று ஒரே பாடலில் முன்னும், பின்னுமாக வைத்து, பாரியின் இறப்புக்கு முன்னே இருந்த பறம்பின் நிலை, அவன் இறப்புக்குப் பின்னே இருந்த பறம்பின் நிலை இரண்டையும் புலவர் பெருமான் பாடுவது அறிந்து தெளிதற்குரியது.*

❀❀❀❀❀

# 7. வள்ளுவன் கண்ட இன்பம்

தலைசிறந்த உலக இலக்கியங்களுள் ஒன்று என வைத்து எண்ணத்தகுந்த திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலையுடையது என்பதை அனைவரும் அறிவர். தமிழ்மரபை விளங்கிக் கொள்ள முடியாத வேற்று நாட்டார் சிலரும், தமிழராய்ப் பிறந்தும் தமிழ் மரபை அறியாத தமிழருள் ஒரு சிலரும் குறள் கண்ட மூன்றாவது பாலை வள்ளுவர்தாம் இயற்றினாரா என்று ஐயப்பட்டுப் பேசி எழுதிய காலமும் உண்டு. நல்ல வேளையாக இன்றைய நாளில் அத்தகைய ஆராய்ச்சியில் புகுவார் யாருமில்லை. முன்னர் கூறிய அச்சிறுபான்மையினரும் காமத்துப்பால் என்ற பெயரைக் கேட்டவுடன் அதனைத் தவறாகக் கருத்தினரேயன்றி அதனுள் புகுந்து ஆழ்ந்து கற்று இருப்பாரேல் இப்படிப்பட்ட பிழை செய்திரார்.

உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்தும் ஆண், பெண் பிரிவினையோடு வாழக் காண்கிறோம். மாக்கள் இனத்திலிருந்து வளர்ச்சி அடைந்த மக்கள் இனம், தன் வளர்ச்சியைச் சிறப்பித்துக் காட்டுவதற்கு நிலைக்களனாகக் கொண்டவை பகுத்தறிவும் அதனோடு ஒருங்கு வைத்து எண்ணத் தகுந்த உணர்ச்சியுமேயாகும். விலங்குகளுக்கும் உற்றுணர்வு உண்டு எனினும் ஒரு முறை அனுபவித்த ஒன்றை

மறுபடியும் நினைவுக்குக் கொணர்ந்து அந்நினைவின் அடிப்படையில் இன்ப துன்பம் ஆகிய உணர்ச்சி களைப் பெறுதல் மக்களை அல்லாத பிறவற்றுக்கு இயலாதகாரியம். எனவேதான் மக்கள் பிறப்பை உயர்ந்தது என்றும், 'உயர்திணை என்மானார் மக்கட் சுட்டே' (தொல்காப்பியம்) என்றும் பெரியோர் பேசிப்போயினர். உற்றுணர்வு ஒன்றையல்லாமல், சிந்தித்தும் நினைத்தும்கூட உணர்ச்சியைப் பெறக் கூடும் என்ற அடிப்படையை நன்கு அறிந்த தமிழர் காமத்தை இவ்வுணர்வின் அடிப்படையில் கண்டனர். ஏனையவர்கள் போல் காமத்தை உடலோடு மட்டும் தொடர்புடையதாகக் கொள்ளாமல் உள்ளத்தோடு பெரிதும் தொடர்புடைய ஒன்றாகவே கண்டார்கள்.

தமிழர் மரபை வள்ளுவப் பெருந்தகை மிக நன்கு அறிந்திருந்தார் என்பது அவருடைய காமத்துப் பாலைக் கற்போர் நன்கு அறிதல் கூடும். இல்லையேல்,

> ''மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
> செவ்வி தலைப்படு வார்'' (குறள்–1289)

என்ற குறளை அப்பெருந்தகை பாடியிருக்கக் காரணம் இல்லை. புல் பூண்டில் தொடங்கி மனிதன் ஈறாக அனைவருமே அனுபவிப்பது காம இன்பம் எனின், உலக வளர்ச்சிக்கு இதுவே உறுதுணையாய் அமைந்துள்ளது எனின், 'சிலர் அதனை, செவ்வி தலைப்படுவார்' என அனைவரில் இருந்து சிலரைப்

பிரித்துக் கூறக்காரணம் இல்லை. இவ்வாறு கூறியதால் செவ்வி தலைப்படும் சிலரையல்லாத பலர் அதனை அறியவில்லை என்பதும் நன்கு விளங்கும். அனைவருமே அனுபவிக்கிற காமமாகிய ஒன்றை, சிலரே அதன் செவ்வியை (பக்குவம்) அறிவார் என்று வள்ளுவர் கூறினால், அனைவரும் அனுபவிக்கின்ற காமத்தையல்லாமல் தனிப்பட்ட வேறொன்றைப் பெரியார் கூறுகின்றார் என்று நினைக்கத் தோன்றும். காதல் உணர்ச்சியில் ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து இன்பம் பெறுகிறார்கள் எனினும், அவ்வாறு சேர்ந்தவர்கள் அனைவரும் காதலை அறிந்தவர்கள் என்று கூறிவிட முடியாது. இருவர் சேர்ந்த மாத்திரத்தில் அவர்கள் இருவரும் காமத்தின் செவ்வியை (பக்குவத்தை) அறிந்துவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. பால் வேறுபாட்டு மனோதத்துவத்தை (Sexual Psychology) மிகப்பெரிய அளவில் ஆராய்கின்ற மேனாட்டுக் காரர்கள் இப்போது பெரிதுபடுத்திப் பேசி வருகின்ற ஓர் உண்மையாகும் இது. இல்லறம் நடத்துபவர்கள் அனைவரும் காதல் உணர்ச்சியை அறிந்து கொண்டார்கள் என்று சொல்வதற்கில்லை. நூறு ஆண்டுகள் குடும்பம் நடத்தியவர்கள்கூடக் காதல் என்றால் இன்னது என்று அறியாமலே குடும்பம் நடத்தி, குழந்தைகள் பெற்று, இன்பகரமான வாழ்க்கை நடத்திவிட்டதாக எண்ணிக் கொள்ளலாம். என்றாலும், இவ்வளவும் நடைபெற்றுவிட்ட காரணத்தால் மட்டும் இத்தலைவன் தலைவியர்

காமத்தைப்பற்றி அறிந்து கொண்டார்கள் என்று சொல்வதற்கில்லை. இந்த ஆழ்ந்த கருத்தைத் தான் வள்ளுவப் பெருந்தகை 'சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்' என்று பேசிச் செல்கிறார்.

வள்ளுவரின் காமத்துப்பாலின் அடிப்படையில் நின்று கண்டால் காமம் என்பது மலரைவிட, மென்மையுடையது என்றும் அது ஒரு மனப்பக்குவ நிலையாகும் என்றும் அறிய முடிகிறது. அந்த மனப் பக்குவத்தை அறிவதே மிகப்பெரிய காரியமாகும். அறிந்த பின்னர் அதனைப் பயன்படுத்துதல் என்பது மிகமிகப் பெரிய காரியமாகும். மென்மையுடைய மலரானது, தான் இருக்கும் இடம், மண் வளம், தட்ப வெப்ப நிலைகள், நீர்வளம், காற்று ஆகிய அனைத்தினாலும் பாதிக்கப்படக்கூடிய ஒன்றாகும். இவை அனைத்தும் இருக்கக்கூடிய நிலையில்தான் மலர் முழுத்தன்மை பெற்று மணம் பரப்பும். இவற்றுள் யாதானும் ஒன்றோ பலவோ குறைந்து விடின் மலர் வடிவளவில் மலர் என்று சொல்லக் கூடிய நிலையில் இருக்குமே தவிர முழுத்தன்மை பெற்றதாக அமையாது. அதேபோல் காம இன்பத்தை நுகர்வதற்குக்கூட ஒருவகை மனநிலை வேண்டும். அம்மனநிலை இல்லாமலும் காமம் அநுபவிக்கப் படுவது இல்லையோ எனில் உண்டு, என்றாலும் அது முழுத்தன்மை பெற்றதாக ஆகாது. மலர், பெயர் அளவில் மலராக இருப்பது போல இக்காமமும்

பெயரளவில் அனுபவிக்கப்படுகிறதே தவிர முழுத் தன்மை பெற்றதாக இருப்பதில்லை.

இத்துணைக் கருத்துக்களையும் உள்ளடக்கி ஒரு குறளை வள்ளுவர் பேசினார் என்றால், அதுவே அவருடைய நுண்மாண் நுழைபுலத்திற்கு எடுத்துக் காட்டாகும். தமிழ் மொழியிலுள்ள அகநூல்கள் பிற மொழிகளைப் போல் ஆண், ,பெண் தொடர்புபற்றி அதிகம் கூறாமல், காதல் உலகின் அடிப்படையில் உள்ள மன வளத்தையே பெரிதும் பேசிச் செல்வது கண்கூடு. அதிலும் சிறப்பாக, வள்ளுவருடைய காமத்துப்பால், ஒருவன் ஒருத்தி என்ற இருவர் எதிர்ப்பட்டு, ஒருவரால் ஒருவர் ஈர்க்கப்பட்டுப் பழகி, களவு வாழ்க்கை நடத்தி, பின்னர்க் கற்பில் புகுந்து வாழ்க்கை நடத்துகின்ற வரையில் ஓரளவு மரபை அடியொற்றிச் செல்கின்றது எனினும், ஆழ்ந்து நோக்கினால் களவு, கற்பு ஆகிய இரு நிலைகளிலும் தலைவன், தலைவி என்ற இருவருடைய மனநிலைகள், எண்ண ஓட்டங்கள், எண்ணப் போராட்டங்கள், ஒருவரையொருவர் அறிந்து கொள்ள முயலும் மனநிலை, அவ்வாறு அறிந்த பின்னர் ஒருவருடைய பெருமையை மற்றவர் அறிதல், அதனை அறிந்த பிறகு ஒருவர் ஒருவரில் கலந்து பூரணமாகத் தம்மை அவரிடம் தியாகம். செய்து விடுதல் ஆகியவற்றையே கூறிச் செல்கிறது.

வள்ளுவரும் ஏனையோர் போல் காமத்தைக் கண்டிருப்பின் அதற்கு அடியிற் கூறியவாறு ஓர் இலக்கணம் வகுத்திருத்தல் இயலாது.

"அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு" (குறள்–1110)

பல்லாண்டுக்காலமாக ஒருவன் ஓர் இலக்கியத்தைத் திரும்பத் திரும்பப் பயில்கின்றான் எனின் அதன் அடிப்படை யாது? அவன் வயதும் அனுபவமும் ஏற ஏற அப்பழைய நூலில் முன்னர்க் காணாத புதுமையை அறிகிறான், அவ்வாறு அறிகையில் இதுவரை அப்பொருளை அறியாதிருந்த தன் அறியாமையையும் உடன் அறிகிறான். எனவே ஒவ்வொரு முறை கற்குந்தோறும் காணப்பெறும் புதிய நயத்தையும், முன்னர் காணமுடியாதிருந்த தன் அறியாமையையும் அறிகிறான். இந்த உவமையைப் பயன்படுத்திப் பெருந்தகை தலைவியிடம் முழுக்காதலுடன் வாழும் தலைவனின் இயல்பை வெளியிடுகிறார். ஒருத்தியிடம் பல்லாண்டு வாழ்ந்தும் கூட ஒவ்வொரு நாளும் அன்று வரை காணாத ஓர் இயல்பை அல்லது இன்பத்தைக் காண்கிறான் தலைவன் எனின் இது உடல் பற்றியதன்று என்பதும் உள்ளுணர்ச்சி பற்றியதே என்பதும் நன்கு விளங்கும்.

உடற்புணர்ச்சி அடிப்படையில் காமம் பேசிய பிறரும், உள்ளப்புணர்ச்சி அடிப்படையில் காமம்

பேசிய வள்ளுவரும் இருவேறு துருவங்களில் நிற்கின்றனர் என்பதை அறிதல் வேண்டும்.

உணர்ச்சியை மனிதன் வெளியிடப் பல்வேறு வழிகளைக் கையாள்கின்றான். சினம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளை வெளியிட முகத்தையும் இன்னபிற உறுப்புகளையும் பயன்படுத்துகிறான். ஆனால், காதல் போன்ற நுண்மையான உணர்ச்சியை வெளியிட முகம், உடல் உறுப்புகள் போன்ற பருப்பொருள்கள் அதிகம் பயன்படுத்துவதில்லை. இந்த உணர்ச்சியை வெளியிட நுண்மையான ஓர் உறுப்புத் தேவைப்படுகிறது. மேலும் சினம் போன்ற உணர்ச்சியை உடலுறுப்புக்கள் வெளியிடுங்கால் (பற்களைக் கடித்தல், மீசை துடித்தல், முகஞ் சிவத்தல்) சில மாறுதல்களை அடைகின்றன. இவற்றைப் பிறர் அறியாமல் மறைத்தல் அத்துணை எளிதன்று.

ஆனால் நுண்ணிய காமஉணர்ச்சி வெளியிடப் படும் பொழுது பிறர் அறியாமல் வெளிப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. பக்கத்திலேயே இருக்கும் பிறர் அறியாமல், ஆனால் யார் அதனை அறிந்து கொள்ள வேண்டுமோ அவர் மட்டும் அறிந்து கொள்ளக்கூடிய முறையில் உள்ளத்து உணர்ச்சியை வெளியிடும் ஓர் உறுப்பு உண்டு என்றால் அது எதுவாக இருக்கும்? இன்னும் கூற வேண்டுமாயின் அந்த உறுப்பு அந்த உணர்ச்சியை

வெளியிட்டுக் கொண்டிருக்கும்போதே அதைக் காணுகின்ற பலருள் ஒருவர் மட்டும் அது வெளியிடும் உணர்ச்சியை அறிந்து கொள்ளவும், ஏனையோர் ஒன்றும் அறிந்து கொள்ள முடியாமல் இருக்கவும் உள்ள சூழ்நிலையில் உணர்ச்சியை வெளியிடும் உறுப்பு யாது? மனித உறுப்புகளுள் தலை சிறந்ததாகிய கண்தான் என்று கூறத் தேவையில்லை. இதனை நன்கு அறிந்த வள்ளுவனார் அக்கண்ணாகிய உறுப்புப்பற்றிப் பல இடங்களில் குறிப்பிடுவதுடன் ஒரு தனி அதிகாரமே கண்ணைப் பற்றிப் பேசுவதற்காக ஒதுக்குகின்றார். பிறர் அறியாமல் ஒருவருக்கு மட்டும் செய்தி அனுப்பும் அக்கண்ணின் திறத்தையும், ஒரே நேரத்தில் ஒருவருக்குத் துன்பத்தையும் இன்பத்தையும் மாறி மாறி அளிக்கின்ற திறத்தையும் பேசுகின்றார்.

> "ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
> காதலார் கண்ணே யுள" (குறள்–1099)

(முன்பின் தெரியாதவர் போல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளுதல் காதலர்கட்கு இயல்பு)

> "இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒரு நோக்கு
> நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" (குறள்–1091)

(இவளிடம் இரண்டு பார்வைகள் உண்டு; ஒன்று எனக்கு நோய் தரும் பார்வை, மற்றது அந்நோயைத் தணிக்கும் பார்வை)

இத் தமிழ் நாட்டார் காதலை மன அடிப் படையிலேயே அதிகம் கண்டனர் என்பதை மற்றொரு வகையாலும் அறியலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாக அகவாழ்க்கையைப் பிரித்துக் கூறினார்கள். எனினும் கூட்டத்தைக் குறிக்கும் குறிஞ்சித் திணை பற்றிய பாடல்களைக் காட்டிலும் பிரிவைக் குறிக்கும் பாலைத் திணைப் பாடல்கள் பல மடங்கு அதிகமாக இருக்கின்றன. மனிதனுடைய வாழ்வு முழுவதையும் குறிக்கொண்டு பேசும் காமத்துப் பாலில் உள்ள மொத்த அதிகாரங்கள் 25. அதில் பன்னிரண்டு அதிகாரங்கள் பிரிவுபற்றி (பாலை) எழுந்தன என்றால் பாலையின் சிறப்பை வெளியிட வேறு சான்றும் வேண்டுமோ? இதன் காரணம் யாது என்பதைச் சற்று நின்று ஆய வேண்டும்.

பிரிவில் ஒருவரை ஒருவர் காணுகிற வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. உடனிருந்து வாழும் பொழுது ஒருவரையொருவர் நினைப்பது தவிர மனத்தில் பிற எண்ணங்களுக்கும் இடம் இருக்கும். ஆனால், பிரிவு ஒன்றில் தான் எண்ணம் முழுவதும் பிரிந்தவர்கள் பற்றியே நிகழும். அன்றியும் ஒருவரிடத்து மற்றவர் எத்துணை அன்பு கொண்டு உள்ளார் என்பதை அளவிடவும், அறிந்துக் கொள்ளவும் கூடப் பிரிவுதான் பயன்படுகிறது. இந்த அடிப்படையில்தான் பாலையாகிய பிரிவு அகத்திணை இலக்கியத்தில் அதிக இடம் பெறுகின்றது. குறளும் இதற்கு விலக்கன்று என்பதைக்

*காமத்துப்பாலில் பாலைக்கு ஒதுக்கின அதிகாரங்கள் மூலம் காணலாம்.*

*விட்டுப் பிரிந்திருக்கும் தலைவன் ஒருவன் இத்துணை நேரமும் தன்னைப் பற்றியே நினைந்து கொண்டிருப்பான் என எண்ணுகிறாள் ஒரு தலைவி. ஆனால், அதே நேரத்தில் பெண்களுக்கே இயல்பான சந்தேகமும் வந்துவிடுகிறது. ஒருவேளை தன்னைப் பற்றி நினைக்க வேண்டும் என்று கருதி உடனேயே வேறு அலுவல் காரணமாக அந்நினைப்பை ஒதுக்கி விட்டான் போலும் என்று கவல்கிறாள். அம்மன நிலையை இதோ பேசுகிறார் வள்ளுவர்.*

"நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்" (குறள்–1203)

*(எனக்குத் தும்மல் வருவதுபோல வந்து அடங்கி விட்டது. எனவே தலைவன் நினைப்பது போன்று நினையான் கொல்)*

*இதுகாறுங் கூறியவற்றால் பிற ஆசிரியர்கள் இன்பத்தைக் கண்ட விதமும் வள்ளுவர் இன்பத்தைக் கண்டவிதமும் வேறு வேறு என்பதும், மனித மனத்தின் ஆழத்தை நன்குணர்ந்த வள்ளுவனார் கூறிய இன்பத்துப்பால் உலக முழுவதற்கும் எக் காலத்தும் பொருந்தும் என்பதும் நன்கு விளங்கும்.*

❀❀❀❀❀

# 8. கவிதைப் பண்பு

கவிதை என்று கூறியவுடன் நம்மில் பலருக்குப் பல வகையான எண்ணங்கள் தோன்றக்கூடும். அடிகள் நீண்ட பாடலையும் அவை குறைவாக அமைந்துள்ள பாடலையும் அவரவர் நினைத்தல் ஐடும். கவிதை என்ற பெயரைக் கேட்டவுடன் அது முன்னரே அறியப்பட்ட ஒன்று என்பது மாத்திரம் தெரியுமேயன்றி, இதுதான் கவிதை என்று கவிதையின் இலக்கணம் கூறப் பலருக்கும் இயலாது தான். 'சிலவகை எழுத்தில் பல்வகைப் பொருளைச் செறித்து இனிது விளக்குவது' என்றும், 'சுருங்கக் கூறி விளங்கவைப்பது' என்றும் ஓரளவாகக் கவிதையின் இயல்புகளைக் கூறலாமேயன்றித் திட்ட வட்டமாக இலக்கணம் வகுத்தல் கடினமானதுதான்.

கவிதை என்றால் என்ன என்பது பற்றிச் சிறிது ஆராய்வோம். மனிதன் பெற்றுள்ள பல்வேறு சிறப்புக்களுள் ஒன்று அவன் பேசும் மொழி. ஏனைய விலங்கினங்களிலிருந்து அவன் பிரித்து எண்ணப்படுவதற்கு உற்ற கருவியாக உள்ளது மொழியாகும். விலங்கினங்களுங்கூடத் தம்முடைய கருத்தை அறிவிக்க ஓசை உண்டாக்குகின்றன;

எனினும், அவை தோற்றுவிக்கும் ஓசைக்கும் மனிதன் தோற்றுவிக்கும் ஓசைக்கும் வேற்றுமை மிகுதியும் உண்டு. விலங்குகளின் ஓசை சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப அவற்றின் மன நிலையை ஓரளவு அறிவிப்பனவே ஆகும். மேலும் அவ்வோசைகளும் அவற்றின் பசி, இன்பம், துன்பம், கோபம் முதலிய உணர்ச்சிகளை வெளியிடும் சாதனங்களேயன்றி வேறில்லை. எனவே அவ்வோசைகள் எண்ணிக் கையில் குறைந்தன என்று கூறத் தேவையில்லை. ஆனால் மனிதன் தோற்றுவிக்கும் ஒலியோ எண்ணற்றவையாய் உள்ளன; அன்றியும் அவனுடைய அடிப்படையான உணர்ச்சிகளையன்றி எல்லா மன நிலைகளையும் எடுத்துக்காட்டும் இயல்பையும் பெற்றுள்ளன. விலங்குகள் உண்டாக்கும் ஒலிகள் திருத்தமான வடிவு பெறாதவை; அவ்வொலிகட்கு நல்ல வரம்பிட்ட அளவுகள் இல்லை. ஆனால் மனிதன் பேசும் மொழிகள் திருத்தமும் வடிவமும் பெற்று வரம்பிட்டுக் காணக்கூடிய இயல்பு உடையவை. எனவே இச்சொற்கள் பயனின்றித் தோன்றா என்பது பெறப்படுகிறதன்றோ? இது கருதியே இலக்கணம்,

> "எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே"
> (தொல்: சொல், 5,1)

என்று கூறிச் செல்கிறது. பொருள் குறித்தனவும், செம்மையான வடிவுடையனவும், வரம்புடை

யனவுமான இலக்கணங்களை உடையனவே மனிதன் பேசும் சொற்கள் என்று அறிய முடிகிறது.

இத்தகைய சொற்களுள்ளும் சிறந்த சொற்களையே கவிதை எடுத்து ஆளுகிறது. சொற்களுள் சிறந்த சொற்கள் என ஒரு பகுதி உண்டா என்றால், உள்ளது என்றே கூற வேண்டும். ஒவ்வொரு சொல்லும் குறிப்பிட்ட ஒரு பொருளைக்குறிப்பதோடு நிற்பதில்லை. கூறுவோன் மனக் கருத்தை வெளியிட வருகின்ற சொல் இரண்டு வகைகளால் அத் தொழிலைச் செய்கிறது. இவ்வியல்பு சொல்லுக்கு இயற்கையாக அமைந்துள்ளது. சொல் பொருளை நேரடியாகக் குறிப்பது முதல் வகை. தனக்குரிய பொருளால் பொருளை உணர்த்தும் இவ்வாற்றலைப் பொருளாற்றல் (Semantic Meaning) என்பர். சொற்கள் பொருளால் பொருளைக் குறிப்பது மட்டும் அன்றித் தம் ஓசையாலும் பொருளைக் குறிக்கின்றன. இதனை நம்மில் பலர் அறியாவிடினும் செயல் அளவில் இத்தன்மையைப் பயன்படுத்தாமல் இருப்பதில்லை. ஒருவனை இழித்துப் பேசவேண்டிய நிலையில், “நீ மிகவும் நல்லவன்!'' என்று கூடக் கூறுவதைக் கேட்கிறோம். இந்நிலையில் நல்லவன் என்ற சொல் நன்மை என்று தனக்குரிய பொருளை விட்டுவிட்டுத் தீயவன் என்ற முற்றும் மாறான பொருளை எவ்வாறு குறித்தது? சொல்பவனுடைய குறிப்பு அதுதானாகலின் இப்பொருளைக் குறித்தது. தனது குறிப்புத் தீயவன் என்று இருக்கவும்,

சொல்பவன் வேறு பொருளுடைய இந்தச் சொல்லை அறியாமல் பயன்படுத்தினானா? அறிந்து தான் செய்தான் என்றால், இச்சொல் தனது ஓசையால் சொல்வோன் குறிப்பை நாம் அறியுமாறு செய்தது. இவ்வாறு சொற்கள் ஓசையால் பொருள் உணர்த்துவதை ஓசையாற்றல் (Phonetic Meaning) என்று மொழிநூலார் கூறுவர்.

இவ்வாறு சொல்லைப் பயன்படுத்துபவன் நேரடியாக நம்மிடம் பேசினால் அவன் குறிப்பை அவனுடைய ஓசையிலிருந்து அறிந்து கொள்ள முடியும். ஆனால் எழுத்தில் எழுதிவிட்டால் எவ்வாறு ஓசையைக் கண்டு பிடிப்பது? அவ்வாறு கண்டாலும் ஓசையால் பொருள் மாறுபட்ட நிலையை எவ்வாறு உணர்வது? உரைநடையில் இந்த வேறுபாட்டை உணர்வது கடினமாயினும் கவிதையில் உணர்வது எளிது. காரணம் கவிதை ஓசையைப் பெரிதும் நம்பி வாழ்வதாகலின், கவிஞன் ஒரு சொல்லைப் பயன்படுத்தும் பொழுது அதனுடைய மேற்கூறிய இருவகை ஆற்றலையும் நன்கு அறிந்தே பயன்படுத்துகிறான். கவிதையைப் படித்து அனுபவிக்கும் பொழுது வாய்விட்டுப் படிக்க வேண்டும். அப்பொழுதுதான் கவிதையின் சிறப்பை நன்கு அறிய இயலும். சில சொற்களைத் தனியே கூறும்பொழுது எவ்விதமான சிறப்பும் தெரியாது. ஆனால் அந்தச் .சொற்களே முன்னும் பின்னும் சில சொற்களுடன் கூடிவரும்பொழுது தமக்கென

இயற்கையாக உள்ள ஒலியை விட்டுப் புதிய ஒலிகளைப் பெற்றுவருவது யாவரும் அறிந்த ஒன்றே. ‘தா’ என்ற எழுத்து வல்லினமாயினும் ‘தாளம்’ என்ற சொல்லிலும் ‘செந்தாமரை’ என்ற சொல்லிலும் இரண்டு வேறுபட்ட ஒலியைப்பெற்று வருதல் கண்கூடு. இத்தகைய வேறுபாட்டை மிகுதியும் தனது நுண்ணிய செவியால் உணர்ந்த கவிஞன் அவற்றை நன்கு பயன்படுத்துகிறான். நாம் வாய்விட்டுப் படிக்காவிட்டால் அதன்கண் அமைந்துள்ள ஒரு பகுதி அழகை அநுபவிக்க இயலாமற் போய்விடும். பாடல் சிறிதாயினும் பெரிதாயினும் எந்த இனத்தைச் சேர்ந்தவையாயினும் இப்பண்புகள் பொதுவானவை ஆகும்.

எனவே பொருளாலும் ஓசையாலும் சிறப்புடைய சொற்களைக்கொண்டே கவிஞன் கவிதையைப் புனைகின்றான் என்பது தெளிவு. கவிஞன் பயன் படுத்தும் சொற்கள் இவற்றோடன்றி மற்றோர் இயல்பையும் பெற்று விளங்கவேண்டும் என்பர். அவ்வியல்பை எண்ணவூட்டல் சக்தி (suggestive Power of the word) என்பர். ஒவ்வொரு சொல்லும் நம் காதில் விழுந்தவுடன் ஓர் எண்ணக் கோவையை தோற்றுவிக்கிறது. எல்லாச் சொற்களும் இவ்வாறு செய்யும் என்று கூறுவதற்கில்லை. எனினும் சில சொற்களைக் கவிஞன் தக்க இடத்தில் பயன்படுத்தி அவற்றிற்கு ஒரு புதிய மெருகை ஏற்றிவிடுகிறான். இதனால் அச்சொல்லைப் பிறகு எங்குக் கண்டாலும்

கவிஞன் கூறிய பொருள் ஆழம் நம்மனத்திடையே தோன்றுகிறது. இவற்றையெல்லாம் உள்ளடக்கியே ஆசிரியர் தொல்காப்பியனார்,

"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்
எண்மையும் என்று இவை விளங்கத் தோன்று
குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்"
(தொல்: பொருள், 8, 170)

என்று கூறிப் போனார். இவ்வாறு கவிஞனால் ஆக்கப் பெற்ற கவிதையில் ஒரு சொல்லைக் கூட மாற்றவோ, எடுத்துவிட்டுப் பிறிதொரு சொல்லை அமைக்கவோ நம்மால் இயலாது.

அடுத்துக் காணப்படும் கவிதைப் பண்பு, கற்பனை ஆகும். கற்பனை இது என்று அறுதியிட்டு இலக்கணம் வகுத்தல் கடினமாயினும், கற்பனையில் அமைந்த கவிதையை நன்கு கண்டு கொள்ளல் இயலும். நாம் அன்றாட வாழ்க்கையில் காணும் பொருளைத்ததான் கவிஞனும் காண்கிறான். ஆனல் நாம் காணும் பார்வை வேறாகவும், கவிஞன் காணும் பார்வை வேறாகவும் பல சமயங்களில் இருக்கக் காண்கிறோம். நாம் பொருள்களைக் கண்டாலும் அவற்றின் இயல்பை உள்ளவாறு அறிவதில்லை. பொருள்களை மேலாகப் பார்த்து விட்டு அமைந்து விடுதலின் அவற்றின் உள்தன்மையை அறிதல் இயலாததாகிறது. இந்நிலையில் அதே பொருள்களைக் காணும் கவிஞன் அவற்றின் உட்பொருளையும்

ஊடுருவி நோக்கும் வன்மையால் புறத்தில் காணப்படாத அவற்றின் இயல்புகள் பலவற்றையும் அறிய முடிகிறது. தொடர்பற்றனபோல் காணப்படும் இரண்டு பொருள்களைக் கவிஞன் தன் கற்பனையின் துணைகொண்டு தொடர்பு படுத்துகிறான். அவன் கண்ட கற்பனையை நாம் அநுபவிக்க வேண்டு மாயின் நாமும் உணர்வு உலகத்தில் புகுந்து அதனை அநுபவிக்க வேண்டுமே தவிர ஆராய்ச்சியில் இறங்கிப்பயன் இல்லை. உதாரணமாக,

> "மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
> காதலை வாழி மதி" (குறள்–1118)

என்று வள்ளுவர் கூறினால், சந்திரன் ஒளியை அளந்து பார்த்து இத்தகைய ஒளி மாதர் முகத்தில் இல்லையே என்று கவல்வது தவறுடைத்தாகும். சொல்லப் போனால், இன்று நாம் எதனை ஒளி என்று குறிக்கிறோமோ அது மனிதர்களுடைய தோலும் சதையும் உடைய முகத்திற் காணப்படுவதன்று. அவ்வாறு இருக்க வள்ளுவர் ஏன் அங்ஙனம் கூறினார்? கூறினதோடு மட்டும் அமையாமல் சந்திரனைக் காட்டிலும் முகத்திற்கு அதிக ஒளி உள்ளதுபோல் அல்லவா கூறுகிறார்? ஆம்! இதுவே கற்பனையிற் பிறந்த கவிதை. காதலன் கற்பனையில் காதலியின் முகம் நிலவிலும் மிக்க ஒளியுடைய தாகவே காணப்படுகிறது.

மேலே கூறிய அனைத்து இலக்கணங்களும் மிகுதியும் பொருந்தி அமைந்த கவிதைகளை உடையது திருக்குறள். கவிதைக்குரிய இத்துணைச் சிறப்புக்களைப் பெற்றுள்ளதாயினும், குறள் வெண்பாக்கள் ஏனைய கவிதைகள் போல் அழகு மிகுவதற்குரிய வாய்ப்புக்கள் நிறைந்தவை அல்ல. காரணம் குறட்பாட்டின் தன்மை அத்தகையது என்பதுதான். உணர்ச்சியைத் தாங்கி வரும் கவிதைக்கு மிகவும் இடைஞ்சலான வடிவம் ஒன்று உண்டு என்றால் அதுதான் வெண்பா வடிவம். கவிஞன் விருப்பம் போல் வளைந்து கொடுக்கும் ஆற்றல் இல்லாமல் மிகுதியான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வரும் இயல்புடையது வெண்பா. நான்கடி களும் பதினைந்து சீர்களும் பெற்ற வெண்பாவே கடினமான வடிவுடையது என்றால், ஒன்றே முக்கால் அடியையும் ஏழு சீர்களையும் கொண்டுவரும் குறள் வெண்பாவைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. இந்தப் பெரிய இடுக்கண்ணையும் மீறிக் குறள் சிறந்த கவிதைகளைத் தன்னகத்தே பெற்றிருப்பின் இது கவிஞனின் சிறப்பைப் பன்மடங்கு நமக்கு எடுத்துக் காட்டுவதாகும்.

முன்னர்க் கண்ட அழகுகள் கவிதையில் வெளிப்பட வேண்டுமாயின் அவை பொள்ளெனத் தோன்றிய கவிதைகளாகவே இருத்தல் வேண்டும். பாடவேண்டும் என்ற கட்டுப்பாட்டில் பிறக்கும் பாடல்கள் மேற்கண்ட அழகுகளுடன் விளங்குவது

அருமை. ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பத்துக் குறள்கள் பாடவேண்டும் என்ற நியதியால் குறள் உளம் கனிந்த போதெல்லாம உவந்து உவந்து பாடியது அன்று என்பதையும் அறிவிக்கிறது. கவிதையின் பயன் இன்பம் ஊட்டல் என்னும் ஒன்றாகவே இருக்கமுடியும் என்பர் கவிதைத் திறன் ஆய்வாளர்கள், அவ்வாறன்றி ஒழுக்கம் கற்பித்தல் முதலிய வேறு பயன் கருதி ஒரு கவிதை தோன்று மாயின் அதில் கவிதையழகு விடை பெற்றுக் கொள்ளும் என்றும் கூறுவர். அவர்கள் கூற்று முற்றும் உண்மை என்று ஏற்றுக் கொள்ளப்படாவிடினும், அதில் பெரும் பகுதி உண்மை உண்டு என்பதை யாரும் மறுத்தற்கில்லை. பிற்காலத்தில் எழுந்த ஆசாரக்கோவை, திரிகடுகம் போன்ற நூல்களில் செய்யுள் உண்டே தவிரக் கவிதை இல்லை என்பதை, அவற்றை ஒரு முறை படித்தாரும் அறிய முடியும். இவ்வாறு ஒழுக்கம் கற்பித்தலைக் குறிக்கோளாகக் கொண்டு தோன்றும் நூல்களை மேல்நாட்டுத் திறனாய்வாளர் 'கற்பிக்கும் கவிதை' (Didactic Poetry) என்ற தொகுப்பினுள் அடக்குவர். திருக்குறளும் இத் தொகுப்பிற்குரிய இலக்கணம் பொருந்தியதாயினும் சிறந்த கவிதைகளைப் பெற்று விளங்குகிறது; காரணம், திருவள்ளுவர் ஒப்பற்ற கவிஞர் என்பதுதான்.

மேலே கூறிய சிறந்த கவிதைக்குரிய பண்புகள் எவ்வளவு தூரம் திருக்குறளில் அமைந்திருக்கின்றன

என்று காண்டல் வேண்டும். இந்நிலையில் மறவாது மனத்திற் பதிக்க வேண்டிய கருத்தும் ஒன்று உண்டு. திருக்குறளில் சிறந்த கவிதைகள் உண்டு என்று கூறினவுடன், அதிலுள்ள ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களும் சிறந்த கவிதைகள் என்ற முடிவுக்கு வரவேண்டியதில்லை. அவ்வாறு இவ்வுலகில் எந்த மொழியிலும், எந்த நூலும் இல்லை. எத்துணைச் சிறந்த பேரறிஞனால் இயற்றப்பட்ட நூலாயினும் நூல் முழுவதும் சிறந்திருக்க இயலாது. காரணம், அவனும் மனிதன் என்பதுதான். முக்குண வசப்பட்ட எந்த மனிதன் செய்யும் செயலும் முற்றும் ஒரே படித்தாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதும் தவறு. பின்னர் எவ்வாறு ஒன்றைச் சிறந்தது என்று கூறுகிறோம்? அதற்கும் வள்ளுவரே விடை கூறுகிறார்,

> "குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்
> மிகைநாடி மிக்க கொளல்." (குறள்–504)

என்ற குறளால். கவிஞனின் சிறப்புக்கு ஏற்ப மிகுதியான குறள்கள் சிறப்பைப் பெற்று விளங்கு கின்றன என்று கோடலே பொருத்தமுடைத்து. அதிகாரப் பிரிவினை ஒன்றை மேற்கொண்டு, ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பத்துக்குறள் பாட வேண்டும் என்று வைத்துக் கொண்டமையாலேயே சில அதிகாரங்களில் கவிதைக்குப் பதிலாகச் செய்யுட்களைச் செய்து நிரப்ப வேண்டி வந்து விடுகிறது. இன்னும் சில அதிகாரங்களில் பத்துக்

குறள்கள் போதாமையின் அடுத்து எதிர்மறை முகந்தால் ஓர் அதிகாரம் செய்யவேண்டி ஏற்படுகிறது. ‘கல்வி’ என்ற அதிகாரமும், ‘கல்லாமை’ என்ற அதிகாரமும் இத்தகைய நிலைமைக்கு உதாரணங்கள்.

பொருள் ஆழமும், ஓசை நயமும் உடைய சொற்களே சிறந்த கவிதை தோன்ற உதவுபவை என்று முன்னர்க் கூறப்பெற்றதைத் திருக்குறளில் காண்போம். நம்மில் பலரும் அறிந்து அடிக்கடி மேற்கோள் காட்டும் ஒரு குறளைப் பார்ப்போம்,

> ‘‘பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தகு
> நாகரிகம் வேண்டு பவர்’’ (குறள்–580)

என்ற இக்குறளில் பொருள் விளங்குவது அத்துணைக் கடினம் அன்று. “நஞ்சை வாயிலே கொணர்ந்து நண்பர் ஊட்டுபோதிலும் அச்சமில்லை’’ என்று பாரதியார் பாடியது இக்குறளின் அடிப்படையில் தான்.

> ‘‘முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
> நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்’’ (நற்றிணை–355)

என்று சான்றோர் கூறியதும் இக்கருத்தைத் தான்; என்றாலும், கவிதையிற் சிறந்த திருக்குறள் பயன்படுத்தும் ஒவ்வொரு சொல்லும் ஒப்பற்ற பொருட்சிறப்பு உடையது. பெய்தல், ஊற்றல்,

வார்த்தல், சிந்துதல், கொட்டல் என்ற இத்தனை சொற்களும் ஏறத்தாழ ஒரே பொருளுடையன ஆயினும், இந்தச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற சொல் 'பெய்தல்' என்பதுதான். கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றும் செயலும், நிறையவே ஊற்றும் செயலும் 'பெய்தல்' என்ற சொல்லில் அமைந்து கிடக்கக் காண்கிறோம். கொடுக்கப்படுகிற நஞ்சு சொட்டுக் கணக்கில் இல்லாமல் மிகுதியும் இடப்பட்டிருத்தலை இச்சொல் அறிவிக்கிறது. பெய்தல் என்று இவ் விடத்தில் உள்ள சொல்லுக்கு 'இடுதல்' என்பது நேரடியான பொருளாயினும், அச்சொல் ஓசையால் மிகுதியும் பெய்யப்பட்ட ஒரு செயலை நம் எண்ணத்தில் தூண்டுகிறது. இதனைத் தான் முன்னர் எண்ண ஊட்டுச் சக்தி என்று குறிப்பிட்டோம்.

அடுத்துள்ள 'கண்டும்' என்ற சொல்லைக் காண்போம். நஞ்சிடுவதைக் காணுதவராயின் பாலென நினைத்து உண்டு மடிபவர் உண்டு. ஆனல் தாம் உண்ணப்போகும் உணவு என்று அறிந்து அதில் பிறர் நஞ்சை மிகுதியாகப் பெய்தலை யாரும் பார்த்துக்கொண்டு வாளா இருத்தல் இயலாத காரியம். ஏதோ தெரிந்தும் தெரியாமலுமாக ஐயத்தை தோற்றுவிக்கின்ற முறையில் கலக்கப்பெற்ற நஞ்சன்று; கண்களால் நன்கு கண்டு கொண்டிருக்கும்போதே அள்ளி ஊற்றப் பெற்றது என்பதை அறிவித்தற்குக் 'கண்டும்' என்ற சொல்லை

ஆசிரியர் வைத்துள்ளார். அறிந்தும், தெரிந்தும் என்ற சொற்களால் சொல்லி இருப்பின் அது பிறர் கூற அறிந்ததாகவும், தெரிந்த தாகவும் இருக்கலாம் அன்றோ? பிறர் கூறிவிட்ட ஒரு காரணத்திற்காக ஒன்றை நம்பிவிடுதலும் நம்பாது விடுதலும் அத்துணைச் சிறந்தன அல்ல. அவ்வாறு பிறர் மூலம் அறிந்த செயல் அன்று நஞ்சு கலந்த செய்கை; தானே காணும்பொழுது கலக்கப் பெற்றது என்ற கருத்தை அறிவிக்கவே 'கண்டும்' என்ற சொல் ஆட்சி செய்யப்பெற்றுள்ளது. அச்சொல்லில் உள்ள 'உம்'மை மிகவும் அதிசயமான இச்செயலுக்கு ஓர் எல்லை வகுப்பதாய் அமைகிறது. மிகப்பெரியவர்களுக்கும், தமக்கு உண்ணத் தருகிற உணவில் பிறர் தம் கண் எதிரேயே நஞ்சைப் பெய்யும் செயலைக் கண்டிருத்தல் செயற்கரிய செயலாகும். சாதாரண இடங்களிலும் ஓசையை நிறைத்தற்காகவும் 'உம்'மை தருகிற இயல்பு குறளாசிரியரிடம் இல்லை. தாம் கருதிய பொருளுக்கு எல்லை வகுக்கும் அவ்வளவு உயர்வு அல்லது தாழ்வு காட்ட வேண்டிய இடத்திலேயே பெரும்பாலும் 'உம்'மை தந்து பேசுவார். அத்தகைய அற்புதமான இடங்களில் ஒன்று 'கண்டும்' என்ற சொல்லில் உள்ள உம்மை.

நஞ்சு என்பது அடுத்து உள்ள சொல். தமிழ் மொழியில் சில வியப்பான சொல்லாட்சிகள் உண்டு. கடுமையான பொருளை மென்மையான மொழி யாலும், மென்மையான பொருளை வன்மையான

மொழியாலும் குறிப்பது இவ்வகையைச் சேர்ந்தது. உள்ளே ஒன்றும் இல்லாதவர்களை 'அற்பர்', 'கயவர்' என்று அழுத்தம் தந்து கூறுதலும், சொல்லும் தன்மை வாய்ந்த விடத்தை 'நஞ்சு' என்ற மெல்லோசை உடைய சொல்லால் குறித்தலும், அரிதல், அறிதல் என்பவைகளும் மேற்கண்ட சொல்லாட்சிக்கு உதாரணங்கள். ஆனால் 'நஞ்சு' என்ற சொல்லை ஆசிரியர் வேண்டுமென்றே அதனுடைய ஓசை நயம் கருதிப்பயன்படுத்துகிறார். நஞ்சை இடுபவர்கள் புறத்தோற்றத்தை நம் மனக்கண் முன் கொண்டு வருகிறது, மெல்லோசையுடைய இச்சொல். 'சிரித்துக் கொண்டே கழுத்தை அறுத்தல்' என்ற செய்கையை நினைவூட்டுகிறது, 'நஞ்சு' என்ற சொல். அம்மட்டோடு இல்லை; நஞ்சைத் தருபவர்கள் தம் மனம் கல்லாக இருந்தும் அதனை வெளிக் காட்டாமல் நஞ்சுணவைத் தந்தாலும், வாங்கி உண்ணுகிற நாகரிகமுடைய பெரியார்களின் மனநிலையையும் இச்சொல் குறிக்கிறது. தருபவர் எந்த மனநிலையில் தந்தாலும் உண்பவர், அதனை 'நஞ்சாயிற்றே; உண்டால் கொன்று விடுமே' என நினைப்பார்களாயின் பயன் இல்லையாய்விடும். உண்பதற்கு ஏற்ற இனிமையும், மென்மையும் உடைய பொருளாகவே உண்பவர்கள் அதனை நினைக்கிறார்கள் என்ற கருத்தையும் 'நஞ்சுண்டு' என்ற சொல்லில் உள்ள மெல்லோசை நினைவூட்டுகிறது.

அடுத்திருப்பது 'உண்டு' என்ற சொல். தின்னல், பருகல், நக்கல் முதலிய பல சொற்கள் இருப்பினும் 'உண்ணல்' என்ற சொல் பயன்படுத்தப் பெற்றுள்ளது நோக்கற்குரியது. பருகல் முதலிய சொற்கள் நீர் முதலியவற்றையே குறிக்கும். நஞ்சு பருகி என்றால், 'நீர்ப் பொருளாய் இருத்தலின் பருகிவிட்டார்; திடப் பொருளாயின் எவ்வாறோ?' என்பது போன்ற ஐயங்கள் தோன்றுமாதலின், அவற்றைப் போக்கி, அன்றாட உணவை எவ்வளவு விருப்புடன் உண்ணுவார்களோ அத்துணை விருப்புடன் நஞ்சு கலந்த பொருளை உண்டனர் என்ற பொருளும் தொனிக்கவே 'நஞ்சு உண்டு' என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

இதனை அடுத்து வருகிற சொல்தான் மிக இன்றியமையாதது. அச்சொல்லைத் திருவள்ளுவர் மட்டுமே கூறக்கூடிய தகுதி வாய்ந்தவர். அத்தகைய சிறப்புடைய சொல்தான் அடுத்து நிற்கும் 'அமைவர்' என்ற அழகிய சொல். அமைவர் என்ற இச்சொற்கு, அவ்வாறு நஞ்சு கொடுத்தாரோடு பின்னும் 'மேவுவர்' என்று பொருள்கூறிச் சென்றார், குறளினும் குறுகிய பொருள் எழுதவல்ல பரிமேலழகர். இனி இச் சொல்லின் ஆற்றலைச் சற்றுக் காண்போம். அமைதல், பொருந்தல், சேர்தல், ஒன்றல் என்பவை அநேகமாக இப்பொருள் தரும் சொற்களே. காலுக்கு ஏற்ற செருப்பைப் பெற்றான் ஒருவன் செருப்புச் சரியாக இருக்கிறது என்பானே தவிர, 'இச் செருப்பு

என் காலுக்கு அமைந்தது' என்று கூறமாட்டான். ஆனால் ஒரு மணமகனுக்கு ஏற்ற மணமகள் கிடைத்த பொழுது, 'மணமகனுக்கு அமைந்த மணமகள்' என்று கூறக் கேட்கிறோம். அமைதல் என்ற சொல்லை வெறும் பொருத்தம் என்ற பொருளில் வழங்காமல், எல்லா வகையானும் பொருந்திய வழியே இன்றும் பயன்படுத்துகிறோம். எனவே 'அமைவர்' என்று ஆசிரியர் கூறுகையில் உண்டவரின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டி விடுகிறார். உற்ற நண்பராக இருப்பவர் தருகின்ற நஞ்சைக் கண்ணோட்டம் காரணமாகவோ, கர்வம் காரணமாகவோ வாங்கி உண்டு விடுபவர்களும் உண்டு. ஆனால் முனைப்புக் காரணமாகச் செய்து விட்ட பிறகு அந்த மனநிலையில் அச்சமும் வெறுப்பும் குடிபுகுந்துவிடும். செயற்கரிய செயலைச் சந்தர்ப்பம் காரணமாகச் செய்தவருங் கூடப் பின்னர் இருந்து பச்சாத்தாபப்படுதலை அறிவோம். ஏன் செய்தோம் என்று கழிந்ததற்கு இரங்கும் மனப் பான்மை மனித மனத்தின்பாற்பட்டதே ஆகும். அவ்வாறு கழிவிரக்கம் கொண்டவர். அதன் பயனாக அவ்வாறு தம்மைச் செய்யத் தூண்டியவர்கள் மாட்டு வெறுப்படைதல் இயற்கையேயாகும். அந்த வெறுப்பைத் தூண்டிய அவர் அறியுமாறு வெளியிடுதலும் உண்டு; கொஞ்சம் பண்பட்டவர் ஆயின் வெளிக்காட்டாமல் மனம் புழுங்கி இருத்தலும் உண்டு. செயல் நிகழ்ந்துவிட்ட

பிறகு வரும் இந்த மனநிலைக்கு அவர்களைக் குறை கூறுதலும் தகாது.

நஞ்சை உண்டவர்கள், உண்டு தீர்த்த பிறகு என்ன மனநிலையில் இருக்கிறார்களோ அதை வைத்துத்தான் அவர்கட்குப் பெயர் தரவேண்டும் என்பது குறளாசிரியர் கொள்கை. சூழ்நிலை காரணமாக நஞ்சை உண்பவர்களும் உண்டு; நஞ்சைப் பிறர் தம் எதிரே உணவில் கலந்துங்கூட அறியாமை காரணமாக உண்பவர்களும் உண்டு. ஆனால் இவர்களை எல்லாம் நாகரிகர் என்று அழைத்தல் அடாது. எனவே அப்பட்டம் பெறுவதற்குரிய தேர்வை இறுதியில் வைக்கிறார் ஆசிரியர். நஞ்சை உண்ட பிறகு உண்டவர் மனத்தில் கைவைத்துப் பார்க்கிறார். அம்மனம் அமைதியுடன் இருக்கிறதா? சிறிது வேகமாகக்கூட அடிக்காமல் நெஞ்சு இருத்தல் வேண்டும். நஞ்சைத் தந்தவர் மேல் சிறிதும் காழ்ப்புக் கொள்ளாமல் பழைய நட்பைப் பாராட்டும் பண்பாடு அங்கு இருக்கிறதா? நஞ்சு தந்தவரை வாயால் ஒன்றும் இழித்துப் பேசவில்லை எனினும் மனத்தாலும் அவரை ஏசாமல் இருக்கிறாரா? அவருடன் முன்னர்க் கொண்ட பொருந்திய நட்பை இன்னும் கொண்டுள்ளாரா? அவ்வாறு இருப்பின் அதனை அமைந்ததாகக் கூறலாம். அப்பொழுது தான் 'அமைவர்' என்ற சொல் இந்த இடத்தில் பொருந்துவதாகும். பழைய சாக்ரட்டீசையும்,

திருநாவுக்கரசரையும் நினைந்து பார்க்க வேண்டிய இடம் இது. இவ்வாறு ஒருவர் தம் உற்ற நண்பர், மிகுந்த நஞ்சைத் தம் கண் எதிரே தமது உணவிற் கலந்து தரவும், வாங்கி விருப்பத்தோடு உண்டுவிட்டு, அவர்மேல் காழ்ப்போ வெறுப்போ பாராட்டாமல் இருப்பதுடன் பழைய நட்பையும் பாராட்டுவாரே ஆயின் அவரே விரும்பத்தக்க நாகரிகம் உடையவர் என்று திருக்குறள் கூறுகிறது.

இவ்வளவு கருத்துக்களையும் ஒன்றே முக்கால் அடியில், ஏழு சீரில், ஏழு சொற்களில் கூறிய கவிதையை, 'கடுகைத் துளைத்து,' இல்லை! தவறு, 'அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டிய கவிதை' என்று ஏன் கூறக் கூடாது?

குறளின் பொருள் ஆழங்காண முற்பட்ட நாம் ஓசை நயமும் காண்டல் வேண்டும். எல்லாம் அந்த ஏழு சீருக்குள்தான். 'உழக்கில் கிழக்கு மேற்கா?' என்பது பழமொழி. ஆனால் உழக்கில் அன்று, வீசம் படியில் கிழக்கு மேற்கு மட்டும் அல்ல, எட்டுத் திசைகளையும் காட்டவல்லது குறள். ஓசை நயம் என்பது பல வழிகளில் கவிஞனால் பயன் படுத்தப்படுவதாகும். இன்பம் ஊட்டுவது ஒன்றே குறிக்கோளாகக் கொண்டும் இனிய ஓசை பயன் படுத்தப்பெறலாம்.

"குழல் இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளாதவர்" (குறள்–66)

"மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று" (குறள்–1112)

என்ற குறள்களின் ஓசை நயம் வாய்விட்டு உரக்கப் படித்தால்தான் நன்கு விளங்கும்.

படிக்கும்பொழுது செவிக்கு இன்பம் ஊட்டுவது தவிர, இக்கவிதைகளில் கண்ட ஓசை நயம் செய்யும் தொழில் வேறு இல்லை. ஆனால் மற்றும் சில கவிதைகளில் ஓசை பொருளையே அறிவித்தலும் உண்டு. உலகத்தின் பற்றுக்கள் மனிதனை வலுவாகப் பற்றியுள்ளன. அவற்றிலிருந்து விடுதலை அடைய வேண்டுமாயின் ஒரே வழிதான் உண்டு. மனித மனமோ ஏதாவது ஒன்றைப் பற்றிக் கொண்டுதான் நிற்குமே தவிரச் சும்மா இருப்பதில்லை. எனவே உலகப்பற்றை மனம் விடவேண்டுமாயின் கடவுட் பற்றைப் பிடித்துக்கொள்ள வேண்டும்; இல்லையேல் இப்பற்றை விடஇயலாது. கடவுட்பற்றையும் அரை குறையாகப் பற்றிக்கொண்டால் பயன் இல்லை. விடாப்பிடியாக, அழுத்தமாகக் கடவுட்பற்றைப் பிடித்தவர்கள் உலகப்பற்றை விடமுடியும். இத்துணை தூரம் கூறியதையும் கவிஞன் ஏழு சீர்களில் கூறவேண்டும். ஆகவே ஓசையைத் துணைக்கு அழைக்கிறார்;

"பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு." (குறள்–350)

இக்கவிதையில் உள்ள வல்லோசைகளும் 'ற்று' என்ற எழுத்துக்களின் ஒலியும் எவ்வளவு வலுவாகப் பற்றவேண்டும் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன!

"கொக்கொக்க கூம்பும் பருவத்து ; மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து" (குறள்–490)

என்ற கவிதையில் கொக்கைப் பாராதவர்களும் அது குத்தும் வேகத்தை அறிய முடிகிறதன்றோ? ஒன்றும் அறியாமல் எல்லாம் அறிந்தவனாகத் தன்னை மதிக்கும் முட்டாளுக்கு உபதேசம் செய்யப் போனால், போனவன் முட்டாளாகி விடுவான். உபதேசம் செய்தபிறகும் அறியாமை உடையவன் பழைய அறியாமை உடையவனாகவே இருப்பான். இதனால் பயன் இருவருக்கும் ஒரு வகையான குழப்பந்தான். எஞ்சி நிற்கும் இக் குழப்பத்தை இதோ கவிதையின் திரண்ட ஓசை நமக்கு அறிவிக்கிறது;

"காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு." (குறள்–849)

பணம் முதலிய பொருள்களின் இழிவை விளக்க வருகிறார் கவிஞர். மிகவும் தாழ்ந்தவனைக் கூடப்

பெரிய மனிதனாக ஆக்கும் அற்பத்தன்மையுடையது பொருட்செல்வம். ஆகலின் அப்பொருளின் அற்பத் தன்மையை ஓசையில் காட்டுகிறார் ஆசிரியர்,

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்" (குறள்–751)

என்ற குறளால்.

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை
முன்னின்று கல்நின் றவர்" (குறள்–771)

என்பன போன்ற குறள்களில் வீரச்சுவை காண்டல் கூடும்.

திருக்குறளில் பொதுவாகவும், காமத்துப் பாலில் சிறப்பாகவும், புலவி நுணுக்கம் போன்ற அதிகாரங்களில் மிகச்சிறப்பாகவும் கற்பனையைக் காண்டல் கூடும். கவிதைகளைக் கற்பவன் அநுபவ அளவுக்கு ஏற்ப அக்கவிதைகளின் கற்பனைச் சுவை மிகுதிப்படுதலை அறியலாம். 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்ற குறளே இந்த அநுபவத்தைப் பற்றிக் கூறுகிறது. சென்ற ஆண்டில் கற்ற குறளை மீட்டும் இப்பொழுது கற்பினும் புதிய முறையில் நமது மனத்தின் வளர்ச்சியளவிற்குப் பொருள் காண்டல் ஐடும். இவை எல்லாம் குறளின் ஒப்பற்ற கவிதைப் பண்பின்பாற்படும். 'உடையார்' (395),

கரப்பவர்க்கு *(1070)*, எழுதுங்கால் *(1285)* என்பன போன்ற குறள்கள் சிறந்த கற்பனைக்கு உதாரணங்கள்.

ஒரு கவிஞனுடைய திறமையை உள்ளவாறு மதிப்பிட உதவுவது அவனுடைய உவமைத்திறன் என்று கூறினால் மிகையாகாது. நாம் அன்றாடம் கண்டும் காணாத பொருள்களினிடத்து உள்ள அரிய இயல்புகளைக் கவிஞன் கண்டு, சமயம் வரும் பொழுது அவற்றைத் தக்கவாறு பயன்படுத்துகிறான். இவ்வாறு பயன்படுத்தும் உவமை அவனுடைய கல்வி, இயற்கை அறிவு, அநுபவம், பரந்த மனப்பான்மை, நுனித்துக் காணும் காட்சி முதலிய வற்றிற்கு ஏற்பத் தோன்றும். 'மனிதன் தன் நிலையினின்று தாழாது இருக்கும் வரையில் மனிதனுக் குரிய மதிப்பைப் பெறுகிறான். அந்நிலையிலிருந்து ஒரு சிறிது கீழிறங்கினாலும் அம்மதிப்பை இழந்துவிடுகிறான்' என்ற கருத்தை விளக்கவருகிறார் ஆசிரியர். இப்படியே கூறிவிட்டால் ஓர் ஐயம் வரக்கூடும். 'அவன் இழைத்த தவற்றின் அளவாகத்தானே தாழ்வும் வரும்? சிறு தவறு இழைத்தால் பெருந்தாழ்வு வந்துவிடுமா?' என்ற ஐயமே அது. இத்தகைய ஐயத்திற்கு விடைகூற வேண்டும் கவிஞன். சிறு தவறாயினும் பெருந்தாழ்வு வரும் என்று நேரடியாகக் கூறிவிடலாம். ஆனால் அவ்வாறு கூறிவிட்டால் அது கவிதையாகாது. மேலும் பெருந்தாழ்வு என்பது ஒப்பு நோக்கல் சொல்தானே? அது எவ்வளவு என்பதைக்

காட்டாதன்றோ? ஆகவே வீழ்ச்சியின் அளவைக் குறிக்க ஒரு சிறந்த வழியை உவமை மூலம் கையாள்கிறார் ஆசிரியர். தலையில் இருக்கின்றவரை வாசனை எண்ணெய் பூசப்பெற்று ஓயாது அலங்கரிக்கப்படும் மயிர் கீழே வீழ்ந்தவுடன் எவ்வளவு வெறுக்கப்படுகிறது! தலை உயரத்திலிருந்து தோள்பட்டை அளவு வீழ்ந்தாலும் தரையளவு கீழே வீழ்ந்துவிட்டாலும் அதனிடம் காட்டப்பெறுகிற வெறுப்பு ஒன்றேதான். அதேபோல, மனிதன் தன் நிலையைவிட்டுத் தவறான செயலைச் செய்தால், அத்தவறு சிறியதாயினும் பெரியதாயினும் ஒன்று தான். அவன் பிறரால் எள்ளி நகையாடத்தக்க நிலையை அடைந்துவிடுகிறான் என்ற உண்மை்யை ஒரே உவமையின் மூலம் எவ்வளவு அழகாகக் குறள் கூறுகிறது,

"தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர்,
நிலையின் இழிந்தக் கடை" (குறள் 964)

என்ற கவிதையின் மூலம்! உவமை அழகுக்கெல்லாம் ஒப்பற்ற எடுத்துக்காட்டாக அமையவில்லையா இந்த அரிய குறள்?

இவ்வாறு பொருள் ஆழம் நிறைந்த உவமை தரும் கவிதைகளை மிக்குடையது திருக்குறள். கீழ்வரும் குறள்களிலும் ஏறத்தாழ ஒரே பொருள் பேசப் படுகிறது. என்றாலும் உவமைகளை மாற்றுவதன்

மூலம் ஒன்றுக் கொன்று கடலனைய வேற்றுமையைப் பெற வைத்துவிடுகிறார் ஆசிரியர் ;

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு." (குறள்–215)

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்." (குறள்–216)

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்." (குறள்–217)

இவண் கூறிய மூவர் செல்வமும் பிறர்க்குப்பயன்படும் என்றுதான் கூறுகிறார். பேர் அறிவாளன் என்றால் உலகியல் அறிவு படைத்தவன் என்பது பொருள்; நயன் உடையான் என்றால் ஒப்புரவு செய்பவன் என்றும், பெருந்தகையான் என்றால் பெருவள்ளல் என்றும் பொருள் அறிய வேண்டும். உலகியல் அறிவுடையான் செல்வம் ஊருணி நீர் போன்றது. ஊருணி நீர் யாவர்க்கும் பொதுவாயினும் கட்டுக் காவல் மிக்கது என்பதும், எல்லாவற்றிற்கும் பயன்படாது என்பதும், விலங்கினங்கள் அந்நீரை உண்ண முடியாது என்பதும் அறியப்படல் வேண்டும். எனவே உலகியல் அறிவு மிக்கவனது செல்வம் எல்லாருக்கும் பெரிதும் பயன்படாதபடி ஒரு சிலருக்கே ஓரளவு பயன்படும் என்பது பெற்றாம்.

பயன் மரம் என்ற உவமையால் பிறர் யாரும் முயன்று நீர் ஊற்றாவிடினும், தன் மாட்டு ஏறிப் பறித்துக் கொள்ளும் முயற்சியைச் செய்பவர் யாவர்க்கும் பயன் தரும் என்பது பெறலாகும். அதே போல ஒப்புரவு செய்வான் தன்னை விரும்பி வந்தடைந்தவர்க்குத் தப்பாது உதவுவான் என்பதைப் பெற வைத்தார். பயன் மரம் என்றமையால் அதில் உள்ள பழம் ஒன்றே பயன்படும் என்பதும், அது பழுக்கும் பருவம் ஒன்றில் மட்டுமே பிறர்க்கும் அதனைத் தரும் என்பதும் பெற்றாம். மூன்றாவதாக உள்ள மருந்து மரம் மிகச் சிறந்த உவமையாய்ப் பாரிபோன்ற பெரு வள்ளல்களின் வள்ளன்மைக்கு எடுத்துக்காட்டாய் நிற்பது. மருந்து மரம் என்றமையின் வேர் முதற்கொண்டு. அடிமரம், பட்டை, பழம், விதை ஆகிய அனைத்தும் பிறர்க்குப் பயன்பட்டு நிற்கும் இயல்பை உவமையால் அறிவித்தார்.

> "முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நல்நாடு
> முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்
> யாமும் பாரியும் உளமே" (புறம்: 110)

என்று புலவரால் பாராட்டத்தக்க முறையில் அனைத்துப் பொருளையும் பரிசிலர்க்கு வழங்கி, அதனுடன் அமையாது தன்னையே வேண்டும் என்று கேட்டவர்க்கும் மாறாமல் தன்னைப் பரித்தியாகம்

செய்த பாரிவள்ளலைப் போன்றவர்களைக் குறிக்கக் கவிதை 'பெருந்தகையான்' என்ற சொல்லைப் பயன்படுத்திற்று. இம்மூன்று ஒப்பற்ற கவிதைகளிலும் ஒப்புரவு செய்வாரது ஏற்றம் கூறப்படினும், அற்புதமான உவமைகளைக் கையாள்வதன் மூலம் ஆசிரியர் உய்த்துணர வேண்டிய உண்மைப் பொருள் எவ்வளவு கூறிவிட்டார் என்பது அறிந்து மகிழ்தற்குரியது.

இதுகாறும் கூறியவற்றால் பாடல் வடிவில் இருப்பன எல்லாம் கவிதையாகா என்பதும், கவிதைக்குரிய இன்றியமையா இலக்கணம் இவை என்பதும், இவ்விலக்கணங்கள் மிகுதியும் அமையப் பெற்ற கவிதைகளையுடைய நூல்கள் மிகச் சிலவே என்பதும், அவற்றுள் திருக்குறள் தலையாய கவிதைகளை மிக்குடைய நூல் என்பதும் ஒருவாறு விளங்குவதுடன், சிறந்த கவிதைக்குரிய சொல்லாட்சி, ஓசை நயம், பொருள் ஆழம், கற்பனை, உவமை நயம் என்பவை மிகுதியும் காணப்பெறுவது குறளில் என்பதும் நன்கு விளங்கும்.

# 9. பக்தி இயக்கமும் இலக்கியமும்

பக்தி என்ற வடமொழிச் சொல் 'பஜ்' என்ற தாதுவின் அடிப்படையாகப் பிறந்தது. 'பஜ்' என்றால் பங்கிடுதல் என்று பொருள்படும். ஆனால் இந்தச் சொல் வேதங்களிலோ உபநிடதங்களிலோ காணப்படாதது ஆகும். கீதையின் பின்னர்த் தோன்றிய நாரதபக்தி சூத்திரம் முதலிய நூல்களில் இந்தச் சொல் இடம் பெறுகிறது. இதிலிருந்து ஒன்றை அறிந்து கொள்ள முடிகிறது.

வேத காலத்தில், உபநிடத காலத்தில் மக்கள் வாழ்க்கையில் 'பக்தி' இடம் பெறவில்லை என்பது உறுதி. இதற்குத் தக்க காரணமும் உண்டு. வேத காலத்தில் வேள்வி செய்தல் மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது. இருபத்தொரு வகையான முக்கிய வேள்விகளில், ஏனைய பல வேள்விகளில். கிரியைகள் என்று சொல்லப்பெறும் சடங்குகள் இடம் பெற்றன. ஒவ்வொரு வேள்வியிலும் அதனைச் செய்வதனால் பெறும் பயன் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

இதனை அடுத்து வந்த உபநிடத காலத்தில் அறிவின் துணை கொண்டு உலகம், உயிர், இறை என்பன பற்றிய ஆராய்ச்சி விரிவாகச் சொல்லப்

பெற்றுள்ளது. எனவே இந்த இரண்டு வழிகளிலும் பக்திக்கு இடமில்லை என்பது தெளிவு. வேதகால நாகரிகத்தைப் பொறுத்தமட்டில் பக்தி என்பது மிகப் பிற்பட்டுத் தோன்றினாலும், தமிழகத்தைப் பொறுத்த மட்டில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பக்தியை அறிந்து போற்றி மேற்கொண்டனர் என்று அறிய முடிகிறது. பழந்தமிழருடைய வாழ்க்கையைப் பிரதிபலிப்பவை சங்க இலக்கியங் களும் தொல்காப்பியம் என்ற இலக்கணமும் ஆகும்.

இவ்விலக்கியங்களுக்கு முற்பட்ட தொல்காப்பியம் பரம்பொருளைக் குறிக்கக் கடவுள் என்ற சொல்லையும் அதன் இலக்கணத்தைக் குறிக்க கந்தழி என்ற சொல்லையும் ஏனைய தெய்வங்களைக் குறிக்கத் தெய்வம் என்ற சொல்லையும் பொதுப் படையாக வழங்கியமையை அறிய முடிகிறது.

அவ்வளவு பழைய காலத்தில் கடவுள், தெய்வம் என்பவற்றிடையே வேறுபாடு தெரிந்து வழிபட்ட இத்தமிழர், உபநிடத அடிப்படையில் அறிவு வழியை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இதன் எதிராகக் கடவுளோடு தொடர்பு கொள்ள உணர்வு வழியையே மேற்கொண்டனர். அப்படியானால் இவர்களுடைய இறை அன்பைக் குறிக்க எந்தச் சொல்லை பக்தி என்ற சொல்லுக்குப் பதிலாகப் பயன்படுத்தினார்கள் என்பதனை அறிவது மிகவும் பொருத்தமானதாகும்.

எட்டுத் தொகை நூல்களுள் ஏறத்தாழ நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் **'கடவுள் பேணி'** என்ற தொடரும், **'கடவுள் வழுத்தி'** என்ற தொடரும், **'கடவுட் பழிச்சி'** என்ற தொடரும், **'கடவுட் கடம் பூண்டு'** என்ற தொடரும், **'கடவுள் ஓம்பி'** என்ற தொடரும் கடவுளாலம் பயன்படுவதை அறிகிறோம். என்றாலும் 'பேணி' என்ற சொல்லும், 'போற்றி' என்ற சொல்லும் மிகமிக அதிகமாக வழங்கப் பட்டுள்ளன. ஆழ்ந்து நோக்கினால் இறையன்பை, தெய்வபக்தியைப் பழந்தமிழர் **'தெய்வம் பேணி'**, **'தெய்வம் போற்றி'** என்ற தொடர்களால் குறித்தனர் என்பதை அறிய முடிகிறது.

கிரியாமார்க்கம் என்று சொல்லப்படுகின்ற வேள்வி வழியை மேற்கொண்ட வைதிகர்கள், ஒவ்வொரு வேள்வியின் இறுதியிலும் தனக்கு 'இது வேண்டும்' 'அது வேண்டும்' என்று வரிசையாகப் பட்டியலிட்டுக் கேட்டதை அறிய முடிகிறது.

பின்னர் தோன்றிய உபநிடதங்களில் தாமும் வாழவேண்டும், உலகமும் வாழவேண்டும், அனைவரும் வாழவேண்டும் என்று கேட்கின்ற நிலை வைதிகத்தின் வளர்ச்சியடைந்த நிலையாகும். பழந்தமிழர் மேற்கொண்ட பக்திமார்க்கத்தில் ஒருவேளை வைதிகர்களைப் போல 'இது வேண்டும்' 'அது வேண்டும்' என்று கேட்டிருப்பார்களோ என்று நினைப்பதில் தவறில்லை.

*நூற்றுக்கணக்கான இடங்களில் கடவுட் பேணுதலையும், கடவுட் போற்றுதலையும் குறிப்பிடு கின்ற சங்கப்பாடல்கள் அனைத்திலும் ஒன்றிலும் தமக்கு 'இது வேண்டும்' என்று கேட்ட குறிப்பே இல்லை.*

*இதன் எதிராகப் பரிபாடல் என்ற நூலில் தமிழர்களுடைய இறையன்பு (பக்தி) எத்தகையது என்பதையும் அதன் முதிர்ச்சியில் இறைவனிடத்து இவர்கள் என்ன வேண்டினார்கள் என்பதையும் அறிய முடிகிறது.*

காமரு சுற்றமொடு ஒருங்குநின் அடியுறை
யாம் இயைந்து ஒன்றுபு வைகலும் பொலிக! என
ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்—
வாய்மொழிப் புலவ! நின்தாள்—நிழல் தொழதே.
(பரிபாடல்: 1)

................................ மரபினோய் நின் அடி
தலை உற வணங்கினேம், பல் மாண் யாமும்;
கடும்பொடும் கடும்பொடும் பரவுவது—
'கொடும்பாடு அறியற்க, எம் அறிவு! எனவே
(பரிபாடல்: 2)

வாழ்த்தினேம் பரவுதும், தாழ்த்துத் தலை, நினையாம்
நயத்தலின் சிறந்த எம் அடியுறை,
பயத்தலின் சிறக்க, நாள்தொறும் பொலிந்தே
(பரிபாடல்: 9)

அன்னை என நினைஇ, நின்னடி தொழுதெனம்
பல்மாண் அடுக்க இறைஞ்சினெம் வாழ்த்தினெம் –
முன்னும் முன்னும் யாம் செய் தவப் பயத்தால்;
இன்னும் இன்னும் எம் காமம் இதுவே !
(பரிபாடல்: 13)

செருவேற் தானைச் செல்வ! நின் அடி உறை,
உரிதினின் உறை பதிச் சேர்ந்தாங்கு,
பிரியாது இருக்க—என் சுற்றமோடு உடனே!
(பரிபாடல்: 18)

*மேலே காட்டியுள்ள மேற்கோள்கள் 'கேவலம்' அந்த உலகத்தில் உள்ள பொருள்கள், அநுபவங்கள் நமக்கு வேண்டும் என்று பழந்தமிழர் கேட்கவில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.*

*இவற்றுக்கு முடிமணியாகப் பரிபாடலின் 5 ஆம் பாடல்*

.................................. யாஅம் இரப்பவை
பொருளும், பொன்னும் போகமும் அல்ல; நின்பால்
அருளும், அன்பும், அறனும், மூன்றும் –
உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே!
(பரிபாடல்: 5)

*பழந்தமிழர் கண்ட பக்தியில் இறைவனிடம் பொன், பொருள், முதலாயவற்றைக் கேட்கவில்லை என்பதும் தெளிவாகிறது.*

அப்படியானால் இந்த பக்தர்கள் எதனையும் வேண்டவில்லையா என்ற கேள்வி எழும். உலகத்தில் வேறு எந்த சமயத்தைச் சேர்ந்த எந்தப் பக்தர்களும் இத்தமிழர்களைப் போலப் பொன், பொருள் வேண்டா என்றும், அன்பு, அறன், அருள் என்ற மூன்றுமே வேண்டும் என்றும் கேட்டதாகத் தெரியவில்லை.

அன்பு, அறன், அருள் என்ற மூன்றைக் கேட்பதன் நோக்கம் என்ன? என்பதனைச் சற்று ஆராய்ந்தால் தமிழர்களின் பக்தியின் அடிப்படையை நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

ஒரு மனிதன் நிறைந்த பொருளைச் சேகரித்துத் தான்மட்டும் இன்பமாக வாழ வேண்டும் என்று நினைத்தால் இந்த மூன்றும் அவனுடைய விருப்பத்திற்கு நேர்மாறான பயனைத்தரும். காரணம் அன்பும் அருளும் உடையவன் தனக்கென வாழ மாட்டான்; பிறர்க்கு உரியவனாகவே மாறிவிடுவான். அதிலும் இந்த அன்பும் அருளும் அறத்தின் அடிப்படையில் பிறக்குமேயானால் அவன் இவ்வுலகத்தில் வாழ்ந்தாலும் முற்றிலும் தன்னலம் அற்றவனாய், பிறர் பொருட்டாகவே வாழ்பவனாய், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுபவனாய் மாறிவிடுவான்.

எனவே தமிழர் கண்ட பக்தி இயக்கம் மிகச் சிறந்த முறையில் வளர்ந்து சங்க காலத்திலேயே ஒரு உச்ச கட்டத்தை அடைந்துவிட்டது என்பதனை அறிய முடிகிறது.

தமிழர் கண்ட இந்தப் பக்தியின் அடிப்படையை நன்கு அறிந்து கொண்ட காரணத்தால் ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய நாயன்மார்கள், தம்முடைய பக்தியின் முதிர்ச்சியில் பிற உயிர்கட்கு அன்பு செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தனர். இறந்த வணிகனை எழுப்பி இளம் பெண்ணின் துயர் தீர்த்தல், பஞ்சத்தில் வாடிய மக்களுக்கு உணவிடுதல், நோயுற்ற மக்களின் நோய் தீர்த்தல் என்ற மூவர் முதலிகளின் செயல்கள் தமிழர் கண்ட பக்தியின் வெளிப்பாடாகும்.

எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய திருமூலர் இன்னும் விளக்கமாக,

நடமாடக் கோயில் நம்பர்கொன்று ஈயின்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே
(திருமந்: 1857)

என்றும்,

அன்பு சிவமிரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமா தாரும் அறிகிலார் (திருமந்: 269)

என்றும் கூறியுள்ளார்.

*பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய 'தொண்டர்சீர் பரவ' வல்ல சேக்கிழார் பெருமான்,*

**'கைத் திருத்தொண்டு நெூய் கடப்பாட்டினார்'**
(பெ.பு: 140)

**'ஓடும் செம்பொனும் ஓக்கவே நோக்குவார்'**
(பெ.பு: 143)

*என்றும் பக்தர்களைக் குறிப்பிடுகின்றார்.*

*மேலே காட்டியவற்றை ஒரு முறை பார்த்தாலும் அதனுள் மறைந்து கிடக்கின்ற ஒரு தத்துவத்தை நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.*

*பிற உயிர்களுக்குத் தொண்டு செய்யத் தொடங்குகின்ற ஒருவன் தன்னலம் என்பதை அறவே துறந்தவனாக இருக்க வேண்டும். இல்லையானால் 'பொன் ஆசை' முதலியன மனத்துட் புகுந்து விட்டால் பிற உயிர்கள் மாட்டு அன்பும் அருளும் காட்டல் இயலாத காரியம். இது கருதியே சேக்கிழார்,*

**'ஓடும் செம்பொனும் ஓக்கவே நோக்குவார்'** (பெ.பு: 143)

**'ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே'** (பெ.பு: 144)

*என்றும் கூறியுள்ளார்.*

எனவே பக்தர்களுக்கு மிக முக்கியமான இலக்கணம் 'நான்', 'எனது' என்ற அகங்கார மமகாரங்களில் இருந்து விடுபடுவதாகும்.

இந்த விடுதலை கிடைத்தால் பொன், பொருள், போகம் என்பவற்றில் ஈடுபாடு இல்லாமல் போகும். அந்த நிலையில்தான் இந்தப் பக்தர்கள் பிற உயிர்களுக்குத் தொண்டாற்ற முற்படுகிறார்கள்.

இவர்கள் செய்கின்ற தொண்டுக்கும் நம் போன்றவர்கள் செய்கின்ற தொண்டுக்கும் கடல் போன்ற வேற்றுமை உண்டு. 'வந்தவர்க்குச் சோறிடுதல்' என்ற ஒன்றை எடுத்துக் கொண்டால் கூட இதனை நன்கு அறிய முடியும்.

நம்மைப் பொறுத்தவரை இரவலர், (பிச்சைக் காரர்) நொதுமலர், (முன்பின் தெரியாதவர்கள்) உறவினர், விருந்தினர் என்று தரம் பிரித்துக் காண்கிறோம். அதற்கேற்றபடி நம் உபசரிப்பும் மாறுபடுகின்றது.

இரவலர் முதல் விருந்தினர்வரை அனைவருக்கும் சோறுதான் போடுகிறோம். என்றாலும் இந்த நால் வகைப் பாகுபாட்டை நாம் மறப்பதில்லை, காரணம் நம்முடைய பக்தி பெயரளவில்தான் இருக்கிறது. எனவே 'நான்', 'எனது' என்பவை நம்மை விட்டுப் போவதில்லை.

இவை இரண்டும் இருக்கின்ற வரை இரவலர், விருந்தினர் வேறுபாடு இருக்கத்தான் செய்யும். ஆனால் இளையான் குடிமாறர் போன்ற பக்தர்கள் அகங்கார மமகாரங்களில் இருந்து நீங்கியவர் ஆதலால் அவர்களை இரவலராகவோ, நொதுமலர் ஆகவோ, உறவினராகவோ, விருந்தினராகவோ கருதவில்லை. பின்னர் எப்படிக் கருதினார்கள்? இந்த ஆழமான வினாவிற்குச் சேக்கிழார் அற்புதமாக விடை இறுக்கிறார்.

> **தெருவில் நேர வந்தவர் யாவ ராயினும்**
> **ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர்** (பெபு: 442)

என்று முடிவு செய்துவிட்டார். அடியார்கள் என்று முடிவு செய்துவிட்டால் அங்கு வேறுபாடு தோன்றக் காரணம் இல்லை. யாராக இருந்தாலும் அவர்களை ஒரே மாதிரியாக நினைந்து எவ்வித வேறுபாடும் பாராட்டாமல் உபசரித்தார் என்பதை அழுத்தமாகக் கூறுவதற்காகவே, **'நேரே வந்தவர் யாவர் ஆயினும்'** என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகின்றார்.

இதுவரை கூறியவற்றைப் பொதுப்படையாக நோக்கினால் உலகத்தில் வேறு எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்கள், பக்தர்கள் என்பவர்களைக் காட்டிலும் இந்தத் தமிழர்கள் கண்ட பக்தர்கள் முற்றிலும் மாறுபட்டவர்கள் என்பதை அறியலாம்.

ஆழ்வார்கள், நாயன்மார்கள், திருமூலர் போன்ற சித்தர்கள் கண்ட பக்தி இயக்கம் ஒரு தனித்தன்மை வாய்ந்தது என்பதை அறிய முடிகிறது.

பின்னை வந்த வைணவர்கள் பக்தி, பிரபத்தி, சரணாகதி என்று வேறுபிரித்துப் பல பெயர்களைச் சூட்டினாலும் அடிப்படை இதுவே ஆகும்.

இலக்கியங்கள் மெத்த வளருகிற மேல்நாட்டில் அந்நாட்டுத் திறனாய்வாளர் அவ்விலக்கியங்களை இருவகையாகப் பிரிப்பர்: இன்பம் தரும் இலக்கியம் என்றும், பயன் தரும் இலக்கியம் என்றும் இரு வகைப்படுத்துவர். ஆனால், நம்முடைய நாட்டைப் பொறுத்தமட்டில் இன்பம் தரும் ஒரே குறிக்கோளுக்காக இலக்கியம் ஆக்கப்படுவதில்லை. வாழ்க்கைக்குப் பயன்படுவதே இலக்கியத்தின் முக்கியக் குறிக்கோள் ஆகும். நீதி நூல்களும் வாழ்க்கைக்குப் பயன்படு கின்றன என்றாலும் நீதி நூல்களிலிருந்து இலக்கியம் மாறுபடுகின்ற இடம் ஒன்று உண்டு. நீதிநூல் திருத்துகின்ற ஆசானைப்போல் நேரிடையாக அறிவுரை வழங்கும். அதனைக் கேட்பவர் இன்பம் பெறும் நோக்கம் கொண்டவராக இருப்பின் நீதி நூல் அவரிடம் செல்லாது. இலக்கியமோவெனில் வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குவதெனினும், அது ஆசான் வேலையைச் செய்கின்றது என்ற கண்டுகொள்ள முடியாமலேயே அதனைச் செய்துவிடுகிறது. இலக்கிய இன்பம், சர்க்கரை

தடவிய மாத்திரைபோல் கற்போர் உட்புகுந்து நற்பயனை விளைவிக்கின்றது.

உணர்ச்சியின் அடிப்படையில் தோன்றுவதனால் இலக்கியம் அதனைக் கற்போர் உள்ளத்திலும் உணர்ச்சிப் பெருக்கை உண்டாக்குகிறது. எனவே, எந்த உணர்ச்சியின் அடிப்படையில் இலக்கியம் தோன்றிற்றோ அந்த உணர்ச்சியைக் கற்போருக்கும் வழங்கும் என்பதில் ஐயமில்லை. மனித மனத்தில் தோன்றும் பல்வேறு உணர்ச்கிளை (வீரம், காதல், அன்பு, சினம்) வெளியிடும் இலக்கியங்கள் உலக மொழிகளில் நிரம்ப உண்டு. ஒவ்வோர் இலக்கியமும் ஒவ்வோர் உணர்ச்சியைத் தலையாய்க் கொண்டு இருப்பினும் ஏனைய உணர்ச்சிகளும் அவ் இலக்கியத்தில் சிறுசிறு அளவு பங்குபெறும். பக்தி உணர்ச்சியைப் பெரிதும் வெளியிடுகின்ற இலக்கியங்கள் உலக மொழிகளில் அதிகம் காண்டல் இயலாது. நன்கு வளர்ச்சி அடைந்துள்ள உலக மொழிகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு பக்தி இலக்கியத்தை நிரம்பப் பெற்றுள்ள மொழிகள் என்று கணக்கிட்டுப்பார்த்தால், முதலாவது ‘தமிழ்’ மொழியும், இரண்டாவது ‘ஹிப்ரூ’ மொழியும், மூன்றாவது ‘வட’ மொழியுமாக நிற்கக் காண்போம். எனவே இந்த ஒரு துறையில் உலக மொழிகள் அனைத்தையும் காட்டிலும், முதல் இடத்தைப் பெறுகின்ற பெருமை நம் தமிழ் மொழிக்கு உண்டு. சுருங்கக் கூறினால், சங்க காலத்தில் தொடங்கி, நேற்று வாழ்ந்த கவிச்சக்கரவர்த்தி பாரதி

வரையில் பல்வேறு சுவைப்பட்ட இலக்கியங்களை வழங்கினாலும் அவற்றுள் பக்திச் சுவையும் மிளிரக் காணலாம். இவற்றையெல்லாம்விட பக்திச் சுவை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நிற்கும் இலக்கியங்களும் தமிழ் மொழியில் உண்டு. சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள் பன்னிருவர், பாடிய பாடல்களுடன் பெரியபுராணம் போன்றவை தனிப்பட்ட பக்தி இலக்கியங்களாக விளங்கக் காண்கிறோம். இங்ஙனம் பக்திச் சுவை ஒன்றுக்கு முழுவதுமாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நூல்கள் வேறு மொழிகளில் காண்டல் அரிது.

'பக்தி' என்று கூறினவுடன் குருட்டு நம்பிக்கை, அச்சம் என்பவற்றின் அடிப்படையில் தோன்றிய பக்தியை மனத்தில் நினைந்து யாரும் இடர்ப்பட வேண்டா. முழு முதல் பொருளிடத்தில் பக்தி செலுத்தி, "எனக்கு இன்னின்ன இலாபங்கள் வேண்டும்; அல்லது என்னுடைய குறையைப் போக்க வேண்டுமென்று" கேட்கின்ற சராசரி மனப்பான்மை என்றுமே இந்த நாட்டில் இல்லை. மிகப் பழையது ஆகிய 'பரிபாட'லில் கூட நம் முன்னோர்களின் பக்தி எந்த அளவுக்கு உயர்ந்து சென்றிருக்கின்றது என்பதைக் காண முடிகின்றது. உண்மையான பக்தி என்பது, பக்தி செய்யப்படும் பொருளின் ஒப்புயர் வற்ற தன்மையை அறிந்து, அதனிடம் பக்தி செய்கின்ற தன்னுடைய மிக்க சிறுமையையும் அறிந்து கொண்டு, பக்தி செய்கின்ற தனக்குப் பக்தி செய்வதைக் காட்டிலும் சிறந்தது ஒன்று இருத்தல்

இயலாது என்பதையும் உணர்ந்து, தன்னை முழுவதுமாக அப்பரம்பொருளிடத்தில் ஒப்படைப் பதேயாகும். தன்னால் பக்தி பண்ணப்படும் பொருள் மிகமிக உயர்ந்தது என்பதை உள்ளவாறு ஒருவன் அறிவானாயின் அங்கே சென்று அற்பத்தனமான பொன்னையோ, பொருளையோ, அழிகின்ற இன்பங்களையோ விரும்பி நிற்கமாட்டான் அன்றோ? அங்ஙனம் இவற்றை விரும்புகிறான் ஒருவன் எனில், ஒன்று அவனுடைய பக்தி பொய்யானதாக இருக்கும்; அன்றேல் பக்தி பண்ணப்படும் பரம்பொருளின் இயல்பை அறியாதவனாக இருத்தல் வேண்டும். உண்மையான பக்தியையும், பரம் பொருளின் இயல்பையும் அறிந்த பழந்தமிழர்கள் உண்மையான பக்தி செய்பவர்களாய் இருந்தனர். மற்றும் ஒரு பழந்தமிழன் முன்னர்க் கூறியபடி பரம்பொருளின் இயல்பையும் தனது சிறுமையையும் மிக அழகாக அறிந்து பேசுகிறான்:

"பெரியோர் ஏத்தும் பெரும்பேர் இயவுள்

..........................................................................

யான் அறியளவையின் ஏத்தி ஆனது
நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின்,
நின் அடி உள்ளி வந்தனென் நின்னோடு,
புரையினர் இல்லாப் புலமையோய்:

(திருமுருகாற்றுப்படை)

'நின்னடி உள்ளி வந்தனென்; 'நின் அளந்து அறிதல் மண் உயிர்க்கு அருமை' என்ற இரண்டு அடிகளாலும் பரம்பொருளின் பெருமையும்,

அதனிடம் செல்வோன் சிறுமையும் மிக அழகாக விளக்கப்பட்டுவிட்டன. பக்தி செய்வதால் வேறு பயன் எதனையும் இத் தமிழர் விரும்பவில்லையா? இல்லை என்றே தெரிகின்றது. இதற்கு ஒரு காரணமும் உண்டு. பயன் கருதிய பக்தியில் ஓர் இடர்ப்பாடும் உண்டு. எதிர் பார்த்த பயன் கிடைக்காதபொழுதும், அப்பயன் எதிர் பார்த்ததை விடச் சிறியதாய் இருந்தபொழுதும் அடிப்படையான பக்தி ஆட்டங்கண்டு விடும். இன்றும் பயன் கருதிப் பக்தி செய்பவர்கள் தாம் எதிர்பார்த்த பயன் கிடைக்காத பொழுது தெய்வங்களின் மேல் மண்ணை வாரி இறைப்பதும், தெய்வத்திற்குக் கண்ணில்லை என்று பேசுவதும் கண்கூடு. இத்தகையவர்களிடம் உண்மையில் பக்தியே இல்லை என்றும் ஒரோ வழி இருப்பினும் அது தவறான வழியில் செலுத்தப்படுகிறது என்றும் கூற வேண்டும்.

அவ்வாறாயின் பக்தியின் பயன்தான் யாது? ஒரு வேளை வீடுபெறுவது தான் அதன் பயனா? அதுவும் இல்லை என்று பரிபாடல் கூறினதைக் கண்டோம். பக்திகள் பற்றிக் கூறுவதில் தன்னிகர் இல்லாத வராகிய சேக்கிழாரும் "வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'' என்று அடியார்களைப்பற்றி ஆணித் தரமாகக் கூறிவிட்டார். அப்படியானால் பக்தியின் பயன் என்ன? அப்பயனைப் புறத்தே தேட வேண்டாம் என்கிறார் சேக்கிழார். அவ்வாறாயின் அகத்தே தேடலாமா? ஆம், "கூடும் அன்பினில் கும்பிடுதலே'' புக்தியின் பயன் என்று பேசப்

பெறுகிறது. அது அதுவாதல் என்று இலக்கணத்திலும் தர்க்கத்திலும் கூறுகிறார்களே அதுபோலத்தான் இதுவும், 'பக்தியின் பயன் பக்தி பண்ணுவதேயாகும்' அல்லது 'கும்பிடுவதன் பயன் கும்பிடுவதேயாகும்'. அனுபவத்தாலன்றி வேறு வகையில் விளங்கிக் கொள்ள முடியாத இதனை இந்தளவில் நிறுத்திப் பக்தி இலக்கியம் பற்றிச் சற்றுக் காண்போம்.

சங்கப் பாடல்களில் ஆதிரை முதல்வன், நீலமணி மிடற்று ஒருவன், கறைமிடற்று அண்ணல் முதலாக 30 பேர்கள் சிவபெருமானுக்கும்; ஆதிமுதல்வன், அஞ்சரவன் தோழன், சூரிய அரித்துவேலன், புள் அணி நீள்கொடிச் செல்வன் முதலாக 35 பேர்கள் திருமாலுக்கும்; ஆலமர் செல்வன் அணிசால் மகன், கண்ட செல்வன், குமாரவேல், சேவலங் கொடியோன் முதலாக முருகக் கடவுளுக்கு 35 பேர்களுக்கு மேற்பட்டும் வருகின்றன. எனவே கடந்து நிற்கின்ற கடவுட் பொருளைப் பல்வேறு பெயரிட்டு அழைத்து அன்பு செலுத்தும் அடிப்படை பழந்தமிழ் இலக்கியத்திலும் நிரம்பக் காணப்படுகின்றது.

அடுத்துச் சிலப்பதிகாரத்திலோவெனில், **"திரு அமர் மார்பன் கிடந்த வண்ணமும்,** *(சிலம்பு: 11, 40)* **செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"** *(சிலம்பு: 11, 51)* மட்டுமல்லாமல் **"பிறவா யாக்கைப் பெரியோன்"** *(சிலம்பு: 5, 169)* முதலாகப் பல்வேறு கடவுளர்களைப் பற்றிப் பேசுவதும், **"திருமால் சீர்கேளாத செவி என்ன செவியே"** *(சிலம்பு: 17, 35)* என்று பேசுவதும், சமய உணர்வையும்

பக்திப் பெருக்கையும் காட்டுவனவாக அமைந்து உள்ளன. இதனை அடுத்துத் தோன்றிய மணிமேகலை என்ற நூலில் "மாரனை வெல்லும் வீர நின்னடி! தீ நெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி" (மணி: 11, 61) என்றெல்லாம் தொடங்கி, "நின்னடி வணங்குதல் அல்லது வாழ்த்தல் என் நாவிற்கு அடங்காது என்ற முறையில் பேசிச் செல்லக் காண்கிறோம். இதில் ஒரு தனிச் சிறப்பு என்னவெனில், உணர்ச்சியைக் குறைத்து அறிவைப் பயன்படுத்தி உண்மை காண வேண்டுமென்று கூறிய புத்ததேவனின் சமயத்தைப் பின்பற்றுகிறவர்கள் கூட அவன்மாட்டு பக்தி செய்யவேண்டும் என்ற முடிவுக்கே வந்ததாகத் தெரிகின்றது.

மணிமேகலையை அடுத்து இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகள் தமிழ் நாட்டின் இருண்ட காலமாகும். இருட்டுப் போர்வையைக் கிழித்துக் கொண்டு மக்களைத் தட்டி எழுப்பிச் சமய வாழ்வின் மூலம் அவர்கள் வாழ்க்கைக்கே ஒரு குறிக்கோளை ஈந்த பெருமை 6ம் நூற்றாண்டின் முடிவிலும் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ் நாட்டில் திகழ்ந்த நாவுக்கரசர், திருஞானசம்பந்தப் பெருமான் ஆகியோரையே சாரும். இவர்களில் தொடங்கி மூன்று நூற்றாண்டுகள் வரை இந்நாட்டில் சமயப் புரட்சி பெரிதும் நடைபெற்ற காலமாகும். இதே காலத்தில் தோன்றிய ஆழ்வார்களும் நாயன்மார் களும் ஈடு இணையற்ற பக்திப் பாடல்களைப் பாடி இந்நாட்டில் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடச்

செய்தனர். அத்தகைய ஒரு பொற்காலம் உலக வரலாற்றில் வேறு எந்த நாட்டிலும் அல்லது இந்த நாட்டின் பிற பகுதியிலும் காண்டல் அரிதாகும்.

ஆனால், இந்த நாட்டிலேயே தோன்றி வளர்ந்த சைவம், வைணவம் என்ற இரண்டு சமயங்களின் பக்திக் கொள்கையில், பிற நாட்டுச் சமயக் கொள்கையில் இல்லாத ஒரு வேறுபாடு இருத்தலைக் காண்டல் கூடும். பக்தி என்றால் ஏதோ காடுகள் சென்று கனசடை வைத்து, மூக்கைப் பிடித்து, உடம்பை உருக்கி, உயிரை வாட்ட வேண்டுமென்ற கருத்தை இந்நாட்டுப் பெரியவர்கள் ஏற்றுக் கொள்ளவே இல்லை. அதன் எதிராக எல்லாவித சுகபோகங்களையும் அனுபவித்துக் கொண்டே பக்தி செய்ய முடியும் என்ற பேருண்மையை அறிவித்தனர். அதனால்தான் போலும் ஆண்டியாக இருந்தும், அரசனாக இருந்தும், இல்லறத்தில் இருந்தும், வாணிகம் புரிந்தும், எந்த நிலையில் இருந்தும் பக்தி செய்ய முடியும் என்பதை அறிவுறுத்தினார்கள். உலகம் தவறானது என்று சொல்லக்கூடிய கொள்ளைத் தொழிலோ அன்றி சூதுத் தொழிலோ கூடத் தம்மை மறந்த நிலையில் ஒரு குறிக்கோளுக்காக ஒருவரால் செய்யப்படின் அதனையுங்கூட இந்த நாட்டவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். பக்தி நிலையில் நின்று குகன் படைத்த மீன் உணவைச் சக்கரவர்த்தி திருக்குமாரன் ஆகிய இராமன், **"பரிவினில் தழீஇய என்னின் பவித்திரம்"** *(கம்பன்: 1967)* என்று கூறியதுடன்

அமையாமல், "இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ?" என்று பேசுகிறான் என்றால், பக்தி நிலையில் ஈடுபட்டவர்கள் செயலை இந்த நாட்டு மக்கள் கண்ட முறையே வேறு என்பதை நன்கு அறிதல் வேண்டும்.

பக்தி நிலையில் ஈடுபட்டவர்கள் "**தன்பரிசும், வினை இரண்டும், சாரும் மலம் மூன்றும்**" (பெ.பு:803) ஆக அனைத்தையும் துறந்து அன்பே வடிவாய் இருப்பராதலின் அவர்கள் செய்கின்ற செயல்களை இறைவன் செய்கின்ற செயல்களாகவே இந் நாட்டவர்கள் கருதினார்கள். ஆதலால்தான் அந்த அடியார்கள் செய்த செயலின் அருமைப்பாட்டை எடுத்துக்கூற வந்த பக்தி இலக்கியத்தை ஈடு இணையற்றதாகக் கருதினார்கள். ஏனைய எந்த இலக்கியமாயினும் அறிவின் துணைகொண்டு சிந்தித்து செய்யக் கூடியதாகும். ஆனால், பக்தியை உணர வேண்டுமானால், அல்லது அனுபவிக்க வேண்டுமானால் அறிவைக் குறைத்து, உணர்வைப் பெருக்கித்தான் அதனை அனுபவிக்க முடியும். அன்பர்கள் பெற்ற இந்த அனுபவத்தைக் கவிஞன் ஒருவன் இலக்கியத்தில் வடிக்க வேண்டுமேயானால் அவனும் ஒரு பக்தனாக மாறினாலொழிய இதனைச் செய்ய இயலாது. ஆதலால்தான் பக்தர்கள் பெற்ற பக்தி அனுபவத்தை புறத்தே நின்று கண்டதுடன் நில்லாமல் அகத்தே அவர்கள் அனுபவித்தது போலத் தாமும் அனுபவித்து அவர்களே பாடியது போலப் பாடிய சேக்கிழாரின் பாடலை ஈடுஇணையற்றதாகக்

கருதுகிறோம். அத்தகைய ஓர் இலக்கியத்தை இவ்வாறு அனுபவிக்காத ஒருவர் படைக்க முடியாது என்பதை நன்கு உணர்ந்த மற்றோர் இலக்கிய கருத்தாவாகிய மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்று பேசுகிறார்.

இதுகாறும் கூறியவற்றைக் கூர்ந்து நோக்கினால் ஒரு பேருண்மை வெளிப்படும். பக்தி இயக்கம் மிகப் பழங்காலத்தில் முதன் முதலில் தோன்றியது இத் தமிழகத்திலேயே ஆகும். இந்த உண்மையை ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் அத்தியாயம் 41 முதல் 45 முடிய உள்ள பாடல்கள் நன்கு விளக்குகின்றன. இந்த இயக்கம் தமிழகத்தில்தான் முதலில் தோன்றிற்று. அகங்கார, மமகாரங்கள் அற்ற ஒரு பக்தி எவ்வாறு இருக்கும் என்பதை முதன் முதலில் கூறிய பெருமை பரிபாடலுக்கே உண்டு. பரிபாடலில் தோன்றிய பக்தி பற்றிய குறிப்புகள் ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலத்தில் விரிவாக மலர்ந்து சேக்கிழார் காலத்தில் முழுத் தன்மை பெறுகிறது. பின்னர் வந்த தமிழ் இலக்கியங்கள் கூட பக்திச் சுவையை ஆங்காங்கே சுட்டிச்சென்றன. குமரகுருபரர் முதல் பாரதியார் வரை யாவரும் இதனைச் செய்துள்ளனர். சுருங்கக் கூறுமிடத்து சங்கப் பாடல் முதல் பாரதியார் வரை இடைவிடாமல் ஆற்றொழுக்கு போல பக்தி இயக்கம் இலக்கியத்தில் பரிமளிப்பதைக் காணலாம்.

❀❀❀❀❀

# 10. ‘க’னாவும் ‘கா’வன்னாவும்

*தமிழ் என்று கூறியவுடன் மூக்கைத் தூக்கிக் கொண்டு அதில் என்ன சார் இருக்கிறது? ‘க’னாவும் ‘கா’வன்னாவுந்தானே என்று கூறுகின்ற ‘பெரிய மனிதர்கள்’ இன்றும் உண்டு. இவர்கள் ‘க’னா என்று குறிப்பிடுவது கடவுளையும், ‘கா’வன்னா என்று குறிப்பிடுவது காதலையும் ஆம். வேறு வகையாகக் கூறுமிடத்துக் கடவுளும் காதலுமே தமிழ் இலக்கியத்தில் இடம் பெறுகின்றன என்பதையே இவர்கள் குறிப்பிடுகிறார்கள். முற்றிலும் உண்மை தான் இவர்கள் கூற்று.*

*விருப்பு, வெறுப்பு அற்ற முறையில் ஆய்ந்தால் தமிழ் முழுவதிலும் கடவுளும் காதலுமே பேசப்படுகின்றன. இதைக் கூறுவதற்கு ஏன் வெட்கப்பட வேண்டும்? இவை - இரண்டையும் தவிர வேறு ஏதேனும் புதிய பொருளை இன்றாயினும் கூறல் முடியுமா? இவ்வுலகம், அதன் தோற்றம், மக்கள் வாழ்வு, அவர்களுடைய நோக்கங்கள், ஏனைய உயிர்கள் ஆகிய அனைத்தும் காதலில் இடம் பெற்று விடுகின்றன.*

உலகப் படைப்பிலேயே மனிதன்தான் உயர்ந்தவன் என்பதை இப்புதுமை விருப்பர்களுங்கூட மறுப்பதில்லை. அவ்வாறாயின், மனிதன் எதனால் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான்? ஏனைய விலங்குகளையும் அவனையும் வேறு பிரித்துக் காட்ட உதவுவது எது? மனிதன் பெற்றுள்ள மனம் என்ற ஒன்று தானே? இந்த மனத்தின் அடிப்படையில் தோன்றும் எண்ணங்களும் குறிக்கோள்களும் தாம் அவனை வேறு பிரித்து உயர்ந்தவனாக ஆக்குகின்றன. இந்த மனத்தில் தோன்றும் எண்ணத்தின் உயர்ந்த குறிக்கோளாக அமைவது கடவுள் பற்றிய நினைவு. எனவே, அவனுடைய சாதாரண வாழ்வு முழுவதையும் வெளியிடக் காதலும், மனவாழ்வு முழுவதையும் வெளியிடக் கடவுளும் பயன் படுகின்றன.

ஓர் இனத்தின் வாழ்வை எவ்வாறு அறிகின்றோம்? நம் காலத்தில் வாழ்பவர்களாக இருப்பின் அவர்களை நேரே கண்டு பழகி, அவர்கள் உணவு, உடை முதலியவற்றைக்கொண்டு ஓரளவு ஆராயலாம். ஆனால் அவ்வாறு செய்வதானாலும் அந்த இனத்தார் முழுவதையும் கண்டு பேசிச் செய்தல் என்பது இயலாத காரியம். அவருள் சிறந்தவர் என்று மதிக்கப்படுபவர் சிலரைப் பற்றி ஆய்வதன் மூலமே ஒரு முடிவுக்கு வருதல் கூடும். பல காலம் முன்னர் வாழ்ந்த ஓர் இனத்தைப்பற்றி அறிய வேண்டுமாயின் வழி யாது? அந்த இனத்தைப் பற்றி

எழுதப் பெற்ற உண்மைச் சரித்திரத்தைக் கொண்டு ஓரளவு உண்மையை அறியலாம்.

ஆனால், இந்நாளில் சரித்திரம் என்ற பெயரில் வழங்கப்பெறும் 'இராஜாக்கள்' கதையை அறிவதன் மூலம் என்ன பயன் ஏற்படுதல் கூடும்? அரசர்கள் வரலாறுகளை அறிவதன் மூலம் அவர்கள் காலத்து வாழ்ந்த மக்களைப்பற்றி நாம் என்ன அறிதல் கூடும்? ஒன்றும் இல்லை. அவ்வாறாயின் வேறு வழி யாது? அந்த இனத்தாருள் வாழ்ந்த கவிஞர்களே உண்மை வரலாற்றைத்தரத் தகுதியுள்ளவர்கள். அக்கவிஞர்கள் பாடிய கவிதைகளின் மூலமே சாதாரண மக்களின் வரலாற்றை நாம் உள்ளவாறு அறிதல் கூடும். தமிழ் மக்கள் வாழ்வில் எவை நிரம்பி இருந்தன என்பதை அவர்களுடைய வரலாற்றில் தானே அறிய முடியும்? அந்த வரலாறு, அவர்கள் காலத்தே எழுந்த கவிதைகளில் தான் உள்ளது எனில், அந்தக் கவிதைகளில் என்ன பேசப் பெற்று உள்ளனவோ அவையே அவர்கள் வரலாறாகவும் அமைந்திருக்கும் எனக் கூறத் தேவையில்லை.

தமிழ்க் கவிதைகளில் கடவுளும் காதலுமே நிறைந்துள்ளன என்றால் அப்பழந்தமிழர் வாழ்விலும் இவை இரண்டுமே நிறைந்திருந்தன என்று கூறுவதில் தவறில்லை. இவ்வாறு கூறியவுடன் கடவுள், காதல் இரண்டும் மட்டும் நிறைந்த ஒரு வாழ்வை முழு வாழ்வு என்று கூற முடியுமா என்று

கூடச் சிலர் ஐயுறலாம். ஆழ்ந்து ஆராய்ந்தால் இந்த ஐயத்திற்கு ஆதாரம் இல்லை என்பது புலனாகும்.

அற்றைத் தமிழர், காதல் என்ற சொல்லை மிகப் பரந்த பொருளில் பயன்படுத்தினர். மனிதனுடைய வாழ்வு முழுவதையும் எடுத்து அலசிப் பார்த்தால் அறிவு, உணர்வு என்ற இரண்டினாலுமே அவ் வாழ்வு நடைபெறுவது தெரியும். உலகில் எப்பகுதியில் எந்தக் காலத்தில் வாழ்ந்தவர்களை எடுத்துக் கொண்டாலும் இஃது உண்மை என்பதை அறியலாம். அந்த அடிப்படையில் கண்டால் தமிழன் காதல் என்று கூறுவது உணர்வு வாழ்க்கையையே ஆகும்; கடவுள் என்று கூறியது அறிவு வாழ்க்கையையே ஆகும்.

உணர்வு, அறிவு என்று இரண்டாகப் பகுத்துக் கூறினாலும் இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புகொண்டே இருந்தன. அவனுடைய காதல் வாழ்வில் கடவுளும், கடவுள் அறிவில் காதலும் கலந்து நின்றன. இங்ஙனம் உணர்வு, அறிவு இரண்டையும் கலப்புச் (Synthesis) செய்து வாழ்ந்ததனால் தான் உலகின் ஏனைய இனத்தார் அழிந்துங்கூட இத்தமிழ் இனம் அழியாமல் இருந்து வருகிறது.

இக்காலத்தார் வெறுப்புடன் பேசும் 'க'னாவைத் தமிழர் எவ்வாறு கண்டனர்? சங்க இலக்கியங்

களாகிய எட்டுத் தொகைகளில் பதிற்றுப்பத்து நீங்கலாக (அதுவும் அகப்படாமையால்) ஏனைய தொகை நூல்களுள் காணப்பெறும் கடவுள் வாழ்த்துக்களும் பத்துப்பாட்டில் உள்ள திருமுருகாற்றுப்படையும் இவர்கள் கடவுள் பற்றிக் கூறியவற்றிற்கு எடுத்துக்காட்டு. பரிபாடல் முழுவதிலும் (அகப்பட்டவை கொஞ்சமே) முருகனும் திருமாலும் மிகுதியாகப் பேசப்படுகின்றனர். புறநானூற்றில் பல பாடல்களில் கடவுள் கொள்கை பேசப்படுகிறது. உதாரணமாக, ஒன்றைக் காணலாம்.

இறைவனுடைய இலக்கணத்தைக் கூற வந்த பெரியோர்கள் ஓர் இயல்பை மிகவும் அழுத்திக் கூறினர். அவன், விருப்பு வெறுப்பு அற்ற முழுப் பொருள் என்பதே அது. இதனைச் சுருக்கமாகவும் ஆழமாகவும் கூறிய பெருமை வள்ளுவரையே சாரும்.

> "வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
> யாண்டும் இடும்பை இல" (குறள் 4)

என்ற குறளில் இக் கருத்துப் பேசப்படுகின்றதெனில், இவர்கள் பண்பாட்டிற்கு வேறு எடுத்துக்காட்டும் வேண்டுமோ? ஆனால், திருக்குறள் காலத்தில் இக் கருத்துப் புதிதாகத் தோன்றியதோ என்று நினைக்க வேண்டா! திருக்குறளுக்கு மிகவும் முற்பட்டதாகிய புறநானூற்றிலும் இதனைக் காண்கிறோம்.

"நல்லவும் தீயவும் அல்ல குவிஇணர்ப்
புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னா ஆங்கு" (புறம்: 106)

என்ற கபிலர் பாடல் ஆழ்ந்து சிந்திப்பதற்கு உரியது.

கடவுளைப்பற்றிப் பல உண்மைகளைக் கண்ட நம் முன்னோர் அனைவரும் காடுகள் சென்று கனசடை வைத்துத் துறவு மேற்கொண்டு வாழ்ந்தவரல்லர் என்பது அறிதற்குரியது. மெய்ப்பொருளை அடையவும் அறியவும் அவர்கள் கையாண்ட வழி யாது? சொன்னால் ஓரளவு நம்பக்கூட முடியாது. காதல் மூலமாகவே அவர்கள் கடவுளை அறிந்தனர். இதனால் தான் காதல் என்ற சொல்லுக்கு அவர்கள் கண்ட பொருள் மிகவும் பரந்தது என்பதை அறிகின்றோம்.

அன்பு ஓர் ஆண், பெண் என்ற இருவரிடையே முகிழ்க்கும்பொழுது காதல் என்று அழைக்கப் படுகின்றது. இதே அன்பு தாய்க்கும் குழந்தைக்கும் இடையேயும், ஏனைய மனிதர், விலங்கு முதலிய வற்றிடையேயும் முகிழ்க்கும்பொழுது காதல் என்று பெயர் பெறுவதில்லை. பிற்காலத்தில் இச் சொல்லை எல்லா அன்புக்கும் பொதுவாகப் பயன்படுத்தவும் செய்தனர். ஒருவன் ஒருத்தி என்ற இருவரிடையே தோன்றும் இந்த அன்பு எக்காரணத்தால் தோன்றுகிறது? முன்பின் கண்டிராத இருவர்

இடையே திடீரென்று தோன்றும் இக்காதல் தெய்வீகமானது எனக் கருதினர் நம்மவர்.

"யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல,
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (குறு: 40)

என்ற குறுந்தொகைப் பாடல் இக்கருத்தை நன்கு வலியுறுத்துகின்றது. எனவே, தம்மையும் அறியாமல் தோன்றும் இந்த அன்பு மற்றொரு பெண்மேல் சென்றவிடத்துக் காதல் என்று பெயர் பெற்றது.

*அப் பெண்ணை மணந்து இல்வாழ்வு நடத்தத் தொடங்கியதும் அவளிடம் மட்டும் விரிந்த அன்பு மேலும் விரிந்து உற்றார், உறவினர், ஊரார், நொது மலர் எனப் பெருக ஆரம்பித்தது. இவ்வாறு விரிந்து கொண்டே வந்து வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாட்டைக் கடந்தவுடன் 'அருள்' என்ற பெயரைப் பெற்றது. அன்பு தான் அருளாகப் பரிணமிக்கிறது என்பதை* '**அருள் என்னும் அன்பீன் குழவி**' *(குறள்: 757) எனக் குறள் விரிக்கின்றது.*

*அருள் ஒருவனிடம் பரிணமிக்கும் பொழுதுதான் தான் யார்? உலகம் யாது? தனக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பு யாது? உலகின் முதற்காரணம் யார்? என்பன போன்ற வினாக்களுக்கெல்லாம் விடை கிடைக்கிறது. இவற்றிற்கு விடை*

கிடைத்தவுடன் கடவுள் பொருள் அறியத் தொடங்குகிறான் மனிதன். சீவன் என்று சொல்லப்படும் உயிர்கள் தம் குற்றம் நீங்கியவுடன் 'சிவன்' ஆக மாறுவது போல் 'காதல்' தன்னிடமுள்ள குறுகிய மனப்பான்மையைத் தவிர்த்தவுடன் 'கடவுள்' தன்மையை அறிய முடிகின்றது. காதல் மூலமே கடவுளைக் கண்டவர்கள் தமிழராதலின் அவர்கள் இலக்கியத்தில் 'க'னாவும் 'கா'வன்னாவும் நிறைந்த இடத்தைப் பெற்றுள்ளன.

❀❀❀❀❀

# 11. சான்றோர் சிந்தனை

*இன்றைய வாழ்வு அமைதியானதாய், வள முடையதாய் அமைய வேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறோம். அதற்குக் குறுக்கே நிற்கின்ற ஒன்று ஆசை எனச் சொல்லப்படுவதாகும். திருமூலர்,*

''ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்''
(திருமந்: 2574)

*என. ஏன் அப்படி?*

*"ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பங்கள்'' என்றும் சொல்கிறார். திருவள்ளுவர்,*

''தவா அப்பிறப்பு ஈனும் வித்து'' (குறள்: 361)

*என்று சொல்கிறார். திருமூலர், திருவள்ளுவர் இரண்டுபேருமே ஆசையைப் பற்றிச் சொல்லும்போது 'ஆசை அறுமின்கள்' என்றும் அவா அறுத்தல் என்றும் வல்லின உச்சரிப்போடுகூடிய 'அறுத்தல்' என்ற சொல்லினைப் பயன்படுத்துவதன் நோக்கம், 'ஆசை அறுத்தல்' என்பது அவ்வளவு எளிதான காரியம் அன்று என்பதாகும்.*

எளிதான காரியம் அன்று என்பதற்காக அதை விட்டுவிட்டால் நம்முடைய வாழ்க்கை மனித வாழ்க்கையிலிருந்து மாக்கள் வாழ்க்கையாக மாறி விடும். ஆசை என்பதற்கு எல்லை உண்டு. தன்னுடைய வாழ்வு ஓரளவு வளமுடையதாக இருக்க வேண்டுமென்பதில் எவ்விதமான தவறும் இல்லை. ஆனால் எந்த மனிதனும் அத்தோடு நிறுத்துவதே இல்லை.

"ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல்லாம்கட்டி
ஆளினும் கடல் மீதில்
ஆணைசெலவே நினைவர் அளகேசன் நிகராக
அம்பொன் மிக வைத்தபேரும்"
(தாயுமா: பரிபூர, 10)

என்று சொல்லுகிறார் தாயுமானவர். ஆகவே நம்முடைய ஆசை வளர்ந்துகொண்டே செல்லுமே ஆனால், அது வாழ்க்கையைத் தின்று விடுவதாக அமையும்.

"உண்ணான், ஒளிநிறான், ஓங்குபுகழ் செய்யான்"

என்று நாலடியார் சொல்கிறது.

ஆக, ஆசை அதிகமாக அதிகமாகத்தான் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக்கூட பயன்படுத்த முடியாமல் போய்விடுகிறான். மேலும்

மேலும் ஆசைப்படுவதனால், மேலும் மேலும் சேகரிக்க வேண்டுமென்ற பேராசை உந்த, வாழ்க்கையில் அநுபவிக்க வேண்டியவற்றை, உரிய காலத்திலே அநுபவிக்க முடியாமல் போய்விடுகிறது. தன்னுடைய குடும்பத்திற்கும் கூடச் செய்ய வேண்டியதைச் செய்ய முடியாமல் போய்விடுகிறது. அவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்ததனால்தான் 'ஆசை அறுமின்கள்' என்று சொன்னார். 'ஆசை அறுமின்கள்' என்று சொன்னவுடனே எல்லோரும் துறவிகளாகப் போய்விட வேண்டுமென்று திருமூலர் கூறவில்லை. இந்த நாட்டுக்காரர்கள் துறவை ஏற்றுக் கொள்ளவேயில்லை.

"மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை"
(திருமுறை: 3, 282, 1)

என்று சொல்லுகிறார் ஞானசம்பந்தர். ஆகவே ஆசை தேவையான அளவுக்கு மேல் விரிந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அடிப்படை நோக்கமாகும்.

இந்த ஆசை அதிகப்படுவதனால் என்ன ஆகிறது? மனித நேயமே நம்மைவிட்டுப் போய்விடுகிறது. தன்னுடைய குடும்பத்தில் பிள்ளை முதலானவர்கள் அதிகமாக இருந்தாலும் கூட, இவர்கள் எல்லாம் இந்தப் பொருளை வீணாக்கி

விடுகிறார்களே, நாம் சேர்த்து வைத்தது பாழாகப் போய்விடுகிறதே என்ற அளவில், தன்னலமாக வளர்ந்து, மனம் விரிந்து செல்வதற்குப் பதிலாகச் சுருங்கிச் சுருங்கிக் கொண்டே செல்கிறது.

மனம் விரிய வேண்டுமேயானால் ஒரே வழி, ஆசையைக் குறைப்பது தான். ஆசையற்ற இடத்தில் தான் பிற உயிர்களைத் தம் உயிர் போல் நேசிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். எதனைச் செய்ய வேண்டும், என்னுடைய தேவைக்கு எது செய்யவேண்டும், சமுதாயத் தேவைக்கு என்ன செய்யவேண்டும், நாட்டின் தேவைக்கு என்ன செய்யவேண்டும் என்றெல்லாம் சிந்திக்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகும். ஆக அடிப்படையாக இருக்கின்ற இந்த ஆசையைப் போக்குவது இன்றியமையாத தாகும். 'ஆசையே போய்விடு' என்றதனாலே ஆசை போய் விடப் போவதில்லை. இதனை நன்கு ஆராய்ந்த வள்ளுவன் வழி சொல்லுகிறான். ஆசை போக வேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் உண்டு.

"பற்றுக பற்றற்றான் பற்றினை" (குறள்: 350)

எல்லாப் பற்றுகளையும் கடந்து நிற்கின்றவனாகிய பரம்பொருளின் திருவடிகளைப் பற்றுவதனாலேதான் பற்றுவிட முடிகிறது. ஆசையை அறுக்க முடியும். அப்படி இறையருளில் ஈடுபட்டு, தெய்வ நம்பிக்கை வலிவுடையவர்களாக இருந்து தங்களுடைய

ஆசையைப் போக்கிக் கொள்வார்களேயானால் தாங்கள் வாழுகின்ற சமுதாயத்தில் ஒப்பற்றவர்களாக அவர்கள் இருக்க முடியும். தங்களுடைய குடும்பத்தில் ஒப்பற்ற தலைவர்களாக ஆக முடியும்

இப்படி ஆசையற்றவர்கள் நடத்துகின்ற குடும்பங்கள் பல சேர்ந்து வருகின்ற சமுதாயம், மிகச் சிறந்ததாக அமையும். அந்தச் சமுதாயங்கள் பலகோடி அமைகின்ற நாடு ஈடிணையற்றதாக இருக்கும். அங்கேதான் பிற உயிரும் தம் உயிர்போல் எண்ணி உள்ளே ஒத்து நடக்கின்ற கடப்பாடு உடையவர்கள் தோன்றுவார்கள்.

அந்த வளர்ச்சி என்று இந்த நாட்டில் வருகின்றதோ, அன்றுதான் இந்த நாடு ஒப்பற்ற நாடாகும்.

தனி மனிதன் ஆசையற்று, அச்சமற்று வாழத் தொடங்கினானேயானால், முழுத்தன்மை பெற்ற மனிதனாக ஆகமுடியும். அத்தகைய மனிதர்கள் நிறைந்த சமுதாயம்—ஒப்பற்றதாக அமையும் என்பதில் ஐயம் இல்லை.

உலகத்தில் பெரியவர்கள் எல்லாக் காலங்களிலும் தோன்றி தேவையான நீதிகளையும், அறங்களையும் கூறியிருக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவ்ரை காலத்திற்கேற்பவற்றைத் தேர்ந்தெடுத்து அதன்படி வாழ்வது மிக முக்கியமானதாகும்.

"அஞ்சி அஞ்சிச் சாவார் இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே"
(பாரதி: 15, 3)

என்று பாரதி பாடுகிறான். 'அச்சம் தவிர்' என்றும் அவனே சொல்கிறான். பாரதி காலத்தில் மட்டுமா இது? இல்லை. ஏழாம் நூற்றாண்டிலே திருநாவுக்கரசர் பெருமான் சொல்லுகிறார்.

"அஞ்சுவது யாதொன்று மில்லை,
அஞ்ச வருவது மில்லை" (திருமுறை: 4, 2, 1)

என்று.

இந்த அச்சம் என்ற ஒன்று நம்மைப் பீடித்திருந்து ஆட்டுகிறது என்பது உண்மைதான். தனி மனிதர்கள் மறுநாளைப் பற்றி அச்சம் அடைகிறார்கள். தம்முடைய வளமான வாழ்வு போய்விடுமோ என்று அஞ்சுகிறார்கள். தம்முடைய எதிர்காலத்தைப் பற்றி அச்சம் அடைகிறார்கள். இது தனி மனிதர்கள் வாழ்வு என்றால் சமுதாயமும் இதே முறையில் உள்ளது.

இரண்டு பெரிய வல்லரசுகள் போட்டியிட்ட காலத்தில் அச்சம் சரி. இன்று ஒரு வல்லரசு இருந்த இடம் தெரியாமல் போன நிலையிலும் மற்றொரு வல்லரசு அஞ்சிக் கொண்டுதான் இருக்கிறது. இந்த அச்சத்தின் காரணமாக, தேவையில்லாதவற்றில்,

ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் கவனத்தைச் செலுத்துவதனாலே, மக்களுக்குப் பயன்பட வேண்டிய செல்வம் வேறு வகையில் போகின்றது. ஆகவே நாடு முழுவதையும் தழுவியிருக்கின்ற இந்த அச்சத்தின் அடிப்படையைச் சிந்திப்போமேயானால், வள்ளுவன் சொல்கிறான்,

"அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது" (குறள்: 1075)

என்று. பண்பில்லாதவர்களிடத்தில்தான் அச்சம் இருக்க வேண்டும். பண்புடையவர்களிடத்தில் அச்சம் இருப்பதற்குக் காரணம் இல்லை. வாழ்க்கையைச் சிந்தித்துப் பார்த்து பேசுகிறான் பாரதி. சிந்தித்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வருகின்றான். "முன்னர் நமது இச்சையினால் பிறந்தோமில்லை முதல் இறுதி இடை நமது வசத்திலில்லை"

இது தெரிந்த பிற்பாடு அச்சம் அடைவதற்கு என்ன இருக்கிறது? வருவது வந்தே தீரும். அதை யாரும் நிறுத்தப் போவதில்லை. நியூட்டனுடைய மூன்றாவது சட்டத்தைப் போல எந்தச்செயலும் எதிர்ச்செயலைப் பெற்றே தீரும் என்றால் யாரும் வருவதை நிறுத்த முடியாது. அது தெரிந்த பிற்பாடு அதனை ஏற்றுக் கொள்வதற்கு, வரவேற்பதற்குத் தயாராக இருக்க வேண்டுமே தவிர, அஞ்சுவதனாலே பயன் ஒன்றுமில்லை. அஞ்சுவதனாலே எதையும்

நிறுத்திவிட முடியாது. இப்படி அச்சம் அச்சம் என்பதனாலே வாழ்க்கையே இருண்டு விடுகிறது.

தனி மனிதர்களுடைய அச்சம், குடும்பத்தைப் பற்றிய அச்சம், சமுதாயத்தைப் பற்றிய அச்சத்தின் காரணமாக இன்று சாமியார்களும், குருமார்களும் நூற்றுக்கணக்கில் தோன்றிவிட்டார்கள். நம்முடைய அச்சம்தான் அவர்களுக்கு மூலதனமாக இருக்கிறது. இந்த அச்சத்தை அடிப்படையாக வைத்து அவர்கள் தொழில் நடத்துகிறார்கள்.

ஓரளவு சிந்திப்போமேயானால் இறையுணர்வு என்ற ஒன்று இருக்குமேயானால், உறுதிப்பாடு நெஞ்சில் வந்தே தீரும். நாம் இறைவனுடைய கருணையின் கீழ் இருக்கின்றோம், அவனுடைய கருணை நம்மை என்றும் காப்பாற்றும் என்ற உறுதிப்பாடு இருக்குமேயானால் அஞ்சுவதற்குக் காரணமே இல்லை. ஆக

> "............. கெடிலப் புனலும்
> உடையார் ஒருவர் தமர் நாம் அஞ்சுவது
> யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதுமில்லை"
>
> (திருமுறை: 4, 2, 1)

என்று சொல்கிறார் திருநாவுக்கரசர்.

இந்த அச்சத்தைப் போக்குவதுதான் இன்று நாம் இன்றியமையாமல் கடைப்பிடிக்க வேண்டிய மிக

முக்கியமான ஒன்று. எந்த ஒன்று பற்றியும் அஞ்சாமல் இருப்பது, நம்முடைய பண்பாட்டை, ஆண்மையை, உறுதிப்பாட்டை, நெஞ்சு அழுத்தத்தை வளர்த்துக் கொள்ள வழி செய்வதாகும். 'அச்சமே போய்விடு' என்று சொன்னால் அச்சம் போய்விடப் போவதில்லை. அச்சம் போகவேண்டுமானால் அதற்கு ஒரே வழி இறைவழிபாடு தான். நம்மைவிட உயர்ந்த ஒரு பொருளிடத்தில் —நம்மைப் படைத்து, காத்து, அளித்து,. அழிக்கின்ற பொருளிடத்தில் கொண்டிருக்கின்ற உறுதிப்பாட்டின், நம்பிக்கையின் அடிப்படையில்தான் அச்சத்தைப் போக்க முடியும்.

குழந்தை தனியே நடப்பதற்கு அஞ்சுகிறது. ஆனால் தாயின் முந்தானையைப் பிடித்துக் கொண்டவுடன் அதனுடைய அச்சம் போய்விடு கிறது. தாய் தன்னைக் காப்பாற்றுவாள் என்ற உறுதிப்பாடு இருக்கின்ற காரணத்தினாலே குழந்தை யின் அச்சம் போய்விடுகிறது.

அதுபோல நம்முடைய அச்சம் போகவேண்டு மானால், நாளை என்ன நடக்கும் என்பதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

"முன்னர் நமது இச்சையினால் பிறந்தோமில்லை
முதல் இடை இறுதி நம் வசத்தி லில்லை"
(பாரதி கவிதைகள்)

என்று பாரதி சொன்னபடி நம்முடைய முயற்சியினாலே ஒன்றும் நடைபெறப் போவதில்லை என்ற உறுதிப்பாடு இருக்குமேயானால், அஞ்சு வதற்குத் தேவை இருக்காது. அச்சத்தை நாம் போக்கியவர்களாகி விடுவோம்.

அச்சத்தைத் தனி மனிதன் போக்கினால் அவனது வாழ்வு வளம் பெறுகிறது. தனி மனிதர்கள் கூடி வாழ்கிற சமுதாயம் அச்சத்தைப் போக்கி விட்டால் அது இன்பமுடைய சமுதாயமாக இருக்கும்.

❀❀❀❀❀

# 12. கவிஞன் கண்ட விஞ்ஞானம்

''மண்திணிந்த நிலனும்
நிலன்ஏந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்(கு)
ஐம்பெரும் பூதத்(து) இயற்கை'' (புறம், 2)

*மிகப் பழையதாகிய இப் புறநானூற்றுப் பாடல் ஐந்து பெரும் பூதங்களை எண்ணி வகைப்படுத்திக் கூறுவதோடு மட்டுமல்லாமல், அவற்றை வகைப் படுத்தும் முறையிலேயே பூதங்களின் இயல்புகளையும் ஓரளவு தெரிவித்துச் செல்கிறது. முதலாவது பேசப்படுகின்ற பூதம் மண் ஆகும். இம்மண் உலகைப்பற்றிச் சொல்ல வந்த புலவர் 'மண்திணிந்த நிலனும்' என்று இலக்கணம் வகுக்கின்றார். 'திணிந்த' என்கின்ற அந்த அழகிய சொல்லைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். செறிவு, செறிதல் என்ற பொருளுடையது திணிந்த என்ற சொல். 'மூட்டைக்குள் பொருளை வைத்துத் திணிக்காதே' என்று இன்றும் பேச்சு வழக்கில் இச்சொல் பயன்படுவதைக் காண்கிறோம். மிக*

நெருக்கமாகப் பொருள்கள் அமைய வேண்டிய முறையில் அமுக்கிப் பிடித்துத் திணிப்பது தான் இந்தத் திணிவு என்ற சொல்லின் பொருளாகும். ஆகவே, புலவர் 'திணிந்த நிலன்' என்று சொல்லும்போது 'dense' என்ற ஆங்கிலச் சொல்லின் பொருளை நம்முடைய மனத்தில் பதியுமாறு செய்கிறார். ஐந்து பூதங்களை வரிசைப் படுத்திப் பார்ப்போமானால் இம்மண் உலகுக்குள்ள செறிவு அதாவது density வேறு எந்தப் பூதத்திற்கும் இல்லையென்பதை விஞ்ஞானம் அறிந்தோர் எளிதில் அறிந்துகொள்ள முடியும். அறிவு வளர்ந்த இற்றை நாளில் இது புதுமை அல்லாததாக இருக்கலாம். ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆர்க்மிடிஸ் முதலானோர் தோன்றுவதற்கு முன்னரே ஒரு புலவர் கூற்றாக வெளிப்படுமே ஆனால் கொஞ்சம் வியப்பதற்கு உரியதுதான்.

இதைவிடச் சிறப்பு என்னவெனில், உலகின் பிற பகுதிகளில் உள்ளார் அனைவரும் இவ்வுலகம் தட்டையானது என்றும், அசையாது ஓரிடத்தில் இருப்பது என்றும் கொண்டிருந்த கருத்தை கலீலியோவும், கோப்பர்நீகயஸும் மாற்றி அமைத்தார்கள். ஆனால், இவ்விருவரும் தோன்றுவதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் மண்ணுக்குச் செறிவுண்டு என்று பாடிய அதே புலவன், இவ்வுலகத்தின் பௌதிகச் சூழ்நிலையையும் நன்கு ஆராய்ந்து, ஆகாயம் என்னும் பெருவெளியில்

பிடிமானமற்றுத் தொங்கிக் கொண்டிருக்கும் சிறப்பு உடையது இம் மண்ணுலகம் என்று பாடுகிறான். ஆகாயத்தைப்பற்றிக் கூற வந்த புலவன் 'நிலன் ஏந்திய விசும்பு' என்று பேசுகிறான். அதாவது பெரு வெளியில் எவ்விதமான பிடிமானமும் இல்லாமல் அந்தரத்திலே தொங்குகின்ற சிறப்பைப் பூமியின் சிறப்பாகக் கூறாமல் 'விசும்பின்' சிறப்பாகக் கவிஞன் பேசுகிறான். இந் நிலத்தைத் தன்மாட்டு ஏந்திக் கொண்டிருக்கின்ற விசும்பும் என்று கருத்தோடு மட்டும் அமையாமல் இவ் விஞ்ஞானப் புலவன் இன்னும் ஒரு படி மேலே செல்லுகின்றான்.

பூமியின் மேலேயுள்ள வளி மண்டலத்தை—காற்று மண்டலத்தை—இன்றைய அறிவு உலகம் நன்கு ஆராய்ந்து இம் மண்ணுலகம் இவ்வளி மண்டலத்தால் சூழப்பெற்றிருக்கிறது என்றும், மேலே செல்லச் செல்ல அதனுடைய அழுத்தம் குறைந்து கொண்டே செல்லுகிறது என்றும், ஒரு குறிப்பிட்ட உயரம் சென்ற பிறகு, கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து ஒன்றும் இல்லாமல் இக்காற்று மண்டலம் அழிந்து விடுகிறது என்றும் பேசுகிறது. இன்றைய அறிவியல் பேசும் இத் தத்துவத்தை 'விசும்பு தைவரு வளியும்' என்று புலவர் பேசுகின்றார். அதாவது பூமியின் மேலுள்ள இக்காற்று மண்டலம் ஆகாயத்தை ஓயாது தடவிக் கொண்டேயிருக்கிறது. அதாவது 'தை வருகின்றது' என்று பேசுகின்றார். 'தைவருதல்' என்ற சொல்லுக்கு தடவிக் கொடுத்தல் என்பது பொருளாகும். தடவிக் கொடுத்தல் என்று

சொல்லும்பொழுதே அசைவு, சலனம், சுழற்சி ஆகியவை தோன்றி விடுகின்றன. ஆகவே, 'விசும்பு தைவரு வளி' என்று கவிஞன் சொல்லும்பொழுது, ஆகாயத்தைத் தடவிக் கொடுக்கின்ற காற்று மண்டலம் என்று சொல்லும் பொழுது, ஓரளவு இப்பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்கிறதென்ற கருத்தையும் பெற வைக்கின்றான் புலவன். பூமியின் மேல் தொடங்கி விசும்பு மண்டலத்தில் விரிந்து செல்லும் இக்காற்று மண்டலம் விசும்பைத் தைவருகிறது; அதாவது தடவிக் கொடுக்கிறது என்று சொல்வானேயானால் அதில் ஏதோ ஒரு ஆழ்ந்த கருத்து இருத்தல் வேண்டும். தடவிக் கொடுக்கின்ற சிறப்பைப்பற்றிப் பாடும் பொழுதே அவ்வளி மண்டலத்தின் அசைவை அதாவது பூமியினுடைய சுழற்சியைக் கூறுபவனாக ஆதல் வேண்டும். இல்லாவிட்டால் 'விசும்பு தைவரு வளி' என்று கவிஞன் பாடியிருக்கமாட்டான். விஞ்ஞானக் கருத்தைப் பாடுவது புலவனுடைய நோக்கமன்று. கவிதை புனைய வந்த அவனிடம் இயல்பாக அமைந்துள்ள கூர்த்த அறிவும் விஞ்ஞான அறிவும் சேர்ந்து தொழிற்படத் தொடங்குகின்றன. அதன் பயனாகச் சிறந்த கவிதை ஒன்று பிறக்குமாறு செய்வதே அவனுடைய தலையாய நோக்கம். இரண்டாவதாகக் கிடைக்கும் பலன் அன்றைய மக்களிடம் காணப்பெற்ற விஞ்ஞான அறிவின் பிரதிபலிப்பாகும்.

❀❀❀❀❀

# 13. கவிஞன் கண்ட கனவு

கவிஞர்களே கனவு காண்பவர்கள்தாம். கனவு காணாவிடில் அவர்கள் எவ்வாறு கவிஞர்களாக ஆக இயலும்? கனவு காண்பது என்று கூறினவுடன் நம்மில் பலருக்கு ஒருவகையான சந்தேகம் தோன்றிவிடுகிறது. நாம்கூடப் பல சமயங்களிற் கனவு காண்கிறோம்; இன்னும் சில சந்தர்ப்பங்களிற் பகற்கனவு கூடக் காண்கிறோம். ஒருவேளை கவிஞன் கனவு என்பதும் இப்படித்தான் இருக்குமோ என்று யாரும் நினைத்துவிட வேண்டா. ஏன் என்றால் நாம் கவிஞர்கள் அல்லரே. நாம் காணும் பயனற்ற கனவுக்கும் கவிஞன் காணும் கனவுக்கும் வேறுபாடு மிகுதியும் உண்டு. நமது கனவில் ஏமாற்றந்தான் பிறக்கிறது; ஆனால், அவன் கனவில் உயிர்த்துடிப்பு உள்ள கவிதையல்லவா பிறக்கிறது? அப்படியானால் கனவு காணாமல் கவிஞனாக முடியாதா? முடியாது என்று கூறுவதே பொருத்தமுடைத்து. கவிஞன் கனவு காணாமல் இருந்தால் எதைப் பார்க்க முடியும்? நாம் அன்றாடம் காணும் இந்த உலகையும் இவ்வுலகில் உள்ள பொருள்களையுந்தானே பார்க்க முடியும்? பார்த்துவிட்டு அவன் கவிதை எழுதப் புகுந்... அக்கவிதையில் என்ன வரும்? நாம் காணும்...

உலகை நம்மைப் போலவே அவனும் பார்த்துவிட்டுக் கவிதை எழுதினால் நாம் முன்னரே கண்டுள்ள பொருள்களையும் காட்சிகளையும்தாமே அங்கும் காண முடியும்? அப்படியானால் அவன் கவிதை நாம் பள்ளிக் கூடத்தில் படிக்கும் சரித்திரம், நில நூல், சமுதாய நூல் போன்றே இருக்கும். ஒரே ஒரு வேறுபாடு என்ன வெனில் இது பாட்டுக்களாக இருக்கும். இவ்வாறு இருந்தால் யார் கவிதையை விரும்பிக் கற்பார்கள்? சரித்திரம் முதலிய நூல்கள் ஒரு பத்தாண்டுகள் ஆனதும் பயனற்றுப் போவது போல இக்கவிதையும் காலம் மாறினவுடன் அழிந்துவிடும். இவ்வாறு அழிவதை நாம் கவிதை என்று குறிப்பதில்லை. அவ்வாறாயின் கவிதை அழியாமல் இருக்க வேண்டும் என்று ஆகிறதல்லவா? அழியாத கவிதை எழுத வேண்டுமாயின் கவிஞன் கனவு கண்டால்தான் முடியும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எத்தனையோ கவிஞர்கள் அழியாக் கவிதை எழுதியுள்ளார்கள்; ஆம் கனவு கண்டுதான். அவருள் ஒருவர் திருத்தக்கதேவர். பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த இக் கவிஞர்பிரான் என்றும் வாழும் சாவாக் கவிதை எழுதியுள்ளார். அந்நூலின் பெயர் 'சிந்தாமணி' என்பதாகும். கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்கும் வழிகாட்டியாக இருந்த பெருமையுடையவர் திருத்தக்கதேவர். அவர் காலம்வரை பெருங்காப்பியங்கள் ஆசிரியப் பாவாலேயே ஆக்கப் பெற்றிருந்தன. ஆனால், கனவு

காண்பதிற் சிறந்த திருத்தக்கதேவர் ஏழாம் நூற்றாண்டில் தமிழ் மொழியில் தோன்றிய விருத்தப்பாவால் காப்பியம் அமைக்க முடியும் என்ற பேருண்மையை நிலைநாட்டினார். இவற்றில் எல்லாம் புதுமுறைகண்ட தேவர் தமது நூலிலும் கனவிற் கண்ட ஒரு நாட்டைப் படைக்கிறார்.

சீவகன் தோன்றும் பெருமையுடையது ஏமாங்கத நாடு. ஒரு நாட்டுக்குப் பெருமை கூறுவதானால் செல்வத்திற் சிறந்த நாடு என்றும், மாட மாளிகையும் கூட கோபுரங்களும் நிறைந்திருந்த நாடு என்றுங் கூறுதல் மரபு. ஆனால், தேவர் கண்ட கனவு நாட்டிற்கு வெறும் செல்வம் மட்டிலும் இருந்து பயனில்லை என்று நினைத்தார். கல்விச் செல்வம் இல்லாவிட்டால் ஏனைய செல்வங்கள் இருந்தும் பயனில்லை. 'அறிவுடையார் எல்லாம் உடையர் அன்றோ?' ஆதலின் நாட்டின் நிலைமை கூறும் முதற் பாட்டிலேயே, முதல் அடியிலேயே தேவர் சிறந்த ஒரு கருத்தை வைத்துப் பேசத் தொடங்குகிறார். நாட்டு மாந்தர் நன்கு வாழத் தேவையாய் உள்ளன யாவை? அறிவு முதற்கண் வேண்டும்; அடுத்தபடியாகச் செல்வம் வேண்டும். அறிவில்லாதவன் செல்வம், அறிஞனின் வறுமையைக் காட்டிலும் துன்பந்தரும் என்று வள்ளுவப் பெருந்தகை கூறிப் போனாரன்றோ?

"நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு" (குறள்: 408)

என்ற குறளை மனத்தில் வாங்கிக் கொண்ட தேவர் தாம் கூறும் நாட்டில் எது மிக இன்றியமையாதது என ஆய்ந்து, அறிவு முக்கியம் என்பதைக் கண்டு கூறுகிறார். அறிவை அடுத்து வேண்டப்படுவது செல்வம். எத்துணை அறிவையும் வறுமை கொன்று விடுமாகலின் அறிவு நல்ல முறையில் தொழிற்பட வேண்டுமாயின் செல்வமும் அறிவுடன் இருக்க வேண்டும் என்று கண்டார். இவை இரண்டும் இருந்தால்கூட ஒரு மனிதன் முழுத் தன்மையை அடைந்துவிட்டான் என்று கூறல் இயலாது. அவ்வறிவின் உதவியால் செல்வத்தை அனுபவிக்கத் தெரியவேண்டும். அவ்வாறு செய்வதே ஒரு கலை. கலை என்பது வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு பகுதி. கலையில் ஈடுபட ஒருவன் பழகிக் கொண்ட பொழுதுதான் முழுத் தன்மையடைகிறான். வெறும் அறிவுச் செல்வம் மட்டும் உடையவன் முழு வாழ்க்கையைப் பெற முடியாது. இம் மூன்றும் கலந்த வாழ்க்கையே முழு வாழ்க்கை. ஏமாங்கத நாட்டு மக்களும் மன்னனும் இம் மூன்றும் பெற்றிருந்தனர் எனத் தேவர் குறிக்கிறார்.

> "நாவீற்று இருந்த புலமாமக ளோடுநன்பொன்
> பூவீற்று இருந்த திருமாமகள் புல்ல நாளும்
> பாவீற்று இருந்த கலைபாரறச் சென்ற கேள்விக்
> கோவீற்று இருந்த குடிநாட்டணி கூறல் உற்றேன்"
>
> (சிந்தா: 30)

என்று அவர் கூறும்பொழுது சாதாரணமாக நாம் அன்றாடம் காணும் நாட்டை அவர் கூறவில்லை

என்றும், ஒரு கனவு நாட்டைக் கூறத் தொடங்குகிறார் என்றும் அறிய முடிகிறது. இனி, இந் நாட்டின் இயற்கை வளம் கூறத் தொடங்கிய ஆசிரியர், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நானில வளமும் செறிந்துள்ளமையை ஒரே பாடலில் அழகாகக் குறிக்கிறார்.

உயர்ந்த தென்னையில் பழுத்த தென்னை நெற்று உதிர்கிறது; ஆனால், அதனையடுத்து மிக்க உயரமாக வளர்ந்துள்ள கமுக மரத்தின்மேல் விழுகிறது. அடுத்து இருக்கும் தேன் பொந்தில் பட்டு, பலா மரத்தில் பழுத்து நிற்கும் ஒரு பழத்தினைச் சாடி, இன்னும் கீழே இருக்கும் மாமரத்தில் உள்ள கனிகளை உதிர்த்துவிட்டு, இறுதியாகத் தரையில் விழுமுன்னர் வாழை மரத்தில் உள்ள வாழைக் குலைகளையும் சிந்திவிட்டுத் தரையில் விழுகிறதாம். இக் காட்சியில் யாருக்காவது சந்தேகம் ஏற்படுமேயானால் பக்கத்திலேயே இருக்கும் இலங்கைத் தீவுக்கு ஒரு முறை சென்று வந்தால் இக் கவிதை எவ்வளவு மெய்யானது என்பது விளங்கும்.

இன்னும் ஏமாங்கத நாட்டில் நீர் வளம் பற்றிப் பேசுகிறார் ஆசிரியர். "மேகங்கள் கடலில் மேய்ந்து சிவபெருமான் சடைபோல் மின்னி, வெள்ளித் தாரைகள் போல் மழை பொழி"கின்றதாம். இதனாலாய 'நீர்ப்பெருக்கம்' மலையிடத்துண்டான செல்வங்களை எல்லாம் அடித்துக் கொண்டு வந்து

'வள்ளல்கள்' போல் பள்ளத்தாக்கில் உள்ளவர்கட்குத் தருகிறதாம். உணவு வளம் பேச வந்த ஆசிரியர்

> 'செந்நெல்' குப்பைகள் கோடுயர் செம்பொன்னின்
> குன்றம் ஒத்தவே' (சிந்தா: 59)

என்று கூறிவிட்டு வாணிகநிலையைப் பற்றியும் பேசுகிறார்.

வியாபாரம் மிகுதியும் நடைபெற்று வந்ததாம் ஏமாங்கத நாட்டில். நெல், கரும்பு, இளநீர், பாக்கு, வெற்றிலை, கடல் வளமாகிய உப்பு, மீன் முதலிய வற்றையும் ஏற்றிக் கொண்ட வண்டிகள் "திருந்தி எத் திசைகளும் செறிந்த" என்று கூறுகிறார் ஆகலின் கனத்த வாணிகமும் அந்நாட்டில் நடைபெற்றமை அறிகிறோம். இங்குக் கூறிய அனைத்துப் பொருள்கள் செல்வது ஒரு வியப்பன்று. ஆனால், "மணநிலை மலர்பெய்து மறுகும் பண்டி"யையும் ஆசிரியர் கூறுகிறார். மணம் மாறாத மலர்களை வண்டியில் ஏற்றிச் சென்றார்கள் என்கிறபொழுது அந்நாட்டு மக்களின் 'முருகியல் சுவை' எவ்வாறு இருந்திருக்கும் என்று நினையவேண்டி உளது.

இவ்வளவு அருண்மயான நாட்டைப் படைத்த ஆசிரியர் அந்நாட்டு மக்களையும் படைக்கிறார். 'சோம்பி இருப்பவன் மனம் சாத்தான் குடி இருக்கும் வீடு' என்பது மேனாட்டார் கூறும் பழமொழி. தீர்க்கதரிசியாகிய கவிஞன் தான் படைத்த நாட்டு மக்கள் பெரிய உழைப்பாளிகள் என்று கூறுகிறான்.

உழைப்பாளிகள் என்று நாம் கூறுவதுபோலக் கூறுவது கவிஞனுக்கு அழகன்று. எனவே அவர்கள் உழைப்புக்கு ஒரு எல்லை காட்டுகிறான். இதுவரை அவன் கூறிய பாடல்களால் நாட்டின் இயற்கைவளம், நீர்வளம் நிலவளம் முதலியவற்றைக் கண்டவுடன், எவ்வித முயற்சியும் இல்லாமலே இந்நாட்டு மக்கள் இப்பயனை அடைந்துவிட்டார்கள் போல் இருக்கிறது என்று நம்மில் யாரேனும் நினைத்து விடுவோம் அல்லவா? அதனை மறுத்து மக்கள் உழைப்பின் எல்லையைக் கூற வந்த கவிஞன் தனக்கே உரிய முறையில் '**மீன்கணின் அளவும் வெற்றிடங்கள் இன்மையால்**' என்றான். மீனினுடைய கண் எவ்வளவு சிறியது; அந்த அளவு நிலங்கூடப் பண்படுத்தப்படாத தரிசு கிடையாது என்றால் அம் மக்கள் உழைப்பை என் என்று கூறுவது? ஒரு நாட்டில் பண்படுத்தப் பெறாத தரிசு நிலம் இருக்கிறது என்றால் அதற்கு இரு காரணங்கள் இருக்கலாம். ஒன்று நீர்வளம், இல்லாமல் இருப்பது; அது இருந்தும் மக்கள் உழைப்பில்லாமல் இருப்பது. ஏமாங்கத நாட்டில் நீர்வளம் மிகுதி என்று ஆசிரியர் கூறிவிட்டமையின் இப்பொழுது மீன் கண் அளவு இடம்கூட வெற்றிடம் இல்லை என்றார். அதனால் அவர்கள் உழைப்பை அறிவித்தவாறு ஆயிற்று.

இவ்வளவு உழைத்துப் பொருள் தேடும் அம் மக்கள் எவ்வாறு அப்பொருளைச் செலவு செய்கிறார்கள் என்று தெரிய வேண்டாவா? பொருளைச் சேகரிப்பது யாவருஞ் செய்யக்கூடிய

எளிய செயலாகும். ஆனால், சேர்த்த பொருளைத் தமக்கும் பிறருக்கும் நற்பயன் விளையுமாறு செலவு செய்தல் யாவரும் செய்யக்கூடியதன்று. ஏமாங்கத நாட்டார் செலவு செய்யும் வகையைத் தேவர் குறிக்கிறார்.

''அடிசில் வைகல் ஆயிரம், அறப்புறமும் ஆயிரம்''
(சிந்தா: 76)

என்ற அடியால் அறச்சாலைகளும், அடிசில் ஆக்கி யாவர்க்கும் வழங்குகிற சாலைகளும் ஆயிரக்கணக்கில் இருந்தன என்று குறிக்கிறார். கரிகாற் பெருவளத்தான் என்ற சோழன் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றி ஒரு புலவர் கூறிய சொற்கள் நினைவுக்கு வருகின்றன. அறச் சாலைகளில் 'சோறு ஆக்கிய கொழுங்கஞ்சி ஆறுபோலப் பரந்து ஒழுகிற்று' என்றார் அப்புலவர். அந்நிலையில் நாடு இருக்க வேண்டும் என்று கருதிய திருத்தக்கதேவரும் ஆயிரக்கணக்கான வகைகளில் அடிசில் ஆக்கும் சாலைகளும் ஆயிரக்கணக்கில் இருந்தன என்றார். இத்தகைய அறச்சாலைகள் இருந்தன என்றால் இவற்றை மக்கள்தாமே வைத்துத் தாங்கி இருத்தல் வேண்டும்? எனவே, அவர்கள் சம்பாதித்த பொருள் தக்க வழியில் செலவு ஆயிற்று என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டன்றோ? இவ்வாறு அறஞ் செய்கின்ற மக்கள் நிறைந்திருந்தமையின், உலகில் தவஞ் செய்ய விரும்புபவர்களும்கூடக் காடு தேடிச் செல்லாமல் இந்நாட்டில் தங்கித் தவஞ்செய்தனர் என்ற கருத்துப்படத் தேவர்,

'நற்றவஞ் செய்வார்க் கிடம், தவஞ் செய்வார்க்கு
மஃ்திடம்'
(சிந்தா: 77)

என்று கூறினார். எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டித் தவம் மேற்கொள்கிறவர்களுங்கூட அந்நாட்டில் தங்கித் தவஞ்செய்வதால் தவறு இல்லை என நினைப்பார்கள் ஆயின் அந்நாட்டில் வாழும் மக்களுக்கு அதனைவிடச் சிறந்த சிறப்பு ஒன்றைக் கூற முடியாது.

இனித் தேவர் கண்ட கனவு நாட்டின் அரசியல் பற்றி ஒரு சிறிது காணல்வேண்டும். ஏமாங்கத நாட்டை ஆட்சி செய்பவன் சச்சந்தன் என்னும் அரசன். பரம்பரையாக அரசு கட்டிலுக்கு உரிமை உடையவன்தான். என்றாலும் தான் அரசனாக இருக்கின்ற காரணத்தால் ஏனைய மக்களை ஆட்டுமந்தை என்று நினைப்பவன் அல்லன் அவன். தேவர் காப்பியஞ் செய்த காலத்தில் முடியாட்சிதான் இங்கு நிலைத்திருந்தது. ஆனால், மன்னன் மக்களுக்காகத்தான் அரசாள்வதாகக் கருதி ஆட்சி செய்தான். 'யான் உயிர் என்பது அறிகை, வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே' என்ற கருத்தை நன்கு அறிந்திருந்த இம்மன்னன் உலகைக்காக்கும் உயிராக யான் இருக்கிறேன் என்றே ஆட்சி செலுத்தினான். ஆட்சி செய்யும் மன்னர்கள் இத்தகைய மனநிலை உடையவர்களாக இருத்தல் வேண்டும் என்று தமிழ்ப் புலவர்கள் என்றுமே கூறி வந்துள்ளனர். எனவே,

மன்னனுக்கு வேண்டும் என்று கருதப்பெற்ற சிறந்த பண்பாட்டை எல்லாம் தாங்கள் கூறும் மன்னனுக்கு ஏற்றியே ஒவ்வொரு புலவரும் பாடிப் போயினர். திருத்தக்கதேவரும் இவ்விதிக்கு விலக்கல்லர். சச்சந்தன் என்ற இம் மன்னன் வண்மையால் 'கலிமாற்றினான்' என்கிறார் தேவர். எனவே, கலிகாலம் என்றால் வறுமை மிகுந்த மக்களுள் உடையவர், இல்லாதவர் என்ற வேறுபாடு மிகுத்துவிட்ட காலம் என்பதே பொருள் போலும். ஆதலின், இம் மன்னன் தனது மிகுந்த வள்ளன்மையால் கலியின் கொடுமையை இல்லாது செய்தான் என்கிறார். மேலும், உயிர்கட்குக் கருணை செய்தலின் அறக்கடவுள்போல் இருந்தான் என்கிறார். அரசனாக இருப்பவன் கருணை செய்வதில் வேண்டியவர் வேண்டாதவர் என்ற வேறுபாடு பாராட்டுவானேயாயின் நாடு பாழாகிவிடும் அல்லவா? அதற்காகவே தேவர் தனது கனவு நாட்டில் ஆட்சி செய்யும் அரசன் கண்ணோட்டம் என்று கூறப்பெறும் கருணை காட்டும்பொழுது அனைவருக்கும் ஒன்றாகவே அதனைச் செய்தான் என்று கூறுகிறார். இப்படி விவரமாகக் கூறினால் அது கவிதையாகாது ஆகலின் சுருங்கக் கூறி விளங்க வைக்கும் அழகுபற்றி '**தருமன் தண்ணளியால்**' என்றார். அறக்கடவுள் போன்றவன் என்று கூறிவிட்டமையின் தனது சொந்த விருப்பு வெறுப்புகளைப் பாராட்டாதவன் என்பது பெறப்பட்டு விட்ட தன்றோ? அரசனுக்கு இரண்டு நிலையுண்டு. அரசியலைத் தாங்கி நடாத்தும் நிலையில் அவன்

யாவருக்கும் பொதுவானவன்; ஆனால், மனிதன் என்ற நிலையில் அவனுக்கு விருப்பு வெறுப்புகள் அனைத்தும் உண்டு. இவ்விரண்டு நிலைகளும் வேறு வேறானவை எனினும் ஒரே மனிதனிடம் இருக்கின்றனவாகலின் அரசன் ஒரு நிலையில் நின்று கடமையை ஆற்றும் பொழுது மற்றொருநிலை அவனை வந்து பாதித்தல் கூடாது. இக்கருத்தையும் தேவர் அழகாகக் குறிப்பிடுகிறார். 'ஈகையால் வருணன்' என்ற தொடரால் அரசனின் நடுவு நிலைமை குறிக்கப் பெறுகிறது. மழை எவ்வாறு தகுதி பாராது, வேண்டியவர் வேண்டாதவர் என்றுங் கவலை கொள்ளாமல் பொழிகிறதோ அவ்வாறு இவன் ஈகை அனைவருக்கும் பயன்பட்டது என்பதைக் குறித்தார்.

> "தருமன் தண்ணளி யால்; தனது ஈகையால்
> வருணன்; கூற்றுஉயிர் மாற்றலின்; வாமனே
> அருமை யால்; அழகில் கணை ஐந்துடைத்
> திரும கன்; திரு மாநில மன்னனே" (சிந்தா: 160)

ஆதலின் இத்தகைய மன்னனுக்கு நிறைந்த புகழ் இருக்கும் என்பதில் ஐயம் என்ன? எனவே ஆசிரியர் 'வானந்தோய் புகழான்' என்று குறிக்கிறார்.

அரசன் என்ற மனிதனுடைய வாழ்க்கை அதிகப் பங்கு கொள்ளுமாயின் அவன் கடமையை நன்கு நிறைவேற்றல் இயலாது. இல்வாழ்க்கை யாவர்க்கும் உரியதொன்றாகும். ஆனால், அரசனுக்குரிய கடமைகளைச் செய்யக்கூட நேரமில்லாமல் அந்தப்புரத்தில் இருக்க வேண்டும் என்று ஓர் அரசன்

கருதுவானாயின் அவன் வாழ்க்கையும் கெட்டு அரசப் பதவியையும் இழக்க நேரிடும்.

இங்ஙனம் இன்பம் ஒன்றையே பெரிதாகக் கருதிக் கடமையை மறந்த மன்னர்களை அரசாட்சியும் மெல்ல விட்டு நீங்கிவிடும் என்று தேவர் அழகாகக் குறிக்கிறார். 'யானை உண்ட விளங்கனி' என்பது பழமொழி. பழம் உருவத்தால் அப்படியே இருக்க உள்ளே ஒன்றும் இல்லாது போதலே 'யானை உண்ட விளங்கனி' என்று கூறப்பெறும். இத்தகைய கடமையை மறந்த மன்னர்களும் புறத்தோற்றத்தில் மன்னர்கள் போலவே இருக்க உள்ளே அவர்களுடைய செல்வம் முற்றும் நீங்கிவிடும். இதனை 'யானை உண்ட விளங்கனிபோல' என்று தேவர் கூறுகிறார்.

தேவர் கனவு இவற்றோடு நிற்கவில்லை. மனிதன் இயந்திரத்தின் உதவியால் விண்ணில் பறக்கலாம் என்று கூறியவரும், ஏறத்தாழத் தற்கால விமானம் போன்ற அமைப்பையுடைய ஓர் இயந்திரத்தைக் கவிதையில் காட்டியவரும் திருத்தக்கதேவரேயாவர்.

❀❀❀❀❀

# 14. குமரகுருபரர் தமிழைப் பாடியது ஏன்?

பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சேக்கிழார் பெருமான் பாடிய திருத்தொண்டர் புராணத்திற்குப் பிறகு இருபதாம் நூற்றாண்டு வரைத் தமிழ் மொழியில் மாபெரும் இலக்கியம் என்று கூறத் தக்க பெருநூல் எதுவும் தோன்றவில்லை. இந்த எட்டு நூற்றாண்டுகளிலும் தமிழ்மொழி வளர்ச்சி அடைய வில்லை என்றுதான் கூறல் வேண்டும்.

இந்தப் பொதுக் கருத்துக்கு எதிராக 'எம்மிலும் உளன் ஒரு பொருநன்' என்று கூறத்தக்க முறையில் தோன்றிய பெரும் புலவரைப் பற்றிக் குறிப்பிடல் வேண்டும். இவர் 17ஆம் நூற்றாண்டில் தோன்றிய தவமுனிவராம் குமரகுருபரர். மேலே கூறப் பெற்ற பொதுக் கருத்துக்குப் புறனடையாக உள்ளவர். இவரிடம் காணப்பெறும் ஒரு புதுமையை ஆய்வதே இக்கட்டுரையின் கருத்தாகும்.

சங்கப் பாடல்கள் தொடங்கி, இருபதாம் நூற்றாண்டு வரை உள்ள தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து நோக்கினால் ஒரு தனித் தன்மையைக் காணாமல் இருக்க முடியாது. இத் தமிழர் தம்

மொழியாகிய தமிழின் மாட்டுக் கொண்டிருந்த ஆராக்காதலை இவ்விலக்கியங்கள் காட்டி நிற்பதை நன்கு அறிய முடியும். உலகின் வேறு எந்த மொழியில் தோன்றிய இலக்கியங்களும் தம் மொழியை இத்துணை ஆர்வத்தோடு குறிப்பிட்டுப் பேசுவதில்லை. இதுவே ஒருபுதுமைதான். என்றாலும் இத்தமிழரின் ஆற்றொழுக்குப் போன்ற வாழ்க்கையில் அவ்வப்பொழுது சிலசில தடைகள், எதிர்ப்புக்கள் தோன்றியதை வரலாறு அறிந்தவர்கள் நன்கு அறிய முடியும். சாதாரண முறையில் போகிற போக்கில் தம் தமிழ்ப்பற்றை வெளியிட்டுச் செல்லும் தமிழ்க் கவிஞர்கள் சிற்சில சமயங்களில் வீறுகொண்டு எழுந்து தமிழின் சிறப்பையும் அதன் தெய்வத் தன்மையையும் விடாமல் அடிக்கடி கூறிச் செல்வதைக் காணமுடிகிறது. இவ்வாறு எந்தக் கவிஞரேனும் கூறியிருப்பின் அந்த இடத்தில் நின்று நிலைத்துத் தமிழக வரலாற்றைக் காண முற்பட வேண்டும். இவ்வாறு செய்வது பெரும் பயன் விளைப்பதுடன் ஏன் இக் குறிப்பிட்ட புலவர்கள் மட்டும் தமிழை இவ்வளவு தூரம் உயர்த்திப் பாட வேண்டும் என்பதன் உட்பொருளையும் அறிந்து கொள்ள உதவும்.

தமிழ் நாட்டில் தமிழராகப் பிறந்த ஒரு புலவர் தமிழ்க் கவிதைகளைத் தமிழருக்காகப் பாடும் பொழுது ஏன் அந்த மொழியின் சிறப்பை இவ்வளவு

விரிவாகக் கூற வேண்டும்? என்ற வினா நியாய மானதேயாகும். உலகின் வேறு எந்த மொழியிலும் காணப்படாத ஒரு புதுமையாகும் இது! பிறந்தகத்துப் பெருமையை உடன் பிறந்தவளிடமே கூறுவது ஓரளவு நாணந் தருவதாகுமன்றோ? அப்படி இருந்தும் திருஞானசம்பந்தர், குமரகுருபரர் என்ற இரண்டு பெருமக்களும் தமிழின் சிறப்பை வலியுறுத்திப் பாடுவதைக் காண்கிறோம். திருஞானசம்பந்தர் 7ஆம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர்; குமரகுருபரர் 17ஆம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்தவர். இவர்கள் இருவரையுந் தவிர 20ஆம் நூற்றாண்டில் வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த பாரதி, பாரதிதாசன் இருவரும் தமிழின் சிறப்பை அழுத்தந் தந்து பாடிச் சென்றனர். தமிழ் இலக்கியப் பரப்பில் இந்த நால்வரும் தமிழின் சிறப்பைத் தனி இடந் தந்து பாடுவதில் தலை சிறந்தவர்கள் ஆவார்கள். அப்படி ஆனால் இவர்களிடைக் காணப்பெறும் பொதுத் தன்மை யாது? இவர்கள் நால்வரும் வாழ்ந்த காலங்களில் தமிழினம் அந்நியர் ஆட்சியில் சிக்கி இருந்தது; அந்த ஆட்சியாளர்கள் தமிழ் மொழி வளர்ச்சியில் எவ்வித நாட்டமும் கொள்ளவில்லை.

அக்காலத்தில் வாழ்ந்த தமிழர்களைத் தட்டி எழுப்ப இந்த நால்வரும் தமிழின் சிறப்பைக் குறிப்பிட்டுப் பாடும் முறையை ஒரு கருவியாகக்

கொண்டனர் என்று நினைக்கத் தோன்றுகிறது. திருஞானசம்பந்தர் காலத்தில் பல்லவர் ஆட்சி வலிவுடன் தமிழகத்தில் கால் கொள்ளத் தொடங்கியது. தண்டன் தோட்டச் செப்பேட்டின் படிப் பார்த்தால் பல்லவர்கள் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த வைதிகர்களை ஆயிரக் கணக்கில் வடக்கே இருந்து தருவித்துத் தமிழகத்தில் குடியேற்றினர் என்று அறிய முடிகிறது. இறக்குமதி செய்யப் பெற்ற வேத வழக்கொடுபட்ட இந்த வைதிகர்கள் தமிழகத்தில் உள்ள கோவில்களிலும், கடிகைகளிலும் வேத பாடசாலைகளிலும், மடங்களிலும் பணிசெய்ய வாய்ப்பளிக்கப் பெற்றது. இந்த வைதிகர்கள் இத்தமிழர் போற்றும் சிவ வழிபாடு, கோயில் பூசை, அபிடேகம், அர்ச்சனை, தமிழில் பாடுதல் என்ற எதனையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள். இவர்கள் செய்த வாஜபேயம் முதலான 21 வகை வேள்விகள் எதுவும் சிவ பெருமானைத் தலைவனாகக் கொண்டு செய்யப் பெற்றவை அல்ல. ஆகமங்கள் என்பனவற்றையும், அவற்றிற் குறிக்கப்பெற்ற வழிபாட்டு முறைகளையும் இவர்கள் ஏற்கவில்லை. மேலும் தமிழ் மொழியின் சிறப்பையோ, அம்மொழி மூலம் வழிபாடு செய்யலாம் என்பதையோ இவர்கள் அறியாதவர்கள். கோவில், விக்ரகவழிபாடு என்பவற்றை நம்பாதவர்கள் ஆயினும் பல்லவர்கள் இவர்கட்கு வேலை தரவேண்டும் என்பதற்காகக் கோயில் பூசகர்களாக இவர்களை நியமித்தனர். நம்பிக்கை இல்லாவிடினும்

ஊதியத்திற்காக மேற்கொண்ட தொழிலாகவே இவர்கள் பூசகர் பணியை மேற்கொண்டனர். இவர்கள் மூலமாகத்தான் தமிழகச் சிவன் கோவில்களில் ஸ்ரீருத்திரம் சொல்லும் பழக்கம் ஏற்பட்டது போலும். ஆட்சியாளருடைய முழு ஆதரவையும் இந்த வைதிகர்கள் பெற்றிருந்தமையின் இவர்களை யாரும் அசைக்க முடியவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தமிழர்களுடைய மொழி, நாகரிகம், பண்பாடு என்பவற்றிற்கு வந்த இந்தப் பேராபத்தை எதிர்த்துப் போராட வந்தவர் திருஞான சம்பந்தர். இந்த வைதிகர்கள் நம்பிக்கை கொள்ளாத கோவில் வழிபாடு, அபிடேகம், அர்ச்சனை என்பவற்றைப் பலமுறை கூறுகிறார் அப் பெரியார். வழிபாடு வடமொழி மூலமாகத்தான் நடைபெற வேண்டும் என்ற வைதிகர்களிடையே, ஆளுடைய பிள்ளையார்,

"தம்மலர் அடியொன்று அடியவர் பரவத்
தமிழ்ச் சொலும் வடசொலும் தாள் நிழற் சேர''
(திருமுறை: 1, 77, 4)

"தென் சொல், விஞ்சமர் வடசொல்,
திசை மொழி, எழில் நரம்பெடுத்துத்
. . . . . . . . . . . . . .
தொழுதெழு தொல் புகலூரில்''
(திருமுறை: 2, 92, 7)

"... .........
முத்தமிழ் நான்மறை ஞான சம்பந்தன்
ஒண் தமிழ் மாலை கொண்டு ஆம்படி இவை
ஏத்தவல்லார்க்கு அடையா வினையே''
(திருமுறை: 3, 2, 11)

'ஆரியத் தொடு செந்தமிழ் பயன் அறிகிலா
அந்தகர்க்கு எளியேன் ஆலேன்''
(திருமுறை: 3, 39, 4)

என்றெல்லாம் பாடிக் காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. தாம் பாடிய பதிகங்கள் அனைத்திலும் இறுதிப் பாடலில் தம் பெயரைக் கூறும் பொழுது தமிழொடு சார்த்தியே கூறுவது ஏன் என்பதை ஒருவாறு அறிய முடிகிறது. மொழிக்கும், பண்பாட்டிற்கும் இடுக்கண் வரும் பொழுதுதான் இவ்வளவு தூரம் இதனை வலியுறுத்திப் பாட வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதன் பிறகு 15ஆம் நூற்றாண்டு முடிய தமிழர் வாழ்வில் அதிக இடையூறுகள் எதுவும் நேரவில்லை. 14, 15ஆம் நூற்றாண்டு வாக்கில் தமிழ் மன்னர்கள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கினர். 16 ஆம் நூற்றாண்டில் இவர்கள் பெயர் கூறக்கூட ஆள் இல்லாமல் போய்விட்டது. அதைவிட இன்றியமையாத ஒரு நிகழ்ச்சியும் இங்கு

*நடைபெற்றது. 13ஆம் நூற்றாண்டின் முடிவில், 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் மன்னர்கள் யாரும் பெயர் கூறும் அளவிற்கு இன்மையின் விசயநகரத்தார் செல்வாக்கு ஓங்கிற்று. அவர்களுடன் கருநாடகத்தாரும், பிஜாப்பூர், கோல்கொண்டாப் பகுதி இஸ்லாமிய மன்னர்களும், தத்தம் செல்வாக்கைத் தமிழகத்தில் செலுத்தி வந்தனர். இந்த 3 அல்லது 4 நூற்றாண்டுகளில் தமிழ் மொழியின் நிலை மிகவும் கீழ் இறங்கிவிட்டது. மறுபடியும் தமிழர் தம் தாய் மொழியை மறந்து ஆட்சியாளர் மொழியில் ஈடுபாடு கொண்டு நிற்கும் அவலநிலை தோன்றலாயிற்று. இந்த நிலையில் 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றினார் குமரகுருபரர் என்ற பெரியார். கருவில் திருவுடைய இப்பெரியார் வாய் பேசாதிருந்து, செந்தில் ஆண்டவன் திருமுன்னர்க் கிடத்தப்பெற்ற பொழுது வாய் திறந்து* '**பூமேவு செங்கமலப் புத்தேளும்**' *என்று தொடங்கும் கந்தர் கலிவெண்பாவைப் பாடத் தொடங்கினார். இறையருளைப் பூரணமாகப் பெற்றுப் பாடினவர் எனினும் அப் பாடலில் முருகப் பெருமான்* **"இடுக்கண், எல்லாம் பொடி படுத்து எவ்வரமும் தந்து புகுந்து, உல்லாசமாக உளத்து"** *இருக்கின்ற நிலையில் அவனிடம் முற்றும் துறந்த முனிபுங்கவர் வரம் ஒன்று வேண்டுகின்றார்.*

'ஆசு முதல் நாற்கவியும் அட்டாவதானமும் சீர்ப்
பேசும் இயல் பல்காப்பியத் தொகையும்—ஓசை
எழுத்து முதலாம் ஐந்திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப் புலமை பாலித்து. . .

(சகல. மாலை: 118, 119)

*அருள வேண்டும் என்பது அவருடைய வேண்டுகோள். இதனையடுத்து அவர் வேண்டும் ஒன்றையுங் காண்டல் வேண்டும்.*

'இம்மைப் பிறப்பில் இருவாதனை அகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்—தம்மை வருத்து
ஆயும் பழைய அடியாருடன் கூட்டித்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட் கொண்டு
அடியேற்கும் முன்னின்று அருள். . . . . . . '

(கலிவெண்பா: 120–22)

*என்பதே அவர் வேண்டுவது.*

*அகப்பற்று முதலியவற்றைத் தடிய வேண்டும், பழைய அடியாருடன் கூட வேண்டும், அவன் திருவடிகளைக் காணவேண்டும், அதற்கு அவன் அருள் புரிய வேண்டும், என்று வேண்டுபவர் இதற்கு எவ்விதத் தொடர்பும் இல்லாத, கவிபாடும் சக்தியும் பழுத்த தமிழ்ப் புலமையும் வேண்டும் என்று கேட்பது விந்தையேயாகும்! 120—22 கண்ணிகளில்*

*இவர் கேட்கும் வரத்தை அப்படியே கேட்டவர் மணிவாசகர். ஆனால் அவர்* 'கற்றாரை யான் வேண்டேன்; கற்பனவும் இனி அமையும்' *(திருமுறை 8:) என்றல்லவா பாடிப் போனார்? அப்படி இருக்க முனிபுங்கவர் பழுத்த தமிழ்ப் புலமையை ஏன் விரும்பிக் கேட்க வேண்டும்? மேலும் ஆசு முதல் நாற்கவியும் பழுத்த தமிழ்ப் புலமையும் கருவில் திருவுடைய இவருக்கு ஏற்கனவே கைவந்தவையாகும். இதனைக் கேட்டுப் பெறவேண்டிய நிலையில் அவர் இல்லை.*

*அவ்வாறானால் இவ்வாறு இவர் பாடுவதற்குத் தகுந்த காரணம் இருத்தல் வேண்டும். இனி இவருடைய நூல் முழுவதும் காண்போமேயானால் தமிழின் சிறப்பை அடிக்கடி நினைவூட்டுதலைக் காணலாம். வடநாட்டில் வேற்று மொழி பேசும் இஸ்லாமியர் இடையே வாழ்ந்த பொழுது சகலகலா வல்லி மாலை பாடுகிறார். அதிலும்,*

'நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர
நாற்கவியும்
பாடும் பணியில் பணித் தருள்வாய்'

*என்று பாடிச் செல்பவர் திருஞானசம்பந்தனாரைப் போலவே ஓயாமல் தமிழின் பெருமை, சுவை, என்பவற்றுடன் அதன் கடவுள் தன்மையையும் சுட்டிச் செல்வது வியப்பை அளிக்காமல் இராது.*

*தமிழ்ப் பற்றி இப்பெருமகனார் குறித்துள்ள அனைத்தையுங் குறித்தல் இங்கு இயலாது எனினும் ஒன்றிரண்டைக் காணலாம்.*

*மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம் என்ற இரண்டும் மதுரையுடன் தொடர்பு உடைய பாடல்கள்; எனவே கவிஞர் தமிழைப் பற்றி விரிவாகப் பாடிச் செல்கிறார்.*

> **'தெளிதமிழ் மதுரை' (22) 'அன்னம் பொலியும் தமிழ் மதுரை' (24), 'தெய்வத் தமிழ்க் கடல்' (49), 'தென்னந் தமிழின் உடன் பிறந்த சிறுகால்' (24), 'சங்கம் வளர்ந்திட நின்ற பொலன் கொடி' (29), 'தமிழொடு பிறந்து பழமதுரையில் வளர்ந்த கொடி' (34), 'மதுரம் ஒழுகும் கொழி தமிழ்ப் பனுவல் துறை படிந்தாடியும்' (55), 'நறை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகும் நறும் சுவையே' (62), 'முது தமிழ் உததியில் வரும் ஒரு திருமகள்' (53), 'பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப்பசுங் கொண்டலே' (3), 'பண்டு தமிழ்க்கோர் பயனே! சவுந்திர பாண்டியனே' (149), 'தோலா முத்தமிழ் நாவர்' (379), 'தெளி தமிழின் வடித்திடு நவரசம்' (440), 'மதுரம் ஒழுகும் கொழி தமிழ்ப் பனுவல் துறை படியும்' (55).**

*இவற்றுடன் நில்லாமல் அம்மை மீனாட்சியாகவும் ஐயன் சௌந்திரபாண்டியனாகவும் முருகப் பெருமான் உக்கிர குமார பாண்டியனாகவும் மதுரையில் ஏன் வந்தனர் என்பதற்குக் காரணம் கூறத் தொடங்கி,*

> 'தமிழ் மதுரம் கட்டுண எழுந்த வேட்கையால்
> இக் கொழிதமிழ்ப் பெருமை யார் அறிவார் எனில்'
> (மதுரை: கல: 196)

*என்று மதுரைக் கலம்பகத்தில் பேசுகிறார். மதுரை என்றதால்தான் இவ்வாறு பாடுகிறார் என்று நினையத் தேவை இல்லை. சோணாட்டில் உள்ள வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ள முத்துக்குமாரனைப் பாடும் பிள்ளைத் தமிழிலும் கவிஞரின் உள்ளக் கிடக்கையைக் காணமுடிகின்றது.*

> **'கொழி தமிழ் வேதபுரிக் குமரேசன்'** (386), **'மும்மைத் தமிழ் சேர் கந்தபுரி'** (391), **'தமிழ் வேளூர் அடிகேள்!'** (376), **'சங்கத் தமிழின் தலைமைப் புலவா!'** (378), **'தெளிதமிழ் பழகிய மதவலி'** (389), **'தென்கலைக்கு பழைய வட கலைக்கும் தலைவர'** (433), **'முத்தமிழ் பயில் பருதிப்பதி'** (437).

*என்பன போன்ற தொடர்கள் அளப்பிலவாகும். முருகப் பெருமான் முதல் சங்கத்தில் இருந்து தமிழை ஆய்ந்தான் என்பதை,*

'. . . . . . . . . . . . . . முதற் சங்க
தலைப்பா வலர்தீஞ் சுவைக் கனியும்
தண்தேன் நறையும் சுவைக் கனியும்
சாரம் கனிந்துஊற் றிருந்த பசும்
தமிழும் நாற . . . .'

*அவன் திருவாயில் தமிழ் மணம் வீசுகிறது என முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழில் பாடுகின்றார்.*

*இதுவரைக் கூறியவற்றை ஒருமுறை படிப்பவரும் 8 முதல் 20ஆம் நூற்றாண்டுவரை இருந்த புலவர்களுள் தமிழுக்கு 234 இடங்களில் இத்துணைச் சிறப்புத் தந்து பாடியவர் வேறு யாரும் இல்லை என்பதை அறிய முடியும். 7ஆம் நூற்றாண்டில் பிள்ளையார் இதே போலப் பாடக் காரணம் யாது என்பது முன்னர்க் குறிக்கப் பெற்றது.*

*17ஆம் நூற்றாண்டில் தெலுங்கர் ஆதிக்கத்தில் தமிழ் வளம் குறைந்த நிலையில் இம்முனிபுங்கவர் தோன்றித் தமிழின் பெருமையைக் கூறித் தமிழர்களைத் தட்டி எழுப்ப முனைகின்றார்.*

*7ஆம் நூற்றாண்டிலும் 17ஆம் நூற்றாண்டிலும் தமிழ் மொழியின் நிலைமை ஒரே மாதிரியாக இருந்தமையாலும் முதலில் வடமொழி ஆதிக்கமும் பின்னர்த் தெலுங்கு, கன்னட மொழிகளின்*

ஆதிக்கமும் தமிழை அமுக்தினமையால்தான் இந்த இருவரும் இப்பணியில் ஈடுபட்டனர். இதிலும் ஒரு தனிச் சிறப்பைக் காணமுடிகிறது.

இருவருமே கருவில் திருவுடையவர்கள். இருவருமே ஏட்டுக் கல்வியை முறையாக யாரிடமும் பயிலாமல் திருவருளால் '**உவமையிலாக் கலை ஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்**' (பெ.பு: 1973) ஆகிய இரண்டையும் கைவரப் பெற்றவர்கள். இருவருமே குழந்தைப் பருவத்தில் தாம் உலகிடை வருவதற்கு காரணமான பணியைத் தொடங்கிவிட்டனர். வழிபாட்டில் நம்பிக்கை உடையவர்கள் எனினும் இறைவனுக்கு உகந்தது மலர் மாலையைவிடத் தமிழ்ப் பாமாலையேயாகும் என்பதை நன்கு அறிந்து உணர்ந்து கூறியும் சென்றுள்ளனர். சொன் மாலை, பாமாலை என்று தம் பாடலைப் பிள்ளையார் பன்முறை கூறுகிறார். குமரகுருபரரும் '**ஒண்மலர்** சொல் மலர்க்கு ஒவ்வாது போலும்' என்றே கூறுகிறார். வேற்று மொழி ஆதிக்கத்தால் தமிழ் மொழி தளர்வுற்ற நிலையில் அதனைக் கைதூக்கி விட வந்தவர்கள் ஆதலின் ஓயாமல் தமிழின் பெருமையைப் பிள்ளையாரும் தவமுனிவரும் கூறினர் என்பதை நினைவில் கொள்ளுதல் நலம்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எட்டாவது வகுப்புவரை படித்த 'அறிஞர்கள்' 'எனக்கு டமில்லே பேசவராது' என்று கூறித் திரிந்த

சூழ்நிலையில், ஆங்கிலம் அருந்தமிழைப் . புதைக்க முற்பட்ட நிலையில்தான் பாரதியும், பாரதிதாசனும் தமிழின் பெருமையைப் பாடிச் சென்றனர். தமிழின் பெருமையைப் பாடிய பிள்ளையார், குமரகுருபரர், பாரதியார், பாரதிதாசன் ஆகியவர்கள் தமிழ் மட்டும் கற்றவர்கள் அல்லர்; பிற மொழிகளையும் கற்றவர்கள் ஆவர் என்பதை நினைவில் கொள்ளுதல் நலம். பிற மொழிகளையும் அறிந்த அவர்கள் தமிழின் சிறப்பைப் பேசுவது பொருத்தமுடையதாகும்.

❀❀❀❀❀

# 15. சமூக செழுமைக்கான உரம்

உலகத்தில் உள்ள மனித சமுதாயங்கள், பல்வேறு இடங்களில் பற்பல காலங்களில் சிறப்புடன் விளங்கி வந்ததையும் ஒரு சில இனங்கள் இன்றும் சிறப்புடன் விளங்குவதையும் காண்கிறோம். இப்படிப்பட்ட பழமையான சிறப்புடைய இனங்களின் வரலாற்றைப் பார்ப்போமேயானால் ஒன்றை அறிந்து கொள்ள முடிகிறது.

மிகப் பழங்காலம் தொட்டே எகிப்திய, கிரேக்க, ரோமானிய, சுமேரிய, இந்திய நாகரிகங்கள் அனைத்திலும் பொதுவாக இருப்பது 'மித்தாலஜி' (Mythology) என்று சொல்லப்படக் கூடிய மிகப் பழமையான கதைகள், புராணங்கள் என்பவை ஆகும். இந்தப் புராணங்கள், கதைகள் என்பவை, இந்த நூற்றாண்டில் வாழும் பலருக்கும், நம்பிக்கை இன்மையை தோற்றுவிப்பவையாக அமைந்துள்ளன. இந்த நூற்றாண்டில் வாழுகின்ற மனிதர்கள் பொதுவாகவும், சிறப்பாக நம்முடைய நாட்டிலும், ஏதோ அறிவு வளர்ச்சி பெற்றுவிட்டதாகவும், அறிவினாலேயே எல்லாவற்றையும் ஆராய்ந்து கண்டுவிட முடியும் என்றும், ஒரு தவறான எண்ண ஓட்டத்தில் வாழுகின்ற காரணத்தால்தான், இந்தப் பழைய வரலாறுகளை, கதைகளை, செவி வழியாக வந்த செய்திகளை நம்ப மறுக்கின்றார்கள்.

மனிதனுடைய அறிவு வளர்கின்றது என்பது உண்மைதான். அறிவின் தொழில் வேறு. உள்ளதையும், கருத்துக்கு அடங்கியதையும், அதற்கு அப்பாற்பட்டதையும் ஆய்ந்து பார்ப்பது அறிவின் தொழில்.

மூளையின் உள்ளே அமைந்திருக்கிற 'நியூ ரான்கள்' (Neurones) என்று சொல்லப்படும் அணுக்கள், மின்சார இயக்கம் பெற்று, பல்வேறு ரசாயன மாறுபாடுகளை அடைவதன் மூலம் எண்ணங்களைத் தோற்றுவிக்கின்றன. அவ்வாறு தோற்றுவிக்கப்படும் எண்ணங்கள் ஒரு ஒழுங்கு முறைக்கு உட்பட்டு வளருமேயானால், அது அறிவின் செயலாகும். அறிவினால் ஆராய்ந்து காண்பது இதுதான். ஆனால் உலகத்தில் உள்ள எல்லா வற்றையுமே அறிவினால் ஆராய்ந்து பார்த்துவிடுவது என்று தொடங்கினால், அது வெங்காயத்தை உரிக்கும் கதையாகிவிடும். அறிவு, உணர்வு என்ற இரண்டும் மனிதர்களுக்கு கடவுளால் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அறிவின் தொழில் ஒன்று; உணர்வின் தொழில் மற்றொன்று. அறிவு தொழிற்பட வேண்டிய நிலை நாளாவட்டத்தில் வளர்ந்து கொண்டே வருகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த மனித சமுதாயத்தின் அறிவு வளர்ச்சி, இந்த நூற்றாண்டின் முடிவில் பல நூறு மடங்காக விரிந்துவிட்டது என்பதை அறிகிறோம்.

அறிவு மேலும், மேலும் வளர, நேற்றிருந்தது இன்று இல்லாததாகவும், நேற்று உண்மை என்று கருதப்பட்டது இன்று தவறானதாகவும் போய் விடுவதைக் காணமுடிகிறது. இப்படி மாறுபடுகின்ற அறிவின் அடிப்படையில் ஒரு காலத்தில் காணப் பட்ட ஒன்று, இதுதான் முடிவான, இறுதியான உண்மை என்று சொல்லப்பட்ட ஒன்று, மிகச் சில காலங்களிலேயே மாறுதல் அடைவதைக் காண்கின்றோம். இதைப் புரிந்து கொள்வது மிக மிக இன்றியமையாதது. மனிதனுக்கு ஆண்டவன் அறிவை மட்டும் தரவில்லை, உணர்வையும் தந்திருக்கின்றான். எவ்வளவு தான் அறிவு தொழிற் படுவதாக இருந்தாலும், சிறப்புடையதாகயிருந்தாலும், அதற்கு ஒரு எல்லை உண்டு. அந்த அறிவின் தொழிற்பாட்டில் பண்பாடு என்பது கலக்குமே ஆனால் அது பயனுடைய அறிவாகும். இல்லா விட்டால் அதுமிகக் கூர்மையான வாள் போன்று இருக்கும். இந்தப் பண்பாடு என்பது உணர்வின் அடிப்படையில் தோன்றுவதாகும். மனித சமுதாயம் முழுவதையும், பண்பின் அடிப்படையில் பார்க்கும் போது காட்சியே வேறானதாகிவிடும். அறிவின் அடிப்படையில் மனித சமுதாயத்தை ஆராய்ந்தால், இவன் இன்ன இனத்தைச் சேர்ந்தவன், இன்ன நாட்டைச் சேர்ந்தவன், இந்தப் பண்பாட்டிற்கு உரியன், எனக்கும், இவனுக்கும் உள்ள தொடர்பு என்ன, உறவு என்ன என்ற முறையில் அறிவு தொழிற்பட்டுச் சென்று உலகத்தில் உள்ள

அனைவரையும் பிரித்துக் கடைசியில் நம்மைத் தனியாக நிறுத்திவிடும். இது அறிவின் தொழில்.

அப்படிக் காணுகின்ற ஆராய்ச்சியில் தவறு ஒன்றும் இல்லை. இனம் வேறுதான். மொழி வேறு தான். பண்பாடு வேறுதான். கலாச்சாரம் வேறுதான். ஆகவே அவர்கள் வேறு என்று அறிவு சொல்லுமே ஆனால் அதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால், பண்பு என்ன சொல்கிறது? இந்த அத்தனை வேறுபாடுகளுக்கிடையே மனித உறவு என்ற ஒன்று இருக்கிறது. மனிதப் பண்பாடு என்ற ஒன்று இருக்கிறது. அந்த உறவில், பண்பாட்டில் வேறுபாட்டுக்கு இடமே இல்லை. எந்த மூலையில், எந்த இடத்தில், எந்தக் காலத்தில், எந்த நாகரிகத்தில் ஒருவன் தோன்றினாலும் முன்னர் பின்னர் வாழ்ந்த, வாழ்கின்ற, வாழப்போகின்ற மனித சமுதாயத்தோடு தொடர்புடைய சங்கிலியில் ஒரு வளையமாக அவன் அமைந்திருக்கின்றான். உலகம் முழுவதும் மனித சமுதாயம் ஒன்றே தான். எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் இந்த வேறுபாடுகளுக்கிடையே ஓர் ஒருமைப்பாட்டைக் காண்பது பண்பின் செயலாகும். அது உணர்வின் அடிப்படையில் தோன்றுவதாகும். இதைப் புரிந்து கொள்வோமே ஆனால், 'மித்தாலஜி' என்று சொல்லப்படக் கூடிய பழங்ககதைகள், புராணங்கள், கர்ண பரம்பரைக் கதைகள், இதிகாசங்கள் ஆகியவை எப்படி வந்தன என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்தக் கதைகளையோ, புராணங்களையோ, இதிகாசங்களையோ, அறிவின் துணைகொண்டு ஆராயத் தொடங்கினால் பல நேரங்களில் இடுக்கண்தான் மிஞ்சும். எல்லாவற்றையும் அறிவின் அடிப்படையில் ஆராய முடியாது என்பதை முன்னரே கண்டோம். தந்தை மகனிடத்தில் வைக்கின்ற அன்பு, மகன் தந்தையிடத்தில் வைக் கின்ற அன்பு, கணவன் மனைவியிடத்தில் வைக்கின்ற அன்பு, மனைவி கணவனிடத்தில் வைக்கின்ற அன்பு, உறவினரிடையே விரிகின்ற அன்பு, இவற்றை எல்லாம் அறிவின் துணை கொண்டு ஆராயத் தொடங்கினால் இந்த அன்பு என்பதே அபத்தம் என்று சொல்லக் கூடிய நிலைமைக்கு வந்துவிடுவோம். அன்பு மனித இனத்தை, மக்களை ஒன்று சேர்ப்பதற்குரிய ஒரு கருவியாகும். இந்த அன்பு தேவைதானா என்ற ஆராய்ச்சியில் புகுந்தால் பெரும்பாலும் தேவை இல்லை என்ற முடிவுக்கு வந்து விடுவோம். அங்கே 'தான்' என்பது முனைந்து நிற்கக் காண்கிறோம். இந்தத் 'தான்' முனைய முனைய, அறிவு தொழிற்படும் பொழுது, உலகம் முழுவதிலும் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு நான் தான் மிச்சம் என்ற நிலைமைக்கு கொண்டு போய் விட்டு விடும். இதன் எதிராக, உணர்வு என்பது 'தான்' என்பதை அறவே அழித்துவிட்டு எல்லோரையும் ஒன்றாய்க் காணுகின்ற ஒருமைப் பாட்டை, நமக்குத் தருவதாகும். இந்த ஒருமைப் பாட்டின் அடிப்படையில்தான் 'மித்தாலஜி' தோன்றியது.

இந்த 'மித்தாலஜி' என்று சொல்லப்படக் கூடிய பழைய கர்ண பரம்பரைக் கதைகளில் போர் உண்டு, காதல் உண்டு, பகைமை உண்டு, உறவு உண்டு, எல்லாம் உண்டு. ஆனால் இவை அறிவினால் ஆராய்ந்து காணப்படக் கூடியவை அல்ல. உணர்வின் அடிப்படையில் காணக் கூடியவை. இன்னும் சொல்லப்போனால், ஒரு செடி வளர்வதற்கு பல் வேறு உரங்களைக் கலந்து வைக்கின்றோம். அந்த உரம் எப்பொழுது, எந்த முறையில் செய்யப்பட்டது என்பது, அந்தந்தக் காலத்திற்கும் இடத்திற்கும் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால், அந்த உரங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்துவிட்ட பிறகு, அந்தக் கலவையைப் பிரித்துப் பார்ப்பது என்பது ஒரு பொருத்தமற்ற செயலாகும்.

இந்த உரத்திலே என்ன என்ன இருக்கின்றது, என்பதை அறிவினால் ஆராய்ந்து பார்ப்போமே ஆனால், அது ரசாயனப் பொருள்களாக முடிந்து விடும். இந்த ரசாயனப் பொருள்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்தால் உரமாகி விடுவதில்லை. உரத்தில் ரசாயனக் கலவையும் உண்டு. ஆனால் ரசாயனக் கலவைகள் எல்லாம் உரங்களாவதில்லை. அதுபோல புராண, இதிகாசம் இவற்றில் எல்லாம் அறிவுக்குத் தொழில் உண்டு. ஆனால் இவை எல்லாம் அறிவின் தொழிலாக மாறுவதில்லை. இவற்றை மறவாமல் மனத்தில் பதித்துக் கொள்ள

வேண்டும். உரத்தை ஆராய்ந்து பார்ப்பதைவிட செடி முதலானவற்றிற்குப் போடுவதன் மூலம் அந்தச் செடியை வளரச் செய்ய முடியும். அந்த உரத்தில் உள்ள ரசாயனப் பொருட்களை எல்லாம் தனித் தனியாக எடுத்து அந்தச் செடிக்குப் போடுவோமே ஆனால், செடி செத்தே போய்விடும். இவை ஒன்று கலக்கும் பொழுது, புதிய பொருளாக, அது உரம் என்ற பெயரைப் பெறுகிறது.

அதே போல இந்தக் கதைகளும், புராணங்களும், இதிகாசங்களும் உரக்கலவையாக நின்று பொதுவாக மக்கள் இனத்தையும், அதிலும் சிறப்பாக தமிழ் இனத்தின் பண்பாட்டையும் வளர்க்க உதவுகின்றன.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியை வெறும் தேதி வைத்துக் கொண்டு இத்தனை ஆண்டுகளாக இந்த சமுதாயம் இருக்கிறது, ஆகவே இது பழைய நாகரிகம் என்று சொன்னால், அது சிரிப்புக்கு இடமாகிவிடும். ஏனென்றால் இதைவிடப் பழமையான மரங்கள் பல இருக்கின்றன. இதைவிடப் பலகோடி ஆண்டுகளாக இருக்கின்ற பாறைகள், கற்பாறைகள் இருக்கின்றன. ஆகவே வெறும் காலத்தை வைத்து, ஓர் இனத்தின் பெருமையை அளவிடுவது என்பது அறியாமைக்கு உரியது ஆகும். ஆக, ஓர் இனத்தின் சிறப்பை அறிவதற்கு உதவுவது, அதனுடைய பழைய 'மித்தாலஜி'(Mythology) என்று சொல்லப்படுகின்ற புராணங்களும், இதிகாசங்களும், கதைகளும்தாம்.

அவற்றை ஆராய்வது அர்த்தமற்ற செயல். உரத்தை எப்படி ஆராய்வது இல்லையோ, அதுபோல இந்தப் புராணம் முதலியவற்றை ஆராய்வது பொருத்தமற்ற செயலாகும். இவை இருந்ததால்தான், இந்த இனத்தின் பண்பாடு வளர்ந்தது, வரலாறு வளர்ந்தது, மக்கள் பண்பு உடையவர்கள் ஆனார்கள்; அறிவுடையவர்களாகவும் ஆனார்கள்.

தீபாவளி என்றால் நரகாசுரன் கதை சொல்வார்கள். இக்காலத்தில் ஐப்பசி மாதத்தில் கொண்டாடப்படும் இந்தப்பண்டிகை பழங்காலத்தில் இல்லை. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தப் பெருமான், தீபாவளியைப்பற்றிப் பேசவில்லை. ஆனால்,

"ஐப்பசி ஓண விழாவும்
அருந்தவர்கள் துய்ப்பனவும்
காணாதே போதியோ பூம்பாவாய்........ " ( )

என்று மைலாப்பூர் பதிகத்தில் பாடுகிறார் என்றால் ஐப்பசி மாதத்தில் ஓண விழா கொண்டாடி இருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஞானசம்பந்தர் காலத்தில், சேரநாடு தான் இருந்ததே தவிர, கேரளம் என்பதோ, மலையாளம் என்பதோ இல்லை.

என்ன காரணத்தினாலோ நாம் ஓண விழாவை (ஓணம் பண்டிகை) கைவிட்டு விட்டோம். இப்

பொழுது அது, மெல்ல மேற்கே நகர்ந்து சென்று கேரளத்தில் காலூன்றியிருக்கிறது. அது எதை அறிவிக்கிறது என்றால், ஒவ்வொரு சமுதாயமும் இது போன்ற விழாக்களையும், பழைய கதைகளையும் தேவையான போது பயன்படுத்திக் கொண்டன. அவற்றினால் சில பயன்களை அடைந்தன. நாளா வட்டத்தில் அந்தத் தேவையில்லாத போது, இந்தக் கதைகள் நம்மை விட்டுப் போய்விடுகின்றன. தமிழகத்தில் ஆகட்டும், இந்தியாவில் ஆகட்டும் ஆயிரக்கணக்கான கதைகள் மறைந்துவிட்டன. ஏனென்றால், இந்த இனத்திற்கு அந்த கதைகளினால் இப்பொழுது பயன் ஒன்றும் இல்லை. பயன் இல்லாத பொழுது அவை, காய்ந்த சருகுகள் போல், உதிர்ந்து விடுகின்றன.

ஆனால் இந்த இலைகள் காய்வதற்கு முன்னர் அந்த மரத்திற்கு, செடிக்குப் பெரும்பயனைக் கொடுத்தன என்பதை மறக்கக் கூடாது. அதுபோல் இன்று தேவையில்லாத கதைகள், தாமே அழிந்து விடுகின்றன. இதை அறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்து, இவை பைத்தியக்காரத்தனமான கதைகள், நம்பத்தகாத கதைகள் என்று சொல்பவர்கள் பெரும்பாலும், அறிவு இன்னது என்பதை அறியாமலும் அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதை அறியாமலும் உள்ளார்கள். ஏனென்றால் ‘மித்தாலஜி’ என்று சொல்லப்படுகின்ற இந்தப் பழைய கதைகள் இல்லாத நாகரிகமே இல்லை. மிகப்

பழமையான காலத்திலேயே அரிஸ்டாட்டிலையும், பிளேட்டோவையும், சாக்ரடீஸையும் உற்பத்தி செய்த, கிரேக்க சமுதாயத்தில் இருக்கும் இந்த 'மித்தாலஜி' கணக்கில் அடங்காதவை. அப்படியானால், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதலானவர்கள் பகுத்தறிவாளர்கள் இல்லையா? இந்தப் பழைய கதைகளை ஏன் நம்பினார்கள் என்றால், அவர்கள் உண்மை அறிந்தவர்கள். இந்தக் கதைகள் ஆராய் வதற்காக ஏற்பட்டவை அல்ல. அவை இந்த சமுதாயத்தை வளர்ப்பதற்கான உரமாகப் பயன் பட்டன என்பதனை அறிந்திருந்தனர். அதனால் தான் யாரும் அதை குறை சொல்லவில்லை. அதேபோல் நம்முடைய தமிழகத்திலும் எத்தனையோ கதைகள் உண்டு. அந்தக் கதைகள் ஆராய்ச்சிக்கு உரியவை அல்ல.

இன்று வளர்ந்துவிட்ட அறிவை வைத்துக் கொண்டு அந்தக் கதைகளுடைய தன்மையை ஆராய்ந்து, இது நடந்ததா, நடக்கவில்லையா, இது செம்மையானதா, இல்லையா என்றெல்லாம் ஆராய்வது பொருத்தமற்றதாகும். எந்தெந்த காலத்தில் இந்த சமுதாயத்திற்கு ஓர் கருத்தை அறிவிப்பதற்கு எத்தனை கதைகள் தேவைப்பட்டனவோ, அவை அவ்வப்பொழுது உண்டாக்கப்பட்டன; அல்லது பழைய கதைகளுக்குப் புதிய வடிவு கொடுக்கப் பட்டன. அல்லது புதிய கதைகளுக்கு பழைய வடிவு கொடுக்கப்பட்டன. இப்படி மாறி மாறி இந்தக்

கதைகள் வழங்கி வந்ததினாலேயே அவற்றை யாரும் ஆராயவில்லை. அதற்குப் பதிலாக அவற்றில் இருந்து ஏதோ ஒரு கருத்தை, அது தரும் வலிமையை எடுத்துக் கொண்டார்கள் என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. பழையவர்கள் அறிவு குறைந்தவர்கள் அல்லர். நம்மைவிடப் பலமடங்கு அறிவுடையவர்களாக இருந்த காலத்திலும் கூட இந்தக் கதைகளை கேட்பதனாலோ அல்லது சொல்வதனாலோ அல்லது பலருக்குத் தெரிவிப்பதனாலோ, ஏதோ ஒரு நன்மை இருக்கிறது என்று கருதினார்கள். அந்தக் கதைகளில் இருந்து ஏதோ ஒரு வகையான கருத்து, அது அறிவுக்கு அப்பாற்பட்டதாகவும்கூட இருக்கலாம் ஏற்றுக் கொள்ளப்பெற்றது. ஏனென்றால் சில மருந்துகள் உடம்பில் எப்படி வேலை செய்கின்றன என்பதை மருத்துவ உலகம் இன்றும் சரியாக அறிந்து கொள்ளவில்லை; ஆனால் உடம்பில் வேலை செய்கிறது என்பது உண்மைதான்.

அது போல் இந்தப் பழங்கதைகள் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு, ஏன்? தனி மனிதனின் வளர்ச்சிக்கு, தனி மனித பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியிருக்கின்றன என்பதை அறிவோமேயானால் உலக வரலாற்றோடு நாமும் ஒன்றிணைந்தவகள் ஆவோம். ஏனென்றால் முன்னே சொல்லப்பட்ட மாபெரும் நாகரிகங்கள் அனைத்தும் 'மித்தாலஜி' என்று சொல்லப்படுகின்ற பழைய புராணக்கதைகள்

நிறைந்து காணப்படுகின்ற அடிப்படை உடையன. அதே போல இந்திய சமுதாயத்தில் 'மித்தாலஜி' என்று சொல்லப்படுகின்ற பழைய கதைகள் நிரம்ப உண்டு. முக்கியமாக, இராமாயணம், மகாபாரதம், பதினெண்புராணங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பிற்காலத்தில் கந்தபுராணம் முதலியவை தெய்வத்தைப்பற்றியோ, மனிதர்களைப் பற்றியோ, அரக்கர்களைப் பற்றியோ சொல்லி இருக்கலாம். யாரைப்பற்றி சொன்னார்கள் என்பது முக்கியமல்ல. அதில் சொல்லப்பட்ட ஒரு சில கருத்துக்கள் அந்தந்தக் காலத்திற்கு அந்தந்த சமுதாயத்திற்குப் பெரும் உரமாக இருந்து, அந்த சமுதாயத்தை வளர்க்க உதவின என்ற அளவில் அதை எடுத்துக் கொள்வோமேயானால், அதன் இடத்தில் வெறுப்பு கொள்ளவோ, காழ்ப்பு கொள்ளவோ, பைத்தியக்காரத்தனம் என்று சொல்லவோ மாட்டோம்.

# 16. பாரதி – சித்தன்

*1882ல் எட்டையபுரத்தில் பிறந்த சின்னசாமி ஐயர் மகன் சுப்பிரமணியன் கருவில் திருவுடையவர் என்பதை எளிதில் அறிய முடியும். தமது ஏழாவது வயதிலேயே கவிதை இயற்றும் ஆற்றல் மிக்க இப் பெருமகனார்க்கு 1893ல் பாரதி என்ற பட்டம் வழங்கப்பெற்றது. 1908ல், புதுச்சேரியில் அடைக்கலம் புகுகின்றவரை கவிஞர் சுப்பிரமணிய பாரதி ஏனைய கவிஞர்கள் போலவே பொருளாழம் மிக்க கவிதைகள் புனைவதில் வல்லவராய் இருந்தார் என்பதில் ஐயம் ஏதுமில்லை.*

*சிறந்த கவிஞராகிய இவரை மிகச் சிறந்த ஆன்மீக வாதியாக மாற்றி ஒரு மாபெரும் சித்தனாக மாற்ற வேண்டும் என்று அவன் வழிபட்ட சக்தி அன்னை திருவுளம் கொண்டாள்.*

*பரம்பொருளின் இச்சா சக்தி இவ்வாறு ஆன மையின் அதற்கேற்ற ஒரு சூழ்நிலை உருவாயிற்று. சூரத் காங்கிரஸ் சென்றுவிட்டு வந்த கவிஞனை ஆங்கில அரசாங்கம் கைது செய்ய முடிவெடுத்தது. அதனை ஏற்றுக் கொள்ள விரும்பாத கவிஞன் புதுச்சேரி சென்று விட்டான். **'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை!'** என்று பாடும்*

கவிஞர்பிரான் கேவலம் சிறைக் கூடத்திற்கு அஞ்சி பாண்டி வந்தான் என்று நினைப்பது பெரும் தவறாகும். பாண்டிக்கு அவன் செல்லவில்லை. மாகாளியின் திருவருள் அவனை இழுத்துச் சென்றது. அவ்வாறு செல்லவில்லையானால் 'தேடிச் சோறு நிதம் தின்று சின்னஞ்சிறு கதைகள் பேசும்' ஏனைய மாந்தரைப் போல அவனும் சுதேசமித்திரன் போன்ற பத்திரிகைகளின் ஆசிரியனாகவே வாழ்ந்து மடிந்து இருப்பான். நாட்டுப்பற்றுமிக்க அவன் மக்களைத் தட்டி எழுப்பும் நாட்டுப் பாடல்கள் இயற்றி உள்ளதைப் போல இன்னும் பல பாடல்களை இயற்றி இருப்பான் என்பதில் ஐயமில்லை. அதி அற்புதமான இந்தப் பாடல்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குத் தேவையானது என்பதில் ஐயமில்லை. ஆனால் நாடு விடுதலை அடைந்து பல ஆண்டுகள் கழிந்த பிறகு இப்பாடல்கள் காலத்திற்குப் பொருந்தாதவையாக ஆகிவிடுதல் இயற்கைதானே.

எனவே, அன்னை பராசக்தி "நல்லதோர் வீணை செய்து அதை நலங்கெடப் புழுதியில் எறிய" விரும்பாமல் 'சுடர்மிகும் அறிவுடன்' படைக்கப்பட்ட இவனை புதுவைக்கு அனுப்புகிறாள். மிகும் அறிவு, கேவலம் உலகியல் பொருள்களில் ஈடுபட்டுத் தன்னை இழந்து விடாமல் இருக்க புதுவையில் உள்ள இருவர் தொடர்பு இத்திருமகனுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதே பராசக்தியின்

இச்சையாகும். ஒருவர், மகான் ஸ்ரீ அரவிந்தர். இப்பெருமகன் உலகம் கண்டு வியக்கும் யோகியாக அக்காலத்திலேயே அறியப்பட்டவர் ஆவார். மற்றொருவர், உலகம் ஒருபுறம் இருக்கப் புதுவையில் உள்ளவர்கள்கூட அறிந்து கொள்ள முடியாத குள்ளச்சாமி என்ற பெயருடைய ஒரு சித்தர் ஆவார். யோக வழியைப் பின்பற்றி ஓர் உயர்நிலை அடைந்த பெருமை உடையவர் ஸ்ரீ அரவிந்தர் ஆவார். கல்விக் கடலைக் கரை கண்டு உணர்ந்த அப்பெரியார் பல நூல்கள் இயற்றியவர், பல மொழிகளில் வல்லவர் என்றாலும் அவருடைய கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக அமைந்து விடாமல் ஆன்ம முன்னேற்றத்தைத் தரும் கல்வியாக அமைந்ததுடன் பரம்பொருளை அறியும் அறிவு விளக்கத்தைத் தரும் கல்வியாகவும் அமைந்தது.

இந்நாட்டவர் பரம்பொருளைப் பற்றிக் கூறும் பொழுது கற்பனை கடந்த அப்பொருள் நிர்குண, நிர்ாமைய, நிராலம்பமாக எங்கும் நிறைந்திருக்கிறது என்று கூறினர். அப்பொருளால் படைக்கப்பட்ட இந்த ஆன்மாக்கள் அரிதின் முயன்று, பொறிபுலன் களை அடக்கி ஒருமுகப்பட்ட நெஞ்சுடன் அவனை நினைந்து இறுதியாக அவன் திருவடிகளை அடைய வேண்டும் என்ற இப்பழங்கருத்தை மாற்றி அமைத்து ஒரு புதுமையைச் செய்தவர் ஸ்ரீ அரவிந்தர், கோடிக் கணக்கான உயிர்கள் அரிதின் முயன்று அவன்

திருவடிகளை அடைவதைக் காட்டிலும் அவனே கருணை கூர்ந்து இவ்வுலகிற்கு வந்துவிட்டால் அது பெரும்பயன் அளிக்கும் என்று கருதினார். அவர் தான் முதன்முதலில் இறைவனை பூமிக்கு வருமாறு அழைத்தவர் ஆவார். கிருஷ்ணனாகவும், இராமனாகவும், மாணிக்கவாசகருக்குக் குருந்த மரத்தடியில் குருவாகவும் வந்தவன் இறைவன் தானே! எனவே, இறைவனை இவ்வுலகிற்கு வா என்று அழைப்பதில் என்ன புதுமை உள்ளது என்று சிலர் நினைக்கலாம். இந்த இராம, கிருஷ்ண அவதாரங்கள், தாம் இங்கிருந்த காலத்தில் ஒரு சிலருக்கு அருள் செய்ததும் உண்மை தான். குருந்த மரத்தடியில் இருந்த ஞானகுரு மணிவாசகருக்கு அருள் செய்ததும் உண்மை தான். இப்படி ஒரு சிலருக்கு மட்டும் அருள் புரியும் நிலையை மாற்றி இங்குள்ள எல்லா உயிர்களும் பயன்பெற நீ இங்கு வருவாயாக என்று இறைவனை முதன் முதலில் அழைத்தவர் ஸ்ரீ அரவிந்தர் ஆவார்.

அவருடைய தாக்கம் பாரதிக்கு ஏற்பட்டது என்பதை அவன் பாடிய முருகா—முருகா வருவாய் என்ற பாடலில் காண்கிறோம். இவ்வுலகில் வாழும் உயிர் அனைத்திற்கும் என்னென்ன வேண்டுமென்று கவிஞன் இதோ பட்டியலிட்டுக் காட்டுகிறான்.

"தருவாய் நலமுந் தகவும் புகழுந்
தவமுந் திறமுந் தனமுங் கனமும்"

*(பாரதி.கவி :2,11)*

*என்று கூறுவதுடன் அமையாமல், முடியா மறையின் முடிவாகிய முருகப்பெருமானை ஏன் இங்கு வரவேண்டுமென்று கேட்கிறான். மேலே அவன் கேட்டவற்றை முருகன் தந்துவிட்டால் போதாதா? அவன் ஏன் வரவேண்டும்? என்ற வினாவை எழுப்பினால் உண்மை விளங்கும். காமாலை நோய்க்காரனுக்கு சர்க்கரைக்கூட கசக்கும். அது போல, இங்கே உள்ள உயிர்களின் மனத்தில் அறுவகைக் குற்றம் என்பது நிறைந்து அடைத்துக் கொண்டிருப்பதால் அப்பெருமான் தருகின்ற நலம், தகவு போன்றவை உள்ளே நுழைய முடியாது. எனவே, அவன் வடிவேலுடன் வந்தால் தான் இக்குப்பைகளைப் போக்கி நலம், தகவு முதலியவற்றை உள்ளே செலுத்த முடியும். இக்கருத்தையே,*

"அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருள்வாய்"

*(பாரதி. கவி: 2.11 )*

*அதற்கு நீ இங்கு வரவேண்டும் என்ற கருத்தில்*

வடிவேலுடன் வரவேண்டும் மயில் மீதினில் என்று பாடுகிறான்.

உலகம் முழுவதற்கும் அருள் தருவான் வேண்டி இறைவனை இவ்வுலகிடை வருக என்ற கருத்தை ஸ்ரீ அரவிந்தரை ஒட்டி கவிஞன் பாடியதை மேலே கண்டோம். அதன்பிறகு அவனுடைய சுடர்மிகும் அறிவு மற்றொரு சிந்தனையில் ஆழ்ந்தது. எண்பத்தி நான்கு இலட்சம் வகைப்பட்ட உயிர்கள் வாழும் இவ்வுலகிடை அப்பரம்பொருள் வந்தால் எத்தனை உயிர்கள் அவனைப் புரிந்து கொள்ள முடியும். நாம ரூபமற்ற அந்தப் பரம்பொருள் எந்த வடிவுடன் இந்த உலகிற்கு வருகிறதோ அந்த வடிவு பெற்ற இனம் மட்டுமே அவனை ஓரளவு அறிய முடியும். மனித வடிவில் இருந்த இராமனை, அரக்கர் வடிவிலிருந்த இராவணன் புரிந்து கொள்ள வில்லையே. இதனை மனத்துட் கொண்டுதான் சுவாமி விவேகானந்தர், மீன்களெல்லாம் கூடி தமக்கொரு கடவுளைப் படைத்தால் அக் கடவுளுக்கு மீன் வடிவத்தைத்தான் தரமுடியுமே தவிர வேறு வடிவம் தராது என்றார். எனவே, மனிதர்கள் உயிர் வர்க்கத்தில் முதலிடம் வகிப்பவர்கள் ஆதலின் அம்மனிதர்கள் அறிந்து கொள்ளக்கூடிய கடவுள் வடிவம், மனித வடிவமாகத் தான் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தான் கவிஞன். அதற்கு மேல்

*அவனுடைய மனம் மற்றொரு சிந்தனையில் சென்றது. பல கோடி உயிர்களின் தேவை அறிந்து அவற்றிற்கு அருள்புரியும் இறைவனது பணியில் ஒரு பகுதியைத் தான் ஏன் மேற்கொள்ளலாகாது என்று நினைக்கிறான். சிறிய அதிகாரிகள் எடுக்கும் சில முடிவுகளை அவர்களின் மேலதிகாரிகள் ஒப்புக் கொள்கிறேன் (agreed) என்று சொல்வதில்லையா? அதே போல இறைவனுடைய அனுமதிபெற்று அவனுடைய பணியில் ஒருபகுதியை சுப்ரமணிய பாரதி என்ற சித்தன், தான் மேற்கொண்டு அப் பணியைச் செய்ய விரும்புவதாகவும், அதற்கு இறைவன் அப்படியே என்று சொல்ல வேண்டும் என்றும் விரும்புகிறான்.*

*ஓம்கார வடிவினனாய் தனக்குமேல் ஒரு தலைவன் இல்லாதவனாய் எங்கும் நிறைந்துள்ள விநாயகப் பெருமானை நோக்கி, புதுவையில் குடி புகுந்த இச்சித்தன் இதோ வேண்டுகிறான்.*

பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்,
கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்,
மண்மீதுள்ள மக்கள், பறவைகள்,
விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்—
யாவுமென் வினையா லிடும்பை தீர்ந்தே
இன்பமுற் றன்புட னிணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும், தேவதேவா!

ஞானாகா சத்து நடுவே நின்று நான்
'பூமண்டலத்தில் அன்பும் பொறையும்
விளங்குக, துன்பமு மிடிமையு நோவுஞ்
சாவு நீங்கிச் சார்ந்த பல்லுயிரெலாம்
இன்புற்று வாழ்க' என்பேன்! இதனை நீ
திருச்செவிக் கொண்டு திருவுளமிரங்கி
'அங்ஙனே யாகுக' என்பாய், ஐயனே!
இந்நாள், இப்பொழுதெனக் கிவ்வரத்தினை
அருள்வாய்..........................................

(விநாயகர் நான்மணி மாலை)

*விநாயகப்பெருமானையே பார்த்து, நீ செய்யும் பணியில் ஒரு சிறு பகுதியை நான் செய்கிறேன் என்று கூறும் துணிச்சல் இந்த எட்டையபுரக் கவிஞனுக்கு எவ்வாறு வந்தது? சிற்சில செயல்களைச் செய்ததனால் இந்த நெஞ்சுரம் வரமுடியும் என்பதனை இப்பாடலின் முற்பகுதிகளில் கவிஞன் கூறுகிறான். கடமையாவன தன்னைக் கட்டுதல், பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல், என்பவற்றுடன் குறைந்தாரைக் காத்தல் துறவினுடன் மேட்பட்டனவாகும், ஓமெனும் பொருளை உள்ளத்திலே நிறுத்தல், யான், எனது, அற்றார் ஞானமே தானாய் ஆதல் வேண்டும் ஆகிய இவற்றை முறையாக வளர்த்துக் கொண்டால் மனத்தில் ஓர் உறுதியும், ஒளியும் தோன்றும். அந்த மனநிலை வந்தவுடன் மேலும் சிலவற்றைக் கவிஞன் வேண்டுகிறான். அவையாவன:*

"நோவு வேண்டேன், நூறாண்டு வேண்டினேன்;
அச்சம் வேண்டேன், அமைதி வேண்டினேன்;
உடைமை வேண்டேன், உன்துணை வேண்டினேன்;
வேண்டாதனைத்தையு நீக்கி
வேண்டியதனைத்தும் அருள்வதுன் கடனே."
(பாரதி கவிதைகள்)

*இவ்வரிகள் அனைவரும் பொன்னே போல் போற்ற வேண்டியவை ஆகும். எது வேண்டும், எது வேண்டாம் என்பதை சிற்றுயிர்கள் அறிய முடியாது. ஆகையினால் மணிவாசகப் பெருந்தகை,*

'வேண்டத் தக்கது அறிவோய் நீ, வேண்டு முழுவதுந்
தருவோய் நீ '
*(திருமுறை: 8,33,6)*

*என்று இதே கருத்தைக் கூறுவதைக் காணலாம். இன்னும் ஒரு படி விளக்கமாக கவிச்சக்கரவர்த்தி இதனைக் கூறுகிறார்.*

. . . . . . . . . யாஅம் இரப்பவை
பொன்னும், பொருளும், போகமும் அல்ல; நின்பால்
அருளும், அன்பும், அறனும், மூன்றும் –
உருள் இணர் கடம்பின் ஒலிதாரோயே
(பரி பாடல்–5)

*என்று பாடுவதைக் காணலாம். அன்றாட வாழ்விற்கு வகை செய்து கொள்ள முடியாமல் தவித்த இக்கவிஞன், விநாயகப் பெருமானிடம் பொன்னை,*

பொருளை, போகத்தை வேண்டிலன். அதற்கு பதிலாக எல்லா உயிர்களையும் வாழ்விக்க வேண்டி இறைவனைப் பணிகின்றான். பரிபாடல் கூறியபடி விநாயகப்பெருமானை வேண்டி தன் மனத்தில் அன்பையும், அருளையும் நிறைத்துக் கொண்டபின் உலகிடை வாழும் உயிர்க் குலங்கள் அனைத்தும் வாழ வேண்டும் என்று நான் கேட்பேன், ஆகட்டும் என்று நீ சொல்ல வேண்டும் என்று வேண்டுகிறான்.

இந்த ஆன்மீக வளர்ச்சியைக் கவிச்சக்கரவர்த்தி எங்கே யாரிடம் எப்போது பெற்றான் என்ற வினாக்கட்கு விடை காண்பது பயனுடைய செயலாகும். புதுவையில் பலரும் பயித்தியக்காரன் என்று கூறும் ஒரு துறவி, சித்தன் வாழ்ந்து வந்தான். அந்தத் துறவி தெருவிலே வாழ்கின்ற வயது வந்த மக்களைப் பற்றி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவன் யாருடன் பழகினான் தெரியுமா? சிறியாரோடும், நாய்களோடும் விளையாடித் திரிந்தான், கந்தை கட்டித் திரிந்தான். அவன் பெயர் குள்ளச்சாமி என்றும், மாங்கொட்டைச்சாமி என்றும் ஒருசிலர் கூறினர். பளிங்கு போன்ற அவன் மனம் வஞ்சகமற்ற குழந்தைகளையும், நன்றி மறவாத நாய்களையும் தோழமை கொண்டது. இந்த மனிதனை ஒருநாள் பாரதி காண்கின்றான். எங்கே எந்த நிலையில் என்று கவிஞன் இதோ கூறுகிறான்,

அன்றொரு நாட் புதுவை நகர் தனிலே கீர்த்தி
அடைக்கலஞ்சே ரீசுவரன் தர்மராஜா
என்ற பெயர் வீதியிலோர் சிறிய வீட்டில்,
ராஜா ராமையனென்ற நாகைப் பார்ப்பான்
முன்றனது பிதா தமிழி லுபநிடத்தை
மொழி பெயர்த்து வைத்ததனைத் திருத்தச் சொல்லி
என்றனை வேண்டிக் கொள்ள, யான் சென்றாங்கண்
இருக்கையிலே யங்கு வந்தான் குள்ளச்சாமி.
அப்போது நான் குள்ளச்சாமி கையை
அன்புடனே பற்றி யிது பேசலுற்றேன்:
"அப்பனே, தேசிகனே, ஞானி யென்பார்
அவனியிலே சிலர் நின்னைப் பித்தனென்பார்;
செப்புறு நல் லஷ்டாங்க யோக சித்தி
சேர்ந்தவனென் றுனைப் புகழ்வார் சிலரென் முன்னே;
ஒப்பனைகள் காட்டாம லுண்மை சொல்வாய்,
உத்தமனே, எனக்கு நினை உணர்த்துவாயே."
"யாவனீ? நினக்குள்ள திறமை யென்னே?
யாதுணர்வாய்? கந்தை சுற்றித் திரிவதென்னே?
தேவனைப் போல் விழிப்பதென்னே? சிறியாரொடும்
தெருவிலே நாய்களோடும் விளையாட்டென்னே?
பாவனையிற் பித்தரைப் போலலை வதென்னே?
பரமசிவன் போலுருவம் படைத்த தென்னே?
ஆவலற்று நின்ற தென்னே? அறிந்த தெல்லாம்,
ஆரியனே, எனக் குணர்த்த வேண்டு" மென்றேன்.
(பாரதி–66)

*இப்பாடற் பகுதியைப் பன்முறையும் படித்தால், இந்தச் சித்தன் பாரதிக்கு உபதேசம் செய்வதற்கு*

முன்னர் அக்கவிஞனுடைய மனத்தில் எத்தகைய தர்க்கத்தை ஏற்படுத்தினான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். குள்ளச்சாமியை சந்தித்த நேரமே ஓர் அற்புதமான நேரமாகும். உபநிடதங்களின் தமிழ் மொழிபெயர்ப்பைத் திருத்துவதற்காகக் கவிஞன் நாகைப் பார்ப்பான் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருக்கிறான். என்ன விந்தை! உபநிடதங்கள் கூறும் பிரம்ம ஞானியின் இலக்கணத்தை முழுவது மாகப் பெற்றுள்ள ஒரு ஞானி எதிரே வருகிறான். உபநிடதங்கள் எழுதியுள்ள தாள்களைக் குனிந்து படித்துக் கொண்டிருக்கும் கவிஞன் தலையை நிமிர்த்தினான். என்ன அதிசயம்! அந்த நூல் கூறும் ஞானி எதிரே நிற்கிறான். ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்ட இருநிலைகள். உடம்பு, உடை இவை அவன் பயித்தியக்காரனென்று பறை சாற்றுகின்றன. இந்த உடம்பின்மேல்பட்ட பார்வையைச் சற்று உயர்த்தி குள்ளச்சாமி கண்களைப் பார்க்கிறான் கவிஞன். கடலினும் பெரியவாய அக்கண்களின் ஊடே ஒரு பிரம்ம ஞானி காட்சி அளிக்கிறான். புறத்தை விட்டுவிட்டு, அகத்தைக் காணும் ஆற்றல் உடைய கவிஞன் இந்த பயித்தியக் கோலத்தின் உள்ளே ஞானி ஒளிந்திருப்பதைக் காணுகின்றான். உடனே சிவபெருமான் நினைவு வருகிறது கவிஞனுக்கு. சுடுகாட்டில் பேய்களோடு ஆடும் பித்தன்தானே சிவன். அந்த நினைவு வந்தவுடன் ஞானியைப் பார்த்துக் கவிஞன் பேசுகிறான்.

"பாவனையிற் பித்தரைப் போலலைவ தென்னே ?
பரமசிவன் போலுருவம் படைத்ததென்னே ? "

என்பதால் எதிரே உள்ள குள்ளச்சாமியை ஏனையோர் போலக் காணுமல் அவன் உண்மை நிலையை, அதாவது எல்லாம் கடந்து நிற்கும் சித்தன் என்பதை பாரதி கண்டு கொண்டான்.

இருந்த இடத்திலிருந்து இறங்கி வந்த கவிஞன் குள்ளச்சாமி கைகளை இறுகப் பற்றிக் கொண்டான். குள்ளச்சாமி திமிறிக் கொண்டு அவ்வீட்டின் பின் புறம் ஓடிவிட்டான். வாழ்நாளில் ஒரு தடவை மட்டும் கிடைக்கின்ற இந்த சந்தர்ப்பத்தை பாரதி விட்டுவிட விரும்பவில்லை. அவன் பின்னே ஓடிச் சென்று கொல்லையில் அவனை மறித்துக் கொண்டான். தனக்கு ஏதாவது உபதேசம் செய்ய வேண்டுமென்று கேட்டான் கவிஞன். வானவன் போல் நின்ற குள்ளச்சாமி வாய் பேசாமல் எதிரே நின்ற இடிந்த குட்டிச் சுவரை விரலால் காட்டி அதே விரலால் சூரியனைக் காட்டி, அதே விரலால் கிணற்று நீருக்குள் தோன்றும் சூரியனுடைய பிரதிபலித்த பிம்பத்தையும் காட்டி இதனை நீ புரிந்து கொண்டாயோ எனக் கேட்டான். கவிஞன் அறிந்தேன் எனக் கூறியவுடன் பெரு மகிழ்ச்சி அடைந்த ஞானி சென்று விட்டான். தான் அறிந்து கொண்ட உண்மையை பரம

கருணையுடைய கவிஞன் நமக்காக அதன் விளக்கத்தை இங்கே கூறுகிறான்.

> ‘வாசியை நீ கும்பகத்தால் வலியக் கட்டி,
> மண்போலே சுவர் போலே வாழ்தல் வேண்டும்,
> தேசுடைய பரிதியுருக் கிணற்றினுள்ளே
> தெரிவதுபோ லுனக்குள்ளே சிவனைக் காண்பாய்.’’
> (பாரதி கவிதைகள்)

ஓயாது நாம் சுவாசிக்கும் மூச்சுக் காற்றை உள்ளே இழுத்தவுடன், வெளியே விட்டு விடாமல் குறிப்பிட்ட வினாடிகள் வரை அதனை உள்ளே இருத்துவதைக் கும்பகம் என்பர். அதாவது பிராணயாமம் என்று குறிக்கப்படுவது இதைத் தான். நீண்ட நேரம், நீண்ட காலம் இதைப் பயில்வதால் மனம் ஒடுங்கும். அந்த நிலையில் மழை விழுந்து கரைவது பற்றியும், வெயில் அடித்துக் காய்வது பற்றியும் கவலைப் படாமல் நிற்கும் குட்டிச் சுவர் போன்ற ஸ்திதப் பிரக்ஞ மனோநிலை உண்டாகும். இரட்டைகள் என்று சொல்லப் பெறும் சீதம், உஷ்ணம்; சுகம், துக்கம்; மானம், அவமானம் ஆகியவற்றை ஒன்றாக நோக்கும் சமதிருஷ்டி ஏற்படும். அந்த நிலை வந்த உடன் எங்கோ இருக்கும் பரமசிவம் தன் உள்ளத்தின் உள்ளே ஒளிர்வதைக் காணமுடியும்.

இந்த உபதேசத்தை, பதினோரு ஆண்டுகள் புதுவையில் வாழ்ந்த கவிஞர்கோமான் என்று பெற்றான் என்று அறிய வாய்ப்பில்லை. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. இந்த உபதேசம் பெற்றபின் அவன் பழைய சுப்பிரமணியபாரதி இல்லை. அதன் பிறகு எழுதிய கவிதைகள் அனைத்தும் எட்ட முடியாத ஓர் உயரத்தில் இருந்து அவன் பாடியுள்ளான் என்பதை அறிவுறுத்தும். இந்த மனநிலை பெற்ற பின்னர் தான் விநாயகர் நான்மணிமாலை போன்ற பாடல்களை அவன் இயற்றி இருக்க வேண்டும்.

இதனை அடுத்து பிறிதோர் நாள் மணக்குள விநாயகர் திருக்கோயிலின் முன்னர் குள்ளச்சாமியைச் சந்திக்கின்றான் கவிஞன். அன்று அந்த பிரம்மஞானி அளித்த காட்சி கவிஞன் மனத்தை உருக்குகின்றது. தான் குரு என்றும், வழிபடும் தெய்வம் என்றும் நினைத்துப் போற்றும் அந்த ஞானி தெருவில் உள்ள குப்பைகளை எல்லாம் ஒன்றாகத் திரட்டி மூட்டையாகக் கட்டி தன் முதுகில் சுமந்து கொண்டு வருகிறான். அவனது முதுகில் உள்ள மூட்டையைக் கவனிப்பதற்கு முன்னர் அவன் திருப்பாதங்கள் கண்டு மனத்தால் வணங்கிய பின்னர் ஞானியைப் பார்த்து “பெருமானே! இப்படி பழங்கந்தை சுமப்பது பித்தர் செயல் அன்றோ! தாங்கள் ஏன் இதனைச்

*செய்தல் வேண்டும்?'' என்று வினாவினான். ஞானி பேசலானார். "மகனே! தேவையற்ற கவலைகள், பழைய எண்ணங்கள், விருப்பு, வெறுப்புக்கள் ஆகியவற்றை மனத்தினுள் வைத்து மூடி மறைத்துக் கொண்டு நீ வாழ்கின்றாய். நீ உள்ளே சுமக்கின்றாய். நான் வெளியே சுமக்கின்றேன்'' என்று கூறி சிரித்தான். தத்துவத்தைப் புரிந்து கொண்டான் கவிஞன். ஆம்! முதுகில் சுமக்கும் மூட்டையை ஒரு வினாடியில் உதறி எறிந்து விட முடியும். ஆனால், மனத்தினுள் இருக்கும் குப்பையை அவ்வளவு எளிதாக உதறிவிட முடியாது அல்லவா? தான் பெற்ற இரண்டாவது உபதேசத்தை கவிஞன் நம் பொருட்டு சற்று விரிவாக இதோ பாடுகிறான்.*

புன்னகை பூத் தாரியனும் புகலுகின்றான்
"புறத்தே நான் சுமக்கின்றேன்; அகத்தினுள்ளே,
இன்னதொரு பழங் குப்பை சுமக்கிறாய் நீ''
என்றுரைத்து விரைந்தவனு மேகிவிட்டான்.
மன்னவன் சொற் பொருளினை யான் கண்டு
கொண்டேன்;
மனத்தினுள்ளே பழம் பொய்கள் வளர்ப்பதாலே
இன்னலுற்று மாந்தரெலா மடிவார் வீணே,
இருதயத்தில் விடுதலையை இசைத்தல் வேண்டும்.
சென்றதினி மீளாது; மூடரே, நீர்
எப்போதுஞ் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்குங் கவலை யெனுங் குழியில் வீழ்ந்து
குமையாதீர்; சென்றதனைக் குறித்தல் வேண்டா;

இன்று புதிதாகப் பிறந்தோ மென்று நெஞ்சில்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்று விளையாடி யின்புற்றிருந்து வாழ்வீர்;
அஃதின்றிச் சென்றதையே மீட்டு மீட்டும்
மேன்மேலு நினைந்தழுதல் வேண்டா, அந்தோ!
மேதை யில்லா மானுடரே.............................''

(பாரதி–66)

*ஆம்! சின்னசாமி ஐயர் மகன் சி. சுப்பிரமணிய பாரதியாக புதுவைக்குள், அவன் வழிபடும் சக்தியின் அருள் அழைத்து வந்தது. இப்பொழுதும் அவன் இன்னும் சி. சுப்பிரமணிய பாரதி என்று தான் அழைக்கப்பட்டான். ஆனால் இப்பொழுதுள்ள 'சி' என்ற எழுத்திற்கு பொருள் வேறு. இங்கு வரும்பொழுது சின்னசாமி என்பதன் சுருக்கமாக இருந்த 'சி' என்ற எழுத்து இப்பொழுது 'சித்தன்' என்ற பொருளைத் தாங்கி நிற்கத் தொடங்கிற்று.*

*புதுவைக்கு வந்த சின்னசாமி சுப்பிரமணிய பாரதி சித்தன் சுப்பிரமணிய பாரதியாக மாற்றப் பட்டு விட்டான். அதனால் தான் "பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும், பராசக்தி!'' என்று பராசக்தியிடம் வரங்கேட்கின்ற அளவிற்கு உயர்ந்து விடுகின்றான். இந்த மாற்றத்திற்குப் பிறகு அவன் மனம் பெரும்பாலும் எங்கோ லயித்து விட்டிருந்தது. அதுவரை உடலை வாட்டிய பசியும், தாகமும் இப்பொழுது அவனை*

ஒன்றும் செய்ய வில்லை. இந்த சித்தர் நிலையில் அவன் இருந்ததால் தான் 1920ல் மகாத்மா காந்தியை திரு. சீனிவாச ஐயங்கார் வீட்டில் ஒரு நிமிடம் சந்தித்துவிட்டு, உடனே, "வாழ்க நீ எம்மான்!" என்று பாடத் தொடங்கி "பாழ்பட்டு நின்றதாம் ஓர் பாரத தேசம் தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா, நீ வாழ்க! வாழ்க!" என்று பாடினான். 1920ல் காந்தி அடிகளின் முழு சொரூபத்தையும் இந்தியர்கள் கூட அதிகம் புரிந்துகொள்ளாத காலத்தில் இந்த நாட்டின் விடுதலையை அந்த ஒரு மகாத்மாதான் வாங்கிக் கொடுக்க முடியும் என்பதை "பாரத தேசம் தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா' என்று பாடினான்.

பாரதி சித்தனாகி விட்ட காரணத்தினால் முக் காலத்தையும் உணரும் தீர்க்கதரினம் அவன் சொற்களில் வெளிப்படலாயின. "உள்ளத்தில் ஒளி உண்டானால் வாக்கினில் ஒளி உண்டாகும்" என்று பாடிய அவன் பாடலுக்கு அவனே உதாரணமாகி விட்டான்.

❀❀❀❀❀

# 17. இராயப்பேட்டை முனிவர்

இராயப்பேட்டை சென்னையில் ஒரு பகுதி ஆகும். சென்னை போன்ற பெரிய நகரங்களில் எப்படி முனிவர்கள் வாழ முடியும்? முனிவர்கள் என்று கூறினவுடன் நீண்ட சடை முடியையும், காவி உடையையும், தண்டு கமண்டலங்களையும் நினைந்து கொள்வதுதான் மனித இயற்கை. நம்மைப் பொறுத்த வரை முனிவர்கள் இப்படித்தான் நம் மனத்திரையில் தோன்றுகிறார்கள். ஏன்? நம் தமிழ்ப்பட வெள்ளித் திரையிலும் இப்படித்தான் தோன்றுகிறார்கள். உண்மையில் முனிவர்கள் எப்படி இருப்பார்கள் என்று எனக்குத் தெரியாது.

காவி உடையும், தாடி மீசையுமே தவக்கோலம் என்றால் தமிழ் நாட்டில் இவர்கட்குப் பஞ்சமே இல்லை. இக்கோலம் எதனை அறிவுறுத்துகிறது? பற்று அற்றவர்கள் இவ்வுடை உடுத்தியவர்கள் என்பதனைப் பிறர் அறியச் செய்கிறது. உண்மையில் பற்று அற்றவர்களா இவர்கள்? வயிற்றுக்கு இல்லாமலும், உடல் உழைத்துப் பொருள் தேட இயலாமலும் எளிதான முறையில் வாழப் புகுந்தவர்கள் இவர்கள். இப்போலித் துறவிகளால் தமிழ்நாடு பெற்ற அவப்பெயர் கொஞ்ச நஞ்சமன்று. வேதநாயகம் பிள்ளை கூறியபடி 'ஒரு பெண் வேண்டாமென்று கொள்வோம் சந்நியாசம், ஊரில்

உள்ள பெண்கள் மீதெல்லாம் நேசம்' என்று வாழும் இப்போலித் துறவிகட்குத் தமிழ்நாட்டில் பஞ்ச மில்லை. தமிழர்கள் காவி உடையைக் கண்டு விட்டால் தரும் மதிப்புக்கும் பஞ்சமில்லை.

இத்தகைய போலித் துறவிகளைக் கண்டால் வெறுப்பவர் ஒருவர் நம் காலத்தில் வாழ்ந்தவர். அவர் காவியுடை கட்டுபவரல்லர். வெள்ளைக் கதராடை கட்டுபவர். வீட்டையும் பொறுப்பையும் விட்டுவிட்டதாகப் பறைசாற்றிக் கொண்டு பெறும் நிலையங்களை வைத்து ஆள்பவர் கூட்டத்தில் சேர்ந்தவர் அல்லர் அவர். காட்டுக்கு ஓடிக் கனசடை வைத்து, மூக்கைப் பிடித்து மோட்சம் போக வழி தேடுபவரல்லர் இவர். அதனால் கடவுள் நம்பிக்கையே இல்லாதவரோ என்று கருதிவிட வேண்டாம். நிறைந்த தெய்வபக்தி உடையவர். பக்தியைக் காட்டிலும் நல்லொழுக்கத்தை உயிரினும் ஓம்பிப் பாதுகாத்தவர். பிறர் மனம் நோவும்படி பேசாத மென்மையாளர். இத்தகைய ஒரு துறவியை நீண்ட காலம் தன்பால் வைத்துப் போற்றியது இந்த இராயப்பேட்டை நகரம்.

நண்பர்கள் பலர் அவரைச் சாது முதலியார் என்று அழைத்தனர். வேதாந்தகேசரி வடிவேல் செட்டியார் 'இராயப்பேட்டை முனிவர்' என்று அழைத்தார் அவரை. அவர் தாம் திரு. வி. கலியாண சுந்தர முதலியார். 'திரு.வி.க.' என்று கூறினாலே தமிழ்

கூறு நல்லுலகம் அவரை நன்கு அறியும். திரு.வி.க. யார்?

சமயத் தொண்டர், சமரச ஞானி, மகளிரின் சோதரர், தொழிற்சங்கத் தந்தை, இளைஞரின் தோழர், முதியோர் அன்பர், வகுப்பு வேற்றுமை, சாதிப்பூசல் கடந்த பெரு நோக்காளர். சாதாரண மாக ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு துறையில் சிறப்பு வருவதுண்டு; காரணம் அவர் அத்துறையில் பெருந் தொண்டாற்றி இருப்பார்; ஆனால் திரு.வி.க.வின் தொடர்பில்லாத இயக்கமே இல்லை, தமிழ்நாட்டில் சென்ற அரை நூற்றாண்டில்.

தமிழறிஞராகிய திரு.வி.க.வே முதன் முதலில் ஆங்கிலம் படித்தவர்கட்கும், தமிழ் மட்டும் கற்றவர் கட்கும் பாலம் அமைத்தார். அவர்கட்கு முன்னர், தமிழ் கற்றவர் அரசியலில் நுழைந்ததில்லை. ஆங்கிலம் கற்ற அரசியல்வாதிகள் தமிழ் கற்றவர் களைக் கண்டால் மதிப்புக் குறைவாகக் கருதி வந்த காலம் அது. அத்தகைய நிலையில் தமிழறிஞராகிய திரு.வி.க. அரசியலில் புகுந்தார். எத்தகைய அரசியல் பிரச்சினையையும் தமிழில் எழுத முடியும் என்பதை எடுத்துக் காட்டினார் எழுத்து மூலம். 40ஆண்டுகட்கு முன்னர் 'சுதேசமித்திரன்' போன்ற தமிழ்ச் செய்தித்தாள்களை எடுத்துப் பார்த்தால் உண்மை விளங்கும். நூற்றுக்கு ஐம்பது ஆங்கிலச் சொற்கள், எஞ்சிய ஐம்பதில் முப்பது வட சொற்கள், எஞ்சிய

இருபதில் தமிழ் என்று ஒருவாறு கூறக் கூடிய சில சொற்கள், இந்நிலையிலிருந்த பத்திரிகைத் தமிழ் திரு.வி.க. என்னும் ரசவாதியின் கை பட்டவுடன் உயிருடைய தமிழாய் துடிப்புடன் உலவத் தலைப்பட்டது.

திரு.வி.க.வுக்கு முன்னர் மேடைத் தமிழ் வேறு, எழுத்துத் தமிழ் வேறாகவே இருந்தது. எத்துணை அழகாகப் பேசுபவர்களும் எழுத முன்வருவதில்லை. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் போன்றவர்கள் பெரும் பேச்சாளர்கள். ஆனால் அவர்கள் பேச்சுக் களை எழுதிப் பார்த்தால், நிலைப்பெற்ற, அறியப்பட வேண்டிய பொருள்கள் மிகுதியாக இரா. பேசும் பொழுது மக்களைக் கவரத்தக்க முறையில் பேசும் இவர்கள் பேச்சு, எழுத்தில் உயிரற்று இருத்தலை நன்கு அறியலாம். ஆனால் திரு.வி.க.வின் எழுத்திலும், பேச்சிலும் உயிர்த் துடிப்பு இருந்தது முற்றிலும் உண்மையே. அதைவிட வியப்பு என்ன எனில் அவருடைய பேச்சும் எழுத்தும் ஒரே மாதிரியாக இருந்ததேயாகும். அவருடன் நெருங்கி 25 ஆண்டுகள் பழகியதால் நான் கற்ற பாடங்கள் பலவாகும். எழுத்திற்கும் பேச்சுக்கும் வேறுபாடில்லாமல் எழுதியும் பேசியும் வந்த முதல் தமிழர் அவரேயாவார். இன்றைய தமிழ் நாட்டில் அவருடைய எழுத்து முறையைப் பின்பற்றி முன்னுக்கு வந்தவர்களில் சிறப்பாக ஒருவரைக் குறிப்பிடலாம். அவர் காலஞ்சென்ற 'கல்கி'

கிருஷ்ணமூர்த்தி ஆவார்; தமிழில் உரைநடை இருபதாம் நூற்றாண்டில்தான் நன்முறையில் வளரலாயிற்று. அவ்வளர்ச்சியின் ஆணிவேராய் விளங்கியவர் சாது முதலியார்.

முப்பது நாற்பது ஆண்டுகட்கு முன்னர் சைவ சித்தாந்த சபை, வைணவ சபை, நபிகள் நாயகத்தின் விழா, கிறிஸ்துவர் கூட்டம், சைனர் சமயக் கூட்டம், புத்தர் பிறந்த நாள் விழா ஆகிய இத்தனையிலும் திருநீற்றைப் பூசிய நெற்றியுடனும், மெல்லிய உடம்புடனும், உச்சிக் குடுமியுடனும் ஒருவர் சென்று கலந்து கொள்வதைப் பலர் கண்டிருக்கலாம். இடக் கையை உயர்த்திச் சுண்டுவிரலை மட்டும் நீட்டிக் கொண்டு வைணவ சபையில் ஞானசம்பந்தர் பாடலையும், சைவ சித்தாந்த சபையில் சைனக் கொள்கையையும், சைனர் கூட்டங்களில் திருநாவுக் கரசர் தேவாரத்தையும் மேற்கோள்காட்டி, அவரவர் களும் வெறுப்பின்றி ஏற்றுக் கொள்ளும் முறையில் பேசி மீளும் இயல்புடையவர் திரு.வி.க. ஒருவரே.

இத்தனை மாறுபாடுடைய கொள்கைகளிலும் ஒருவர் புகுந்து புறப்பட வேண்டுமாயின் அவர் ஒப்பற்ற சமரச ஞானியாகவே இருத்தல் வேண்டும். இறைவனின் அருளாலேயே அத்துணைச் சமயங் களும் தோன்றி நிலைத்துள்ளன என்றும், இவை ஒவ்வொன்றிலும் பல உண்மைகள் உள்ளன என்றும், இவை அனைத்துமே இறைவனிடம் கொண்டு

செலுத்தும் பாதைதாம் என்றும் உள்ளுணர்வால் நம்பி உணரும் ஒருவரே சமரச ஞானியாய் இருத்தல் கூடும். திரு.வி.க.வின் 'இராமலிங்கர் திருவுள்ளம்' என்னும் நூலைப் படிப்பார்க்கு இவ்வுண்மையும் அவருடைய கருத்துக்களும் நன்கு விளங்கும்.

இற்றை நாளில் சீர்திருத்தம் பேசுவது எளிது; அது மதிப்பைத் தருவதுங்கூட. ஆனால் நாற்பது ஆண்டுகட்கு முன்னர் சீர்திருத்தம் பேசுவதும், கலப்பு மணத்தை ஆதரிப்பதும், அனைவருடனும் சேர்ந்து உணவு உண்ணுதலும் அவ்வளவு எளிமையான செயல்களல்ல. ஆனால் திரு.வி.க. இவை அனைத்தையும் அஞ்சாது செய்த வீரர்.

அவருடைய உடலமைப்பும், பேச்சு முறையும், ஏன் மனநிலையுங்கூடப் பெண் தன்மையுடையவை. அவ்வாறு இருந்ததனுடன் தனிப்பட்டவர் துன்பங் கண்டு பொறாத மனமுடையவர். இரத்தத்தைக் கண்டால் மயக்கமுறும் அளவுக்கு மென்மை படைத் தவர் திரு.வி.க. அவருடைய இம்மென்மைத் தன்மை யால் பலர் அவரை ஏமாற்றியதும் உண்டு. ஏமாறு கிறோம் என்று அறிந்திருந்தும் சிறிதும் வருத்தம் கொள்ளாமல் மீண்டும் கருணை காட்டும் தாயுள்ளம் படைத்தவர், இராயப்பேட்டை முனிவர். தாய்மை அன்பு காரணமாகவே, குட்டிகட்குத் தீங்கு விளைவதைக் கண்டால் வன்மையற்ற பெண் பூனையும் சீறி விழுந்து சக்திக்கு மேற்பட்ட

செயல்களைச் செய்வதைக் காணலாம். அதேபோன்று இரத்தத்தைக் கண்டு மயக்கமடையும் திரு.வி.க. 'சூளை நெசவாலை'ப் போராட்டத்தில் பன்முறை துப்பாக்கிகளின் எதிரே நடந்து சென்றார்.

அவரைச் சுற்றிலும் மக்கள் அடிபடுகிறார்கள். குண்டு மழை பொழிகிறது. குண்டு மழையின் நடுவே தாயுள்ளம் படைத்த தொழிலாளர் தந்தை திரு.வி.க. தலைமை ஏற்றுப் பணிபுரிகிறார். குண்டு ஒருபுறம் இருக்க, தடியடி வேறு. ஓர் அடிக்கும் தாங்காத பெண்ணியல்பு கொண்ட சாது முதலியாருக்கு இத்துணை வீரம் எங்கிருந்து வந்தது? அது வியப்பே.

துன்பத்தை எதிர்த்துப் போராடும் வீரம் உடலில் தோன்றுவதன்று; மனத்தே தோன்றுவதாகும். அவ்வீரத்தை நிறைந்த அளவு பெற்றிருந்தார் திரு.வி.க. சென்னைப் பெரம்பூரிலுள்ள தொழிற் சங்கத்தின் தந்தையும் தாயும் ஆன இவருடன் பலகாலும் அங்குச் சென்றுள்ளேன்.

தொழிலாளர் முன்னேற்றத்திற்காகத் திரு.வி.க. அரும்பாடுபட்டார். நாடு கடத்தப்படும் அளவுக்குத் திரு.வி.க. அந்நாளைய ஆட்சியாளருக்கு அச்சத்தை உண்டாக்கினார். இதில் மற்றொரு வியப்பும் உண்டு. தொழிலாளர் கூட்டங்களில் பேசும் திரு.வி.க.வுக்கும் சைவ சித்தாந்த சபையில் பேசும் திரு.வி.க.வுக்கும் வேறுபாடு அதிகம் இல்லை. இரண்டு கூட்டங்

களிலும், "கார்ல் மார்க்சும்" "கம்பரும்" "ஞான சம்பந்தரும்" "மால்தூசும்", "லெனினும்" "தாயுமானாரும்" வருவார்கள். இரண்டு வகை அன்பர்களும் இவற்றைக் கேட்டுப் பயனடைவர். சமரசம் என்றால் வேறுபட்ட சமயங்களில் மட்டும் அல்லாமல் உலகியல், வீட்டியல், சமய இயல் முதலியவற்றிலும் சமரசங்கண்ட பெரியார் அவர். வீட்டிற்குள் திருநீரும், வெளியே நாத்திகமும் பேசும் மக்கள் உண்டு தமிழ் நாட்டில். ஏன்? கூட்டம் எவ்வாறு உள்ளதோ அவ்வாறு தம் கொள்கையை மாற்றிக் கொண்டு பேசும் பெரியோர்களும் உண்டு இத்தமிழ் நாட்டில். மந்திரிகட்காகக் கதர்ச் சட்டை போடுபவர் எத்துணைப் பேர்?

இத்தகைய "சமரசப் போலிகள்" நிறைந்த தமிழ் நாட்டில் உண்மைச் சமரசவாதியாய் வாழ்ந்தார் திரு.வி.க. ஞானசம்பந்தரைப் பற்றிப் பேசிவிட்டுப் போவார் ஒருவர்; அடுத்தாற்போல் இராமசாமிப் பெரியார் வருவார். இவரை வந்து காண்பவர் ஆயிரம் கொள்கை வேறுபாடுடையவராய் இருப்பர். ஆனால் திரு.வி.க.விடம் எவ்வித ஆறுதலை அவர்கள் பெறுவார்களோ அறியோம். அத்துணைப் பேரும் வந்து பேசிவிட்டு மன அமைதியோடு திரும்புவர். திரு.வி.க.விடம் வருபவர்கள் கொள்கை ஆராய்ச்சி செய்யமட்டும் வருவதில்லை. கலப்பு மணம் செய்து கொள்ளமுடிவு செய்துள்ள இளைஞர் திரு.வி.க.வைக் கண்டு பேசுவார். அவருடைய பக்குவம் அறிந்து

திரு.வி.க. அவரை ஆதரிப்பார். இன்ன முறையில் இதனை இவ்வாறு செய்ய வேண்டும் எனத் திரு.வி.க. கூறியவுடன் அவர் மிக்க மகிழ்ச்சியுடன் மீள்வார். அவர் போன சிறிது நேரத்திற்கெல்லாம் அவ் இளைஞரின் தந்தையார் வருவார். மகன் செய்யப் போகும் செயலைக் கடுங்கோபத்துடன் எடுத்துக் கூறித் தாம் இந்நிலையில் செய்யவேண்டியது யாது எனக் கேட்பார். அப்பெரியவர் மனம் அமைதி அடையும் வழிகளில் அவருக்கு ஆறுதல் கூறி அனுப்புவார், இராயப்பேட்டை முனிவர். வட துருவத்தில் நிற்கும் மகனும், தென் துருவத்தில் நிற்கும் தந்தையும் ஒரு பொது இடத்தில் அமைதி அடைகிறார்கள் எனில் அது திரு.வி.க. அவர்களிடம் தான்.

சமய சமரசத்துடன் இத்தகைய கொள்கை, கருத்துச் சமரசங்களையும் கையாண்ட ஒருவர் இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்தார் என்னில் அவர்தாம் இராயப்பேட்டை முனிவர். சமரச மனப்பான்மை இந்த அளவிற்குத் திரு.வி.க. விடம் வளர்வதற்குக் காரணம் யாது? அவர் உயிரினும் பெரிதாகப் போற்றிய நல்லொழுக்கமே எனலாம். இவ்வொழுக்கங் காரணமாக அவரிடம் சினம், வெறுப்பு, பொறாமை முதலிய தீக்குணங்கள் இல்லாதொழிந்தன.

பிறர் ஆக்கங்கண்டு பொறாமைப்படும் இயல்பு மனிதனிடம் என்றுமேயுள்ள தீக்குணம். மிகப்

பெரியவர்களும் இதற்கு விலக்காமாறு இல்லை அதன் பயனாக இளைஞர் உலகிற்கும் முதியவர் உலகிற்கும் ஒரு பெரிய இடைவெளி இருந்து வந்தது, இத்தமிழ் நாட்டில். இவ்விடை வெளியின் பயன்தான் இன்று நாட்டில் காணப்பெறும் தீய சக்திகள்.

வாழ்வில் என்றுமே நன்மையை அறியாமல், தீயவற்றையே இளைஞர் உலகம் செய்கிறதென்று உறுதியாக நம்பும் பெரியவர்கள், இளைஞர் உலகத்தையும் அதன் செயல்களையும் என்றுமே வெறுப்புடன் காணப் பழகி விட்டனர். இளைஞர்களும் இத்தவறு செய்யாமல் இல்லை. முதியவர்கள் அனைவரும், வாழ்வுக்குப் பயன் படாதவற்றையே செய்பவர்கள் என்றும், அவர்களால் சமுதாயத்திற்குத் தீமையே விளையும் என்றும் இளைஞர் சமுதாயம் கருதுகிறது. திரு.வி.க. அறுபது ஆண்டுகள் ஆன பிறகும் இளைஞராகவே இருந்தார். பழமையின் அனுபவமும் புதுமையின் சீர்திருத்தமும் அவரிடம் நிறைந்திருந்தன.

இளைஞர்களை ஊக்கி அவர்களை நல்வழிப் படுத்துவதில் திரு.வி.க.வை ஒத்த ஒருவர் இந் நூற்றாண்டில் இத்தமிழ்ச் சமுதாயத்தில் தோன்றின தில்லை. இப்பெரியாரால் உற்சாகம் ஊட்டப் பெற்ற பல இளைஞர்கள் சமுதாயத்தில் இன்று பொறுப்பு வாய்ந்த பதவி வகிக்கிறார்கள். இளைஞர் உலகை அஞ்சேல் என்று அபயம் தந்து, ஊக்கமளித்து

அவர்கள் முன்னேற்ற வழிகட்கு வாழ்த்துக் கூறி, அவர்கள்பால் உள்ள குறைகளையும் எடுத்துக் காட்டி, நன்முறையில் சீர்திருத்தி வளர வழி வகுத்த பெருமை திரு.வி.க.வையே சாரும்.

“பெரிய புராணத்துக்குக் குறிப்புரை'' எழுதிய பெரியார் “திருக்குறள் பாயிரத்துக்கு'' விரிவுரை எழுதினார். “பெண்ணின் பெருமை'' எழுதிய பெரியார் “இராமலிங்கர் திருவுள்ளம்'' எழுதினார். “சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து'' எழுதிய அவரே “முடியா? காதலா?'' என்ற நூலையும் எழுதினார். “அருகன் அருள் வேட்டல்,'' “ஏசுவின் அருள் வேட்டல்'', “திருமால் அருள் வேட்டல்'', “பொதுமை விருந்து'' முதலிய நூல்கள் அனைத்தும் எழுதிய ஞானியின் பேனாவிலிருந்து தான் “இந்தியாவும் விடுதலையும்''என்னும் அரசியல் வரலாற்று நூல் தோன்றிற்று. ஏன்? அதே பேனாவில் இருந்துதான் “மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும்'' என்ற ஒப்புயர்வற்ற நூல் பிறந்தது.

ஒன்றுக்கொன்று தொடர்பற்ற இத்துணை நூல்கள் சிறந்த முறையில் எழுத முடிந்ததாயின் அவருடைய பரந்து பட்ட அனுபவத்திற்கு இதை விட வேறு சான்று தேவையில்லை அன்றோ?

தமிழ்நாடு என்றுமே பெண்கட்கு மதிப்புக் கொடுத்து வந்துள்ளது. “முத்திக்கு நாயகி பெண் பிள்ளை'' என்று பாடிச் சென்றார் திருமூலர். அத்

தகைய பெண்ணுக்கு "மோட்சம்'' என்று கூறப்படும் வீடுபேறு இல்லை என்றும், அவள் அடிமை என்றும், ஒதுக்கப்பட வேண்டியவள் என்றும் கூறும் அறியாமை இடைக்காலத்தில் தமிழ் நாட்டில் புகுந்த "தொத்து வியாதி''. இந்த நோய்க்குக் கற்றவர், கல்லாதவர், பெரியவர், சிறியவர் என்ற பல திறத்தாரும் பலியாயினர். "பெண்டாட்டி கால் விலங்கு, பிள்ளை ஒரு சுள்ளாணி'', என்று பாடும் போலி வேதாந்தம் நாட்டில் புகுந்தது. இந்த அவல நிலையைப் போக்கவே திருஞானசம்பந்தர் தோன்றினார்.

தமிழன் கண்ட பெண்ணின் பெருமையை நிலை நாட்டப் பிறந்த அப்பெரியார் எடுத்த எடுப்பிலேயே "தோடு உடைய'' என்று தம் பாடலைத் தொடங்கினார். தோடு என்பது பெண்கள் அணியும் காதணி என்பதை அனைவரும் அறிவர்."பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே'' என்று தேவாரத்தில் பாடிய பெருமை ஞானசம்பந்தருக்கே உரியது. எனவே திரு.வி.க.வுக்கு இளமையிலேயே ஞானசம்பந்தர் தூக்கி நிறுத்திய கொள்கையில் தோன்றிய ஈடுபாடு வாழ்நாள் முழுவதும் நிலைத்து விட்டது. ஞானசம்பந்தரைக் குருவாகத் திரு.வி.க. கொண்டு இருந்தமைக்கு முதலாவது காரணம் அப்பெருமான் உலகிற்குப் "பெண்ணின்பெருமையை'' எடுத்துக் காட்டியதே ஆகும்.

அடிநாளிலிருந்தே பெண்கள்பால் எல்லையற்ற பெருமதிப்பு வைத்திருந்தார் திரு.வி.க. பெரியார். பெண்ணின் பெருமையை வெறும் நூலளவில் விட்டு வைக்கவில்லை, திரு.வி.க. வாழ்வில் அதைக் கொண்டு செலுத்திய அவர் உள்ளத்துறவுடன் புலனடக்கமும் கைவரப்பெற்ற முனிவர் என்பதில் வியப்பில்லை. இது காரணமாகவே அவர் காவி உடுத்தித் துறவு, பூணவில்லை. அப் புறத்துறவு மிகை என்றே விட்டுவிட்டார்.

இத்துணைச் சிறந்த பண்பாடுகள் உடைய திரு.வி.க.விடம் ஓரிரண்டு குறைகளும் இல்லாமல் இல்லை. அவரும் ஒரு மனிதர் தாமே? எந்தப் பிரச்சனையிலும் அவர் விரைவாக ஒரு முடிவுக்கு வந்தாலும் கொண்டு செலுத்தமாட்டார். இதனால் அவரை வழவழ வென்றிருப்பவர் என்று குறை கூறுவதும் உண்டு. என்றாலும் இதைப் பெரும் குறையாக நினைப்பதற்கில்லை. அடுத்து அவர் வெள்ளைப் பளிங்கு உள்ளம் காரணமாக அனைவரையும் நம்பி விடுவார். இதனால் அவர் வாழ்வு முன்னேற்றத்தில் தடைகள் ஏற்பட்டனவே தவிர பிறருக்குத் தீங்கு ஒன்றும் இல்லை.

இராயப்பேட்டையில் தோன்றி வளர்ந்த சாது முதலியார் இறந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்றும் அவர் தமிழர்க்கும், தமிழ் நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும் செய்துள்ள தொண்டை நினைந்து பார்த்தால் அவரளவு தொண்டு செய்த பிறிதொரு

வரைக் காண்பது கடினம். ஒவ்வொருவர் ஒவ்வொரு துறையில் தொண்டாற்றினர். ஆனால் திரு.வி.க. தொண்டின் தொடர்பு இல்லாத தமிழர் வாழ்வுப் பகுதி ஒன்றுமே இல்லை என்று கூறி விடலாம்.

இவை அனைத்திலும் மேலாக அவருடைய தூய வாழ்வு பிற்காலத் தமிழர்க்கு என்றும் ஓர் எடுத்துக் காட்டாக இலங்கும். அகப் புறத் தூய்மை, எளிய வாழ்வு, சினம்—பொறாமை முதலிய தீக்குணங்கள் இன்மை, துறவுள்ளம் என்பவற்றோடு பொன், பெண், மண் என்ற மூன்றிலும் ஒரு சிறிதும் செல்லாத அத்தூய உள்ளத்தை இனி எங்கு காணப் போகிறோம்! உள்ளத்தைப் போல் உடலிலும் வெள்ளிய கதராடை உடுத்திய இராயப்பேட்டை முனிவர் எவ்வளவு பெரியவர்! அறிவாளரும், கற்றவர் களும் நிறைந்த தமிழ் நாட்டில் நல்லவர், பெரியவர் என்று கூறத் தக்கவர் குறைந்துள்ள தமிழ் நாட்டில், திரு.வி.க. நன்மையின் கொள்கலமாய், பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டாய், **தூய்மை**யின் விளக்கமாய் ஒழுக்கத்தின் உறையுளாய், **பழமை**யின் பண்புவிடாத வராய், புதுமையின் **வேட்கை** தவிராதவராய் வாழ்ந்தார். அவரை நினைக்கும் போது 'எத்துணைப் பெரியவர்! எத்துணை நல்லவர்!' என்று எண்ணி எண்ணிப் பெருமை கொள்ளத் தோன்றுகிறது.

❀❀❀❀❀

# 18. கலையும் கலைஞனும்

கலைகள் பலதரப்படும். அவற்றைச் சாதாரணக் கலைகள் என்றும், நுண்கலைகள் என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம். கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, கவிதை ஆகியவை நுண்கலைகள் என்றும், பிற சாதாரணக் கலைகள் என்றும் வழங்கும். கலை யாவது யாது? மனித மனத்தில் தோன்றும் சிறந்த ஓர் உணர்ச்சிப் பெருக்குக்கு ஒருவன் வடிவு கொடுக்கக் கூடுமேயானால், அது எத்தகைய வடிவாக இருப்பினும் கலை என்ற பெயரைப் பெறும். கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, கவிதை ஆகிய எந்தத் துறையைச் சேர்ந்திருப்பினும் அது நுண்கலை என்றே பெயர் பெறும். காலையில் கடல் முகட்டில் கதிரவன் தோன்றும்போது ஒப்பற்ற அழகைப் பொழிந்துகொண்டு வெளிவருகிறான் எனினும், காண்போர் உள்ளத்தை அவ்வழகு பற்றி ஈர்க்கிறது எனினும், இயற்கையின் இந்தக் கோலத்தை யாரும் கலை என்று சொல்வதில்லை. ஆனால், இத்தகைய ஒரு காட்சியை ஓர் ஓவியனோ அன்றிக் கவிஞனோ கண்டு, பின்னர் அதனை ஓவியமாகவோ கவிதையாகவோ படைப்பானே ஆனால் அதனைக் கலை என்று சொல்கிறோம். எனவே கலை மனிதனால் படைக்கப்படுவது என்பதை அறிய முடிகிறது. படைக்கும் ஆற்றல் உள்ள மனிதனைக் கலைஞன் என்று கூறுகிறோம்.

நம் நாட்டில் கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, கவிதை என்ற இந்த ஐந்து நுண்கலைகளையும் வளர்க்க வேண்டுமென்ற கூக்குரல் மிகுதியும் கேட்கப்படுகிறது. ஒரு நாட்டின் நாகரிகத்தை அளப்பதற்கு அந்நாட்டில் தோன்றிய இந்நுண் கலைகளே சிறந்த அளவுகோல் என்றும் உலகம் பேசுகிறது. அந்த நாட்டு மக்களின் மனப்பாங்கை, நாகரிகத்தை, பண்பாட்டை, அறிந்துகொள்வதற்கு அவர்கள் படைத்த கலையே சிறந்த கருவியாக அமைகின்றது. இதில் யாரும் கருத்து வேறுபாடு கொள்ளவில்லை. ஒரு நாட்டின் பண்பாட்டை வெளியிடும் கருவி கலையென்றால், அத்தகைய கலையை எப்பாடுபட்டேனும் காப்பாற்றவேண்டியது அந்த நாட்டு மக்களின் தலையாய கடமையாகும். இதிலும் கருத்து வேறுபாடு இருத்தற்கு இல்லை.

கலையைப் பற்றி நன்கு அறிந்தவர்களும், கலை என்றால் ஏதோ ஆதரிக்கப்பட வேண்டிய ஒன்று என்ற அளவில் மட்டும் அறிந்தவர்களுங்கூட அதனை வளர்க்கவேண்டும், ஆதரிக்க வேண்டு மென்று இற்றைய நாளில் பேசுவதைக் கேட்கிறோம். எல்லா நாடுகளிலுமே இத்தகைய ஓர் விழிப்புணர்ச்சி தோன்றியிருப்பதை அறிகிறோம். பிற நாடுகளைப் பொறுத்தமட்டில் நிலைமை வேறு விதமாக இருப்பினும் நம் நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு சில உண்மைகளைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

'கலை வாழ்க' என்று வாழ்த்தும்பொழுது கலை என்ற பொருள் ஏதோ தானே தோன்றி வளர்வது போலவும் நம்முடைய ஆர்வம் ஒன்றினாலேயே அதனை வளர்த்து விடலாமென்று நினைப்பது போலவும் தெரிகிறது. ஆழ்ந்து நோக்குமிடத்து கலை வாழ்வதும் வளருவதும் கலைஞனின் வாழ்வையும் வளர்ச்சியையும் பொறுத்தே இருக்கிறது என்பதை நம்மில் பலரும் மறந்துவிட்டதாகத் தெரிகிறது. மாமல்லபுரம் போன்ற சிற்பங்களும், சிற்றன்னவாசல் போன்ற ஓவியங்களும், தஞ்சைப் பெருவுடையார் கோயில் போன்ற கட்டிடக் கலையும், அரங்கேற்றுக் காதையில் கூறப்பெற்றுள்ளது போன்ற இசைக்கலையும், சங்க இலக்கியம் போன்ற இலக்கியக்கலையும் இந் நாட்டிடைத் தோன்றின, வளர்ந்தன என்றால், இவற்றின் ஆணி வேராக அமைந்திருந்த கலைஞர்களை நாம் மறத்தல் கூடாது.

உலகம் கண்டு வியக்கும் இவ்வருங்கலைகள், இக்கையகலத் தமிழ்நாட்டில் தோன்றி வளர்ந்து இன்றும் நின்று நிலவுகின்றன என்றால், இந்நாட்டில் எங்கோ ஒரு மூலையில் வாழ்ந்த கலைஞர்களின் உள்ளத்தில் முதன்முதல் முகிழ்த்துப் பின்னர் அவர் களுடைய கைவண்ணம், நாவண்ணம் ஆகியவற்றின் உதவியால்தானே இவை படைக்கப் பெற்றன? படைத்த அவர்கள் இன்றில்லை, என்றாலும் அவர்கள் கற்பனைக்கு வடிவு தந்தமையால் வெளிப்பட்டு நிற்கும் இக்கலைகளைக் கண்டு வியக்கும் போது பூமிக்கடியில் புதைந்து

கிடக்கும் அக்கலைஞர்களை நினைவில் கொண்டு வரவில்லை ஆனால், நன்றி கொன்றவர்களாவோம்.

நம் தமிழ்நாட்டை இற்றைய நாளில் ஒரு கண்ணோட்டம் விடுபவர்கள் இங்குள்ள குறையை அறியாமல் இருக்கமுடியாது. கலை வளர்க, வாழ்க என்று வாழ்த்தும்போது கலைஞர்களைப் பற்றி எவ்வளவுதூரம் கவலைப்படுகிறோம் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கலைஞனை வாட்டி வதங்க விடுகின்ற எந்த நாட்டிலும் சிறந்த கலை வளர்த்து விடமுடியாது. எத்துணைச் சிற்பக் கலைஞர்கள், எத்துணை இலக்கியக் கலைஞர்கள், எத்துணை நாடகக் கலைஞர்கள் இன்று கேட்பார் அற்றுத் தமிழ் நாட்டில் முடங்கிக் கிடக்கின்றனர் என்பதை யாரேனும் சிந்தித்தது உண்டா? நம்மில் பலர் அறிய எத்துணை நாடகக் கலைஞர்கள் வாழ வகையின்றித் தத்தம் கடைகளை கட்டிவிட்டனர் என்பதையேனும் சிந்தித்தது உண்டா? நம்முடைய ஆர்வம் உண்மையானதாக இருக்குமாயின், நம்முடைய கலைகள் வளர்ந்து மறுபடியும் உலகம் போற்றும் நிலையை அடைய வேண்டுமென்று விரும்புகின்ற விருப்பம் பொருளுடையதாக இருப்பின், கலைஞர்களை வாழ வைக்கவேண்டும். தமிழனைக் கொன்று தமிழையும், கலைஞனையும் விட்டுவிட்டுக் கலையை வளர்க்க முயல்வது இயலாத காரியம். கலைஞர்களை வளர்த்தால் கலைகள் தாமே வளரும். செடிக்கு உரமிட்டு நீர் பாய்ச்சினால் காய்கள் தாமே வெளிப்படும். காய்களைப் போற்றி

பெறுகின்ற ஆர்வத்தில், அதற்கு வாழ்த்து பாடுகின்ற மோகத்தில், செடியை மறந்து விட்டால் என்னவாகும் என்பதை நினைவில் இருத்தல் வேண்டும்.

முத்தமிழ் என்று முழக்கம் செய்கின்ற தமிழ் நாட்டில், இத் தமிழ்நாட்டின் தலைநகரில், நாடகம் என்ற மூன்றாவது தமிழ் வளர்வதற்குரிய ஓர் அரங்கம் (நாடகக் கொட்டகை) உண்டா? இசைக் கலைக்கும் நாடகக் கலைக்கும் நாட்டியக் கலைக்கும் சேர்த்து ஒரே அரங்கத்தை வைத்து காலம் தள்ளி வருகின்றோம். இவை ஒவ்வொன்றும் தனித்தனியான பல சிறப்பியல்புகளை உடையன என்பதையே மறந்து விட்டோம். மேலை நாடுகளிலுள்ள நாடக அரங்கங்களைப் பார்த்த பிறகு நம்முடைய நாடக அரங்கங்களைப்பற்றிப் பேசவே நா எழுவில்லை. முந்நூற்றைம்பது வருஷங்களாக வளர்ச்சி அடைந்து வருகிற அந்நாடுகளில் நாடகம் மிக்க சிறப்பை அடைந்துள்ளது என்றால், இரண்டாயிரம் ஆண்டுகளாக ஒப்பற்ற ஒரு பாரம்பரியத்தை உடைய நம்முடைய நாட்டில் நாடக அரங்கம் இல்லை, நாட்டிய அரங்கம் இல்லை, ஒலிக் கட்டோடு அமைக்கப்பெற்றுள்ள இசை அரங்கங்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவைதாம் இருக்கின்றன என்றால், இந்த அவல நிலை போகப் பணிபுரிய வேண்டியது நம்முடைய கடமை அல்லவா?

கலைஞர்கள் வாடாமல் "போற்றிப் பாது காப்பதும், அரங்கங்களை நிறுவுவதும் முதலாவது

கடமையும் இரண்டாவது கடமையுமாகும். கலைகள் என்பவை அற்றைய நாளில் அரசர்கள் ஆதரவைப் பெற்று ஓங்கி வளர்ந்தன. எல்லோரும் இந்நாட்டு மன்னர் ஆகிவிட்ட இந்த ஜனநாயக நாளில் மக்களின் ஆர்வம் ஒன்றே கலைக்கு ஊட்டம் தருவதாகும்; இரண்டாவது ஊட்டம் பெற வேண்டியவை அவன் கலை சிறந்த முறையில் வளர்வதற்குரிய கருவிப் பொருள்களாகிய அரங்கம் முதலியன. இவை இரண்டையும் வளர்த்தால், கலை தானே வளரும்.

எங்கோ ஓரிரண்டு கலைஞர்களைப் போற்றிப் பாராட்டுவதால் மட்டும் நம் கடமையைச் செய்தவர்களாக ஆகிவிடமாட்டோம். மக்கள் பாராட்டையும் அன்பையும் அடிப்படையில் கொண்டு வளர்வதே கலை. இக்கலையைப் படைக்கும் கலைஞன் ஊட்டம் பெறுவது இப் பாராட்டாலும் அன்பாலுமேயாம். சாதி, சமய, அரசியல் போராட்டங்களை எல்லாம் கடந்து நிற்பது கலை; அதைப் படைக்கும் கலைஞனும் அவ்வாறே. 'சின்னக் கவலைகள் என்னைத் தின்னத் தகாதென்று நின்னைச் சரணடைந்தேன்' என்று கவிஞன் பாரதி சக்தியைப் பாடினான். சின்னக் கவலைகள் நம் கலைஞர்களைத் தின்று விடாமல் நாம் அவர்களைப் போற்ற வேண்டும். இவ்வாறு செய்வதாலேயே கலையும் கலைஞனும் இணைந்து வளர முடியும்.

❀❀❀❀❀

# 19. அவதானக் கலை

நாகர்கோயில் திரு. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் தசாவதானிகளுள் தலையாயவர். இன்று தமிழகத்தில் வாழும் பலரும் அட்டாவதானம், தசாவதானம், சோடசாவதானம், சதாவதானம், ஆகிய பெயர்களை அறிவார்களே தவிர இவற்றைச் செய்கின்றவர்களைப் பலரும் பார்த்திருக்க முடியாது.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஏறத்தாழ நூற்றுவர் இவ்வவதானக்கலையில் சிறந்து விளங்கினர். எனினும் இது பற்றிய அறிவியல் ரீதியான ஆராய்ச்சிகள் எதுவும் செய்யப் பெறவில்லை.

இத்தகைய அவதானங்கள் செய்கின்றவர்கள் ருசியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் தம் திறமைகளைக் காட்ட வாய்ப்புப் பெற்றிருப்பின் முன் குறிப்பிட்டவாறு அறிவியல் சார்ந்த ஆராய்ச்சிகள் நடைபெற்றிருக்கும்.

அவதானம் என்பதனைக் கவனம் என்றும் அவதானிகளைக் .கவனிகள் என்றும் கூறும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. ஆழ்ந்து சிந்திப்போமானால் இச் சொல் பொருத்தமானதா என்பது ஆய்வுக்குரியதாகும்

மனிதனுக்குப் பொறிகள் (புலன்கள்) ஐந்தாயினும் இவை ஒவ்வொன்றும் தத்தமக்குரிய பணியைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமேயானால் மனத்தின் தொடர்பின்றி நடவாது.

மனம் என்று எடுத்துக் கொண்டால் புறமனம், அகமனம், ஆழ்மனம் (External mind, Internal mind, deeper conscious mind), என மூன்றாக அது பணி புரிகிறது. சாதாரண விஷயங்களைப் பார்க்கும் பொழுதோ, கேட்கும் பொழுதோ, கண் அல்லது செவியுடன் மனம் ஈடுபட்டு அச்செயலைச் செய்கின்றது.

என்றாலும் இப்புறமனம் ஒருநிலையாக இல்லாமல் சலித்துக்கொண்டே இருக்கும் இயல் பினை உடையது. ஒரு சொல்லைக் காதில் வாங்கினால் அடுத்த இரு சொற்கள் வரும் பொழுது முதற் சொல்லை மறந்து விடுகின்ற இயல்பு மனத்திற்கு உண்டு. இக்குறை நீங்க மனத்தின் சலிப்புத் தன்மையை (Wavering) நிறுத்தி, எந்த ஒரு பொறியின் இடம் ஈடுபடுகிறோமோ அந்தப் பொறியினிடம் நிலைநிறுத்தப் பழக வேண்டும்.

வேறு வகையில் கூற வேண்டுமேயானால் பார்த்தல், கேட்டல் முதலிய எந்தத் தொழிலைச் செய்தாலும், புறமனம் சலிக்காமல் அந்தச் செயலில் நிலை பேறுடையதாக அமையுமானால் மூளையில்

உள்ள நியூரான்கள் அதனைப் பதிவு செய்து கொள்ள முடியும்.

ஒரு சொல்லைக் கேட்டு, அது நியூரான்களில் பதிவு செய்யப்பெற வேண்டுமேயானால், அதற்குரிய கால அளவு இடைவெளி ஒவ்வொரு மனிதருக்குமே வேறுபடும். அலைபாயும் மனம் உடையவர்கள் இரு முறை மும்முறை கேட்டாலும் அது நியூரான்களைச் சென்று தாக்குவதுமில்லை. எனவே பதியப் பெறுவதும் இல்லை.

இதன் மறுதலையாக, மனத்தை ஒருமுகப் படுத்தப்பழகி, அடுத்து ஒரு நிலையில் அதனை நிறுத்தப் பழக்கிவிட்டால் மேலே சொன்ன காரியம் எளிதில் நடைபெறும். இந்நிலையில் ஒரு சொல்லைக் கேட்டால் ஒரு விநாடியின் நூற்றிலொரு கூறு காலப்பகுதியில், சில ஒரு விநாடியின் ஆயிரத்தில் ஒரு கூறு காலப்பகுதியில் நியூரான்களின் பதிவுச் செயல் நடைபெற்றுவிடும். மனித மூளையின் இடப் பகுதிதான் கணிதம், அறிவியல், ஆகியவற்றிற்கு நிலைக்களன் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

எந்த ஒரு மனிதனுக்கும் மூளைப் பிராந்தியத்தில் பலப் பல லட்சக்கணக்கான நியூரான்கள் உள்ளன. அவை தொழிற்படும் வேகத்தைப் பயிற்சியினால் வளர்த்துக் கொள்ள முடியும். சாதாரண மனிதர்கள் இவற்றைப் பயன்படுத்துவதே இல்லை என்று

விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மாமேதைகள் ஆகிய அறிவியல் பெருமக்கள் கூட அவர்கள் மூளையில் உள்ள நியூரான்களின் 15 சதவிகிதத்தை தான் பயன்படுத்து கின்றனர் என்று கூறுகின்றனர்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை மூளையின் இவ் அற்புத சக்தியை என்றோ நம் முன்னோர்கள் கண்டிருக்கின்றனர். இவற்றைப் பயன் கொள்ள வேண்டுமேயானால் மனம்தான் இதற்குச் செல்லும் வாயில் என்றும் கண்டனர்.

சினம் இறக்கக் கற்றாலும்
சித்தி எலாம் பெற்றாலும்
மனம் இறக்கக் கல்லார்க்கு
வாய் ஏன் பராபரமே

(தாயு : பராபர, 169)

என்று தாயுமானவர் பேசுகிறார். இவ்வவதானத்தில் முதலிரண்டு அவதானங்களும், பழக்கத்தின் வாயிலாக நடைபெறுவனவே.

இலாடச் சங்கிலியைக் கோற்பதும், விடுவிப்பதும் விரல்களுக்குப் பயிற்சி தருவதன் மூலம் நடை பெறுவனவாகும். அதேபோல் ஓயாமல் வாயினால் சொல்லிக்கொள்ளும் “வேலும் மயிலும் துணை” என்பன போன்ற தொடர்கள் வாய்ப்பழக்கத்தினால் வருபவை ஆகும். இவைதவிர அஷ்டாவதானத்தில் வருகின்ற எஞ்சிய ஆறும், தசாவதானம் ஆயின்

எஞ்சிய எட்டும் முன்னர்க் குறிப்பிடப்பெற்ற மனம் ஒருமுகப்பட்ட நிலைப்பாட்டில் நடைபெறுவனவே ஆகும்.

உதாரணமாக ஒருவர் நீண்டதோர் பெருக்கல், அன்றி கூட்டலில் ஏதோ ஒரு எண்ணைக் குறிப்பிடு கின்றார். அடுத்தவர் நீண்டதொரு தொடரின் 27ஆம் எழுத்து இன்னது என்பார். மூன்றாமவர் ஈற்றடி தந்து வெண்பா ஒன்றை இயற்றச்சொல்வார். பிறிதொருவர் ஒரு மணியைக் கையில் கொண்டு தான் விரும்பும் பொழுதெல்லாம் ஒலிக்கச் செய்வார். அடுத்து ஒருவர் அவதானியின் முதுகில் நெல் அன்றி சிறு கல் தொடர்ந்து எறிவார்.

முதலாவதாக வினா தொடுத்தவர், பெருக்கல் அன்றி கூட்டல் என்று சொல்லி ஆறு இலக்க எண் ஒன்றில் மூன்றாம் இலக்கம் இன்னது என்று குறிப்பிடுகிறார். கேட்கும் அவதானி கூட்டல் என்ற சொல் கேட்ட அளவில் அவர் மனத்தில் வாங்கிய உடன் நியூரான்கள் தொழிற்படத் தொடங்குகின்றன.

ஆறு இலக்க எண், அதில் 3ஆம் இலக்கம் இது என்று அறிந்த அளவில், நியூரான்கள் ஒரு வரை படத்தையே மூளைக்குள் தயாரித்து விடுகின்றன. ஆறு இலக்க எண் இன்னதுதான் என்று குறிப் பிடாமல் ஆறு இலக்கம் என்பதனை மட்டும் நியூரான்கள் பதிவு செய்கின்றன. மூன்றாம் இலக்கம்

இதுதான் என்னும்போது அவ்வரைபடத்தில் மூன்றாம் இலக்கத்தைப் பதிக்கின்றன.

அவதானி இச்செயலைச் செய்ய எடுத்துக் கொள்ளும் நேரம் 4 அல்லது 5 விநாடிகள் ஆகலாம். அவதானியைச் சோதிப்பவர் (எதிரில் இருப்பவர்) ஆறிலக்க எண் என்றும், அதில் 3ஆம் இலக்கம் இது என்றும் குறிப்பிட்டுச் சொல்ல எடுத்துக் கொள்ளும் நேரம் அதிகமானதே.

அவதானியைப் பொறுத்தவரை அந்த ஒரு வினா விடைக்கு அவருடைய நியூரான்கள் எடுத்துக் கொள்ளும் நேரம் ஒரு விநாடியில் 100ல் 1 பாகம் தான். இதனை ஆங்கிலத்தில் Split second என்று கூறுவர். ஒரு விநாடியில் நூற்றில் ஒரு கூறு நேரத்தில் நடைபெறுகின்ற ஒரு காரியம் நிலைபேறு உடையதாகுமா என்பது நியாயமான வினாவே ஆகும். நம்மைப் பொறுத்தவரை இது இயலாத காரியம். காரணம் நம் மனம் அலையும் தன்மை உடையது.

தியானம் செய்கின்றவர்கள், மெஸ்மரிஸம், ஹிப் நாடிசம் பயில்பவர்கள், அவதானம் செய்கின்றவர்கள் ஆகிய இவர்கட்கு இது எளிதில் இயல்வதே ஆகும். மனத்தை அலையவிடாமல் ஒருமுகப்படுத்துவது முதல் பணி. ஒருமுகப் படுத்திய பின்னர்கூட எந்த ஒன்றில் ஒருமுகப் படுத்தப்பட்டதோ அதிலேயே

அடுத்து அடுத்துத்தாவும் இயல்புடையது மனம். ஆகவே ஒருமுகப் படுத்தினால் மட்டும் போதாது; அது பயனையும் தாராது. ஒருமுகப் படுத்தப் பட்ட மனத்தை அதனிலேயே அக்குறிப்பிட்ட இடத்திலேயே நிலைபெறுமாறு செய்ய வேண்டும். அப்படி நிலைக்கச் செய்யும் முயற்சி ஒரு விநாடியில் ஒரு சிறு கூறாக இருந்தாலும் அவதானிகளுக்கு அதுவே போதுமானதாகும்.

மேலே கூறப்பெற்றபடி கணக்குப் போடுவது தவிர பாட்டின் ஈற்றடி தர முழுப்பாடல் கூறுவது. ஈற்றுச் சொல்களிலும் வெண்பா முழுமையாகச் சொல்வது என்பதனைப் பற்றிக் காணலாம். ஈற்றடி, ஈற்றுச்சீர் தரப்பெற்றவுடன் அவதானியின் நியூரான்கள் நாற்சீர், நாற்சீர், நாற்சீர், முச்சீர் என்ற முறையில் வெண்பாவின் வரை படத்தைத் தயாரித்து விடுகின்றன.

வெண்பாவின் ஏனைய சீர்களை அவதானியின் அகமனம் நிரப்ப முயல்கிறது. இப்பொழுது புறமனம் விடுதலை பெற்றுவிட்டது. காரணம் அவதானியிடம் ஈற்றடி, அன்றி ஈற்றுச் சீர் தவிர வேறு ஒன்றும் சொல்லப்படுவதில்லை. அவராகவே மற்றைய 12 அன்றி 14 சீர்களை நிரப்பிக் கூற வேண்டும்.

இதற்கு இடைப்பட்ட காலத்தில் ஒலிக்கும் மணி எத்தனை முறை ஒலித்தது என்ற கணக்கு, எறிந்த

கற்களின் எண்ணிக்கை, கொடுத்த தொடரின் எழுத்துக்களைக் கவனித்தல் முதலியன ஓயாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால் அவற்றில் அவதானியினுடைய புறமனம் ஈடுபடுகிறது.

நாம் புத்தகத்தைப் படிக்கும் பொழுது எழுத்தெழுத்தாகவோ, சொல் பின் சொல்லாகவோ படிப்பதில்லை. படிக்கப் பழகும் குழந்தை அப் பருவத்தில் ஒரு சொல்லை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு எழுத்தாகச் சொல்லி ஒவ்வொரு பதமாகச் சொல்லப் பழகுகின்றது. அதே செயல்தான் இப்பொழுது நடைபெறுகின்றது. தொடரின் 27ஆம் எழுத்து என்று சொல்லும் பொழுது மூளையில் உள்ள நியூரான்கள் 26 காலி இடங்களை இட்டு ஒரு வரை படo0த்தைத் தயாரித்துவிடுகிறது. அத்தொடரின் 40ஆம் எழுத்து இன்னது என்றவுடன் பதிந்த 27 ஆம் எழுத்துக்கு அடுத்து 39 வரை காலி இடங்களை அமைத்து 40 ஆம் இடத்து எழுத்துப் பதிவு செய்கிறது.

இப்பொழுது மீண்டும் நமக்கு ஓர் ஐயம் எழுகின்றது. பல்வேறு செயல்கள் நடைபெறுகின்ற பொழுது 3ஆம் சுற்று கழித்து ஒன்றை எடுத்துச் சொல்வதை எப்படி மறவாமல் மனத்தில் பதித்துக் கொள்ள முடியும் என்ற வினா எழுவதிலும் நியாயம் உண்டு.

இப்பொழுது, நம் அனைவர்க்கும் நினைவாற்றல் பயன்படுகிறது. நினைவுப்பகுதி என்று மூளையில் உள்ள குறிப்பிட்ட பகுதிக்கு நினைவில் கொள்ள வேண்டிய என்று நாம் கருதுவன சென்று அடைகின்றன; பதிவு செய்யப் பெறுகின்றன. இவ்வாறே அவதானி தன் நினைவுப் பகுதியில் பதிந்தவற்றை, தேவைப்படும் பொழுது, வரிசையாக எடுத்துக் கொள்கிறார்.

கணக்குப் போடுதல், குறிப்பிட்ட ஆண்டின் குறிப்பிட்ட மாதத்தின் குறிப்பிட்ட நாளின் கிழமை யாது எனக்கூறுதல் மூளையின் இடப் பாகத்திலேயே (Left side) நடைபெறுகின்றன.

வெண்பா இயற்றல், கட்டளைக் கலித்துறை அமைத்தல் ஆகியவற்றில் வெற்றுச் சொற்குவியலைச் சீர்களாக இட்டு நிரப்புவதில் பயனில்லை. பாடலில் எதுகை மோனை, கற்பனை, பொருள் தொடர்பு போன்றவை இருத்தல் வேண்டும். இதனைச் செய்ய கலைத் தொடர்பு உடைய மூளையின் வலப்பகுதி (Right side) பயன்படுகிறது.

இவ்விடத்தில் ஒன்றை மறவாமல் மனத்தில் பதிந்து கொள்ள வேண்டும். அவதானி இலக்கியப் பயிற்சி நிரம்பப் பெற்றவராக இருந்தாலன்றி இவ்வாறாகப் பாடல் அமைத்தல் முதலியன செய்ய வாராது.

ஓசையை அடிப்படையாக வைத்து ஒரோ வழிக் கவிதைகள் இயற்றினாலும், இப்பாடல் கற்பனை வளம், சொல் நயம், பொருளாழம் போன்றவை எவையும் இன்மையால் 'சப்' என்று இருக்கும்.

வெண்பா, கட்டளைக்கலித்துறை இவற்றை அவற்றிற்குரிய இலக்கணப்படி அமைத்தல் அரிது. அவதானி என்பார், இவற்றின் இலக்கணங்களை நன்கு கற்றுத் தேறியவராக இருந்தாலன்றி வெற்றி பெறல் அரிது.

எழுத்தெண்ணி அமைப்பது கட்டளைக் கலித்துறை. ஆகவே அவதானி பல்நூல் பயிற்சியும் இலக்கணத்தில் ஆழங்காற்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

அண்மையில் ஆனந்த விகடன், 12 வயதுக்குட் பட்ட சிறுவரின் நினைவாற்றலைச் சோதிக்க ஒரு போட்டி நடத்தியது. அவர் தம் (சிறுவர், சிறுமியர்) திருக்குறள் குறித்த நினைவாற்றலைச் சோதிக்கும் போட்டியைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது.

குறட்பா எண்களின் முழுப்பாடலையும் அப்பாடலின் எண்ணையும், அது போலவே அதிகார எண்களின் பெயரையும், பெயர்களின் எண்ணையும், குறட்பாவின் ஈற்றுச் சொற்களைக் கொண்டு முழுப்பாடலையும், முதற் சொற்களைக் முழுப்

பாடலையும் கூறும் திறமையைச் சோதிக்க நேரிட்டது.

வாய்பாடுகளை மனப்பாடம் செய்வது போலவே இத்தகைய பயிற்சிகளில் ஈடுபட்ட மாணவர்கள் நன்கு மனப்பாடம் செய்திருந்தனர். சோதனையில் பல குழந்தைகள் அழகாகச் செய்தது வியப்பில் ஆழ்த்தியது.

எனவே நினைவில் பதிக்கப்பட்ட ஒன்றினை தேவை ஏற்படும்பொழுது மனத்தை ஒருமுகப்படுத்தி மீட்க முடியும் என்பதற்கு இம்மழலைகளே சான்றாக விளங்கின. இந்நினைவாற்றல் மிக்க கவனத்தோடு வளர்க்கப் பெற்று, அவதானம் செய்யப்பயன்படுவது உண்மையே எனினும் வெற்று நினைவாற்றல் மட்டும் அவதானம் செய்யப் பயன்படாது.

பழைய நிகழ்ச்சியையோ, பாடலையோ மீண்டும் நினைவிற்குக் கொண்டுவருவது என்பது வேறு. புதியதாக அந்த வினாடியிலேயே அவ்விடத்திலேயே விட்டு விட்டுச் சொல்லப்படுகின்ற எண்களையோ, எழுத்துக்களையோ, நேரிடையாக அப்படி அப்படியே நினைவுப் பகுதிக்கு அனுப்பிப் பதித்து விடுவதால் எவ்விதப் பயனும் ஏற்படாது.

அதன் மறுதலையாக எழுத்துக்கள் முழுவதும் சொல்லப்பட்ட பிறகு நியூரான்கள் தயாரித்த வரை படத்தில் அந்த வாக்கியம் முழுவதுமாக நிரம்பிய

பிறகு நினைவுப் பகுதிக்குக் கொண்டு செல்லப் படுகின்றன. அப்படி இல்லையானால் இடை இடையே அனைத்து எழுத்துக்களும் கூறப்பெற்ற உடனேயே அவ்வாக்கியத்தை ஒப்பிக்க நேரிடும்.

அவதானிகள் அவ்வாறு செய்வதில்லை. இவ்வாறுதான் கணக்கு முதலியனவும் அவை அவை செய்து முடிக்கப் பெற்ற பின்னர் நினைவுப் பகுதிக்கு கொண்டு செல்லப்படுகின்றன. அவதானம் முடிகின்ற நிலை அமைந்த பின்னர் விடைகள் வரிசையாகச் சொல்லப் பெறுகின்றன.

வியப்பைத் தருகின்ற இக்கலையை வெறும் பயிற்சியால் மட்டும் ஒருவர் பெற்றுவிட முடியாது. இவ்வாறாய் திறமை இயல்பாகவே ஒருவரிடத்து அமைந்திருப்பின் அவர் அதனை மேன்மேலும் வளர்த்துக் கொள்ள முடியுமே தவிர முழுவதும் கற்றுக் கொண்டு செய்யப்படுகின்ற கலை அன்று இது. அவதானத்தைப் பற்றிச் சிந்திக்கையில் அஷ்டாவதானமோ, தசாவதானமோ குறிப்பிட்ட எட்டு அன்றி பத்து நிகழ்ச்சிகள் இவைதாம் செய்யப்படுகின்றன என்று கூறுவதற்கில்லை.

இலாடச் சங்கிலி பூட்டல், கழற்றல், வாய் ஓயாது இறைவன் திருப்பெயர்த் தொடர்களை அவதான நிகழ்ச்சிகளின் இடைவேளைகளில் நவிலல், தம் முதுகில் எறியப்பெறும் கல் அன்றி நெல் இத்துணை என என்று கணக்கிட்டுக் கூறுதல் என்பன

பொதுவானவை. ஒவ்வொரு அவதானியும் மேற் குறிப்பிட்டன போக எஞ்சியவற்றுள் தமக்கெனத் தாமே தேர்ந்தெடுத்துப் பயில்வன சிலவற்றை மேற் கொள்ளல் கூடும். இவை ஒருவர்க்கொருவர் மாறு படவும் செய்வன.

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியில் வினா தொடுத்த ஒருவர் பின் வருமாறு கேட்டார்.

*சங்கப் பாடல்களுள் அகத்திணையில் ஒரு துறையைக் கூறி அத்துறையில் குறிப்பிட்ட ஒரு புலவர் இயற்றிய பாடல் யாது? அப்பாடல் கருத்துடன் ஒத்து இயையும் பிற்காலத்துத் தோன்றிய கோவைப் பாடலை கூறுக என்று கேட்டார்.*

அவர் வியக்கும் முறையில் திரு. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் விடை தந்தார் என்று அறிகிறோம். மேலும் அவதானத்தில் அப்பாடலுக்கு விளக்கம் அளித்ததாகவும் தெரிகிறது. இலக்கிய அவதானமே அன்றி, தொல்காப்பியம் போன்ற தொல்பழங்கால இலக்கண நூல்களினின்றும் சபையோர் வினா எழுப்ப அவ்வினாவிற்கு விடை தரும் வகையில் ஆய்வுரை நிகழ்த்தினார் என்றும் அறிகிறோம்.

இவ்வாறாக அவதானங்கள் புதுமையானது மட்டுமன்று; பிறரால் ஆற்றற்கு அரியதும் ஆகும்.

இவ்விரண்டினையும் விடப் புதுமையானதும், பிற அவதானியர் எவரும் செய்யாததும் ஆகிய ஒன்றினைத் திரு. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் செய்து காட்டினார். அதுவே கொடுக்கப்பட்ட ஜாதகத்திற்குத் தொடர்பான அனைத்து வினாக் களுக்கும் விடை தருவதாம்.

எவரோ ஒருவருடைய ராசிச் சக்கரம் மட்டும் (ஜாதகம்) அவதானி ஆறுமுகம்பிள்ளை அவர்களிடம் தரப்பெறும். சில விநாடிகளில் அது திரும்பப் பெறும். அச்சக்கரத்திற்குரியார் பிறந்த ஆண்டு மாதம், இது என்று அவதானியார் அறிவிப்பார்.

நடப்பு ராசிச் சக்கரத்தைக் கொண்டு அந்த ராசிச் சக்கரத்தை ஒப்பிட்டு, குரு சனி இருக்கும் வீட்டைக் கணக்கிட்டு ஓரளவு கூறலாம் என்றாலும் அதுவும் அரிது.

12 ஆண்டுகட்கு ஒருமுறை 12 ராசிகளையும் சுற்றி வரும் குரு, 30 ஆண்டுகட்கு ஒரு முறை ராசிச் சக்கரத்தில் ஒரு சுற்று முடிக்கும் சனி. ஆக இவ்விரு கிரகங்களின் இயக்கம் கொண்டு ராசிச் சக்கரத்துக்கு உடையார் வயது கணக்கிடலாம். எனினும் அதுவும் கடினமானதே. குரு இருக்கும் இடத்தை வைத்து உத்தேசமாக எந்த ஆண்டு என்று கூறலாம், சூரியன் அமைந்துள்ள இடம் கொண்டு எந்த மாதம் என்று கூறலாம் எனினும் அவர்க்கு இறைவன் அருளால்

அமைந்த அபரிமிதமான ஆற்றலை வியந்து போற்றாமல் இருக்க முடியாது.

சதாவதானம் செய்குதம்பிப்பாவலர் அவர்களிடம் எத்தனையோ மாணவர்கள் தமிழ் கற்றனர். இருந்தாலும் திரு. ஆறுமுகம் பிள்ளை ஒருவர் மட்டுமே தசாவதானி ஆக முடிந்தது என்பதே இதற்கு உதாரணம்.

இனியாவது மனவியலார், மூளை தொடர்பான ஆய்வாளர்கள், E.S.P எனப்படும் பொது உணர்வுக்கு அப்பாற்பட்ட ஆற்றல் பற்றி ஆய்கின்றவர்கள் ஆய பலரும் கூடி அவதானிகள் குறித்து ஆய்வார்கள் ஆயின் அது பெரும்பயனை அளிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

❀❀❀❀❀

# ஆசிரியரின் நூல்கள்

1. கம்பன் கலை
2. இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்
3. இலக்கியக் கலை
4. அகமும் புறமும்
5. தேசிய இலக்கியம்
6. கம்பன் புதிய பார்வை
7. தத்துவமும் பக்தியும்
8. மந்திரங்கள் என்றால் என்ன
9. மகளிர் வளர்த்த தமிழ்
10. இன்றும் இனியும்
11. குறள் கண்ட வாழ்வு
12. புதிய கோணம்
13. தெள்ளாற்று நந்தி
14. திரு. வி. க.
15. பெரிய புராணம் — ஓர் ஆய்வு.

கங்கை

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803